141

# பயிற்றலும் பயிலலும்

## (TEACHING AND LEARNING)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 APR 1961
MADRAS

141
2/61.

A. நாராயண ரெட்டியார்
S. சுந்தரராசன்

T:3
N60
112066

# யிற்றலும் பயிலலும்

னியர், சீனியர் ஆதாரப்பயிற்சிப் பள்ளிகட்கானது)

பாகம் I : பொதுமுறைகள்

பாகம் II : சிறப்பு முறைகள் (தமிழ்)

ஆக்கியோர்

A. நாராயண ரெட்டியார், M. A., M. Ed.

பேராசிரியர்

S. சுந்தரராசன், B. A. (Hons.), L. T.

உதவிப்பேராசிரியர்

ாகராசர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, மதுரை

[ விலை ரூ. 3-00.

முதற்பதிப்பு : ஜூலை 1960

112066

(அனைத்துரிமையும் ஆசிரியர்களுடையதே)

T:3
N60

Copies can be had of :

1. A. N. REDDIAR,
   2, Second Cross Road, Shenoynagar, Madurai-2.

2. S. SUNDARARAJAN,
   16, Second Street, Kamarajanagar,
   Tallakulam P. O., Madurai-2.

---

லலிதா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.-1

# முகவுரை

"பயிற்றலும் பயிலலும்" என்ற இச்சிறு நூல் ஜூனியர், சீனியர் ஆதாரப்பயிற்சிப்பள்ளிகட்கென அரசினர் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தைத் தழுவி எழுதப் பட்டுள்ளது. ஆகவே இவ்விரு கிரேடுகளிலும் பயிற்சி பெறும் ஆசிரிய - மாணவர்களுக்குப் பெரிதும் பயன் படும் முறையில் பொருள் விளக்கமும் மொழிநடையும் அமைக்கப்பெற்றுள்ளன. ஆகையால் பயிற்சிப்பள்ளித் தலைமை ஆசிரிய, ஆசிரியைகளும் பிற ஆசிரியர்களும் இந்நூலைத் தம் பள்ளிகளிற் பயன்படுத்தி எங்கட்கு ஆதரவும் ஊக்கமுமளிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

இந்நூலிற் காணப்படும் குறைபாடுகளையும் தவறுகளையும் சுட்டிக்காட்டும் அன்பர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகும். அத்துடன் அவற்றை அடுத்த பதிப்பில் சரிப்படுத்தவும் முற்படுவோம்.


தியாகராசர்
ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி
மதுரை
} ஆக்கியோர்

# பொருளடக்கம்

முகவுரை

அத்தியாயம் — தலைப்பு — பக்கம்

பாகம் I பொதுமுறைகள்

I பாலனுக்கும் பாடத்திற்குமிடையுள்ள தொடர்பு 1

(i) கற்பித்தலும் கற்றலும்
(ii) தனிமாணவனும் வகுப்பும்
(iii) வேலையும் விளையாட்டும்

II கல்விபுகட்டும் முறை—நேர்முக அனுபவங்கள் 11

(i) விளையாட்டு முறை
(ii) கிண்டர்கார்ட்டன் முறை
(iii) மாண்டிசோரி முறை
(iv) தாமாகக்கண்டறியும் முறை
(v) டால்ட்டன் சோதனைச்சாலை முறை
(vi) செயல்திட்ட முறை
(vii) சிக்கல் தீர்க்கும் முறை

III கல்விபுகட்டும் முறை – மறைமுக அனுபவங்கள் வாய்மொழிமூலம் 45

(i) கூறுதல்
(ii) விவரித்தலும் விளக்கலும்
(iii) கேள்விகேட்டல்
(iv) குழுப்படிப்பு
(v) சொற்பொழிவும் சொற்போரும்

(vi) ரேடியோவும் கிருமபோனும்

(vii) நாடகம்

எழுத்துமூலம்

(i) நூல்கள்

(ii) மாணவர் குறிப்பேடுகள்

(iii) செய்தித்தாள்கள்

(iv) மேற்கோள் நூல்கள்

(v) நூல் நிலையங்கள்

காட்சிமூலம்

(i) சித்திரங்களும் விளக்கப்படங்களும்

(ii) பொம்மைவிளையாட்டும் நிழல்விளையாட்டும்

(iii) ஊமைக்கூத்தும் ஒப்பனைக்காட்சியும்

(iv) பகட்டு அணி

(v) திரைப்படங்களும் திரைப்படத்துண்டுகளும்

IV ஆதாரக்கல்வியும் தொடர்புறுத்தலும் 83

(i) கொள்கைகளும் நடைமுறையும்

(ii) தொடர்புறுத்தல்

V திறன்கள், உண்மைகள், மனப்பான்மைகளில் பயிற்சியளித்தல் 101

(i) பொருளறிவுப்பாடம்

(ii) திறன்பெறுபாடம்

(iii) மனப்பான்மைப்பயிற்சிப்பாடம்

மனத்தில் நிலைக்கவைக்கும் ஏற்பாடுகள்

(i) மீள்பார்வை

(ii) பன்முறைப்பயிற்சி

VI ஆண்டுக்குரிய வேலையைத் திட்டமிடுதல் 123

(i) பயிற்றலுக்குரிய விஷயம்
(ii) தொழில்மைய இணைப்புப் போதனை
(iii) செய்தவேலையின் மதிப்பீடு

VII கல்விசார் அலகை முறையாக அமைத்தல் 132

(i) திட்டமிடுதல்
(ii) ஆயத்தம்
(iii) வேலையைச் செய்துமுடித்தல்
(iv) பதிவுசெய்தல்
(v) மதிப்பிடுதல்
(vi) பிறபாடங்களோடு தொடர்புறுத்தல்
(vii) பழக்கங்களும் மனப்பான்மைகளும் உருவாதல்

பாகம் II சிறப்புமுறைகள் (தமிழ் பயிற்றல்)

VIII மொழி கற்றல் 144

1. நோக்கங்கள்
2. பயிற்றற்கூறுகளும் முறைகளும்
(i) வாய்மொழிப் பயிற்சி
(ii) எழுத்துப்பயிற்சி

IX மொழியின் கலைநுட்பம் — உரைநடை கற்பித்தல் 170

X மொழியின் கலைநுட்பம் — இலக்கணம் கற்பித்தல் 196

XI மொழியின் கலைநுட்பம் — செய்யுள் கற்பித்தல் 206

XII பாடத்திட்டமும் வேலைத்திட்டமும் 215

பின்னிணைப்பு: கல்விசார் மதிப்பீடு 221

(i) சோதித்தல் : பழையமுறையும் புதியமுறையும்

(ii) சோதித்தல் : புதுமாதிரி வினாக்களும் விடைகளும் (பாகம் I பொதுமுறைகள்)

(iii) சோதித்தல் : புதுமாதிரி வினாக்களும் விடைகளும் (பாகம் II சிறப்பு முறைகள் (தமிழ்))

அருங்கலைச்சொற்கள் 249

ஆங்கிலம் — தமிழ்

# பாகம் I

## பொது முறைகள்

# அத்தியாயம் I

## பாலனுக்கும் பாடத்துக்கு மிடையுள்ள தொடர்பு

### (i) கற்பித்தலும் கற்றலும்

இவ்விரண்டும் கல்விபுகட்டலின் இரண்டு அடிப்படைக் கூறுகளாகும். ஒரு குழுவிலுள்ள அனுபவமிக்க உறுப்பினர், முதிராதவர்களுக்கும் (Immature) பாலர்களுக்கும் வாழ்க்கையோடு தங்களைத் தாங்களே பொருத்திக் கொண்டு இயங்க வழிகாட்டுதலே கற்பித்தலெனப்படும். ஆனால் கற்றலின்றிக் கற்பித்தல் பொருளற்றதாகும். ஆகையால் பாலனுக்குப் புதுப்புது உண்மைகளை எடுத்தளிப்பது கற்பித்தல் என்ற வகையில் ஆசிரியரின் பணியாகும். அவற்றைக் கற்றறிவது மாணவர்களின் பணியாகும். ஆகவே பல நூற்றாண்டுகளாக மக்களினத்தின் முயற்சியால் உருவாகிச் சேர்ந்துள்ள ஏராளமான உண்மைகளைப் பகிர்ந்து புரிந்து கொள்வதற்கான கற்றல் அனுபவங்களைக் கற்பித்தல் மூலம் அளிக்க வேண்டும்.

பாலன் தன்னைச் சுற்றியுள்ள விஷயங்களைப் பற்றிய அனுபவங்களையும் அறிவையும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பெறலாம்.

நேர்முக அனுபவம்: பாலன் பொருள்களைத் தானாகவே கையாண்டு உற்று நோக்கி ஆய்ந்து ஊகித்தறிவது நேர்முக அனுபவமாகும். ஆனால் இம்முறையைப் பின்பற்றுவதில் தவறுகள் ஏற்படலாம். சில சமயங்களில் ஆபத்திலும் கொண்டுவிடலாம், மேலும் வீண் நேரச் செலவிற்கும் இடமுண்டு. குழந்தை நெருப்பைத் தொடுவதன் மூலமே

அதைப் பற்றி அறிந்து கொள்வதிலுள்ள அபாயத்தை உதாரணமாகக் குறிப்பிடலாம். இது ஒருபுற மிருக்க, நேர்முகமாகவே எல்லா அறிவையும் பெற முற்படின் முழு ஆயுட் காலமும் போதாது. பல முக்கியமான விஷயங்களைப் பற்றி அறியத் தேவையான வாய்ப்புக்களும் எல்லாச் சூழ் நிலைகளிலும் கிட்டா. ஆயினும் இயன்ற மட்டும் நேர்முக அனுபவங்களின் மூலம் அறிவு பெறுவதே சிறந்த கற்றலாகும்.

மறைமுக அனுபவம்: ஆனல் பாலன் பெரும்பாலான அறிவை அவனுடைய மூத்தோர்களிடமிருந்து வாய்மொழி யாகவோ அல்லது அவர்களால் எழுதப்பட்டுள்ள புத்தகங் களின் வாயிலாகவோ பெறுகிறன். இதற்கு அவனுக்கு உதவியாக, படங்கள், சார்ட்டுகள் (Charts), குறியீட்டுமுறை, ரேடியோ ஒலிபரப்பு, சலன ஒளி, ஒலிப்படக் காட்சிகள் போன்றவை அமையக்கூடும். இவ்வாறு பெறப்படும் அறிவை மறைமுக அனுபவமெனக் குறிப்பிடலாம். இம் முறையைப் பின்பற்றிக் கற்பதன் மூலம் நேரத்தையும் சக்தி யையும் மிச்சப்படுத்தலாம். சில சமயங்களில் நம்பிக்கைக் குறைவாலோ மனத்தில் சரியாகப் பதியாததாலோ கற்றல் பலனற்றிருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் தகுந்த நேர்முகக் கற்றலுக்கு வழிவகை செய்யவேண்டும்.

ஆகவே, பாலன் இரு வழிகளில் கற்க முடியும் என்று தெரிகிறது. ஆனல் இவை இரண்டையும் தனித்தனியாகக் கருதிக் கற்பிக்க முற்படுவது விரும்பத்தக்கதன்று. அதற்குப் பதிலாக, நேர், மறைமுக அனுபவங்களை இசைந்த முறை யில் கலந்து (Harmonious blending) கையாள்வதே சாலச் சிறந்ததாகும். உதாரணமாக, பிறர் அனுபவங்களைக் கேட்

டறிவதில் திருப்தியடையாத பாலர்களுக்கு நேரிடையாக அறிய வாய்ப்புக்கள் அளிக்கவேண்டும். இதே போல் நேர் முகமாகப் பெற்ற அறிவு மனத்தில் நன்ருகப் பதியாவிட்டால் மறைமுகக் காட்சிகள் மூலம் அதைப் பலப்படுத்தவேண்டும். பொதுவாக, சிறுகுழந்தைகளுக்கு நேர்முறைக் கற்றலுக்கும் வயது முதிர்ந்த குழந்தைகளுக்கு மறைமுகக் கற்றலுக்கும் அதிகமான வாய்ப்புக்கள் அளித்தல் அவசியம். மேலும் விஞ்ஞானம், இயற்கைப்பாடம் போன்றவற்றை நேரிடைப் பரிசோதனை மூலமும் இலக்கியம் போன்ற பாடத்தை மறை முக முறையிலும் கற்பிக்க வேண்டும்.

கல்வியறிவு பெறுதல் ஒரு தொடர்ச்சியான செயலாகும். அச்செயல் சரியான பாதைகளில் நன்கு செலுத்தப்படுவது டன் பாலனின் நேர், மறைமுக அனுபவங்களின் ஆதாரத் தின் மீதும் நடைபெறவேண்டும். அவ்வாறு பெறப்படும் அறிவு பாலனுடைய அறிவுடன் ஒன்றி அமையவேண்டும். அறிவைப் பாலனுக்கு "ஊட்டும் முறை" இக்கால முற் போக்குக் கருத்துக்களுக்குச் சிறிதும் ஒவ்வாது.

## (ii) தனி மாணவனும் வகுப்பும்

கற்பித்தலைப் பற்றிக் கூறும் போதெல்லாம் நாம் ஒரு வகுப்பு முழுவதற்குமான போதனையையே மனத்திற் கொண் டிருக்கிரும். ஏனென்ருல் நம் பள்ளிகளில் இம்முறையே நிலவி வருகிறது. ஆகையால் கற்பிக்கும் முறைகளும் பெரும்பாலும் இதை அனுசரித்தே அமைகின்றன. சாதாரண மாக, இவ்வகுப்புகளில் முப்பது முதல் ஐம்பது வரை பிள்ளைகள் இருப்பார்கள். ஆகையால் வகுப்புப் போதனை யைப் பற்றிய சாதக பாதக அம்சங்களை ஒருவாறு அறிந்து கொள்வது நலம். சாதக அம்சங்களைப் பொறுத்துக் கூடிய

மட்டும் அதிக நன்மை பயக்கும் வகையிலும் பாதக அம்சங்களைப் பொறுத்துக் கூடியவரை இடையூறுகளை அகற்றிக் கற்பிக்கும் வகையிலும் முறைகளை மாற்றியமைத்துக் கொள்ள இயலும்.

## வகுப்புப் போதனையின் சாதகக் கூறுகள்

1. பல மாணவர்களுக்கு ஒரே சமயத்தில் போதிப்பதால் நேரமும் சக்தியும் குறைவாகச் செலவிடப்படுகின்றன. கற்றலில் எதிர்ப்படும் கஷ்டங்களிற் பல பொதுத் தன்மையுடையனவாயிருப்பதால் அவற்றைத் தீர்ப்பது எளிதாகும்.
2. பாலர்களுக்குக் கூட்டாகக் கற்பதில் ஆர்வம் அதிகம். அத்தகைய இயல்பூக்கத்தைப் பயன்படுத்தும் வகையில் வகுப்புப் போதனை அமையும்.
3. வகுப்புப் போதனை மூலம் பாலர்களின் ஊக்கத்தையும் கவர்ச்சியையும் தூண்டுதல் எளிது.
4. வகுப்புப் போதனை மாணவரிடையே ஒத்துழைப்பை வளர்க்கும்.
5. வகுப்புப் போதனையில் நம் வேலையின் பலனை மதிப்பிட்டறிவது எளிது.
6. கருத்துக்களை அள்ளி வழங்குவதற்கும் புது அறிவைப் புகட்டுவதற்கும் வகுப்புப் போதனையே சிறந்தமுறையாக அமையக்கூடும்.

## வகுப்புப் போதனையின் முக்கியமான குறைகள்

1. ஒரு வகுப்பில் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்களோ அத்தனை விதமான கற்றல் திறமைகளும் கொள்கை

அளவில் அவர்களிடை காணப்படுவதாகக் கொள்ள வேண்டும். இவ்வேறுபாடுகள் அவர்களுடைய மன அமைப்பு, போக்குகள், தேவைகள், நடத்தை, அறிவு முதிர்ச்சி முதலியவற்றை யொட்டி இருக்கும். அத்தகைய வேறுபாடுகளுள்ள பிள்ளைகள் எல்லோருக்கும் பொது வான ஒரு முறையைக் கையாள்வது எளிதன்று.

2. வகுப்புப் போதனையில் மாணவர்கள் சுறுசுறுப்பற்று ஒரே நிலையில் அமர்ந்து காதால் கேட்டல் மூலமே பெரும்பாலும் கற்க வேண்டியிருக்கும். அவர்கள் எல்லோரும் ஊக்கத்தோடும் கவர்ச்சியோடும் உற்றுக் கவனிக்கிறார்களா என்றறிவது எளிதன்று.

3. பிள்ளைகளின் தனித்தனி ஈடுபாட்டைச் சரிவரக் கண் காணிக்காவிட்டால் கற்றலில் காணும் முன்னேற்றத் தைப் பற்றித் தவறாக மதிப்பிடவேண்டி வரும். உண் மையான கற்றலும் தன்வயப்படுத்தலும் (Learning and Assimilation) தனி முயற்சியின் மூலமே சாதிக்கக் கூடியவை.

தனி மாணவர் போதனைதான் எவ்வகையிலும் சிறந்த தாக அமையும். ஆனால் பல்வேறு காரணங்களினால் அதற்கு எப்பொழுதும் ஏற்பாடு செய்ய இயலாது. முதலாவதாக கொள்கையளவில் மாணவர் எண்ணிக்கையும் ஆசிரியர் எண்ணிக்கையும் சமமாக இருக்க வேண்டும். இவ்விரண்டு நிலைகளும் நடைமுறையில் சாத்தியமில்லை. ஆகையால் பொதுவாக வகுப்புப் போதனைக்கும், இயன்றபோதெல் லாம் தனி மாணவர் போதனைக்கும் வழிவகை செய்து கொள் வது ஆசிரியரின் திறமையைப் பொறுத்ததாகும்.

## மாணவனுக்கும் பாடவிஷயத்திற்குமுள்ள இடைத்தொடர்பு

தற்காலக் கல்விமுறை குழந்தைகளை மையமாகவும் சுழலச்சாகவும் (Pivot) கொண்டு இயங்குகிறது. இதற்கு முன்பெல்லாம் பாடவிஷயமே முக்கியமாகக் கருதப்பட்டு போதனையின்போது வலியுறுத்தப்பட்டது. மாணவ, மாண விகளின் பலதரப்பட்ட மன அமைப்புக்கள், போக்குகள், தேவைகள், விருப்பு வெறுப்புகள் போன்றவை கவனத்திற் கொள்ளப்படவே யில்லை. கற்போரெல்லாம் சமதிறமை யுள்ளவர்களென்றும் அவர்களுடைய போக்குகளும் விருப்பு வெறுப்புகளும் ஒரே மாதிரியானவை யென்றும் கருதப்பட் டன. மேலும் அவை வயது முதிர்ந்தவர்களின் தேவைகள், உணர்ச்சிகள், சிந்தனை ஆகியவற்றை ஒட்டியவையென்றும் கொள்ளப்பட்டன. ஆசிரியர் கூறுவதை மாணவர்கள் கேட்டறிந்து ஞாபகத்திலிருத்தி வேண்டும்போது ஒப்பிப் பதே சமீபகாலம் வரை கல்வி புகட்டும் முறையாக இருந்து வந்தது. இதனால் பாலனின் தன் வெளியீட்டிற்கும் (Self-expression) ஆக்க முறைச் சிந்தனைக்கும் (Creative Thinking) இடமில்லாமற் போனது மட்டுமல்லாமல் அவனுடைய சிறப்பான விருப்பங்களையும் போக்குகளையும் நசுக்கி விட்டது.

ஆனால் இப்போது குழந்தையுள்ளத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளிலிருந்து பல ஏற்புடைய ஊகங்கள் (Valid Inferences) கிடைத்துள்ளன. அவற்றிற்கேற்ப, எல்லாக் குழந்தைகளிடமும் காப்புணர்ச்சி (Security), சமூக தேவைகளுக்கேற்றாற்போல் மாற்றிச் சரிப்படுத்திக்கொள் ளும் திறன் (Adjustability to social needs) முதலியவை

ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. இவ்வடிப்படைத் தேவைகள் வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் பூர்த்தி செய்யப் பட வேண்டும். அப்பொழுதுதான் பாலனின் கற்றற் சூழ்நிலை அனுகூலமாயமையும். ஆயினும் வகுப்பறை நிலைமை, ஆசிரியரின் போதனுமுறை, பாட விஷயம் போன்ற தூண்டல்களுக்கு எல்லாப் பிள்ளைகளின் துலங்கல்களும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. திறமையுள்ள ஆசிரியர் மாணவர்களிடையே காணும் இத்தகைய துலங்கல் வேறுபாடுகளை வகுப்பிலும் வெளியிலும் உற்று நோக்கி, அதற்குத் தகுந்தாற்போல் கற்பிக்கும் முறைகளை மாற்றிக்கொள்ள முடியும்.

பாலர்களைப் பற்றி ஆராயும் பொழுது அவர்களுக்கும் பெற்ருேர்களுக்கும் உள்ள இடைத்தொடர்பு பற்றியும் ஆராய வேண்டி வரும். பாலர் கல்வி கற்றலின் தன்மை பெரிதும் அத்தகைய சம்பந்தங்களால் பாதிக்கப்படும். அது வீட்டில் நிலவும் சமூக, பண்பாட்டுறவுகளையும் பொறுத்திருக்கும். பாலன் பல குறிப்பிட்ட படிகளைக் கடந்து உடல்-உள்ள முதிர்வு (Physical-mental maturity) அடைவதாக உளநூலாராய்ச்சியாளர் கூறுகின்றனர். பாட திட்டத்தில் பாலன் தான் மையமாயிருக்கவேண்டும், பயனுறு சமூகப் போக்கில் அவனுக்களிக்கப்படும் பயிற்சி இருக்கவேண்டும். அவனுடைய எதிர்காலத் தேவைகளைவிட அண்மைத் தேவைகள் அதிகக் கவனம் பெறவேண்டும். அவன் ஈடுபடும் செயல்கள் தன் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் ஒத்திருக்க வேண்டும். அவை கட்டுதல் (Construction), ஆக்கல் (Creation), உற்று நோக்குதல் (Observation), ஆராய்தல் (Investigation), புதிர்தீர்த்தல் (Problem-solving) போன்ற வடிவத்திலிருப்பதுடன்

பொழுது போக்கியல்புடனும் (Recreational) இருக்க வேண்டும்.

இன்றும் பல நாட்டுப்புறப் பள்ளிகளில் ஆரம்பக்கல்வி போதனை ஏட்டுப்படிப்பு, எழுத்து, எண் (Three R's) சம்பந்தப்பட்டதாகவே நடைபெறுகிறது. இவைகளைக் கற்பிப்பதில் கொள்ளவேண்டிய குறிக்கோள்கள் அறவே புறக்கணிக்கப்படுகின்றன. பள்ளி போதனைக்கும் வெளி வாழ்க்கை அனுபவங்களுக்கும் இடையே எவ்விதத் தொடர்பும் காணப்படுவதில்லை. உண்மையில் பள்ளிக்கூடத்திற்கு வெளியே நிலவும் சுதந்திரம் பள்ளிக்குள் காணப்படும் கவர்ச்சியற்ற போக்குகளுக்கு நேர்மாறாக இருக்கிறபடியால் பிள்ளைக்குக் கற்றலில் ஆர்வமிருப்பதில்லை. கற்றற்பலனும் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

### போதிக்கும் பாடங்கள் பற்றிய கருத்து

பள்ளி மாணவ, மாணவிகள் வீட்டிலும் அண்டைப் புறங்களிலும் சமூகத்திலும் தொழில் நிலையங்களிலும் திறம்பட வேலை செய்யுமாறு தயார் செய்யக்கூடிய பள்ளிப் பயிற்சிக்கு வகை செய்ய வேண்டுமென்பது தற்காலக் கல்வி நிபுணர்களின் கருத்தாகும். அத்தகைய பயிற்சியால் பிற்காலத்தில் நல்ல குடிமக்களாக (Worthy Citizens) இலங்க முடியும். கற்பிக்கும் பல பாடங்களும் அறிவுத் திரட்சியின் பல்வேறு கிளைகளாகும். இவற்றை யொட்டி மாணவர் பெறும் திறமைகள் பிற்கால வாழ்க்கையில் பயன்படக்கூடியவையாக இருக்கவேண்டும். பாடங்களாகப் பிரித்துக் கற்பிப்பது வயது முதிர்ந்த மாணவர்களுக்குத் தகுந்த முறைதான். ஆனால் இதில் சில அசௌகரியங்களும் உள்ளன. கற்போர் பாடப் பிரிவினையின் தருக்கக் கூற்றை (logical feature)

சுவைத்தறிய முடியாது. முக்கியமாக கிண்டர்கார்ட்டன் (Kindergarten),பிரைமரி நிலைகளில் கற்கும் பாலர்களுக்குச் செயல்கள் வடிவத்தில் போதனை இருக்க வேண்டுமே யொழிய தருக்க ரீதியில் அமைந்த தனிப்பாடங்களாகவல்ல. அத்தகைய செயல்கள் கற்பிக்க வேண்டிய பாடங்களைச் சார்ந்திருக்க வேண்டும். இதைத்தான் செயல் திட்டமுறை (Project Method) என்றழைக்கிறோம். பாலன் மேல் வகுப் பிற்குச் செல்லச் செல்ல, செயல் அம்சம் குறைந்து திட்ட வட்டமான பாட அம்சம் அதிகரித்துக் கொண்டே போகும்.

### iii வேலையும் விளையாட்டும்

விளையாட்டை, பாலனிடமுள்ள ஆக்க சக்தியின் வெளி யீடாகக் கருதலாம். இன்பம், சுதந்திரம், தன்னியல்பு (Spontaneity), பாவனை (Make-believe) போன்ற தன்மை கள் வெளிப்பட விளையாட்டு வாய்ப்பளிக்கிறது. உள்ளி ருந்து எழும் உணர்ச்சியே பாலனை விளையாட்டில் ஈடுபடச் செய்யவல்லது, வெளி நிர்ப்பந்தமல்ல. வலுக்கட்டாயமாக அவனை விளையாடச் செய்தால் அது வேலையாக மாறிவிடும்.

இனி விளையாட்டையும் வேலையையும் வேறுபடுத்தி நோக்கலாம். இரண்டும் ஒரு விதத்தில் செயல்களே. விளை யாட்டு ஒருவிதப் பொழுது போக்கே யன்றி நிர்ப்பந்தச் செயலன்று. ஆனால் வேலையோ அவ்வாறன்று. அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பலன் அல்லது முடிவை எதிர்பார்க் கிறோம். உதாரணமாக, ஒரு குவியலிலுள்ள கொட்டைகள் ஒற்றையா, இரட்டையா என்று கண்டுபிடிக்கும் செயலை விளையாட்டாகவும் அவை எத்தனை என்று காண்பதை வேலை யாகவும் கருதலாம். இதே போல், விளையாட்டுமைதானத் திலுள்ள கற்களைப் பொறுக்கும்படி ஒரு வகுப்பிலுள்ள

எல்லாப் பிள்ளைகளிடமும் சொன்னால் அதை விளையாட்டாகச் செய்வார்கள். அதற்கு மாறாக, பாடம் படியாத அல்லது வீட்டு வேலை செய்துவராத பிள்ளைகளை மாத்திரம் அவ்வாறு செய்யச் சொன்னால் அது வேலையாக மாறிவிடும். ஒரு விதத்தில் விளையாட்டில் முறை முக்கியம், முடிவு அன்று. வேலையில் முடிவு முக்கியம், முறையன்று.

கற்பித்தலில் செயல் முறைக்கு அதிக முக்கியம் உண்டு. அத்தகைய செயல்களைக் கூடியவரை விளையாட்டு வடிவத்தில் செய்ய வாய்ப்புக்கள் அளிக்க வேண்டும். ஆனால் விளையாட்டு அம்சம் எல்லை மீறி மேலோங்கிவிடக் கூடாது. சமக்கூறுகளைச் சேர்த்து எண்ணுதல், மின் அட்டைகள் முதலியவற்றின் உதவியால் விளையாட்டாகப் பெருக்கல் வாய்ப்பாட்டு உண்மைகளைக் கற்க வேண்டும். பிறகு அவற்றைக் கணக்குகளில் பயன்படுத்தும்போது ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிக்கும் மனப்பான்மையுடன் ஈடுபடவேண்டும். கற்றல் சம்பந்தமான வேலைகளை விளையாட்டு வடிவத்தில் கொடுத்தல் ஆசிரியரின் திறமைக்கு இலக்கணமாகும். விளையாட்டு மனப்பான்மையுடன் செய்யும் வேலை தனி நபருக்கும் சமூகத்திற்கும் அதிக நன்மையைப் பயக்க வல்லதாகும் என்பதை ஆசிரியர் எப்போதும் ஞாபகத்தின் முன்னணியில் இருத்திக்கொள்ள வேண்டும்.

"Work while you work;
Play while you play", என்பது பழைய முறையிலும்
"Work while you play;
Play while you work", என்பது புதிய முறையிலும்
கல்வி புகட்டலைக் குறிக்கும்.

# அத்தியாயம் II

## கல்வி புகட்டும் முறை – நேர்முக அனுபவங்கள்

பழைய வழக்கமான (Formal) கல்வி முறையில் கல்வியைப் பரப்ப, பல்வகை ஸ்தாபனங்கள் (Institutions) உள்ளன. அவை பள்ளிக்கூடங்கள், நூல் நிலையங்கள், திரைப் படங்கள், ஒலிபரப்புக்கள் முதலியனவாகும். இவற்றைத் தவிர குடும்பம், சமூகம், மதத்தாபனங்கள், இளைஞர் இயக்கங்கள். போன்றவையும் கல்வியைப் பரப்ப உதவலாம். மேலும், பள்ளிக்கூடங்களில் கற்பித்தலைப் புலனீடாகக் கைக்கொள்வதால் கற்றலும் முயற்சியோடு நிகழ்கிறது. அதாவது கல்வி கற்பித்தல்–கற்றல் என்ற இருவழி (two-way)ப் பொருளாகிறது. ஆகையால் அது செயலுறு முறை (Active Process) ஆகிறது. ஆனால் பேசும்படங்கள், செய்தித்தாள்கள், வானொலி முதலியவை மூலம் அவற்றைப் பயன் படுத்துவோரின் நடத்தை முறைகளை மாற்றலாம். அவை மாறுதலின்றித் தம் போக்கிலேயே இயங்குகின்றன. ஆகையால் இச்சாதனங்கள் மூலம் பெறும் கல்வி ஒரு வழி (one-way) ப் பொருளாகிறது.

பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியரும் கற்கும் மாணவனும் நேர்முகமாக உறவுகொள்கின்றனர். இவ்வுறவு தற்காலத் தேவைகளுக்கும் போக்குகளுக்குமேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும். புதுக்கல்வியின் முக்கிய நோக்கங்கள் மாணவர்களை (i) திறம்பட வாழப் பயிற்சியளித்தல், (ii) எதிர்காலத்தில் சமூகச் சூழ்நிலையில் அவர்களை எதிர்நோக்கும் சிக்கல்களைச் சமாளிக்கும் ஆற்றலை ஏற்படுத்தல், (iii) சமூகத்தில் கௌரவமாக வாழ வகை செய்தல் என்பனவாகும்.

கற்பித்தல் என்பது பல்வகைக் கல்விசார் அனுபவங்களை (Various educative experiences) மாணவர்கள் பகிர்ந்துகொள்ளுமாறு செய்வதே யாகும். தற்காலக் கருத்துக்களின் படி கற்பித்தலில் நேரடியாகப் போதிக்கும் அம்சத்தைக் குறைத்து, கற்கும் அம்சத்தை அதிகரிக்கவேண்டும். போதித்தல் என்றால் அறிவுப்பொருள்களை மாணவர்களுக்கு அள்ளி ஊட்டுதல் என்ற கருத்து செல்லாததாய் விட்டது. கற்பித்தலின் தரத்தை நாம் நன்கு ஆயத்தம் செய்யப்பட்ட பாடங்களைக் கொண்டு மட்டும் மதிப்பிடும் பழக்கத்தைவிட்டு விடவேண்டும். இவற்றைவிட, மாணிவர்கள் கற்றல் மூலம் பெற்ற பயனுறு அறிவை மிக முக்கியமாகக் கருதிக் கற்பித்தலை மதிப்பிடவேண்டும்.

இத்தகைய நோக்கமுறு கற்பித்தலில் முக்கிய ஏதுக்களாவன: (i) கற்கும் மாணவன், (ii) கற்பிக்கும் பொருள், (iii) கற்பிக்கும் ஆசிரியர். இம்மூன்று ஏதுக்களும் இயைந்து செயல்படுமாறு முறை வகுத்துக் கற்பித்தலே நற்போதனையாகும். ஆகவே கற்பித்தலில் பாடப்பகுதி ஒரு பங்கென்றால் மனித உறவுப்பகுதி (human relationship) இருபங்கென்பது புலனாகிறது. ஆசிரியர் மாணவனுக்கு வரலாற்றுப் பாடம் கற்பிக்கிறார் ("Teacher teaches child history.") என்ற சொற்றொடர் இக்கருத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. பாடம் ஆசிரியரையும் மாணவனையும் தொடர்புறுத்தும் கருவியாக அமையவேண்டுமேயல்லாது தனி முக்கியத்துவமுள்ளதாகக் கருதப்படக் கூடாது.

ஆகவே கற்பித்தல்–கற்றல் மும்முனைச் (tri-polar) செயலாய் நிகழவேண்டும். அதற்கு உதவியாகப் பின்வரும் கருத்துக்களை மனதிற் கொள்ளவேண்டும்;

(1) கல்விபுகட்டப் பயன்படுத்தப்படும் பொருள் புல னீட்டாகும் பருப்பொருளாகவோ கருத்துப் பொருளாகவோ (concrete or tangible and abstract or verbal) இருக்க லாம்.

(2) கற்பிக்கப்படும் பொருளைப் புரிந்துகொள்ளும் வகையில் ஆசிரியர் வழிகாட்டியாய் மாணவர்களைச் செயற் படச் செய்ய வேண்டும். அத்தகைய செயல்கள் வெளிப் படையாகவோ உள்ள நிகழ்ச்சியாகவோ அமையலாம்.

(3) மாணவரின் மனவெழுச்சிகளையும் மனப்போக்கு களையும் ஒட்டிக்கற்பித்தல் நிகழவேண்டும். இதற்கு ஆசிரி யரின் செல்வாக்கும் முன்மாதிரியும் திறம்பட இயங்க வேண்டும்.

### i விளையாட்டு முறை

வேலையைப் போல் விளையாட்டும் ஒரு வினைதான். ஆனால் வேலையில் கட்டாயப்பகுதியும் கவர்ச்சிக்குறைவும் இருக்கும். விளையாட்டிலோ தன்விருப்பத்திற்கேற்ற தன் வெளியீடும் (Free self-expression) மகிழ்ச்சியும் வெளிப் படும். கடினமாகவும் களைப்பேற்படுவதாகவும் உள்ள வேலையை விளையாட்டு முறையைப் பயன்படுத்தி எளிதாக் கலாம். அவ்வாறு செய்யும் வேலையில் ஒரு தனி இன்பமும் மன நிறைவும் ஏற்படும். செய்பவரின் திறமை, மனப்போக்கு களைப் பொறுத்தும் ஒரு தேவையை நிறைவு செய்யும் முறை யிலும் ஒருவினை மேற்கொள்ளப்படும் பொழுது விளையாட்டு அம்சம் மேலோங்கிக் காட்சியளிக்கிறது. அத்தகைய வினைகள் அறிவாற்றலை யொட்டியோ (intellectual), உடற் திறனைப் பொறுத்தோ இருக்கலாம்.

விளையாட்டு முறை ("Play-way") என்ற சொல் முதன் முதலில் கல்வி புகட்டலில் "கால்டுவெல் குக்" (Caldwell Cook) என்பவரால் கையாளப்பட்டது. தம்மிடம் ஒப்படைக் கப்பட்ட பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆங்கில இலக்கியம் கற் பிக்க முற்பட்டபோது அவர்களிடையே விருப்புக் குறைவும் வெறுப்பு மிகுதியும் காணப்பட்டன. அவற்றைப் போக்கு வதற்காக அவர் ஒரு புது முறையைக் கையாண்டார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் பொருள்படாமல் மனப் பாடஞ் செய்து ஒப்பிப்பதை நீக்கி, இலக்கியப்பாட வகுப்பு களில் அவற்றை நடிக்க வழிவகைகள் செய்தார். அதன் பயனாகப் பிள்ளைகள் தங்கட்கென ஒரு திறந்தவெளி அரங்கை அமைத்துக்கொண்டார்கள். களங்களை (Acts)ப் பகிர்ந்துகொண்டு மனப்பாடஞ்செய்தார்கள். அம்பலத் திற்கு வருமுன் அறையில் ஆடிப்பழகினார்கள். அதனால் அம்பலத்திற்றோன்றி நடித்த பொழுது தன்விருப்பத்திற் கேற்ற தன் வெளியீட்டிற்கும் மகிழ்ச்சி பெறுவதற்கும் பல வாய்ப்புக்கள் கிட்டின. இலக்கியப் பாடங்களையும் நன்கு புரிந்துகொண்டார்கள். விளையாட்டு முறையின் பயன் நிறைவைக்கண்ட கால்டுவெல் குக் இலக்கணம், கட்டுரைப் பயிற்சி போன்ற பாடங்களைக் கற்பிப்பதிலும் அதைக் கையாண்டு நல்ல பலனைக் கண்டார்.

விளையாட்டு முறையென்ற அடிப்படைக்கொள்கை தான் செயல் திட்டம் (Project), மாண்டிஸோரி, ப்ரோபெல் (Montessori, Froebel), தாமாகக் கண்டறிதல் (Heurism) போன்ற சிறப்பு முறைகளில் ஊடுருவியுள்ளது. இக் கொள்கை பல நாட்டுக்கல்வி முறைகளிலும் மிக விரைவாகப் பரவிவருவதால் கட்டாயவேலை என்ற பழங்காலக்கொள்கை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டதாகவே கூறிவிடலாம்.

அதற்கேற்றாற் போல் ஆசிரியர்களும் தங்களுடைய அதிகார மனப்பான்மையை மாற்றிக்கொண்டு பிள்ளைகளோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய விளையாட்டுக் கற்றலில் தாங்கள் ஈடுபடும் அளவிற்கு மனமாற்றம் பெறுவார்கள்.

விளையாட்டு முறையைக் கையாள்வதால் ஏற்படும் பயன்களிற் சில பின்வருமாறு :-

1. செய்யும் வேலையோ கற்கும் பாடமோ கவர்ச்சியாய் இருப்பதுடன் பிள்ளைகளின் உள்தூண்டல்களுக்கியைந்துமிருக்குமானால் அவர்கள் அதை மனமுவந்து மேற்கொள்கின்றனர். இத்தகைய இயல் பூக்கங்களைத் திருப்தி செய்வதற்கேற்ற சிறந்த சாதனம் விளையாட்டு முறையாகும்.

2. கற்றலும் அறிவு பெறுதலும் விளையாட்டு முறை மூலம் சுறுசுறுப்பாக நிகழ்கின்றன. பிள்ளைகளின் துணிவுச் செயலுக்கும் தான்தொடங்காற்றலுக்கும் (Adventure and Initiative) விளையாட்டு முறை வழிவகை செய்கிறது.

3. விளையாட்டு மனப்பான்மையில் செய்யப்படும் வேலையில் பிள்ளைகள் முழு விருப்பத்தோடு ஈடுபடுவதால் அறிவுசார் முயற்சி (Intellectual effort) திருவினையாயமைகிறது.

4. விளையாட்டு முறை மூலம், பிள்ளைகளின் ஆக்கத்திறன் வெளியீட்டிற்கு மிகச் சிறந்த முறையில் ஊக்கமளிக்கலாம். சொந்தமான (Original) திட்டங்களை வகுத்து நிறைவேற்றி, வெற்றிகாணும் வகையில் சிந்திப்பதிலும் நலந்தீங்குகளை ஆராய்ந்தறிவதிலும் பயனுற

ஒத்துழைப்பதிலும் உதவி பெறுவதிலும் சிறந்த வாய்ப்புக்கள் எழுகின்றன.

## விளையாட்டு முறையும் தொடக்கநிலை வகுப்புக்களும்

படித்தலும் எழுதுதலும்: பலதிறப்பட்ட பிள்ளைகளுக்கு படிப்பதில் தனிப் பயிற்சியளிக்கக்கூடிய வழிகள் பலவுள. பல மின் அட்டைத் துண்டுகளை முன் கூட்டியே தயாரித்துக் கொள்ளலாம். இவை (i) படங்களைமட்டும் தாங்கி நிற்பவை (ii) சொற்கள் அல்லது சொற்றொடர்களை மட்டும் தாங்கி நிற்பவை, (iii) இவ்விரண்டையும் தாங்கி நிற்பவை என மூன்று தொகுதிகளாக இருந்தால் பிள்ளைகள் மும்மூன்று பேராக இவற்றை யொட்டிய விளையாட்டுகளில் ஈடுபடலாம். உதாரணமாக, மீன்படம் உள்ள அட்டையை ஒரு மாணவன் காட்டியவுடன், மற்றொருவன் அதைப் பற்றிய விவரங்கள் மட்டுமுள்ள அட்டையைக் காட்டுவான், மூன்றுமவன் படம் விவரங்கள் ஆகிய இரண்டுமுள்ள அட்டையை எடுத்துப் படிப்பான். இவ்வாறு வகுப்பிலுள்ள பிள்ளைகளை மூவுறு பிரிவாகப் பிரித்து விளையாடச் செய்யலாம். பின்னர் சிறிதுநேரம் அப்படங்களை வரைவதில் ஈடுபடச்செய்யலாம்.

படங்களை உற்றுப்பார்த்தல், கதை சொல்லுதல், நடித்தல், பாடுதல் போன்ற செயல்களில் விளையாட்டுப்பகுதி நிரம்ப உள்ளது. இவற்றின் மூலம் பிள்ளைகளின் பேச்சுச் சொற்றொகுதி (Spoken Vocabulary) விரிந்து வளம் பெறுகிறது. ஒரு பொருளைப் பற்றிய சொற்களை அவர்களாகவே தொகுக்கலாம். அத்தகைய பொருள்களிற் சில வகுப்பறை, கடை, சந்தை போன்றனவாகும், அவ்வாறு தொகுத்த சொற்களுக்கெதிரே தகுந்த படங்களைச் சேர்த்து ஒட்டலாம். பிறகு இவற்றைப் படித்தலிலும் எழுதலிலும் பயிற்சி பெறலாம்.

எண் கணிதம்: எண்ணுதல், கணக்கிடுதல் போன்ற செயல்களிலும் விளையாட்டு முறையைப் புகுத்தலாம். முதல் இரண்டு, மூன்று வகுப்புக்களில் கொட்டைகள், மணிகள், குச்சிகள் ஆகியவற்றைக் கொண்டு எண்ணுதல், கேட்டபடி எண்ணிக் கொடுத்தல், ஒற்றை இரட்டை கண்டுபிடித்தல், கூட்டுதல், கழித்தல். பெருக்கல் வாய்பாடுகளை அமைத்துக் கற்று மனப்பாடம் செய்தல் போன்றவற்றை விளையாட்டாகக் கற்கவும் பின்னர் மொழிப் பயிற்சிக்குக் கையாண்டது போல் மூவிதமான மின் அட்டைகளைக் கொண்டு பயன்படுத்தவும் வாய்ப்புக்கள் அளிக்கலாம். நான்காவது, ஐந்தாவது, வகுப்புகளில் கடை வைத்தல், அஞ்சலக (Post office) அலுவல்களை மேற்கொள்ளுதல் போன்ற நடிப்புச் செயல்கள் மூலமும் பள்ளிக்கூடக் காய்கறித் தோட்டம் தொடர்பான கணக்குகள் தயாரித்தல் மூலமும் விளையாட்டு முறைக் கற்றலுக்கு வழி செய்யலாம். இவ்வகுப்புக்களில் பிள்ளைகளைக் கொண்டே தூரங்களை அளந்து குறிப்பிடவும், நிறுத்தும் கடிகாரங்களின் ( Stop-watch ) உதவியால் நேரங்களைக் கண்டுபிடிக்கவும் ஏற்பாடு செய்து ஓட்டப்பந்தயங்கள், நெடுந் தூரம் தாண்டுதல், மிக உயரமாகத் தாண்டுதல் (Races, Long-Jump, High-Jump) முதலியவற்றை நடத்துவதில் பயிற்சியளிக்கலாம். இம்முறையின் மூலம் எண் கணக்கியலில் குறிப்பிட்ட தலைப்புகளைக் கற்க வேண்டியதன் அவசியம் தெளிவாகப் புலப்படுவதோடு அவற்றை உண்மைச் சூழ்நிலைகளில் கற்கவும் இயலும்.

சமூகப் பாடம்: விளையாட்டு முறையில் கற்பிக்கக்கூடிய பாடங்களில் இதுதான் தலைசிறந்ததெனலாம். அரங்க நடிப்பு, சொற்பொழிவு, பகட்டு அணி, ஒப்பனைக் காட்சி, படத்தொகுப்பு (Stage-acting, Speaking, Pageant, Tab-

leau, Picture-album) முதலிய பல்வகையான விளையாட்டுப் பயிற்சிகளை அளிக்க இப்பாடப் பொருள்கள் மிகவும் தகுதியுற்றிருக்கின்றன.

விளையாட்டு முறைக் கொள்கைகள் பல முற்போக்குக் கற்பிக்கும் முறைகளிலும் ஊடுருவியுள்ளன. அவைகள் பின் வருமாறு:

கிண்டர் கார்ட்டன் (Kindergarten): இம் முறையை முதன்முதலில் கையாண்டு உலகுக்கு அறிமுகப் படுத்தியவர் ப்ரோபெல் (Froebel) என்ற ஜெர்மானியர் ஆவர். செயல், செய்கை மூலம் கற்றல் என்ற அடிப்படையில் கற்கும் முறை அமைய வேண்டும் என்று அவர் எடுத்துக் காட்டினர். பாட்டுக்களும் சுறுசுறுப்பாக நடமாடுதலும் அதன் சிறப்பு இயல்புகளாகும். சிறுவர்களின் கைகளில் பல்விதக் கொடைப் பொருட்கள் (Gifts) கொடுக்கப் படுகின்றன. அவற்றைத் தம் விருப்பம்போல் கையாண்டு வடிவம், நிறம், எண்ணிக்கை, நிறை முதலியவற்றைப்பற்றிய கருத்துக்களைப் பெறுகின்றனர். கோளம், கனச்சதுரம், கனச் செவ்வகம், உருளை போன்ற பொருள்கள் அத்தகைய கொடைப்பொருள்களில் சிலவாகும்.

"கிண்டர் கார்ட்டன்" என்ற சொல் குழந்தைகளின் தோட்டம் எனப் பொருள்படும். ப்ரோபெல் குழந்தைகளைச் சிறு செடி கொடிகளாகவும் பள்ளிக்கூடத்தைத் தோட்ட மாகவும் ஆசிரியரைச் சிறந்த தோட்டக்காரனாகவும் கருதினர். ஆகவே ஆசிரியரின் கடமை இளஞ் சிறுவர்களை அழகும் முழுமையும் பெறும் வகையில் பயிற்றுவித்தலாகும். குழந்தைகள் கற்கும் சூழ்நிலையில் உரிமை, விளையாட்டு,

மகிழ்ச்சி ஆகிய மூன்றும் நிலவ வேண்டும். நூல்களுக்கோ, திட்டமிட்ட அறிவுசார் வேலைகளுக்கோ, அதிக இடமளிக்கக் கூடாது.

ப்ரோபெலின் கொடைப்பொருள்கள் பின்வருமாறு:

கொடைப்பொருள் I: சிகப்பு, மஞ்சள், நீல நிறங்களில் மூன்று மரப் பந்துகளும் ஆரஞ்சு, பச்சை, கருஞ்சிவப்பு நிறங்களில் மூன்று மரப்பந்துகளும் அடங்கியுள்ளன. இவற்றைப் பாலர்கள் உருட்டி விளையாடுவதன் மூலம் நிறம், வடிவம், அசைவு, தசை உணர்வு முதலியவற்றைப்பற்றிய அறிவினைப் பெறுகின்றனர்.

கொடைப் பொருள் II: இவற்றில் ஒரு கோளம், ஒரு கனசதுரம், ஓர் உருளை ஆகிய மூன்று பொருள்கள் உள்ளன. இவை கடினமான மரத்தால் ஆனவை. இவற்றை வைத்துக்கொண்டு சிறுவர் விளையாடும்போது கனசதுரத்தின் உறுதிச் சமநிலை, கோளத்தின் சர்வத்திர சமநிலை, உருளையின் இருவகைத்தான சமநிலை ஆகியவற்றை அறிகின்றனர்.

கொடைப் பொருள் III: எட்டுச் சிறிய சமகன சதுரங்களாலான ஒரு பெரிய கன சதுரம். இவற்றைக்கொண்டு பின்வருவனவற்றை அமைக்கலாம். படிகள், வாயிற் கதவுகள், பாலங்கள், பெஞ்சுகள். இக்கொடைக்கு முதற் கட்டிடப் பெட்டி எனறு பெயர். சிறு அடிப்படைக்கூட்டல், கழித்தல்களையும் செய்து அறியலாம்.

கொடை IV: இதில் ஒரு பெரிய கன சதுரம் எட்டு நீண்ட பட்டகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கனச் செவ்வகமும் தடிப்பைப் போல் இரு மடங்கு அகலமும்

அகலத்தைப்போல் இருமடங்கு நீளமும் உள்ளது. கொடைகள் III, IV-ஐக் கொண்டு பலவகை உருவங்கள் அமைக்கலாம்.

இவற்றைப் போல் இன்னும் பல கொடைப்பொருள்கள் உள்ளன. இவற்றைக் கையாண்டு சிறுவர்கள் பலவிதக் கட்டிட விளையாட்டுகளில் ஈடுபடலாம். ஆசிரியர் இவற்றைப் பிள்ளைகளுக்கு அளிக்கும்போது பீடிகையாகச் சில பொருத்தமான பாட்டுகளைப் பாடலாம்.

ப்ரோபெல் முறையில் கொடைப் பொருள்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமாகச் சில செயல்களும் இடம் பெறுகின்றன. அவை காகிதம் மடித்தல், கத்தரித்தல், குச்சிகளைக்கொண்டு உருவங்கள் அமைத்தல், மணிகள் கோத்தல், களிமண் வேலை, சடை வேலை, வண்ணம் தீட்டுதல் முதலியனவாகும். இத்தகைய செயல்கள் மூலம் அளந்தல், சரியாகப் பொருத்துதல், அறிதலில் ஆர்வம், சேர்த்தல் போன்ற இயல்பூக்கங்கள் செயல்படுகின்றன.

தற்காலத்தில் பள்ளிக்கூடத் தோட்டங்கள் அமைக்கப் பட்டுச் சரிவரக்கண்காணிக்கப்படுகின்றன அல்லவா! இத்தகைய போக்கிற்கு அடிகோலியவரும் ப்ரோபெல் ஆவார். தோட்ட வேலையைப் பாடத் திட்டத்தில் புகுத்துவதால் பிள்ளைகள் தன்விருப்பத்துடன் பலவிதச் செயல்களில் ஈடுபடுவதுடன் உற்றுப்பார்த்தல், குறிப்புக்கள்வைத்தல், பலனை மதிப்பிட்டு மனநிறைவு காணுதல் போன்ற பழக்கங்களையும் ஏற்படுத்திக்கொள்கின்றனர்.

### (iii) மாண்டிஸோரி முறை

மாண்டிஸோரி அம்மையார் ரோம் பல்கலைக் கழகத்தில் மருத்துவ இயல் பட்டம் (M. D.) பெற்றவராவர். மனவலிமை

குன்றிய (feeble-minded) குழந்தைகளைக் கவனிக்கும் பணியில் அமர்ந்து அவர்களுடைய நடத்தையையும் போக்கையும் ஆராய்ந்து வரலானார். மனவளிக் குறைவிற்குக் காரணம் புலன்கள் மரத்துப்போதலே யென்று கண்டறிந்து அதைப் புலப்பயிற்சி மூலம் சீர்திருத்தலாம் என்று பரிசோதனைகள் வாயிலாக எடுத்துக் காட்டினார். இவ்வனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு சாதாரணக்குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதிலும் புலப்பயிற்சியைத் திறம்படக் கையாளலாம் என்று கண்டார்.

ரோம் நகரில் தொழிலாளர் வாழுமிடம் ஒன்றில் உள்ள குழந்தைகளுக்குக் கல்வியளிக்கும் திட்டமொன்று உருவாக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொரு வாழும் இடத்திற்கும் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டு, தொழிலாளர் வேலைக்குச் சென்றிருக்கும்போது அவர்களுடைய குழந்தைகள் கவனித்துக்கொள்ளப்பட்டனர். அத்தகைய முதற்பள்ளிக்கூடத்தின் மேற்பார்வையாளராக மாண்டிஸோரி அம்மையார் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது "குழந்தைகளின் வீடு" என்று அழைக்கப்பட்டது. அங்குள்ள பிள்ளைகள் 3 முதல் 7 வயதிற்குட்பட்டவர்களாவர். அவர்களுக்களிக்கப்பட்ட கல்வி முறையில் புலப்பயிற்சிக் கொள்கை அச்சாணி போல் இயங்கிற்று.

மாண்டிஸோரி முறையின் அடிப்படை உண்மைகள் பின் வருமாறு:

(1) கல்வி உள்ளிருந்து வெளிநோக்கி வளர்ச்சியடைகிறது. (2) கல்வி பெறும் சூழ்நிலையில் தன்விருப்பம் போல் செய்யும் பகுதி பொருந்தியிருக்கவேண்டும். (3) ஒவ்வொரு குழந்தையின் கல்வியையும் தனிச் சிக்கலாகக்

கருதிப் புகட்ட வேண்டும். (4) கல்வி வெளியாரால் புகட்டப் படாமல் பாலர் தாமாகக் கற்றறிய வேண்டும். (5) தசை அசைவுப் பயிற்சி மூலம் பல்வகை அறிவுபெறலாம். (6) புலன்களைத் தனியாகவும் கூட்டாகவும் பயிற்ற வேண்டும்.

இக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கேற்றவாறு 'குழந்தைகளின் வீடும்" சுற்றுப்புறமும் தட்டுமுட்டுச் சாமான்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தட்டுமுட்டுச் சாமான்களைப் பிள்ளைகளே எளிதாக இடம் விட்டு இடம் நகர்த்தும் வகையில் சிறியனவாகவும் இலேசாயும் இருக்கும். அலமாரிகள் அவர்களுக்கு எளிதில் எட்டுமாறு இருக்கும், அவர்களே தங்களுடைய உண்கலன்களையும், சுற்றுப்புறத்தையும் வீட்டையும் தூய்மையாக வைத்துக் கொள்வர். இசைக் கருவிகளும் ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கும். குழந்தைகள் தம்மிச்சைக் கேற்பச் செயல்களில் ஈடுபடும் வகையில் பூக்கள், பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள், படங்கள் முதலியனவும் திரட்டி வைக்கப்பட்டிருக்கும்.

இனி மேற்படி கொள்கைகளை ஒவ்வொன்றாய் எடுத்துக் கொள்வோம்.

### 1. கல்வி உள்ளிருந்து வெளிநோக்கி வளர்ச்சி அடைகிறது.

இக் கருத்தை முதன் முதலில் எடுத்துக் காட்டியவர் ஜீன் ஜாக்கஸ் ரூஸோ (Jean Jacques Rousseau) என்ற பிரெஞ்சு அறிஞர் ஆவார். இதே கருத்தை பெஸ்டலாஸ்ஸி, (Pestallozzi), ப்ரோபெல் என்ற இரு அறிஞர்களும் பெரிதும் ஆதரித்தனர். மாண்டிஸோரி அம்மையார் இத்தகைய

வளர்ச்சிக்கு வேண்டிய நடவடிக்கைகளை எவ்வாறு ஆசிரியர் மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளார். அவற்றின்படி ஆசிரியர் ஒரு நல்ல தோட்டக்காரனுக்கு ஒப்பாவார். எவ்வாறு செடி, கொடிகளின் வளர்ச்சியால் தொடக்க முதல் பலனை அனுபவிக்கும்வரையிலும் தோட்டக்காரன் கண்ணும் கருத்துமாய் இருந்து அவற்றைப்பேணி வளர்க்கிறனே அவ்வாறே ஆசிரியரும் மாணவரின் கல்வி வளர்ச்சி விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய உள்ளுறை திறமைகளை வெளிக்கொணர்ந்து மலரச் செய்தலே அவருடைய பணியும் கடமையுமாகும்.

## 2. கல்விபெறும் சூழ்நிலை தன்விருப்பம் பொருந்தியிருக்கவேண்டும்.

கல்வி உள்ளிருந்து மலர வேண்டுமானல் பாலர்களுக்கு உரிமையளித்தல் இன்றியமையாதாகும். அதாவது பாலர் கல்வியில் எவ்விதத் தடைகளுக்கும் கட்டாயத்திற்கும் இடமேயில்லை. இத்தகைய உரிமையளிக்க வேண்டியதற்கான காரணங்கள் இரண்டாகும். அவை (a) சுயேச்சை அடிப்படையில் புகட்டப்படும் கல்விவளர்ச்சியைத்தான் விஞ்ஞான முறையில் ஆராய முடியும். (b) ஒழுங்கு சுயேச்சையான நடத்தையின் பலனுக அமைய வேண்டும் என்பனவாம்.

## 3. பாலனின் தனித்தன்மைக் கொள்கை:

இக்கொள்கை வளர்ச்சித் தத்துவத்தோடு இயைகிறது. மாண்டிஸோரியின் கருத்துப்படி, ஒவ்வொரு பாலனும் தன் போக்கிலேயே திறமைகளை வெளிப்படுத்துகிறன். அதற்கு

வேண்டிய அனுகூலமான சூழ்நிலை உரிமையும் தன்னிச்சையும் கூடியதாயிருக்க வேண்டும். கூட்டாக வகுப்படிப்படையில் சிறுவர்களுக்குக் கல்வி புகட்டப்பட்டால் அத்தனித்தன்மையும் தன்னிச்சையும் செயல்பட வாய்ப்பளிக்க முடியாது. தனிக்கல்வியளிக்க முற்படும் ஆசிரியர் தம் மாணவர்களின் உளநிலைமை, போக்குகளைப் பற்றி மட்டுமல்லாமல் அவர்களுடைய உயரம், நிறை, வன்மை போன்ற உடல் நிலை விவரங்களையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். கற்றறி செயல்களில் ஈடுபடும்படி அவர்களுக்கு வசதிகள் அளித்து விட்டு அவர்களுடைய தேவைகளையும் முன்னேற்றத்தையும் ஆசிரியர் தனித்தனியே கூர்ந்து கவனிக்கவேண்டும்.

## 4. தாமாகக் கற்கும் கொள்கை.

சிறுவர் தாமாகவும் தத்தம் வேகத்திலும் கற்றால்தான் மிகுந்த நற்பயனெய்துவர். அவ்வாறு கற்கும்போது ஆசிரியர் கூடியமட்டும் பின்னணியிலேயே இருக்க வேண்டும். ஆசிரியரின் முதிர்ச்சிக்கும் மாணவரின் முதிர்ச்சிக் குறைவிற்கும் இடையே முரண்பாடு ஏற்படக் கூடிய ஏதுக்களைத்தவிர்ப்பதன்மூலம் இத்தகைய கற்கும் முறையைக் கையாள இயலும். மாணவர்கள் பலவித உதவிப் பொருள்களைக் கையாண்டு தம்மிச்சைச் செயல்களில் ஈடுபட்டுத் தத்தம் திறமைக்கேற்றவாறு "உண்மைகளை" அறியும் போது ஆசிரியர் அவற்றிற் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவர்களுடைய போக்கில் முட்டுக் கட்டை போடக்கூடாது.

## 5. தசை அசைவுப் பயிற்சிமூலம் பல்வகை அறிவு பெறுதல்

தசை அசைவுகள் மூலம் மாணவர்கள் தொடக்க நிலையில் பலவித அறிவு பெறமுடியும். அவற்றால் நரம்பு

மண்டலத்தில் சில பதிவுகள் ஏற்படுவதுடன் உள்ளுணர்வு மூலம் அறிவும் கிட்டுகிறது. நிலைமைகளுக்கேற்றவாறு தசைகளையும் உறுப்புக்களையும் சரிக்கட்டிக் கொள்ளுதலில் பயிற்சி ஏற்படுகிறது நடத்தல், ஓடுதல், குதித்தல் ஒப்பித்தல் போன்ற செயல்கள் மறிவினைகளாய் (Reflex Actions) நிகழ்கின்றன. சிறுவர்கள் இத்தகைய பயிற்சிகள் மூலம் தத்தம் உடல்நிலையை நயப்படுத்திக் கொள்வதோடு தாமாகவே அறிவும் பெறுகின்றனர்.

## 6. புலப்பயிற்சி

புலன்களே அறிவின் வாயில்களாகும். சிறுபிள்ளைகள் அறிவுபெறுதல் அவற்றின் மூலமே அமைய வேண்டும். புலன்களின் அடிப்படையில் பெறப்படாத எவ்வறிவும் சிறுவர்களின் மனதில் இடம் பெற்று நிலைக்க முடியாது. மாண்டிஸோரி அம்மையார் குறிப்பிட்டுள்ளபடி புலனறிவு பெறுவதற்குச் சிறந்த காலம் 3 வயது முதல் 7 வயது வரை ஆகும். புலன்களைக்கொண்டல்லாமல் தனிப்பட்ட அறிவு சார் முறையில் (intellectual) இச்சிறு குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட முற்பட்டால் அதன் பயன் மிகவும் குறைவாகவே இருக்கும். புலப்பயிற்சி மூலம் புலன்களின் செயலாற்றும் திறமை மிகுதியடைகிறது. அதனால் நரம்பு மண்டலத்தில் ஏற்படும் பாதைப்பதிவுகள் (Preferred Paths) மேல் வகுப்புக்களில் அறிவுசார் முறையில் கற்கும்போது முன்னணியில் வந்து தம்மியல்பாக உதவுகின்றன. புலப் பயிற்சி மூலம் சிறுவர்களுக்கு நிறம், நிறை, ஒளி, ஒலி, வெப்ப நிலை முதலியவைபற்றிய முதற்கருத்துக்கள் ஏற்பட ஏதுவாகும் ஐம்புலன்களையும் தனிமையாகவும் இரண்டு மூன்றாகச் சேர்த்தும் பயிற்றுவிக்கலாம்.

## (iv) தாமாகக் கண்டறியும் முறை

இத்தகைய முறையை முதன் முதலில் கல்வி புகட்டலில் முறைப்படி புகுத்தியவர் பேராசிரியர் ஆர்ம்ஸ்ட்ராங் (Professor Armstrong) என்பார். இதன் அடிப்படைத் தத்துவம் ஒவ்வொரு மாணவனும் புதியன கண்டுபிடித்த விஞ்ஞானிகளைப்போல்(Inventors)தாமாகவே கற்றற் செயல் களில் ஈடுபட்டுப்பொருள்களை அறிந்து கொள்ளுதலாகும். இம்முறையை அவர் விஞ்ஞானப்பாடம் கற்பிப்பதற்குக் கையாண்டார். இப்பாடந்தான் அதற்கு மிகவும் தகுதி யுடையதெனினும் ஏனைய பாடங்களையும் வரம்புகளுக்குட் பட்டு இம்முறையில் கற்பித்தல் முடியும் என்பது இக்காலத் தில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. பொருள் அறிவை அள்ளி ஊட்டுதலுக்கு (Spoon-feeding) இம்முறையில் இடமளிக்கப் படுவதில்லை. ஆனால் அவ்வறிவை எவ்வாறு பெற்று ஒழுங்குபடுத்தித் தன்வயப்படுத்திக்கொள்ளலாம் என்ற முறையில் ஆசிரியர் வழி காட்டுவதோடு நின்று விட வேண்டும். மற்றவை பிள்ளைகளின் பொறுப்பாகும். எனினும் ஆசிரியர் விழிப்பாயிருந்து மாணவர்கள் குறிப் பிட்ட நோக்கமின்றி நேரத்தைச் செலவழிப்பதைத் தவிர்ப்ப தோடு, ஆங்காங்கே தேவைப்பட்ட மாணவர்களுக்குக் குறைந்த அளவு உதவியும் அளிக்கவேண்டும்.

இம்முறையைக் கையாளும்போது விதிவருமுறை (Inductive Method) பயன்படுகிறது. மாணவர்கள் தம் முயற்சியாலேயே தகவல்களைத் திரட்டுகின்றனர். அவற் றிற்கு உதவியாக, நூல்கள், பரிசோதனைக் கருவிகள், புள்ளிவிவரச் செய்தியிதழ்கள் முதலியவை அமைகின்றன. ஒவ்வொரு மாணவனும் தானுகப் பெறும் அனுபவங்களின்

அடிப்படையில் கற்றல் அமைத்தால்தான் அறிவு உறுதிப் படும் என்பதே தாமாகக் கண்டறியும் முறையின் தத்துவ மாகும். ஆனல் ஒவ்வொரு மாணவனையும் இம்முறையில் ஈடுபடச் செய்து புதிதியற்றுவோனுகச் செய்ய வேண்டு மென்பது நம் நோக்கம் அன்று. அவ்வாறு இருப்பது முடியக்கூடியதுமன்று. அவன் எப்பொருளையும் விஞ்ஞான முறையில் புதியன கண்டறியும் மனப்பான்மையுடன் அணு கும் வகையில் தகுந்த பயிற்சியளிக்கலாம். ஆராய்தல், சீர்தூக்கிப்பார்த்தல், நூல்களில் கூறப்பட்டுள்ள உண்மை களை ஆழ்ந்து ஆராய்ந்தறிந்து ஏற்றுக்கொள்ளுதல் முதலிய பழக்கங்கள் உண்டாகின்றன. சுருங்கக்கூறின், அறியப்படும் பொருள்களைவிட அவற்றை அறியும் முறை அதிக முக்கிய மடைகிறது.

ஆனல் இம்முறை ஒன்றையே எப்பொழுதும் கையாள்வ தென்பது இயலாத செயலாகும். பல நேரங்களில் வெறும் தகவல்களை மட்டும் நேரடியாகக் கொடுக்க வேண்டி வரும். அவற்றை மாணவர்களே கண்டறிவதென்பது பொருளற்ற தாயிருக்கும். சில சமயங்களில் தாமாகக் கண்டறியும்படி அவர்களை விட்டுவிடல் தப்பும் தவறுமாக முடிவுகட்டிவிட ஏதுவாகும். கற்பித்தலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் பெரும்பகுதி இத்தகைய ஈடுபாட்டில் செலவிடுவதால் வீணு கலாம். ஆகவே பொருள்களை அப்படியே எடுத்துக் கொடுத்துக் கற்பிக்கும் கோடியிலிருந்து எல்லாவற்றையும் பிள்ளைகளே கண்டுபிடித்து அறியும் கோடிக்கு (From spoon-feeding to heurism)ப் போய்விடாமல் நடுநிலையாக இருவித இயல்புகளையும் தகுந்தவாறு கற்பிக்கும் முறையில் புகுத்துவதே பொருத்தமும் விரும்பத்தக்கதுமாகும். தாமாகக் கண்டறிவதற்கான வாய்ப்புக்களை செயல் திட்டங்கள், வினா

யாட்டுக்கள், விஞ்ஞான பரிசோதனைகள், ஒப்படைகள் (Projects, Games, Experiments, Assignments) போன்றவை மூலம் அளிக்கலாம்.

பள்ளிக்கூடப்பாடங்களில் இம்முறையைக் கையாளக் கூடிய வாய்ப்புக்கள் பலவுள மொழிப்பயிற்சியில் பல தகுந்த எடுத்துக்காட்டுக்களை எடுத்தாராய்ந்து விதி காண்பதன் மூலம் இலக்கணம் கற்பிக்கலாம். விஞ்ஞானப்பாடத்தில் பரிசோதனைகளின் முடிவுகளை ஆசிரியரே முன்கூட்டிச் சொல்லாமல் பிள்ளைகளே (ஆசிரியரின் மிகக்குறைந்த வழிகாட்டலுடன்) அவற்றைக்கண்டுபிடிக்க இயலும். சமூகப் பாடத்தில் மூலங்களை ஆராய்ந்து வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துக்காட்டலாம்.

இம்முறையைக் கையாள்வதில் பின்வரும் பயன்களும் வரம்புகளும் உள்ளன :

### பயன்கள்

(1) மாணவரின் உற்சாகத்தைத் தூண்டி விட்டுத் தாமாகச் செயல்களில் ஈடுபடும்படி செய்ய முடியும். (2) தாமாகக் கண்டுபிடித்தவற்றை அவர்கள் அறிவாக அமைத்துக்கொள்வதால் கற்றல் திறம்படைத்ததாகிறது. (3) வாழ்க்கையில் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தன்னம்பிக்கையோடும் உற்சாகத்தோடும் சமாளிக்கக் கூடிய வகையில் பள்ளிப் பயிற்சி அமையக்கூடும்.

### வரம்புகள்

(1) பல பாடங்களைக் கற்க வேண்டிய நிலையிலுள்ள மாணவர்கள் ஏற்கனவே அறிந்தவற்றைத் தாமா

க்க் கற்றறிவதில் செலவிடும் நேரம் நியாயமற்றது. மாணவர்கள் திரண்ட அறிவுக்குவியலுக் குரிய (accumu. lated knowledge) உரிமைத் தோன்றல்களாவர். ஆகையால் முன்னோர்களின் அனுபவத்தில் கண்டறிந்து கூறியுள்ளவற்றை அவர்கள் அவற்றை அறியப் பயன் படுத்திய முறையையே சிறுவர்களும் பின்பற்றுவதால் நேரச் செலவு அதிகமாவதோடு வேண்டாததாகவும் ஆகிறது. (2) ஒரு உண்மை அல்லது பொதுவான கொள்கையைப் பகுத்து அறிவதற்குரிய திறமையை முதிர்ச்சி பெறாத சிறுவர்களிடம் எதிர்பார்ப்பது பொருத் தமற்றதாகும்.

ஆயினும் போதனை முழுவதிலும் தாமாகக் கண்டறி யும் மனப்பான்மையையும் பாதையையும் ஏற்படுத்தித் தரலாம். இது எல்லாப் பாடங்களைப் பொறுத்த வரை யிலும் இயலும். அதற்கு வேண்டியதெல்லாம் ஆசிரிய ரின் மிகக் குறைந்த போதனையும் மாணவர்களின் மிக அதிகமான சிந்தனையுமேயாகும். பாலர்களைச் சுறுசுறுப் பாகக் கற்றலில் ஈடுபடுத்துவதற்குத் தன்விருப்பம்போல் சிந்திக்கும்படி அவர்களை விட்டுவிடுவதைப் போன்ற சிறந்த முறை வேறு இருக்க முடியாது.

### (v) டால்ட்டன் சோதனைச் சாலை முறை.

இம்முறை அமெரிக்காவிலுள்ள மாசச்யூசட்ஸ் (Massachusetts) மானிலத்தைச்சேர்ந்த டால்ட்டன்(Dalton) உயர்தரப் பள்ளியில் திட்டமிட்டுக் கையாளப்பட்டதால் இப்பெயர் பெற்றது. இதை உருவாக்கியவர் மிஸ் ஹெலன் பார்க்கர்ஸ்ட் (Miss Helen Parkhurst) என்ற அம்மை யாராவார். வகுப்பறைகள் சோதனைச் சாலைகளாக

இயங்க, மாணவ மாணவியர் அவற்றில் பல செயல்களில் ஈடுபட்டுக் கல்வி கற்றலே இம்முறையின் அடிப்படைக் கொள்கையாகும்.

பார்க்கர்ஸ்ட் அம்மையார் முதன்முதலில் இதை ஒரு நாட்டுப்புறப் பள்ளிக்கூடத்தில் செயற்படுத்தினர். அப் பள்ளியிலுள்ள முப்பது மாணவரும் எட்டு வகுப்புக்களில் (Grades) படித்தனர். எல்லா மாணவர்களுக்கும் வேலை கொடுத்துச் சமாளிப்பது மிகவும் அருமையாயிருந்தபடியால் அவர் ஒரு புதிய ஏற்பாட்டைக் கையாண்டார். அதன்படி (a) கால அட்டவணை (Time-Table) ஒழிக்கப்பட்டது. (b) வகுப்பறைகள் சோதனைச் சாலைகளாக மாறின. (c) வேலையைத் தேர்ந்தெடுப்பதில் மாணவர்க்கு உரிமையளிக்கப்பட்டது. (d) தேவையான நேரத்தை அவர்கள் எடுத்துக்கொள்ளலாம். இம்முறையை அந்த நாட்டுப்புறப் பள்ளியில் கையாண்டு பயன்கண்ட பார்க்கர்ஸ்ட் அம்மையார் அதை அடுத்தபடியாக டால்ட்டன் நகரத்து உயர்நிலைப்பள்ளியில் புகுத்திப் பெரும் பயனெய்தினர்.

டால்ட்டன் முறையின் சிறப்புக் கூறுகள் (1) வகுப்பறைகள் பாட அறைகளாகப் பிரிக்கப்படுதல் (2) வகுப்பு ஆசிரியர் முறைக்குப் (Class-Teacher System) பதிலாகப் பாட ஆசிரியர் முறையை (Subject-teacher system) நடைமுறையாக்கல் (3) பாடத் திட்டம் வேலை அலகுகளாகப் பிரிக்கப்பட்டு (Units of work) அவை ஒப்பந்தங்களாகக் (Contracts) கருதப்படுதல், (4) மாணவர் தத்தம் ஆர்வத்தையொட்டி, வகுப்பு விட்டு வகுப்பு மாறிக் கொண்டிருக்கத் தேவையான உரிமையளித்தல், (5) ஆசி

ரியர்கள் தத்தம் பாடங்களைப் பொறுத்தவரையில் நாடி வரும் மாணவர்க்கு உதவிக்குறிப்புக்கள் வழங்குதல், (6) ஒவ்வொரு மாணவரின் முன்னேற்றத்தைக் காட்டும் வரைப் படப் பதிவு முறையைக் (Graphical Method) கையாளுதல் என்பனவாம்.

ஒவ்வொரு பாட அறையிலும் அப்பாடத்தைச் சார்ந்த பலவிதக் கருவிகளும் திரட்டி வைக்கப்பட்டிருக்கும். நூல்கள், செய்தித் தாள்கள், கருவிகள், சுவர்ப்படங்கள், (Wall Maps) சுவரொட்டிகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலியன அத்தகைய கருவிகளிற் சிலவாகும்.

காலை நேரத்தின் முற்பகுதி தனி மாணவர் அல்லது தனி மாணவர் குழுவினர் (Groups) தத்தம் விருப்பச் செயல்களில் ஈடுபட ஒதுக்கப்படும். பிற்பகலில் வகுப்பறை வாய் மொழிப் பயிற்சிக்கு வகை செய்யப்படும். இத்தகைய அலுவல் மகாநாடு (Conference) என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு வகுப்பிற்கும் குறிப்பிட்ட பாடத்திற்கான ஒருமாத வேலைத் திட்டத்திற்கு ஒப்பந்தம் எனப் பெயர். ஆயினும் அதைவிடக் குறுகிய காலத்தில் ஒரு ஒப்பந்த வேலையைச் செய்து முடிக்கும் மாணவர் அடுத்த ஒப்பந்த வேலையை மேற்கொள்ளலாம். ஆனால் ஆசிரியர் அவ்வாறு செய்து முடிக்கப்பட்ட வேலையைப் பற்றி மனநிறைவு (Satisfaction) பெறுதல் இன்றியமையாத விதியாகும். எல்லாப் பாடங்களிலும் ஒரு குறிப்பிட்ட மாதத்திற்கான ஒப்பந்தங்களை நிறைவேற்றிய பின்னரே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களிற்கான அடுத்த மாத ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம் என்பது மற்றொரு விதி

யாகும். இந்த விதிகளின் மூலம் மாணவர் எல்லாப் பாடங்களிலும் ஒரே சீரான கவனம் செலுத்தவும் தேர்ச்சி பெறவும் இயலும்.

ஒவ்வொரு மாணவனின் அவ்வப்போதைய முன்னேற்றத்தையும் தேர்ச்சியையும் எடுத்துக் காட்டும் வகையில் மூன்று வரைப்படப் பதிவுகள் கையாளப்படுகின்றன. அவற்றுள் இரண்டு அம் மாணவனிடமும் மற்றொன்று ஆசிரியரிடமும் இருக்கும். இம்முறை மூலம் ஒப்பந்தங்களில் எவ்வெவற்றில் முன்னேற்றக் குறைவு ஏற்பட்டுள்ளதென்று அறிந்து கொள்ளவும், அதையொட்டி ஒப்பந்த காலத்திற்குள் வேலையைச் செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒவ்வொரு மாணவனுக்கும் இயலும்.

## டால்ட்டன் முறையின் நன்மைகள்

1. தனிமாணவரின் பொறுப்பறியும் பண்பு வளர்க்கப்படுகிறது. வெளிக்கட்டாயமின்றி, தன்னிச்சையாகவும் தன் திறமைக் கேற்பவும் குறித்த காலத்தில் ஒப்பந்தங்களைச் செய்து முடிப்பதை அவன் ஒரு கடமையாகக் கருதிப் பணியாற்றும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்கிறான்.

2. தானாகவே மேற்கோள் நூல்கள் (Reference Books), மூல நூல்கள் (Source Books), அகராதிகள் (Dictionaries) முதலியவற்றைப் புரட்டித் தகவல் திரட்டியறிவதில் நல்ல பயிற்சி ஏற்படுகிறது.

3. வகுப்பு முறை போதனையில் பள்ளிக்கு விராமலிருந்த நாட்களில் நடந்த பாடங்கள் அம்மாணவர்களுக்கு ஒரு

வகையில் இழப்பாகிறது. ஆனால் டால்ட்டன் முறையில் தாமாகக் கற்கும் முறை பொறுப்புணர்ச்சியுடன் மேற்கொள்ளப்படுவதால் அத்தகைய இழப்பிற்கே இடமேற்படக் காரணமில்லை.

4. தேர்ச்சிக் குறைவிற்காக மாணவர்களை வகுப்புக்களில் தேக்கி வைக்கும் வழக்கத்திற்கு முற்றுப் புள்ளியிடப் படுகிறது. ஏனென்றால் ஆசிரியர் அவ்வப்போது தேர்ச்சியை அளந்து வருவதாலும் ஓராண்டிற்கான ஒப்பந்தங்களை எல்லா மாணவர்களுமே முடித்துவிடுவதாலுந்தான்.

5. அதிகத் திறமையும் ஊக்கமுமுள்ள மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பிலேயே அதற்கடுத்த வகுப்பிற்கான அவ்வாண்டு ஒப்பந்தங்களையும் மேற்கொள்ளலாம். இதன் மூலம் அவர்கள் நேரத்தை மிக்க பயனுள்ள வகையில் செலவிட முடிகிறது.

6. பாட அறைகளிலேயே பல்வேறு வசதிகள் இருப்பதோடு மற்ற மாணவரின் உதவியும் கிடைப்பதால் ஒவ்வொரு மாணவனும் பள்ளி நேரத்திலேயே தன் வேலையைச் செய்து முடிப்பதில் ஆர்வமும் ஊக்கமும் காட்டுகிறான். அதனால் வீட்டு வேலை என்ற வகையில் தனியாக அவன் ஆற்ற வேண்டியதொன்றும் அநேகமாக இருக்காது. அவ்வாறிருப்பதையும் அவன் விருப்பத்துடனும் கடமையுணர்ச்சியுடனும் மேற்கொள்வானேயொழிய, வலுக்கட்டாயமாகச் செய்யவேண்டியதாகக் கருதமாட்டான்.

7. டால்ட்டன் முறை ஆசிரியர் மாணவர்களின் வழிகாட்டியும் நண்பருமாவார். ஆகையால் அவர்களைத் தனிப்

பட்ட முறையில் கவனித்து வர வசதியேற்படுகிறது. எவ்வித அச்சமும் கூச்சமுமின்றி மாணவரும் அவரை யணுகிக் கல்வியறிவு பெறமுடியும். தன்னம்பிக்கையுடனும் தன்னூக்கத்துடனும் (Self-confidence and initiative) ஒப்பந்த வேலைகளில் அவர்கள் ஈடுபடுவதால் ஆசிரியரிடம் சென்று உதவிநாடும் இயல்பு படிப்படியாகக் குறைந்து மறையும்.

## டால்ட்டன் முறையின் குறைகள்

1. ஆசிரியரின் முழுநேர போதனையென்ற ஒரு கோடியிலிருந்து மாணவனின் சுயமுயற்சிக் கற்றல் என்ற மறு கோடிக்குக் கல்வி முறையை மாற்றிக் கையாள்வதால் மாணவர்களின் திறமையில் அளவுமீறிய நம்பிக்கை வைக்கப்படுகிறது. அதனால் ஓரளவு ஏமாற்றத்தையும் எதிர்பார்க்காமலிருப்பதற்கில்லை.

2. எல்லாப் பாடங்களிலும் முன்கூட்டியே ஒப்பந்தத் தாள்களை (Assignments)த் தயாரித்தல் எளிதான வேலையன்று. மேலும் அவை போதிய எண்ணிக்கைகளிலும் தயாரிக்கப்படவேண்டும்.

3. ஒழுங்கான போதனைக்கான (Systematic Teaching) நேரம் குறைக்கப்பட்டு விடுகிறது. அதனால் அடிப்படையறிவின்றி மேலெழுந்தவாரியான கற்றலுக்கே வழி வகை செய்வதாக ஏற்படுகிறது.

4. ஆசிரியர் ஒவ்வொரு தனிமாணவனுடைய முன்னேற்றத்திலும் தேர்ச்சியிலும் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டுமானல் அவர் தனிப்பட்ட (extra-ordinary) திறமையும் உற்சாகமும் ஈடுபாடும் உள்ளவராயிருத்

தல் அவசியமாகிறது. ஆனால் உண்மைநிலையில் இத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகாவே இருக்கும்.

டால்ட்டன் முறையினால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் அதிலுள்ள குறைகளையும் உற்று நோக்குங்கால் பின்வரும் நடைமுறை ஊகங்களை நாம் அடைகின்றோம்:

1. எல்லாப் பாடங்களையும் தனி மாணவ அடிப்படையில் ஒப்பந்தங்கள் மூலம் கற்பிக்க முடியாது.

2. சிலபாடங்களைப் பொறுத்தமட்டில் அம்முறையைக் குறிப்பிட்ட அளவிலும் இன்னும் சிலவற்றைப் பொறுத்து வகுப்புப் போதனை முறையைக் கணிசமான அளவிலும் மேற்கொள்ள வேண்டும்.

3. பொதுவாக, ஒழுங்கான போதனைக்கும் போதிய நேரம் செலவிட வேண்டும்.

4. ஒப்பந்தத்தாள்களை அனுபவமிக்க ஆசிரியர்கள் மிக்க கவனத்துடன் தயாரிக்க வேண்டும். இவ்வகையில் ஒரு குறிப்பிட்ட எல்லையிலுள்ள பள்ளிகளின் ஆசிரியர்கள் கூட்டாக ஈடுபட்டால் வேலைப்பளு குறைவதுடன் அத்தாள்களின் தரமும் உயரும்.

5. மொழிக்கல்வி, கணித சம்பந்தமான விதிகளும் முறைகளும், பன்முறைப் பயிற்சி (Drill) முதலியவற்றை வகுப்படிப்படையில் மேற்கொண்டு வாய்மொழிப் பயிற்சிக்கு அதிக இடமளிக்கலாம்.

6. சிலசமயங்களில் வகுப்பு, தனிமாணவ அடிப்படைகளைக் கைவிட்டு, சமதிறமையுள்ள மாணவக் குழுவினராகப்

(Homogeneous grouping of pupils) பிரித்தும் கற்பித்தல் - கற்றல் (Teaching-Learning) நடைமுறையை அமைத்துக்கொள்ளலாம்.

அத்தகைய சம திறமையுள்ள மாணவக் குழுக்கள் ஒவ்வொன்றும் பின் வருவனவற்றைக் கவனித்துக்கொள்ளலாம்:

(i) படித்தல், (ii) எழுத்துக் கூட்டல், (iii) பாராமல் எழுதுதல், (iv) உச்சரித்தல், (v) குழுவிலுள்ள மாணவர் செய்த வேலைகளை ஒருவருக்கொருவர் ஒப்பிட்டுச் சரிபார்த்துக்கொள்ளுதலும் நிறைவேற்றுதலும், (vi) வாய்பாடுகள், விதிகள், முறைகள், கொள்கைகளை ஒப்பித்தல், (vii) மனக்கணக்கு விடைகளைச் சரிபார்த்தல்.

சமதிறமைக்குழு பிரித்தலில் சிலவற்றை மனத்தில் இருத்தல் வேண்டும். அவை பின் வருமாறு:

(i) நுண்ணறிவு அல்லது தேர்ச்சி (Intelligence or-Achievement) அடிப்படையில் இருக்கலாம்.

(ii) ஒரு குழுவிலுள்ள மாணவர்கள் எல்லோரும் மேற்கொள்ளப்படும் பணியில் ஈடுபடுமாறும் செலவிடும் நேரம் எவ்வகையிலும் வீணாகாதவாறும் கண்காணிக்க வேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும்.

(iii) ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அடங்கியுள்ள நிபந்தனைகளும் குறிப்புகளும் எல்லா மாணவர்களுக்கும் நன்கு தெளிவாக்கப்பட்ட பிறகே அவர்கள் செயலில் ஈடுபடவேண்டும்.

(iv) போட்டியுணர்ச்சிக்கும் சிறிது இடமளிக்கலாம். ஆனால் வரம்பு மீறிய போட்டியுணர்ச்சி வளர்ந்தால் நன்மையைவிடத் தீமையே அதிகமேற்படும் என்பதை நாம் மறக்கலாகாது.

(v) சம திறமை மாணவக் குழுக்களைப் பாடச் செயல்களுக்கும் தோட்ட வேலை, வகுப்பறை ஒழுங்கு, விழாக் கொண்டாடுதல் போன்ற பாடப்புறச் செயல்களுக்கும் (Curricular as well as extra-curricular activities) பயன்படுத்தல் நல்லது.

ஆகவே, செயல் நலமறி திறனுள்ள (tactful) ஆசிரியர் உண்மை நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு "பரம்பரையான" வகுப்பு முறைப் போதனையையும் டால்ட்டன் முறைப் போதனையையும் சம திறமை மாணவக்குழுப் போதனையையும் கையாண்டு மாணவர்களின் கல்வித் தரத்தை மிகவும் உயர்த்தலாம். அவரிடம் காணத் தகாதது பிடிவாதமும் மாற்றம் விழையாத் தன்மையுமே (Obstinacy and conservatism). அவர் மேற்கொள்ள வேண்டிய பண்புகள் ஊக்கம், ஆர்வம், குறைவற்ற கவனம், சலிப்பற்ற உழைப்பு என்பனவாகும்.

## (vi) செயல் திட்ட முறை:

இம்முறை தற்காலக் கல்வி புகட்டலில் கையாளப்படும் ஒரு புது முறையாகும். இது முதன் முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு விவசாயப்பள்ளியில் பரிசோதனை அடிப்படையில் கையாளப்பட்டது. அதில் நல்ல பலன் காணப்பட்டதால் இம்முறை கணிசமான

அளவில் சாதாரணப் பள்ளிக் கூடங்களிலும் பரவியுள்ளது. நம் நாட்டில் பொதுவாக தொடக்க நிலைப்பள்ளிகள் சிலவற்றில் இம் முறை கையாளப்படுகிறது.

இம்முறையில் பள்ளிக்கூடம், பாடத்திட்டம், படிப்பு விஷயங்கள் முதலியவை கற்கும் மாணவரின் உளநிலை, போக்குகளுக்கேற்றவாறு அமைக்கப்படுகின்றன. இதில் சிக்கல் தீர்த்தல் என்னும் இயல்பு மேலோங்கி நிற்கிறது. பாட விஷயங்களைத் தேர்ந்தெடுத்தலில் தொடங்கி, அவற்றைக் கற்றுக்கொள்ளும் வரை மாணவர்களே சிந்தித்தல், செயற்படுதல் ஆகிய காரியங்களை மேற்கொள்கிறார்கள். எனினும் ஆசிரியர் பின்னணியிலிருந்து கொண்டு அவர்களுக்கு ஊக்கமும் உதவியும் அளிக்கிறார்.

மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்களில் மாணவர்களுக்கு அக்கறை ஏற்படுத்தக்கூடிய ஏதுக்கள் பின் வருமாறு:

1. ஒரு செயல் திட்டம் மாணவனின் அன்றாட வாழ்க்கையை யொட்டியும், தேவைகளுக்கேற்றவாறும் இருத்தல்.

2. அதை நிறைவேற்றுவதால் மாணவனின் விருப்பங்களுக்கேற்றவாறு நோக்க அடைவு (achievement of objectives) ஏற்படல்.

டாக்டர் கில்பாட்ரிக் (Dr. Kilpatrick) "செயல் திட்டம் என்பது ஒரு சமூகச் சூழ்நிலையில் முழு மனத்தோடு நோக்கமுற்று மேற்கொள்ளப்படும் செய்கையாகும்," என வரையறுத்துக் கூறியுள்ளார்.

ஸ்டீவன்சன் (Stevenson) கருத்திற்கிணங்க, ஒரு செயல் திட்டம் இயற்கையான பின்னணியில் முற்றுப் பெறும் சிக்கல்சார் செயலாகும் (Problematic Act). ஆகவே இது ஒரு விதத்தில் மாணவர்களை வாழப்பழக்கும் முறையாகும். ஏனென்றால் வாழ்க்கையென்பது செயல் திட்டங்கள் நிறைந்ததாயிருப்பதுடன் அவற்றை நிறைவேற்றுவது மாகும்.

பேராசிரியர் பால்லார்டு (Prof. Ballard) என்பார் ஒவ்வொரு செயல் திட்டத்தையும் வாழ்க்கையின் பகுதியாகக் கருதுகிறார். அவ்விதப் பகுதிகளைப் பள்ளியிற் புகுத்திக் கற்பித்தல் ஒரு செயல் திட்டத்தை "வாழ்வதன் மூலம் கற்றல்" (learning by living) என்று குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகும். இத்தகைய வாழ்க்கைக் கற்றலில் (a) தன்னியல்பாய் ஈடுபடல் (Spontaneity), (b) நோக்கமுடைமை (Purposefulness), (c) பொருளுடைமை (Significance), (d) கவர்ச்சி (Interest) என்ற நால்வகை உண்மைகள் அடங்கியுள்ளன.

ஒரு செயல் திட்டத்தின் படிகள் (1) தகுந்த நிலையை ஏற்படுத்தித் தருதலும் (2) தேர்ந்தெடுத்தலும் நோக்கமுறுதலும், (3) திட்டமிடுதலும் (4) நிறைவேற்றுதலும் (5) பலனை மதிப்பிடலும் ஆகும்.

## செயல் திட்ட வகைகள்

ஒரு செயல் திட்டம் ஒரு சிக்கலின் தீர்வு காண்பதாகவோ பல சிக்கல்களின் தீர்வுகளைக் காண்பதாகவோ இருக்கலாம் அல்லது மாணவர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ ஈடுபடுவதாயிருக்கலாம். கூட்டுச் செயல்

திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஒத்துழைப்பு, வேலையைப் பகிர்ந்துகொள்ளுதல், மனமுவந்து பொறுப்பேற்றல் முதலிய நற்பண்புகளில் பயிற்சி கிட்டுகிறது. அதனால் சிக்கல் நிறைந்த வாழ்க்கைக்கு மாணவர்கள் தம்மைத் தயாரித்துக்கொள்ள ஏதுவாகிறது.

## செயல் திட்டங்களைப் புகுத்தும் முறை:

கீழ் வகுப்புக்களில் செயல் திட்டத்தை விளையாட்டு வடிவத்தில் மேற்கொள்ள வேண்டும். படித்தல், எழுதுதல், எண் கணக்கிடல் போன்றவற்றைச் செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தலாம். மேல் வகுப்புக்களில் நாடகம் தயாரித்து அரங்கேற்றல், சொற்பொழிவுக் கலை (Elocution), இசைப்பயிற்சி, இலக்கியப் பயிற்சி, தையல் வேலை, கணக்கு வைத்துக்கொள்ளுதல் முதலியவற்றைச் செயல் திட்டங்களாகப் புகுத்தலாம்.

செயல் திட்ட முறையில் உள்ளடங்கியுள்ள கருத்துக்கள் பின் வருமாறு:

1. பள்ளிக்கூட வேலைக்கும் மெய்யான வாழ்க்கைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் குறைக்க முயல்கிறது.
2. மாணவர்களுக்கு அக்கறையுள்ள விஷயங்களையொட்டியிருப்பதால் அவர்கள் தன்னியல்பாக ஈடுபடுகிறார்கள்.
3. மாணவர்களின் செயற்படுதல் உயர்ந்த அளவாக இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் தன்விருப்பாகவும் தம்மியல்பாகவும் மேற்கொள்கிறார்கள்.
4. செயல் திட்ட முடிவை உடனேயும் கைக்குமெய்யாகவும் (Immediately and tangibly) காணமுடிகிறது.

5. மாணவர்கள் உண்மையான சூழ்நிலையில் அறிவு பெறுவதால் வாழ்க்கையில் அவ்வறிவைப்பயன்படுத்தக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.
6. வாழ்க்கை உண்மைகளைப்போல் பாட விஷயங்களும் ஒருமைப்படுத்தப்படுகின்றன.

ஆனால் இம்முறையில் குறைகளும் இல்லாமலில்லை. அவற்றில் சில பின்வருமாறு:

1. பள்ளிக்கூட வேலையின் ஒழுங்கு சீர்குலைய ஏதுவாகிறது.
2. பெறும் அறிவு ஒழுங்கமைப்பிற்குப் புறம்பாகவும் தொடர்ச்சியின்றியும் இருக்கும்.
3. எவ்வளவு திறமையோடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் எல்லாப் பாடங்களையும் செயல் திட்டங்களின் மூலமே கற்பிக்க முடியாது.
4. கீழ் வகுப்புக்களில் ஒருவாறு செயல் திட்டங்களின் மூலமே பல பாடங்களையும் கற்பிக்க முடிந்தாலும் மேல் வகுப்புக்களில் அவற்றைத் தனியாக ஒழுங்கு முறைகளுக்குட்பட்டே போதிக்க வேண்டி வரும்.

**செயல் திட்டங்களைத் தேர்ந்தெடுத்தல்.**

1. தேர்ந்தெடுக்கும் செயல் திட்டத்தால் திட்டவட்டமான கல்விப் பயன் கிட்டுவதாயிருக்கவேண்டும்.
2. அதற்குவேண்டிய உபகரணங்கள் மலிவாகவும் எளிதில் கிடைக்கக் கூடியனவாயும் இருக்க வேண்டும்.
3. செலவிடும் நேரத்திற்கும் பள்ளிக்கூடத்தின் நிலைமைக்கும் ஈடுபடும் மாணவர்களுக்கும் ஏற்றவாறு அதன் கற்றற் பலனிருக்க வேண்டும்.

கொள்கையளவில் செயல் திட்டமுறை கவர்ச்சியுள்ள தாயும் இளம் பாலர்களுக்கேற்றவாறும் இருந்தாலும் நடைமுறையில் அவ்வளவிற்குச் செயற்படுத்த முடியாது. அதே போல் செயல் முறையேயில்லாத பழைய கல்வி முறையும் தற்காலக் கருத்துக்களுக்கொவ்வாது. ஆகவே இரண்டையும் அவ்வப்போது பொருத்தமாகக் கலந்து கையாள்வதன் மூலம் மாணவர்களின் கற்றல் திறமையும் பயனும் மேம்பாடடையுமாறு செய்யலாம். முக்கியமாகக் குறிப்பிட்ட பாடப்பகுதிகளைக் கற்பதற்குத் தகுந்த சூழ்நிலையை ஊக்குவித்தல் (Motivation) மூலம் ஏற்படுத்திக்கொள்ளவும் கற்றவற்றை உண்மை நிலைகளில் செயற்படுத்திப் பார்க்கவும் (Application) செயல் திட்டங்களைக் கணிசமாகக் கையாண்டு பயன் காணலாம்.

## (vii) சிக்கல் தீர்க்கும் முறை

இம்முறையை இயக்குவதற்குரிய கருவிகள் ஆய்வுச் சிந்தனையும் பகுத்தறியும் ஆற்றலும் (Reflective Thinking and Reasoning) ஆகும். இதற்காக, கற்பித்தல்-கற்றல் நிலைகளில் சிக்கல்கள் இயற்கையாக எழுமாறு செய்வது ஆசிரியரின் திறமையைப் பொறுத்ததாகும். சிக்கல் என்பது நோக்கம் ஈடேறுமாறு நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் குறுக்கிடும் ஒருவிதத்தடை போன்றது. ஆனால் அதைச் சமாளித்துச் சிக்கலின் தீர்வுகாண்பதிலுள்ள மகிழ்ச்சியே தனி வகையானது.

ஒவ்வொரு பாலனும் சிறுவயதிலிருந்து வாழ்நாள் முடிய, பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இச்சிக்கல்கள் மாணவனைச் சுற்றியுள்ள சூழ்நிலையிலும், அறிவுசார் விஷயங்களிலும் சமூக உறவுகளின் மூலமும்

எழுகின்றன. அவனுடைய வயது முதிர்ச்சிக்கேற்றவாறு இச்சிக்கல்களின் கடினத்தன்மையும் அதிகரிக்கின்றது. அவற்றிற்கேற்றவாறு தீர்வுகாணும் முறைகளும் அமைகின்றன. தீர்வுகண்டுபிடிப்பதைப் பொறுத்துத்தான் மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளின்மேல் அவனுடைய ஆதிக்கமும் வலுப்பெறுகிறது. அறிவு வளப்படுகிறது. அறிவுசார் திறமை வளர்ச்சியடைகிறது.

சிக்கல் தீர்க்கும் முறையின் நோக்கம் மாணவர் பெற வேண்டிய அறிவைச் சிக்கல் வடிவத்தில் எடுத்துக்காட்டி அதைத் தீர்ப்பதில் அவர்களை நேரடியாக ஈடுபடுத்துவதும் மறைமுகமாக, தொடர்புடைய அறிவைப் பெறச் செய்வதுமாகும். வாழ்க்கையிலும் பள்ளிக்கூடச் சூழ்நிலையிலும் எழும் சிக்கல்களோடு இயைந்து அறிவுபெறப்படுவதால் அது உண்மையை அடிப்படையாகக் கொண்டு பயனுள்ளதாக அமைகிறது.

சிக்கல் தீர்க்கும் முறையை நடைமுறையில் ஒரு குறிப்பிட்ட பாடபோதனையில் கையாளும் போது இருவிதத் தொடர்புறுத்தல்களைப் பயன்படுத்த வேண்டும். அவை (i) வாழ்க்கையோடு தொடர்புறுத்தல், (ii) மற்றப்பாடங்களோடு தொடர்புறுத்தல் என்பனவாம்.

சிக்கல் தீர்க்கும் முறையிலுள்ள நுட்பம் ஒரு செயல் திட்டத்தை நிறைவேற்றுவதாய் அமையக்கூடும். எடுத்துக்காட்டாகப் பள்ளிச் சிறுவர்களுக்குக் குடிதண்ணீர் வசதியளிக்கும் சிக்கலை எடுத்துக்கொள்வோம். இதையொட்டி எழும் பலவிதக் கிளைச் சிக்கல்களையும் சிறுவர்களே அலசி ஆராயலாம். கிணறு தோண்டுவதற்குத் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தல், தோண்டும் வேலையை ஒழுங்காகப்

பகிர்ந்துகொள்ளும் வகையில் திட்டமிடல், தோண்டுதல், குழாய்களை அமைத்தல், அதிகாரிகளிடம் தேவையான இசைவும், உதவியும் பெறல் போன்றவை அத்தகைய கிளைச் சிக்கல்களில் சிலவாகும்.

சிக்கல் தீர்த்தலின் படிகளாவன: (1) எழும் சிக்கலைப் பிரித்தெடுத்தல், (2) அதைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கொள்ளுதல், (3) வேண்டிய தகவல்களை முறையாகத் திரட்டிச் சேர்த்தலும் ஒழுங்காக அமைத்துக்கொள்ளுதலும், (4) உத்தேசமான தீர்வு காணுதல், (5) அத்தீர்வைச் செயற்படுத்திச் சரிபார்த்தல், (6) அவசியமான மாற்றங்களுடன் அத்தீர்வை மறுபடியும் செயற்படுத்தி உறுதியாக்கிக் கொள்ளுதல்.

சிக்கல் தீர்க்கும் முறை பார்வைக்குத் தோன்றுவது போல் அவ்வளவு எளிதன்று. ஆயத்தத் திறமையும் உழைப்புணர்ச்சியுமுள்ள ஆசிரியர்களே இம்முறையைப் பயனுறக் கையாள முடியும். உண்மை வாழ்க்கையில் தோன்றும் அல்லது தோன்றக்கூடிய (Real or realistic) சிக்கல்களைத் தேர்ந்தெடுத்தல், அவற்றின் தீர்வுகாணும் இன்றியமையாமையை மாணவர்கள் உணரும்படி செய்தல், அவர்களுடைய தீர்வுகாணும் முயற்சியை மேற்பார்வையிட்டுச் சரியான வழியில் செலுத்தல் போன்ற துறைகளில் ஆசிரியர் தம் திறமையைக் காட்டுவதன் மூலம் இம்முறையினால் ஏற்படும் பலனை அதிகப்படுத்தலாம்.

# அத்தியாயம் III

## கல்வி புகட்டும் முறை

## மறைமுக அனுபவங்கள்

வாய்மொழி மூலம் (Oral communication). இம்முறை பல கிளைகளை உட்கொண்டுள்ளது. அவை (i) கூறுதல் (Narration) (ii) விரித்தலும், விளக்கலும் (Description and Explanation) (iii) கேள்வி கேட்டல் (Questions), (iv) குழுப்படிப்பு (Group - study) (v) சொற் போர் (Debate) (vi) ரேடியோவும், கிராமபோனும், (vii) நாடகம் என்பனவாகும்.

### (i) கூறுதல்

இவ்வகையில் கதை சொல்லுதல், குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுதல் போன்றவை சேரும். அவ்வாறு கூறுவதைக் கையாள்வதில் தெளிவு, கவர்ச்சி, தொடர்ச்சி முதலிய பண்புகள் இருக்க வேண்டும். அதன் பயனாக உற்றுக் கேட்கும் மாணவர்கள் விவரங்களை மனதில் பதியவைத்துக்கொள்வதுடன் அவற்றைத் தொடர்பாகவும் கவர்ச்சியாகவும் எடுத்துக் கூறக்கூடிய ஆற்றலைப் பயிற்சி மூலம் பெறமுடியும்.

நிகழ்ச்சிகளுக்கும் நிலைகளுக்கும் ஏற்றவாறு கையாளப்படும் மொழியின் தரமும் சிறப்பும் அமையவேண்டும். அதை உற்றுக் கேட்கும் மாணவ மாணவியரின் உள நிலைமையையும் போக்கையும் ஒட்டி இருக்க வேண்டும்.

(வரலாறு) கூறுதல் ஒரு கலையாகப் பேணி வளர்க்கப்பட வேண்டிய செயலாகும். ஆர்வமிக்க ஆசிரியர்

(i) மற்ற அனுபவ மிக்க வ ர லா று உரைப்போர்களை உற்றுக் கவனித்தல் (ii) குழந்தைகளுக்கான நூல்களை ஊன்றிப் படித்தல் (iii) மாணவர்க்குப் புரியும் முறையில் கூறுவதற்கான தன்னூக்கத்தைத் தாமே மேற்கொள்ளு தல் (iv) (கதை) சொல்லுதலில் திரும்பத்திரும்ப ஒத் திகை பார்த்துக் கொள்ளுதல் போன்ற படிகளை மேற் கொண்டு இக்கலையில் சிறந்த பயிற்சியும் உயர்ந்த திற மையும் பெறலாம்.

ஏராளமாக உவமைகளையும் (Similes) உருவகங்களை யும் (Metaphors) பழமொழிகளையும் (Proverbs) கையாள் வதன் மூலம் கதை சொல்லுதலின் கவர்ச்சித் தன்மையை மேம்படுத்தலாம். ஆனால் அவை மாணவர்கட்குப் புரியக் கூடியவையாயிருத்தல் அவசியம். கையாளும் மொழி தொடக்கத்தில் எளியதாகவும் போகப் போக அணிகள், மரபுச் சொற்றொடர்கள் கொண்டதாகவும் இருக்க வேண் டும். ஆனால் எந்நிலையிலும் மாணவர்களின் அனுபவங் களை ஒட்டிய எடுத்துக்காட்டுக்களைத் தாராளமாகக் கையாள வேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு நிலையிலும் அடுத்தபடி நிகழப் போவதென்னவென்பதை மாணவர்கள் அறிய ஆவலுள்ள வர்களாய் இருக்குமாறும் கதை சொல்லும் போக்கிருக்க வேண்டும்.

கதை சொல்லுகையில் (i) அவ்வப்போது சிறு சிறு கேள்விகள் மூலம் அடுத்து வரும் நிகழ்ச்சிகளைப் பற்றி மாணவர்களின் கற்பனைத் திறன் வெளியீட்டிற்கு வகை செய்யலாம். (ii) கதையை ஒரு முக்கியமான நிலையில் நிறுத்தி, அதை முடிக்குமாறு கூறலாம். (iii) குறிப்புகளை

வைத்து, கேட்டதைப் போன்ற வேருெரு கதையைக் கற்பனை செய்து கூறச் சொல்லலாம். (v) கடைசியாக, குறிப்புகளி லிருந்து மாணவர்களே சொந்தமாகக் கதைகளைக் கற்பனை செய்து கூறுவதில் பயிற்சியளிக்கலாம். கேட்ட கதையை அப்படியே திரும்ப உரைக்கும் பயிற்சியளிப்பதோடு மேற் கண்ட பயிற்சிகளையும் அளித்தால் மாணவர்களின் வாய் மொழித்திறன் வளம்பெறும்.

### (ii) விரித்தலும் விளக்கலும்

இது ஒரு விதத்தில் கூறுதலையொத்ததெனினும் இதைக் கையாளும் ஆசிரியரிடம் தனிப்பட்ட மொழி வல்லமை (extra-ordinary command of language) இருக்க வேண் டும். எடுத்துக் கூறுதலில் செயல் தன்மை முதலிடம் பெற வேண்டும். ஆனல் விரித்தலிலும் இதற்கு இடமளிக்க வேண்டுமெனினும் சமயத்திற்கேற்றவாறு குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை விவரமாக எடுத்துரைத்தல் அவசியமாகும் போதெல்லாம் செயல் திறத்தைவிட மொழித்திறன் மேலோங்கிநிற்கும்.

விவரித்தல் மூலம் புலனீடாகக் காணமுடியாத விவரங் களையும் தன்மைகளையும் சொல் வளத்தாலும் வன்மையா லும் மாணவர் அகக் கண்ணுல் அறியும்படி செய்யலாம். இத்தகைய முறையைக் கையாளும் ஆசிரியர் பின் வருவன வற்றை மனத்திற்கொள்ள வேண்டும்:

(a) விவரித்தல் குறிப்பிட்ட ஒழுங்கமைப்பைப் பின்பற்ற வேண்டும்.

(b) தெளிவற்ற கருத்துக்களைக் கையாளுதல் விரும்பத்தக்க தன்று.

(c) மாணவரின் அகப்பார்வையைத் தூண்ட முற்படும் ஆசிரியர் தாமாகவே, விவரிக்கப்படுவனவற்றை அகக் கண்ணால் தெளிவுறக் கண்டு இன்புற வேண்டும். அப்போதுதான் பயன் விவரித்தலிலும் எதிரொலித்து மாணவரின் கவனத்தைக்கவரும்.

(d) தொடக்க நிலைகளில் விவரிக்கக் கையாளும் மொழி அளவுக்கதிகமான சொற் பெருக்கமுள்ளதாயிருக்கக் கூடாது. எல்லை மீறிய விரிவோ மிக நுணுக்கமான விவரங்களோ இருக்கக்கூடாது.

(e) விளக்கப் படம், மாதிரிப் படம் முதலியவற்றை அவ் வப்போது பயன்படுத்துவதன் மூலம் பொறிக் காட்சி யறிவைப் புறக் காட்சி உதவியால் தெளிவுறச் செய்ய லாம்.

(f) முக்கியமான வாக்கியங்களையும் சொற்றொகுதிகளையும் திரும்பத் திரும்பக் கையாளுதல் பாலர்களின் விருப்பத் திற்குகந்த செயல் முறையாகும்.

(g) விவரித்தல் மிகவும் நீண்டு விடக்கூடாது. மேலும் சிறுவர்களின் கற்பனைத் திறனை அதிகமாகச் சோதிப்ப தாகவும் இருக்கக்கூடாது.

### (iii) கேள்வி கேட்டல் அல்லது வினவுதல்

கற்பிப்பதில் கையாளக்கூடிய கருவிகளில் கேள்வி கேட்டல் மிகச் சிறந்ததாகும். இதை இருமுனைக் கருவி யாகக் கையாள்வதன் மூலம் சிறந்த பயன் பெறலாம். அதா வது ஆசிரியர்களும் மாணக்கர்களும் இதைப் பற்பல கட் டங்களில் கையாள வேண்டும்.

ஒரு ஆசிரியர் கேள்வி கேட்கும் முறையைக் கொண்டு அவரது திறமையை மதிப்பிட்டு விடலாம். கேள்வி கேட்டலின் முழுப் பயனையும் பெற ஒரு முறையை வகுத்துக் கொள்ள வேண்டும். கேள்வி மூலம் மாணவனின் மன நிலைமை அல்லது அவனுடைய அறிவுத் தொகுதியைப் புரிந்து கொள்வதே கேள்வி கேட்டலின் நோக்கமாகும். அதற்குத் தக்கவாறு ஆசிரியர் கேள்விகளை அமைத்துப் பயன்படுத்தவேண்டும்.

பொதுவாக ஒரு பாடத்தின் எக்கட்டத்திலும் கேள்விகளைக் கையாளலாமெனினும் பின்வரும் முக்கியமான கட்டங்களில் அவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்தலாம்:

1. ஒரு பாடத்தின் தொடக்கத்தில் பீடிகையாகச் சில கேள்விகள் கேட்கலாம். இவற்றின் மூலம் கற்பிக்கப்போகும் புதுப் பாடத்தையொட்டி மாணவர்கள் ஏற்கனவே அறிந்துள்ள விஷயங்களை ஆசிரியர் அறிந்துகொள்ளவும் அதற்கேற்றாற்போல் போதனையை அமைத்துக் கொள்ளவும் இயலும். ஆசிரியர்கள் வகுப்பு மாணவர்களைப்பற்றித் தெரிந்துகொண்டிருப்பதைப் பொறுத்து இக்கேள்விகளின் எண்ணிக்கையும் தகுதியும் இருக்கும். இவற்றை துருவி ஆராயும் (Exploratory) கேள்விகள் எனலாம்.

துருவி ஆராயும் கேள்விகள் மூலம் மாணவர்களின் முன்னறிவைச் சுருக்கமாக மீள் பார்வை (Revision) யிடலாம். ஆசிரியர் அனுபவ வாயிலாக இவற்றிற்குச் செலவிட வேண்டிய நேரத்தைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

2. புதுப் பாடப் போதனையின்போது வேறொரு வகைக் கேள்விகளைக் கேட்கவேண்டும். ஆனால் இவை மீள்

பார்வைக் கேள்விகள் போல் அல்லாமல் மாணவர் களின் உற்சாகத்தையும் ஊகித்தறியும் திறமையையும் வளர்ப்பவையாக இருக்க வேண்டும். இத்தகைய கேள்விகளைத் தேவைக்கு அதிகமாகக் கேட்பதன்மூலம் பாட போதனையின் கவர்ச்சித்தன்மை பாதிக்கப்பட்டு விடும். கூற்று முறைப் பாடத்தில் (Narrative lesson) இத்தகைய கேள்விகளுக்கு அவசியம் அதிகம் இருக் காது. கணிதம் அல்லது அறிவியல் தொடர்பான பாடத்தில் இத்தகைய கேள்விகளை அதிகமாகக் கையாள வேண்டும். எத்தகைய கேள்வியானாலும் தகுந்த விடையை வருவித்தலே ஆசிரியரின் நோக்க மாய் இருக்க வேண்டும். ஆனால் அளவு மீறி எளிய விஷயங்களையும் வருவிக்க முற்படுதல் விரும்பத்தக்க தன்று என்பதோடு நேரத்தை வீணாக்கவும் ஏதுவாகும்.

தகுந்த கேள்விகள் மூலம் மாணவர்களின் உற்றுப் பார்க்கும் ஆற்றலையும் இயங்க வைக்கலாம். அவற்றின் மூலம் உற்றுப் பார்த்து அறிபவை திட்டவட்டமாகவும் தொடர்புறுத்தத்தக்கவையாகவும் இருக்கக்கூடும்.

3. பாடத்தின் முடிவில் கேட்க வேண்டிய கேள்விகள் வேறொரு வகையானவை. அவற்றின் மூலம் பாடத் தின் சுருக்கத்தைப் பிள்ளைகளிடமிருந்து வருவிக்கலாம். கற்பித்த பாடம் இலக்கணத்தை யொட்டியிருந்தால் வருவித்தல் விதி வடிவத்தில் இருக்கும். அறிவியலைச் சார்ந்திருந்தால் பொருத்தமான ஊகங்களாக அமை யும். இக்கட்டத்தில் கேள்விகளைத் தகுந்தவாறு பொறுக்கியெடுத்து அமைப்பதுதான் மிகவும் கடினம். பாடத் தொடக்கத்தில் மாணவர்களின் முன்னறிவைக் கேள்விகள் மூலம் அறிந்தாற்போல் கற்பிக்கப்பட்ட

பகுதியையொட்டி அவர்கள் பெற்ற அறிவை முடிவில் தகுந்த மீள் பார்வைக் கேள்விகள் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும். வகுப்பு மாணவர்களின் அறிவாற்றலையும், கற்பிக்கப்பட்ட பகுதியின் தன்மையையும் ஒட்டியே இறுதி மீள் பார்வைக் கேள்விகளுக்குச் செலவிடும் நேரத்தின் அளவு இருக்கும். இக்கட்டத்தில் ஆசிரியர் கேள்வி கேட்டலைத் திறமையாகக் கையாளத் தவறினால் கற்பித்தலில் செலவிட்ட நேரம் வீணாக்கப்பட்டதாகக் கருத நேரிடும்.

(4) அடுத்தபடியாகப் பன்முறைப் பயிற்சிக்காகக் கேட்கப்படும் கேள்விகளைக் கூறலாம். கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடத்திலும் சில பகுதிகள் அல்லது விஷயங்கள் தன்னியக்கமாக (automatically) அறியப்பட வேண்டுவனவாக இருக்கும். அதாவது தகுந்த கேள்விகள் மூலம் சிந்தித்தற்கு அவசியமின்றி விடைகளாகத் துலங்க வேண்டும். பெருக்கல் வாய்பாடுகள், கலப்பின வாய்பாடுகள், அறிவியலைச் சார்ந்த விதிகள் முதலியவற்றை இத்தகைய துலக்கங்களாகக் கருதலாம். இத்தகைய கேள்விகள் நன்றாகக் கற்றறியப்பட்ட பாடப் பகுதியைச் சார்ந்திருக்க வேண்டும். ஐந்து முதல் பத்து நிமிடங்கள் இத்தகைய பயிற்சிக்குச் செலவிடலாம். கீழ்வகுப்புக்களில் வாய்மொழியாகத் தனித்தனி மாணவர்களுக்கும் மேல் வகுப்புக்களில் எழுத்து மூலம் வகுப்பு முழுவதற்கும் இத்தகைய பயிற்சி அளிக்க வேண்டும். இக்கேள்விகள் ஒரு வகையில் தனித் தன்மை வாய்ந்தனவாயும் அதே சமயத்தில் தொடர்பு உள்ளனவாயும் இருக்க வேண்டும்.

கேள்வி கேட்டல் ஒரு கலையாகும். அதில் மாணவர்களையும் பயிற்றுவிக்க வேண்டும். அப்பொழுதுதான் கேள்வி கேட்டலும் பதிலளித்தலும் கற்றலின் இரு முக்கிய பகுதிகள் என்பது புலனாகும். கேள்விகளை அமைக்கப் பயன்படும் மொழி ஐயந்திரிபற இருக்க வேண்டும். கேள்விகளைத் தெளிவாகவும் தயக்கமின்றியும் கேட்க வேண்டும். பாட போதனையின்போது ஆசிரியரே கேள்வி கேட்கும் முறையை முற்றிலும் கையாளாமல் அவ்வப்போது மாணவர்களுக்கும் வாய்ப்பளிப்பது ஒரு சிறந்த நடைமுறையாகும்.

கேள்வி கேட்டலில் செலுத்தும் கவனம் மாணவர்களின் பதில்களை மதிப்பிடலிலும் (Judging) செலுத்தப்பட வேண்டும். முதலில் ஒரு குறிப்பிட்ட கேள்வியைத் தெளிவாகக் கேட்க வேண்டும். அதற்குச் சரியான விடையை மாணவர்கள் ஆழ்ந்து சிந்தித்துத் தீர்மானிக்கப் போதிய நேரம் அளிக்க வேண்டும். ஒரு கேள்விக்குரிய பதிலை முடிந்த மட்டும் பல மாணவர்களிடமிருந்து பெறவேண்டும். பரவலான முறையில் மாணவர்களைக் கேள்வி கேட்கவேண்டும். தெரிந்த அல்லது தெரியாத மாணவர்களை மட்டும் கேள்வி கேட்பதோடு நிறுத்திக்கொள்ளுதல் விரும்பத்தகாத நடைமுறையாகும். ஏதாவதொரு கேள்விக்கு மாணவர்களால் பதிலளிக்க இயலாவிட்டால் உடனே ஆசிரியர் அதற்கான பதிலைக் கூறுவதைவிடக் கேள்வியைத் தகுந்தவாறு மாற்றி அமைப்பதன் மூலம் தகுந்த பதிலைப்பெற முற்படுதல் சிறந்த முறையாகும்.

பதில்கள்: ஆசிரியர் சிறந்த முறையில் கேள்விகேட்குந் திறன் பெற்றிருந்தால் மட்டும் போதாது. மாணவர் அளிக்கும் பதில்களைச் சீர்தூக்கிப்பார்க்கும் ஆற்றலையும் பெற்றி

ருத்தல் அவசியம். ஏனென்றால் கற்பித்தல்-கற்றல் (Teaching-Learning) இணைப்போடு ஒன்றியதுதான் வினவுதல்-விடைபகர்தல் (Questioning-Answering) இணைப்பாகும்.

மாணவர் விடைகளைப் பின்வருமாறு இனம் பிரிக்கலாம்: (i) முற்றிலும் சரியானவை, (ii) முற்றிலும் தவறானவை, (iii) குறையாகச் சரியானவை.

முற்றிலும் சரியான பதில்களைப் பாராட்டி ஏற்றுக் கொள்ளலாம். முற்றிலும் தவறான பதில்களையளிக்கும் மாணவர்களை அனுதாபத்துடன் தட்டிக்கொடுத்துத் திருத்த வேண்டும். அரைகுறைத் தன்மையுள்ள பதில்களைச் சுட்டிக் காட்டிச் சரிப்படுத்த வேண்டும்.

இவைதவிர, சில தவறான விடைகள் மிகவும் எளனத் திற்கிடமளிக்கலாம். ஆனால் அதைக் காரணமாகக்கொண்டு அம் மாணவனைக் கேலிசெய்தல் அவன் நெஞ்சைப் புண்ணாக்குவதோடு கற்றல் ஆர்வத்தையும் தேக்கி விடும். சில சமயங்களில் விடைகள் வேண்டுமென்றே தவறாகக் கூறப்படலாம். அப்பொழுதெல்லாம் ஆசிரியர் சற்று கடுமையாக நடந்துகொள்ளுதல் வேண்டும். ஆனால் அத்தகைய விடைகள் அறியாமையினால் அளிக்கப்பட்டவையா அல்லது குறும்புத் தனத்தின் விளைவா என்று அறிந்த பின்னரே ஆசிரியர் தம்போக்கைத் தீர்மானிக்க வேண்டும்.

### (iv) குழுப்படிப்பு

ஒவ்வொரு மாணவனையும் தனியாகக் கருதிக் கற்பிப்பது கொள்கையளவில் மிகச் சிறந்ததெனினும் நடைமுறையில் அவ்வாறு முற்றிலும் கடைப்பிடித்தல் இயலாததொன்

ருகும். ஆனல் வகுப்புத் போதனையில் மற்ெருரு பெரிய குறைக்கு இடமளிக்கிறேம். அதாவது எல்லா மாணவர் களையும் ஒரேமாதிரியான திறமை, மனப்போக்கு உள்ளவர் களாகக் கருதுகிறேம். ஆனல் அது உண்மைக்கு முற்றி லும் புறம்பானதென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். இவ்விரு நடைமுறைகளுக்கும் மையமாகக் குழு முறையைக் கையாளலாம்.

குழு முறையைப் பின்பற்றுதலுக்கு வழிவகை செய்வதில் கவனிக்க வேண்டியவை பின்வருமாறு :

(a) நுண்ணறிவு அல்லது தேர்ச்சியையொட்டி மாணவக் குழுக்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(b) குழுக்கள் மிகச் சிறியவையாகவோ மிகப் பெரியவையா கவோ இல்லாமல் நான்கு அல்லது ஐந்து மாணவர் களைக் கொண்டவையாயிருக்கலாம்.

(c) ஒரு குழுவிலுள்ள மாணவர்களெல்லோரும் குழுவின் வேலையில் தாமாகவே ஈடுபடுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(d) உரக்க வாசித்தல், உச்சரித்தல், எழுத்துக்கூட்டல், வாய்பாடுகளையும் விதிகளையும் வரையறுப்புக்களையும் ஒப்பித்தல், மனக்கணக்கு வேலை, வீட்டுவேலையைச் சரிபார்த்தல் முதலிய பாடச் செயல்களை (curricular activities) மாணவர் குழுக்களிடம் பயனுற ஒப்புவிக்க லாம். இதனல் ஆசிரியர் இவற்றிற்குச் செலவிடும் நேரம் கணிசமாகக் குறைக்கப்படும். ஆனல் அதற்கு மாருக அவருடைய கண்காணிப்பும் குழுவின் வேலையை ஆராய்வதும் (Supervision and scrutiny of group-work) வேண்டற்பாலதாகும்.

(e) சொற்பொழிவு, நாடகம், சொற்போர் போன்ற பாடப் புறச் செயல்களிலும் (Extra-curricular activities) ஈடுபட்டுப் பயன் பெறலாம்.

குழுப் படிப்புக்கு வகை செய்யும்போது பரம்பரையான வகுப்பு ஏற்பாட்டில் சிறிது மாறுதல் செய்துகொள்ள நேரிடும். எல்லாக் குழுக்களுமே வகுப்பறையில் தத்தம் பணிகளில் ஈடுபட்டால் இரைச்சலும் கவனக் குறைவும் ஏற்படும். ஆகையால் அவை பரவலாகப் பள்ளிச் சுற்றுப்புறங்களில் தம் வேலைகளைச் செய்யலாம். மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பாடச் செயலிலும் ஆசிரியரே வகுப்புப் போதனை அடிப்படையில் கற்பிப்பதைவிட குழுவின் அடிப்படையில் மிகவும் அதிகமாகக் கற்பிக்கலாம். உதாரணமாக, ஒரு வகுப்பில் எட்டு தொகுதிகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஆசிரியர் வகுப்பு முறையில் ஒரு மாணவனுக்கு உரக்க வாசிக்கும் பயிற்சி யளிக்கும் அதே நேரத்தில் எட்டு மாணவர்கள் தத்தம் குழுக்களில் அத்தகைய பயிற்சி பெறலாம். ஆசிரியர் ஒரு மாணவன் செய்யும் பிழையைத் திருத்துவதற்கு ஈடாக எட்டு மாணவர்களின் பிழைகள் திருத்தப்படும். இதேபோல் குழு முறையில் எல்லா மாணவர்களின் பிழைகள் திருத்தப்படும். இதேபோல் குழு முறையில் எல்லா மாணவர்களின் மனக்கணக்கு, பாராமல் எழுதுதல், வீட்டு வேலை சரிபார்த்தல் முதலியவை கவனம் பெறும் அளவிற்கு வகுப்பு முறையில் இயலாது என்பதோடு பல மாணவர்கள் பின்னணியிலேயே தேங்கி நிற்கவும் ஏதுவாகும்.

எனவே குழுப் படிப்பின் மூலம் (a) வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு அதிக அளவில் தனிப்பட்ட பயிற்சியும் தேர்ச்சியும் ஏற்பட வழி ஏற்படுகிறது. (b) ஆசிரியரே

அள்ளி ஊட்டும் (Spoon-feeding) வலுவற்ற முறைக்கு மாருகத் தாமாகக் கற்றறியும் தன்மை (Self-learning) மிகுதியாக இடம் பெறும். (c) ஒவ்வொரு குழுவிலும் சிறு எண்ணிக்கை யுள்ள மாணவரே இருப்பதால் அவர்கள் தாராளமாகவும் கூச்சமின்றியும் தத்தம் தேவைகளை வெளிப்படுத்திக் கூட்டுறவு முறையில் அவற்றை நிறைவு செய்து கொள்ள முடியும். (d) கூட்டுறவின் வலிமை பாடப்புறச் செயல்களிலும் பயன்படுகிறது. (e) பள்ளிக்கூடத்தின் திரட்டுச் சிறப்பும் (School Tone) இத்தகைய ஏற்பாட்டைக் கையாளுவதால் வளம்பெறுகிறது.

## (v) சொற்பொழிவும் சொற்போரும்

இவற்றிற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் ஆசிரியர் பின்னணியிலிருந்துகொண்டு மாணவர்களைப் பயிற்றுவிக்க முடிகிறது. கருத்துக்களை மனத்திற்கொண்டு அவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல், அவற்றை வெளியிடல், தாங்கள் கூறுகின்றவற்றை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தை ஊகித்தறிந்து அதற்குத் தக்கவாறு வெளியிடும் முறையைச் சரிக்கட்டிக் கொள்ளுதல், அவைக் கூச்சத்தையும் அச்சத்தையும் தவிர்த்தல் போன்ற நற்பயன்கள் கிட்டுகின்றன.

அறையில் ஆடி அம்பலத்தில் ஆடவேண்டுமென்பதற்கேற்ப, குழுக்களில் பயின்று பின்னர் வகுப்பின் முன்பு சிறப்புக் கொண்டாட்டங்களின்போது பள்ளியரங்கின் மீது நின்று சொற்பொழிவு, சொற்போர் முதலியவற்றைத் திறம்பட நிகழ்த்தலாம். இதன் மூலம் நன்முறையில் மாணவர்களிடைக் காணப்படும் போட்டியுணர்ச்சியைத் தூய்மை செய்யலாம் (Sublimate).

இத்தகைய செயல்களுக்கான பொருள்கள் தொடக்கத்தில் வகுப்பில் நடந்த பாடப் பகுதிகளைப்பற்றியும் செய்தித் தாள்களில் அன்றாடம் வரும் செய்திகளைப் பற்றியும் மாணவர் தம் நேரிடை அனுபவத்திற் கண்டவற்றைப் பற்றியும் இருக்கலாம். படிப்படியாக அப்பொருள்கள் விளக்கம், கற்பனை (Explanation, imagination) என்ற அடிப்படையிலும் இருக்கும்.

பள்ளி மாணவர் நிகழ்த்தும் சொற்போர்களின் பயனை மிகைப்படுத்திவிடக்கூடாது. சில சமயங்களில் ஒரு பயன் மிகு முடிவு காண்பதற்கு மாருக அவை ஆவேசச் சொற்பொழிவாற்றும் செயல்களாக மாறி விரும்பத்தகாத போட்டியுணர்ச்சியை மாணவரிடையே தூண்டி விடவுங் கூடும். பக்குவமடையாத சிறு மாணவ உள்ளங்களில் அவை வேற்றுமை உணர்ச்சியையும் இறுமாப்பு மனப்பான்மையையும் வளர்த்துவிடலாம். ஆகையால் ஆசிரியர் மிகவும் கண்ணுங் கருத்துமாயிருந்து சொற்பொழிவுகளையும் சொற்போர்களையும் நல்ல முறையில் நடத்துவதற்கான வழி வகைகளையும் யோசனைகளையும் முன் கூட்டியே அறிந்து திட்டமிட்டுக் கொடுத்தால் அவற்றின் கல்விப் பயனை மிகவும் உயர்த்தலாம்.

அத்தகைய நற்பயன் கிட்டும்படி செய்யப் பின்வரும் நடைமுறையை மேற்கொள்ளலாம் :

(a) சொற்போர் விதிகளைத் திட்டவட்டமாக எடுத்துக்கூற வேண்டும்.

(b) மாணவர் அவற்றைக் கண்டிப்பாய்ப் பின்பற்றுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(c) சிறுவயதில் மாணவச் சொற்பொழிவாளர்கள் அத் தகைய விதிகளுக்குக் கீழ்ப்படிவதைத் தாமாகவே விரும்பி மேற்கொள்வார்கள். விதிகளை மீறுபவர்களை அவர்களாகத் தண்டிக்கவும் முற்படுவார்கள்.

(d) சொற்போரிடவும் சொற்பொழிவாற்றவும் தகுந்த பொருள்களை மாணவர்கள் கீழ்வகுப்புக்களில் ஆசிரியர் உதவியோடும் மேல் வகுப்புக்களில் தாமாகவும் தேர்ந் தெடுத்துக் கொள்ளலாம்.

(e) இவற்றைக் கீழ் வகுப்புக்களில் வாரமிருமுறையும் மேல் வகுப்புக்களில் வாரமொருமுறையும் நடக்கும் நிகழ்ச்சி களாக அமைத்துக்கொள்ளலாம்.

## (vi) ரேடியோவும் கிராமபோனும்

வகுப்பறை போதனையைச் சிறக்க வைக்கும் வகையில் ரேடியோவையும் கிராமபோனையும் நன்கு பயன்படுத்தலாம். அவ்வாறு கிட்டக்கூடிய நற்பலன்கள் பின்வருமாறு:

(a) தொடர்புடைய உற்றுக்கேட்டல் மூலம் கல்வியறிவு பெறுதல், (b) பாடத்தில் கவர்ச்சியைத் தூண்டி மேலும் கற்குமாறு ஊக்குவித்தல், (c) ஆசிரியர் வாயிலாகவோ நூல்கள் மூலமோ எளிதில் பெறமுடியாத அறிவுக்கூறுகளை யும் அவ்வப்போதையச் செய்திகளையும் அறிதல், (d) இசை, நாடகக் கலைகளில் கேள்வியறிவு பெற்று அதன் அடிப்படை யில் மாணவர்களும் தங்களைத் தாமே பயிற்றுவித்துக் கொள்ளுதல், (e) ஓய்வு நேரத்தைப் பயனுறக் கழித்தல்.

தற்காலத்தில் ரேடியோ ஒரு பகட்டுப் பொருளாகக் கருதப்படுகிறதில்லை. அதற்கு நேர்மாறாக, கல்வித்துறை யில் பயன்படுத்த வேண்டிய சிறந்த கருவியாகக் கருதப்படு

கிறது. ரேடியோ நிகழ்ச்சிகளிலிருந்து மாணவர்களுக்குகந்த நிகழ்ச்சிகளைப் பொறுக்கியெடுப்பதும் அவற்றைப் பயனுறும் வகையில் உற்றுக்கேட்பதில் அவர்களைப் பயிற்றுவிப்பதும் ஆசிரியரின் வேலை. சில நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களுக்கும் வேறுசில பள்ளி மாணவர்கள் எல்லோருக்கும் பயன்படுவதாக இருக்கும். இவற்றையெல்லாம் முன்கூட்டியே அறிந்து ரேடியோவைக் கல்வி புகட்டுவதில் செயற்படுத்த வேண்டும்.

ரேடியோவின் மூலம் பின்வரும் சிறப்புப் பயன்களை எய்தலாம்:

(a) வல்லுநர்களைக் கொண்டு உச்சரித்தல், உரக்க வாசித்தல், சுவைத்து வாசித்தல் போன்ற துறைகளில் சரியான மொழிப் பயிற்சி யளித்தல்.

(b) கணித பாடத்தில் பொழுதுபோக்கு அம்சங்களான மந்திரச்சதுரங்களை நிரப்புதல், தீக்குச்சிகளால் வடிவங்களமைத்தல், எண் விளையாட்டுக்கள் போன்ற வற்றைக் கற்பிக்கலாம்.

(c) சமூகப் பாடத்தில் நாட்டுப்பற்று (Nationalism), அனைத்து நாட்டுப்பற்று (inter-nationalism) இவற்றைச் சார்ந்த அன்றுடத் தகவல்கள் முதலியவற்றை உடனுக்குடனே அறிவிக்கலாம். அதன் மூலம் சமூகப் பாடம் புத்தகத்தில் தேக்கப்பட்டுள்ள செய்திகளைமட்டும் கொண்டதல்லவென்றும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ந்துவரும் தன்மையுடையதென்றும் அறியும்படி செய்யலாம். உ-யில் குறிப்பிட்டுள்ள பயிற்சிகளை கிருமபோன்பதிவுத் தட்டுகளைக் கொண்டும் அளிக்கலாம்.

## (vii) நாடகம்

கல்வி பயிலும் மாணவர்கள் ஈடுபடும் செயல்களை அவர்களுடைய விருப்பத்திற்கும் இயல்பூக்கங்களுக்கும் தக்கவாறு பின்வருமாறு ஏறு வரிசையில் கூறலாம்: எழுது தல், வாய்க்குள் படித்தல், பிறர் பேசிக் கேட்டல், தாமா கப் பேசுதல், பேசி நடித்தல். இவற்றில் கடைசியில் கூறப் பட்ட வெளியீட்டுச் செயலையே (Expression work) அவர் கள் மிகவும் விரும்பி ஏற்பதை நாம் எல்லோரும் அறி வோம். ஒரு விதத்தில், கற்பிக்கும் முறை முழுவதுமே நடித்தலை அடிப்படையாகக்கொண்டு அமையக் கூடுமானல் அதையே அவர்கள் மேற்கொண்டு மிகுந்த இன்பமும் பயனும் எய்துவர் எனலாம்.

தொடக்க நிலை வகுப்புக்களிலிருந்தே அவர்கள் காண் பவற்றை அப்படியே திரும்பச்செய்து காட்டும் (imitative) விழைவும் விருப்பும் உள்ளவர். ஆகையால்தான் ஆசிரியர் அவர்களுக்கு எல்லாவகையிலும் முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்று கூறுகிறோம். நல்லது கெட்டதென்றோ, சரிதப்பென்றோ சிந்திக்காமல் மறிவினையாக(Reflex action)ச் செய்து பார்க்கும் ஆற்றல் அவர்களுள் அடங்கிக் கிடக்கும். அதைக் கல்வி புகட்டலில் சரிவரப் பயன்படுத்துவது ஆசி ரியருடைய நற்பணியாகும்.

அனுபவமிக்க நடிகர்கள் அரங்கேற்றும் நாடகங்களைக் கண்டு களித்தல், அவர்களைப்போல் நடித்துப்பார்த்தல், தக்க பாடப்பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அப்பயிற்சியை நடித்துக் காட்டலிற் பயன்படுத்தல் போன்ற படிகளைக் கையரண்டு நடிப்பின் மூலம் சிறந்த கல்வியறிவும் மகிழ்வும் கிட்டச் செய்யலாம். இக்காலத்தில் நாடக மேடைகளுக்குச்

சென்றுதான் சிறந்த நாடகங்களைப் பார்க்க வேண்டு மென்ற அவசியமில்லை. திரைப்படச் சுருள்கள் குறைந்த கட்டணத்தில் வாடகைக்குக் கிடைக்கின்றன. சீரிய பண்பு களையும், நல்ல நடிப்பையும் எடுத்துக்காட்டும் திரைப்பட நாடகச் சுருள்களைப் பள்ளியிலேயே திரையிட்டுக் காட்ட ஏற்பாடு செய்யலாம். சிறந்த நடிகர்களை அழைத்து ஒன் பான் சுவைகளும்(நவரசங்களும்)வெளியீடுசெய்து நடித்துக் காட்டச் செய்யலாம். இவற்றிற்குப் பக்கபலமாக, பணவசதி யும் பிறவசதியுமுள்ள மாணவர்கள் அரங்கமேடையில் நடக் கும் நாடகங்களையும் சினிமா படங்களையும் பார்த்து அதிகப் படியான காட்சிப்பயிற்சி (Visual Training) பெறலாம்.

கல்விப்பயனுள்ள (educative) நடித்தல் பயிற்சியளிப் தில் ஆசிரியர்கள் ஆழ்ந்த கருத்துச் செலுத்த வேண்டும். பற்பல பாடப்பகுதிகளையும் சொல்லிக் கொடுப்பதோடு எவ் வெவற்றை நடித்துக்காட்டலாம் என்பதை மாணவர்க ளுடன் உரையாடல் மூலமும் தாமாகவும் பொறுக்கி வைத் துக்கொள்ள வேண்டும். பின்னர் வாய்ப்புகளைப் பயன் படுத்துவதற்கான முன் ஆயத்தப் படிகளைக் கையாள வேண்டும்.

(i) பொறுக்கியெடுக்கப்படும் பகுதியைநடித்தலிலுள்ள முக்கியப் பகுதிகளையும் நடைமுறைகளையும் ஆராய்தல், (ii) அவற்றை ஒருவாறு எல்லையிட்டறிதல். (iii) " நடிகர் " களைத் தேர்ந்தெடுத்தல், (iv) நாளும் நேரமும் குறிப்பிடல், (v) ஒத்திகைகள் நடத்திக் கூடியவரை மாணவரது நடிப்பைச் சிறப்புச் செய்தல், (vi) குறித்தபடி அரங்கேற்றல் என்பன போன்ற நடவடிக்கைகளின் மூலம் நடித்தலின் கல்விப்பயனையும் மகிழ்ச்சிப்பயனையும் மாணவர் அடைய வழிசெய்யலாம்.

ஆனால் நடித்தல் என்றவுடனேயே விலையுயர்ந்த ஆடையணிகள், அரங்க அமைப்பு, பின்னணிக் காட்சிகள் (Settings) முதலியன இன்றியமையாதவையென்று கருத வேண்டியதில்லை. சாதாரணமாக, அவ்வகுப்புக்களில் தனிச் சிறப்புள்ள ஆடையணியில்லாமலே பேச்சு, நடிப்பு என்ற இரு அம்சங்களைமட்டும் எடுத்துக் காட்டுமாறு மாணவர்க்கடிக்கடி வாய்ப்பளிக்க வேண்டும். அவ்வாறு நடிக்கப்பட்ட பாடப்பகுதிகளில் எவ்வெவை மிகச் சிறப்பாக அமைகின்றனவோ அவற்றில் ஏதாவது ஒன்றிரண்டைப் பள்ளி ஆண்டு விழா, பள்ளிச் செயலர் நாள் முதலியவற்றைக் கொண்டாடும் நிகழ்ச்சி நிரல்களில் சேர்க்கலாம். அப்பொழுது பொருத்தமான ஆடையணிகள், காட்சி ஒப்பனைகள், அரங்க அமைப்பு முதலியவற்றிற்கு இடமளித்தல் இன்றியமையாததாகும். இவையெல்லாம் இக்காலத்தில் மலிவான வாடகைக்குக் கிடைக்கின்றனவென்பதையும் பள்ளிக்கூடங்களே இவற்றிற் பலவற்றைச் சிறுகச்சிறுகத் தயாரித்துச் சேமித்து வைக்கலாமென்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

## எழுத்து மூலம்

## (Printed or Written Information)

### (i) பாட நூல்கள்

கற்பிக்கும் முறையில் பாட நூல்களுக்கு எப்பொழுதும் இடமுண்டு. சில காலத்திற்கு முன்வரை பாடநூல்களாகத் தேர்ந்தெடுப்பனவற்றிலுள்ளவற்றை மட்டும் கற்பிப்பதே கல்வி புகட்டலாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் தற்போது பாட நூலுடன் வேறு பல சாதனங்களும் இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்றன.

கற்பித்தலிலும் கற்றலிலும் நூல் முக்கியமான இடம் பெறுகிறது. (a) கற்பிக்கும் பாடத்தின் தன்மை, (b) ஆசிரியரின் திறமை, (c) மாணவர்களின் தேர்ச்சித் தரம், (d) நம் வசமுள்ள நேரம், ஆகியவற்றைப் பொறுத்துப் பாட நூலின் பயனைக் கற்பித்தலின் பல கட்டங்களிலும் வரையறை செய்துகொள்ளவேண்டும். அது ஆசிரியருக்கு உறு துணையாகப் பயன்படவேண்டும். அவர் விரிவாகக் கற்றுக் கொடுக்கும் பாடத்தைச் சுருக்கியும் சுருக்கமாகத் தெரிவிக்கக் கூடிய பாடத்தை விவரங்களுடனும் தரவல்லதாயிருக்க வேண்டும். தேவைப்படும்போது விஷயங்களை ஞாபகப் படுத்திக்கொள்ளவும் உதவியளிப்பதாயிருக்க வேண்டும்.

வகுப்புப் போதனையின் சிறந்த துணையும் வழிகாட்டியுமாக அமையக்கூடிய சாதனம் நன்கு தயாரிக்கப்பட்ட பாடப் புத்தகமாகும். அதன் மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஒரே காலத்தில் குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றிய ஒரே சீரான அறிவைக்கிட்டும்படி செய்யலாம். ஏனென்றால் பல மூலங்களிலிருந்தும் ஆழ்ந்த அனுபவத்தின் வாயிலாகவும் பேரறிஞர்களால் முறையாகத் தேர்ந்து தொகுக்கப்பட்ட பாடங்களையும் பயிற்சி வினாக்களையும் அது கொண்டிருக்கும்.

ஒரு சிறந்த பாட நூலின் இலக்கணங்களில் முக்கியமானவை பின்வருமாறு:

(a) கல்விசார் தகுதிகளும் நீண்ட அனுபவமும் உள்ள ஆசிரியர் அல்லது ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(b) அதில் கையாண்டுள்ள மொழிப் பகுதி மாணவர்களின் தரத்திற்கேற்பவும் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்

களையும் சொற்றொடர்களையும் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

(c) பாடப்பொருள்கள் பாடத் திட்டத்தை ஒட்டியும் வாழ்க்கை அனுபவங்களுக்குப் பொருத்தமாயும் இருக்க வேண்டும்.

(d) பாடமுடிவில் தருந்த வினுக்களும் பயிற்சிகளுமிருப்பதுடன் ஆங்காங்கே பன்முறைப்பயிற்சி, மீள்பார்வைக்கான தாள்களும் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(e) நல்ல காகிதத்தில் தூய்மையாகவும் தெளிவாகவும் அச்சிட்டிருக்க வேண்டும்.

(f) படவிளக்கங்கள், எடுத்துக்காட்டுகள், வரலாறு, மூலம் பற்றிய ஆதாரக்குறிப்புக்கள் முதலியன இடம் பெற்றிருக்க வேண்டும்.

(g) மேல் வகுப்புகளுக்கான பாட நூல்களில் மாணவர்கள் தம் முயற்சியால் அறிவை வலுப்படுத்திக்கொள்ளவும், விரிவாக்கிக் கொள்ளவும் உதவக்கூடிய வேறு நூல்களின் பட்டியல்கள் (bibliography) காணப்பட வேண்டும்.

(h) அச்சுப்பிழை, பொருட் பிழை, தகவல் பிழை எதுவும் இருக்கக்கூடாது, அவ்வாறு எதிர்பாராது ஏற்பட்டு விட்ட ஒரு சில பிழைகளை அடுத்த மறு பதிப்பில் நீக்கி விடவேண்டும்.

(i) மதம், கட்சி, அரசியல் என்ற அடிப்படைகளில் வேற்றுமையையும் பகையையும் வளர்க்கக்கூடிய கருத்துக்களும் பாடக்கருத்துக்களும் பள்ளி நூல்களில் இடம் பெறக்கூடாது.

(j) பாடப் புத்தகத்தின் விலை நியாயமானதாகவும் மாண வர்களின் வாங்கும் சக்திக்குத் தக்கவாறும் இருக்க வேண்டும்.

மேற்கூறிய நல்ல இலக்கணங்களும் வேறு பலவும் உள்ள பாட நூலைத் தேர்ந்தெடுத்தல் மட்டும் போதாது. அதைப் பயனுறக் கையாள்வதிலும் கருத்தைச் செலுத்த வேண்டும். பொதுவாக, எத்தகைய பாடத் தொடக்கத்தி லும் பாட நூலை மாணவர்கள் பயன்படுத்தும் வழக்கம் விரும்பத்தக்கதன்று, சுருக்கமான குறிப்புக்கள் மூலம் அதை மாணவர் திறந்து பார்க்க வேண்டிய இன்றியமை யாமையை உணரச் செய்ய வேண்டும். பிறகு அதை எப் படிக் குறிப்பாகப்பயன்படுத்த வேண்டும் என்று திட்டவட்ட மாக எடுத்துக் காட்ட வேண்டும். குறிப்பிட்ட விதிகள் அல்லது சூத்திரங்களைக் கற்றுக்கொடுத்த பிறகும் பாட முடி விலும் செயற்படுத்தும் வகையில் ஆசிரியரால் கொடுக்கப் பட்ட பயிற்சிகளைச் செய்தபின்னர் பாட நூல்களிலுள்ள ப்யிற்சிகளையும் வினாக்களையும் எடுத்துக்கொள்ள வேண் டும். எக்காரணத்தை முன்னிட்டும் பாடப் புத்தகத்திலுள்ள வினாக்களையும் பயிற்சிகளையும் மாணவர்களைப் பாராமல் எழுதவைக்கும் வழக்கம் வெறுக்கப்படவேண்டும்.

## (ii) மாணவர் குறிப்பு ஏடுகள்

குறிப்பெடுத்துக்கொள்ளுதல் இருவகைப்படும். ஆசிரி யர் சொல்லிக்கொடுக்கும்போதே உற்றுக் கேட்டு முக்கிய மானவற்றை அவ்வப்போது குறித்துக்கொள்வதும் மேற் கோள் நூல்களை (Reference Books) த் தாமாகப் படித்து அவ்வாறு குறித்துக்கொள்வதும் ஒருவிதம். ஆசிரியர் தயாரித்துள்ள குறிப்புக்களை மாணவர்களைப்பாராமல் அல்

லது பார்த்து எழுதச் செய்வது (Writing to dictation or copying) மற்றொரு விதம். முந்தியதை மேல் வகுப்பு மாணவர் மேற்கொள்ளும் வகையில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கலாம். அதன் மூலம்தான்தொடங்காற்றல் (initiative), தானாகக் கற்றல் (Self-learning) ஆகிய பழக்கங்களேற்படும். பிந்தியது மேற்கூறிய இரு ஆற்றல்களையும் மழுங்க வைப்பதோடு கற்றற் பலனையும் மட்டப்படுத்தி விடும்.

இவை தவிர, பயிற்சிகள் ஒப்படைகள் (Assignments), சோதனைகள் (Tests) முதலியவற்றிற்கும் குறிப்பேடுகள் வைத்திருக்க வேண்டும். கீழ் வகுப்புக்களில் இவற்றிற்காக ஓரிரு குறிப்பேடுகள் இருந்தால் போதும். மேல் வகுப்புக்களில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஏடுகள் பல தேவைப்படும். ஆயினும் இவ்வெண்ணிக்கை கூடிய மட்டும் குறைவாயிருக்க வேண்டும்.

மாணவர் குறிப்பேடுகளில் நன்கு புரிந்துகொள்ளப் படாத பல விஷயங்களை ஆழ்ந்து சிந்திக்காமலும் தேர்ந்தெடுத்தலின்றியும் எழுதிக் கொண்டு போனால் அவை பொருளடக்க அளவில் நிரப்பப்படுமேயொழிய பயன் தரும் வகையில் நிரப்பப்படா. ஆகையால் மாணவர்களுக்குக் குறிப்பெடுக்குங் கலையின் சிறப்புக் கூறுகளை எடுத்துக்கூறிய பின்னர் அவர்களை அச்செயல்களில் ஈடுபடுத்த வேண்டும். முக்கியமான விவரங்கள், சொற்கள், பொருட்செறிவுள்ள சொற்றொடர்கள் முதலிவற்றைக்குறித்து வைத்தால் போதும். தெளிவாக எழுதி வருவதும் அடிக்கடி புரட்டிப்பார்த்துவருவதும் அவற்றைப் பயன்மிக்கனவாக்கவல்லனவும் இன்றியமையாதனவுமான பழக்

கங்கள் என்பதை மாணவர்கள் உணர வேண்டும். அத்துடன் ஆசிரியரும் கூடியவரை அவற்றை அடிக்கடி மேற்பார்வையிட்டு வர வேண்டும். குறிப்பேடுகளின் பயனுடைமைக்கு உறைகல் அவற்றைப் புரட்டியவுடன் ஞாபகப்படுத்திப் புரிந்துகொள்ளும் வல்லமையாகும்.

## (iii) செய்தித் தாள்கள்

எழுதப்படிக்கத் தெரிந்தவர் எண்ணிக்கை மக்கள் தொகையில் (Population) 10 சதவீதத்திற்கும் குறைவாயிருந்த காலத்திலும் செய்தித் தாள்களைப் படிக்கும் பழக்கமுள்ளவர் எண்ணிக்கை மிகமிக அற்பமாகவே இருந்தது. ஆனால் இக்காலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்ததாகக் கருதத் தகுதியற்றவர்களிடையே கூட, செய்தித் தாள்களைப் படிக்கச்சொல்லிக் கேட்பவர்கள் பெருகி வருகின்றனர். ஆகவே இக்கல்விச் சாதனத்தைப் பள்ளிச்சிறுவர்களும் சிறுமியரும் நன்கு பயன்படுத்திப் பயன்பெறும் வகையில் அவற்றைக் கல்வி புகட்டுவதில் புகுத்திவரவேண்டும்.

செய்தித் தாள்கள் நாளிதழ், வார இதழ், மாத இதழ், ஆண்டு மலர் (Daily, Weekly, Monthly, Annual) எனப் பல வகையில் வெளி வருகின்றன. இவை எண்ணிக்கையிலும் தரத்திலும் பயனுடைமையிலும் அதிசயிக்கத்தக்க முறையில் உயர்ந்து வளம்பெற்று வருகின்றன. இவற்றில் நாளிதழ்கள் மூலம் நாட்டிலும் பிறநாடுகளிலும் அன்றாடம் அரசியல்,பொருளாதார, சமூக நிகழ்ச்சிகளைப்பற்றிய தகவல்களையறிகிறோம். வார, மாத இதழ்களில் இத்தகைய செய்திகளின் சுருக்கக் குறிப்புகளும் திறனாய்வும் ஓரளவு இடம் பெறுகின்றன. எனினும் இவை சிறப்பாக, கட்டுரைகள், சிறுகதைகள், தொடர் கதைகள் முதலியவற்றிற்கே தனி

இடம் அளிக்கின்றன. ஆண்டு மலர்களில் பேரறிஞர்களின் சிறப்புக் கட்டுரைகளும் கதைக் கூறுகளும் அடங்கியிருக்கும்.

செய்தித் தாள்கள் கல்வி புகட்டலுக்குப்பேருதவியளிக்க வல்லவை. பொதுவாக இவை விரும்பத் தகாத செய்திகளையோ கதை, கட்டுரைகளையோ அறவே தவிர்க்கின்றன என்பது உண்மையாயினும் பள்ளிச் சிறுவர்களின் உபயோகத்திற்காக இவற்றைத் தேர்ந்தெடுப்பதில் கூர்ந்த கருத்தைச் செலுத்துவது அவசியமே. அத்தகைய செய்தித் தாள்களும் பிறவிதழ்களும் கூடியவரை பலவிதத் தேர்ச்சியும் ஆற்றலும் உள்ள மாணவர்கள் பயன்படுத்தக்கூடியவையாயிருக்க வேண்டும். பண வசதிக்கேற்ப இவை ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு மேற்பட்டபிரதிகளை (Copies) த்தருவித்தல் நலம்.

பள்ளிகள் செய்தித் தாள்களைத் தருவித்தால்மட்டும் போதாது. அவற்றை மாணவர்கள் பயன்படுத்திப் பண்பும் பயனும் பெறக்கூடிய வகையில் தலைமை ஆசிரியரும் பிற ஆசிரியர்களும் திட்டமிட்டு வழிவகை செய்யவேண்டும். மாணவர் படிப்பகத்தில் (Pupils' Reading-Room) இவற்றைக் கிட்டும்படி வைப்பதுடன் ஒவ்வொரு வகுப்பிலும் இவற்றை அவ்வப்போது கையாண்டு அதிகப்பயன் பெறவும் ஏற்பாடு செய்யலாம். அத்துடன் மாணவர் செய்திகளைப் படிப்பதன் மூலம் பெற்ற அறிவை வாய்மொழியாக ஒருவருக்கொருவர் வகுப்பிலும் வெளியிலும் பரிமாறிக்கொள்ளவும் எழுத்து மூலம் வெளியிடவும் ஊக்கமளிக்க வேண்டும்.

இவ்வகையிலும் மாணவர்கள் பயனுறு குறிப்புக்கள் எழுதி வரலாம். அக்குறிப்புக்கள் (1) பொருளறிவுப் பாடத் தலைப்புக்களின் கீழும் (2) அரசியல், பொழுது போக்கு போன்ற தலைப்புக்களின் கீழும் இருக்கலாம். இவற்றின் உதவி கொண்டு அவர்கள் உரையாடவும் கட்டுரைகள் எழுதவும் பயிலலாம். மொழிப்பயிற்சி பொது வாகச் செய்திகளைப்படிப்பதன் மூலமும் சிறப்பாகக் கட்டு ரைகள், கதைகள், கற்பனைக் கவிதைகள் முதலியவற்றைப் படிப்பதன் மூலமும் வளம்பெறும். நாணயமாற்று, பங்கு கள், விலைவாசிகள், வாயுவின் அன்றாட வெப்பதட்ப நிலை, அழுத்தம்பற்றிய விவரங்கள், நிலவியல் தொடர்பான வேறுபல புள்ளி விவரங்கள், உற்பத்தி, ஏற்றுமதி, இறக்கு மதி பற்றிய தகவல்கள் முதலியவற்றைத் தேதியிட்டுக் குறிப் புக்கள் வைத்து வருவதால் கணிதத்திலும் நிலவியலிலும் பௌதிகத்திலும், வகுப்பில் பெற்ற அறிவை வலுப்படுத்திக் கொள்ளலாம். அரசியல், சமூக, கலை போன்ற சார்புள்ள கழகங்களின் அலுவல்களைப் பற்றிய குறிப்புக்கள் சமூகப் பாடத் தேர்ச்சியை வளமாக்கும் வலிவுடையன. இவை தவிர ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் (Sport and pastime) போன்ற செய்தியிதழ்களின் மூலம் பொழுது போக்கு ஈடுபாடுகளைப் பற்றிய தகவலறிவுடன் அத்தகைய விளையாட்டுக்களில் தனி விருப்பமுள்ளவர்கள் தங்கள் தேர்ச்சியை வளர்ச்சி செய்வதற்கான ஊக்கமும் பெறலாம்.

செய்தித் தாள்களையும் மற்ற இதழ்களையும் படிப்பதன் மூலம் மாணவர்கள் மற்றொரு நலமிக்க பயிற்சியும் பெற இயலும். இக்காலத்தில் பல இதழ்கள் மாணவர்க்கான பரிசுத் திட்டங்களை வெளியிட்டு அவற்றின் மூலம் அவர் களிடம் உட்புதைந்து கிடக்கும் கருத்துக்களைக் கட்டுரை

கள், கவிதைகள், கதைகள் மூலம் வெளியிட ஊக்கமளித்து வருகின்றன. ஆனால் சர்க்கரை என்றவுடன் இனித்து விடாது. அறையில் ஆடித்தான் அம்பலத்தில் ஆட வேண்டும் என்பது போல் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அத்தகைய துறைகளில் நற்பயிற்சியளிக்க வேண்டும். அவ்வாறு செலவிடும் நேரம் பயன்மிகு கல்வி புகட்டலிற் செலவிடுவதேயாகும் என்பதையும் இவ்வகையில் பள்ளிச் செய்திகள் பற்றிய தாள் தயாரித்தல், பள்ளிச் சஞ்சிகை (School Magazine)முதலியவற்றைக் கைப்பிரதியாக எழுதிச் சுற்றோடச் செய்தல் (Circulating) போன்ற பயிற்சிகள் ஆக்கமும் ஊக்கமும் பயக்கும் என்பதையும் நாம் மனத்திற் கொள்ள வேண்டும்.

### (iv) மேற்கோள் நூல்கள்

இவற்றை ஆராய்ச்சிக்கு உதவும் நூல்கள் (Referrence Books) எனவும் குறிப்பிடலாம். பொதுவாக VIII-XI படிகளிற் பயிலும் மாணவர்களே இவற்றை ஒருவாறு திறம்படப்பயன்படுத்த முடியுமெனினும் அதிக ஆற்றலும் விருப்பப் போக்குமுள்ள மற்ற வகுப்பு மாணவர்களும் இவற்றைப் பயன்படுத்துவதில் தடை ஏற்படுத்த வேண்டியதில்லை. வகுப்புப் பாடப்புத்தகம் (Class Text-Book) ஆழ்ந்த படிப்பிற்கும் (Intensive Reading) செய்தித் தாள்கள், மேற்கோட் புத்தகங்கள் போன்றவை பரந்த படிப்பிற்கும் (Extensive Reading) உதவுவனவாகும்.

ஆராயும் படிப்பின் மூலம் மாணவர் பெறும் அறிவு பரவலாவதுடன் ஏற்கனவே பெற்றுள்ள அறிவின் ஆழமும் அழுத்தமும் மிகுதிப்படும். அத்துடன் ஒரு குறிப்பிட்ட தலைப்பின்கீழ் வரும் பொருள் பல கோணங்களிலிருந்து

விருப்பு வெறுப்புடனே அல்லது நடு நிலைமையுடனே ஆராயப்பட்டிருப்பது புலனாகும். இவற்றை நன்கு பயன் படுத்தும் வகையில் ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். முதலில் மாணவர்களின் தரத்திற்கேற்ற நூல்களின் பெயர் களைக் குறிப்பிட்டு அவற்றின் பொருளடக்கத்தைப்பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடவேண்டும். மாணவர்க்கு எளிதில் கிடைக்கக் கூடியனவாகவே இவை இருக்க வேண்டும். அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்பதையும் நிலைமைக்கும் பொருளுக்குமேற்றவாறு எவ்வெப்பகுதிகள் அல்லது இயல்களில் கருத்துச் செலுத்த வேண்டுமென்ப தையும் முன்கூட்டியே எடுத்துக்கொடுத்தல் மிகவும் நல்ல முறையாகும். அவற்றைச் சரிவரப் பயன்படுத்துவதற்கடை யாளம் மாணவர் அவ்வப்போது எடுத்துவரும் குறிப்புக் களும் அவற்றைச் சமயத்திற்கேற்றவாறு பயன்படுத்துவது மாகும்.

மேற்கோள் நூல்களைத் திறம்படப் படிக்க உதவக் கூடிய இரு முக்கிய துணைக்கருவிகள் சொல் அகராதியும் (Dictionary) நூலின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ள பொரு ளகராதியும் (Index) ஆகும். இவற்றைப் பயன்படுத்தும் நற்பழக்கத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு ஆசிரியருடையதாகும். உண்மையில் அத்தகைய பழக்கம் மாணவர்களுக்கேற்பட்டுவிட்டால் ஆசிரியரின் பணி பெருமளவு குறைய ஏதுவாவதுடன் மாணவர்களின் தாமாக ஆழ்ந்து படிக்கும் திறமை (Capacity for self-study) வளர்ச்சியடையும் என்பதை மறக்கலாகாது.

### (v) நூல் நிலையங்கள்

கல்வி புகட்டலை விரிவாக்குவதிலும், மக்களாட்சி அடிப் படையில் பாமரர்களுக்கும் கல்விகிட்டச் செய்வதிலும் நூல்

நிலையங்கள் பெரும்பணியாற்றி வருகின்றன. சில ஆண்டு கட்குமுன்வரை இவை ஒவ்வொரு பள்ளியிலும் பெயரளவில் இருந்துவந்தன. பொது நூல் நிலையங்களோ (Public Libraries) எண்ணிக்கையில் மிகக் குறைவாகவும் மாவட்ட, மாநிலத் தலைநகர்களிலுமே (District and State Head-quarters) இயங்கி வந்தன. ஆனால் தற்காலத்தில் நூல் நிலையங்களுக்கென மானியம் அரசினரால் தாராளமாய் வழங்கப்பட்டு வருவதால் பள்ளி நூல் நிலையங்களோடுகூட நூற்றுக்கணக்கான பொது நூல் நிலையங்களும் கல்வித் துறையில் சிறந்த பணியாற்றி வருகின்றன. இப்போது நூல் நிலையங்கள் நிர்வகிப்பதற்கென்றே Local Library Authorities (L. L. A.) என்ற அதிகாரக் குழுக்கள் நியமிக் கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நற்போதனைக்கும் பயனுறு கற்றலுக்கும் நூல் நிலையம் இன்றியமையாத சாதனமாகும் (sine qua non). மாணவர் களைத் தேர்வுகளுக்குத் தகுதியுடையவராக்கும் நோக்கம் ஒரு புறமிருக்க, சமூகத் தேவைகளையும் நாட்டுப் பணியையும் முன்னிட்டு அவர்களைப் பரந்த மனமுடையவர்களாக்கவும் (broad-minded) அவர்களுடைய மனத்தில் புறப்படிப்பில் (extra-reading) நிலையான விருப்பத்தைப் பதியவைக்கவும் பள்ளி நூல் நிலையம் பேருதவியளிக்கவல்லது. இவ்வகை யில் பாட நூல், ஆசிரியர் போதனை, தேர்வுகள் முதலியவை ஓரளவே பயிற்சியளிக்கமுடியும். ஏனென்றால் மனப்பான்மை, விருப்பம் ஆகிய பண்புகள் அவர்களுடைய உழைப்பின் மூலமே உருவாக வேண்டியனவாகும். ஆகையால் பள்ளி நூல் நிலையங்களையும் பொது நூல் நிலையங்களையும் மாண வர்கள் நன்கு பயன்படுத்தும் முறையில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும்.

## நூல்-நிலையம் ஆற்றவல்ல பணி

பள்ளி நூல் நிலையப்பகுதி நல்ல வசதியான இடத்தில் இயங்கி வரவேண்டும். காற்றேட்டம், வெளிச்சம் முதலிய வசதிகளுடன் கூடிய அறை அல்லது மண்டபத்தில் (Room or Hall) மாணவர்கள் நெருக்கமின்றி அமர்ந்து படிக்கவும் நூல்களை வாங்கி வந்து படிக்கவும் எளிதாயிருக்கவேண்டும். அங்கு முழு அமைதி நிலவுதல் இன்றியமையாத தாகும்.

நூல் நிலையத்தின் பயனுடைமையை எடுத்துக்காட்டுவது அதில் அடங்கியுள்ள நூல்களின் எண்ணிக்கையோ அவற்றின் உயர்ந்த விலையோ அல்ல. ஆனல் அத்தகைய குறிகாட்டி (Index) அப்புத்தகங்களிலடங்கியுள்ள உயர்ந்த கருத்துக்களும் வழிகாட்டலுமேயாகும். ஆகையால் ஆழ்ந்தறிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள் முதலியவற்றுல் அதை நிரப்பவேண்டும். பின்னர் அவற்றை ஏதாவது ஒரு ஒழுங்கு முறையில் அலமாரிகளில் அடுக்கி வைக்கவேண்டும். ஒவ்வொன்றிற்கும் தனித்தனிக் குறியீட்டு எண்ணிட்டுச் சீட்டு ஒட்டிவைக்க வேண்டும். அவற்றின் தலைப்புக்கள் நன்கு பார்வையில் விழுமாறு அவை அடுக்கிவைக்கப்பட்டிருக்க வேண்டும். இக்காலத்தில் கல்லூரி நூல் நிலையங்களிலும் பொதுநூல் நிலையங்களிலும் கடைப்பிடிக்கப்படும் திறந்த அணுகுமை முறை (Open Access System) பள்ளி மேல்வகுப்பு மாணவர்கள் விஷயத்தில் பின்பற்றப்படலாம். ஆனல் பொதுவாகப் பள்ளி நூல் நிலையங்களில் நூல்பட்டியல் முறையை (Catalogue System) மேற்கொள்வதே அதிக வசதியுள்ளதாயிருக்கும்.

பள்ளி நூல் நிலையத்தின் கிளைகளாக வகுப்பு நூல் நிலையப் பகுதிகளும் பணிபுரிய வேண்டும். இவற்றை

வகுப்பு ஆசிரியர்கள் அல்லது ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் என்ற முறையில் கண்காணித்துவர வேண்டும். சாதாரணமாக, மூன்றுவது அல்லது நான்காவது படியிலிருந்தே (Standard III or IV) வகுப்பு நூல் நிலையப் பகுதிகளுக்கு ஏற்பாடு செய்யலாம். இவற்றின் மூலம் பல ஆசிரியர்கள் சிறு சிறு மாணவக் குழுக்களுக்கு நூல் நிலையப் படிப்பில் ஆக்கமாக வழி காட்டவும் (Constructive guidance) பயிற்சி யளிக்கவும் இயலும். இத்தகைய மேற்பார்வையிடப்பட்ட வகுப்பு நூல் நிலையப் படிப்பை (Supervised Class-Library Reading) அடிப்படையாகக் கொண்டு பள்ளிப் பொது நூல் நிலயத்தை மாணவர்கள் ஆசிரியர் மேற்பார்வையிலோ தாமாகவேயோ நன்கு பயன் படுத்த முடியும்.

பள்ளி நூல் நிலையத்திலும் அதன் வகுப்புக் கிளைகளிலும் ஒவ்வொரு நூலிலும் தேவைக்கும் பொருளின் சிறப்பிற்கும் தக்கவாறு (according to needs and significance of subject-matter) ஒரு சில பிரதிகள் இருக்க வேண்டும். பதிவுப்புத்தகங்களில் (Registers) மாணவர்கள் எடுத்துப் படிக்கும் நூல்களின் பெயர்கள், எடுக்கும் நாள், திருப்பிக் கொடுக்கும் நாள் முதலியன குறிக்கப்பட்டு வரவேண்டும். அத்துடன் பள்ளிப்படிப்பறையிலோ வகுப்பறைகளிலோ குறிப்பிட்ட நேரங்களில் நூல்களைத் தாராளமாக எடுத்துப் படிக்கவும் திருப்பித்தரவும் வசதியளிக்க வேண்டும். இவ்வகை அலுவல்களைப் பதிந்து வைக்க வேண்டியதில்லை. ஆனால் நூல்களை அலமாரிகளிலிருந்தோ நூல் நிலைய அலுவலாளரிடமிருந்தோ (Librarian) அல்லது அலுவலை மேற்கொண்டுள்ள ஆசிரியரிடமிருந்தோ பெற்றுப்பயன்படுத்துவதிலும் திருப்பித்தருவதிலும் மாணவர்கள் ஒரு திட்டவட்ட

மான ஒழுங்கு முறையையும் கட்டுப்பாட்டையும் பின்பற்றுதல் அவசியம்.

ஆனால் நூல் நிலையப்படிப்பில் மாணவர்களைப் பயிற்றுவித்து ஈடுபடுத்தினால் மட்டும் போதாது. ஆசிரியர்கள் அத்தகைய படிப்பை அடிக்கடி கண்காணித்து மாணவர்களுக்கு உருப்படியான யோசனைகள் கூறுவதுடன் ஒருவாறு அவ்வேலையை மதிப்பிட்டும் (evaluate) வரவேண்டும். இதற்கெனக் குறிப்பேடுகளை வைத்துக்கொண்டு அவர்களை குறிப்புகளெழுதிவரச் செய்து அவற்றை முடிந்தவரை ஆராய்ந்துவருதலை (Scrutiny)க் கட்டாயம் மேற்கொண்டால்தான் மாணவர்களுக்கு நூலகப்படிப்பில் அக்கறையும் உற்சாகமும் ஏற்படும். அதன் நல்விளைவாகப் பரந்த படிப்பறிவும் கிட்டும்.

## காட்சி மூலம்

### (i) சித்திரங்களும் விளக்கப்படங்களும்

காதால் கேட்டது பொய், கண்ணால் கண்டது மெய் என்பது சாதாரண வழக்கிலுள்ள சொல்லாகும். ஆனால் உண்மையில் அது ஒரு ஆழ்ந்த கருத்துள்ள கல்விக் கோட்பாட்டைக் குறிக்கிறது. விஷயத்தை எடுத்துக் கூறவும் விளக்கவும் நாம் இரு முறைகளைக் கையாளலாம். அவற்றில் ஒன்று சொல் விளக்கம், மற்றது புலனீடான எடுத்துக் காட்டு (Verbal Explantion and Concrete Illustration). சொல் விளக்கமுறை ஆசிரியரால் எளிதாகக் கையாளக்கூடியது. ஆனால் அத்தகைய விளக்கத்தில் பெரும் பகுதி பல மாணவர்களுக்குப் பொருள் விளங்காச் சொற்பொழிவாகவே படலாம். மேலும், ஆசிரியர்கூடச்

சிற்சில சமயங்களில் தகுந்த சொற்கள் கிடைக்காததால் திகைக்க வேண்டியும் ஏற்படலாம். கடைசியாக, சொல் விளக்கத்தின் உதவியால் கிட்டும் அறிவு வளர்ச்சி உண்மை நிலையோடும் அனுபவத்தையொட்டியும் இயைபற்றதாக அமைந்துவிடவும் கூடும்.

ஆனால் புலனீடான எடுத்துக்காட்டு முறையில் ஒரு காட்சிப் பொருளையும் அதன் பல்வேறு பண்புகளையும் கூறுமற் கூறி மாணவர் உள்ளங்களில் அதன் பிம்பங்களை (Images) ஊன்ற வைத்தல் மிகவும் எளிது. அத்தகைய பண்புகளிற் சில (1) பருமன் (2) வடிவம் (3) வெப்ப தட்ப நிலை (4) நிறம் (5) மணம் (6) சுவை என்பன. ஆனால் எப்பொழுதுமே இத்தகைய பண்புகளைக்கொண்ட சடப்பொருள்களை (Physical objects) வகுப்புப் போதனையில் கையாளவியலாது. அத்தகைய சமயங்களில் அவற்றின் சித்திரங்களின் மூலம் பொதுத் தோற்றத்தையும் விளக்கப்படங்கள், வரைப்படங்கள் மூலம் (Diagrams and Graphs) பருமனையும் நன்கு எடுத்துக் காட்டலாம். சில நேரிடை நிலைகளுக்கேற்ப, போதனையின்போது படிப்படியாக வரைந்து காட்டவும் படலாம்.

பொருளறிவுப்பாடம் எதுவாக இருந்தாலும் அதைக் கற்பிப்பதில் சித்திரங்கள், விளக்கப்படங்கள், வரைப்படங்கள் முதலியவை சிறந்த பணியாற்ற வல்லனவாகும். (1) மொழிப் பயிற்சியில் இலக்கணம் கற்பிக்கும்போது பெயர்ச் சொல்லின் வகைகளையும் திணை, பால் முதலியவற்றையும் மரபுமுறை மரமாக(Genealogical tree) வரைந்து திறம்பட எடுத்துக் காட்டலாம். வாக்கியங்களிலுள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக (Active to passive)

ஆக்கும் பொழுது நிகழும் மாற்றங்களைப் பட விளக்கமுறை யில் நன்கு பதியவைக்கலாம். மாணவரின் நேர் அனுபவத் தில் வராத எஸ்கிமோவின் வீடு, அணுவின் அமைப்பு போன்றவற்றைச் சித்திரங்கள் மூலமே நன்கு புரியவைக்க லாம். (ii) கணித பாட போதனையில், கணித மேதைகளின் புகைப்படங்கள், வரலாற்று முக்கியமுள்ள கணிதக் கருவி கள், கைப்பிரதிகளின் பகுதிகள் (Mathematical Instruments and Manuscripts) முதலியவற்றைச் சித்திரங்களைக் கொண்டு குறிப்பிடலாம். (iii) அறிவியல் பாட போதனை யில் (Teaching of Science) விளக்கப்படங்களும் எல்லைக் கோட்டுப் படங்களும் (Diagrams and Sketches) சார்பு மாறி வரைப்படங்களும் (Graphs of Functional Variation) இன்றியமையாத் துணைக் கருவிகளாயமைகின்றன. (iv) சமூகப்பாட போதனையின் உயர்தரத்திற்கு உறுதுணையாகப் புள்ளி விவர வரைப்படங்கள் (Statistical Graphs) விளங்கு கின்றன.

சித்திரங்களையும் விளக்கப்படங்களையும் (Pictures and diagrams) கையாள்வதில் சில கொள்கைகளைப் பின்பற்று வது நலம். (i) கவனக் குறைவாகத் தயாரிக்கப்பட்ட பலவற்றிற்குப் பதிலாக நன்கு வரையப்பட்டுள்ள சிலவற்றை பயன்படுத்தினால் போதும். (ii) அவற்றின் தோற்றக் கவர்ச் சியைவிட அவை குறிப்பிடும் பொருட்கவர்ச்சி மேலோங்கி யிருக்க வேண்டும். (iii) ஏற்கனவே தயாரிக்கப்பட்ட முழுப் படத்தைவிட, பாடபோதனையின் போது திறமையுள்ள ஆசி ரியரால் படிப்படியாக வரைந்து வளர்ச்சியுறும் படம் மிகவும் சிறந்தது. (iv) கற்பித்தலில் படங்களைக் கையாள்வதைப் போலவே கற்றவற்றை வெளியிடும் வகையிலும் பலவகை

யான படவிளக்கங்களை உபயோகிப்பதில் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

### (ii) பொம்மை விளையாட்டும் நிழல்விளையாட்டும்

இக்காலத்தில் தொடக்கப் பள்ளிகளிலிருந்து கல்லூரிகள் உள்ளிட, முக்கியமான நாட் கொண்டாட்டங்களின் போது பொம்மை விளையாட்டும் (Doll Play) நிழல் விளையாட்டும் (Shadow Play) நிகழ்ச்சி நிரலில் இடம் பெறுகின்றன. முந்தியது பொம்மலாட்டம் என்ற பெயரில் பாமர மக்களிடையே அடிபடுகிறதென்பதைக் குறிப்பிடவேண்டும். இவ் விளையாட்டுக்கள் நிகழும்போது சிறுவர்களையும் பெரியவர்களையும் கவரும் முக்கியப்பகுதி என்னவெனில் பொம்மைகளிலும் நிழல்களிலும் ஏற்படும் தோற்றங்களுக்கும் அசைவுகளுக்குமேற்ற கருத்துக்களை உற்று கவனித்தல் மூலம் அறியத்தூண்ட வைப்பதாகும்.

பொம்மலாட்டத்தில் பல உறுப்புக்களும் எளிதில் இயங்கக் கூடிய பொம்மைகளை நூல்களின் (அல்லது கம்பிகளின்) உதவியால் ஆட்டி அசையவைத்துச்செயல்களின் வாயிலாகப் பொருளுணர்த்த முயற்சிக்கிறோம். இதற்குப் பெரும்பாலும் உதவுபவை செய்கைப் பாட்டுக்களும் சிறு நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் உரை அல்லது செய்யுள் நடை ஆக்கங்களுமாகும். பொம்மலாட்டத்தின் விறுவிறுப்பையும் கவர்ச்சியையும் அதிகப்படுத்தும் வகையில் கிராமபோன் இசைத்தட்டுகளைப் பயன்படுத்தலாம். அத்துடன் மொழிப் பகுதிகளைத் தகுந்தவாறு பின்னணியிலிருந்து உச்சரித்து வெளியிடுவோரைப் பொறுத்தும் அதன் மதிப்பு உயரும்.

நிழல் விளையாட்டு சிறுவர்களைப் பெரிதும் கவரக்கூடியது. இருகை விரல்களையும் பிற உறுப்புக்களையும் பலவாறு

இயக்கி, சுவரில் அல்லது வெள்ளித்திரையில் நிழல்களை விழச்செய்கிறார்கள். அவை நாய் மாதிரியும் கொக்குமாதிரியும் வேறுபல வடிவங்களிலும் தோன்றி அசைகின்றன. இத்தகைய விளையாட்டின் மூலம் மாணவர்களின் கற்பனைத் திறனும் ஆக்கத்திறனும் செயற்படுத்தப்படுவதுடன் பெருமளவில் அவர்களுக்கு மகிழ்ச்சியும் கிட்டும். நாடக மேடையிலும் சினிமா திரையிலுங்கூட இக்காலத்தில் சில முக்கியமான காட்சிகளை நிழலசைவுகளின் மூலமே காட்டி வருவதும் அவற்றை மக்கள் நன்கு சுவைத்துப் பார்ப்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய விஷயமாகும்.

## (iii) ஊமைக் கூத்தும் ஒப்பனைக் காட்சியும்

இவற்றை முறையே (Pantomime, Tableau) என்ற ஆங்கிலச் சொற்களினால் குறிப்பிடுகிறோம். ஊமைக் கூத்தில் பேச்சு அறவே புறக்கணிக்கப்பட்டுச் சைகைகள் மூலம் பலவித உணர்ச்சிகளும் கருத்துக்களும் வெளியிடப்படுகின்றன. இதைக் குறுகியகால நிகழ்ச்சியாக நடத்திக் காட்டினால் மிகவும் ரசிக்கக் கூடியதாய் இருக்கும். உள்ளக்கருத்துக்களைப் பேச்சின்றிச் செயல்கள் மூலம் வெளிப்படுத்துவதில் மாணவர்களின் கற்பனை ஊக்கத்திற்கு நல்ல வாய்ப்பளித்தால் அவர்கள் அதை வியக்கத்தக்க முறையில் வெளிப்படுத்தி மகிழ்வெய்துவர். பேச்சைப் பாராமற்படித்து ஒப்பித்துவிடலாம். ஆனால் அது நன்கு புரிந்துகொள்ளப்பட்டதா இல்லையா என்பதைக் கண்டறிவது எளிதல்ல. ஆனால் ஊமைக் கூத்தில் நன்கு புரிந்துகொள்ளாமல் மேற்கொள்ளப்படும் அங்க அசைவுகள் அதைக் கேலிக்கூத்தாக மாற்றி விடக்கூடும். தகுந்த அசைவுகள் மூலம் வீரம், ஏளனம், அமைதி, இன்ப துன்ப உணர்ச்சிகள் முதலியவற்றை

வெளிப்படுத்திக் காட்டுவதில் மாணவர்களுக்குப் பயிற்சி யளிப்பதன் மூலம் அவர்களுடைய கல்வித்தரத்தை உயர்த்த முற்படவேண்டும்.

ஒப்பனைக் காட்சியில் பேச்சு, அசைவு ஆகிய இரு கூறுகளுக்குமே இடமில்லை. ஆனால் உயிருள்ள நடிகர்கள் சிலைகள் போல் தோற்றமளிப்பர். மற்றக் காட்சிகள் பார்ப்போர் கண்களுக்கெதிரிலேயே படிப்படியாக வளர்ந்து வர வேண்டியவையாகும். ஆனால் ஒப்பனைக் காட்சியைத் திரை மறைவில் முற்றிலும் ஒழுங்குபடுத்திய பிறகே திரை நீக்கப்படும். மாட்டுக் கொட்டிலில் இயேசுவின் பிறப்பு, புத்தரின் உபதேசம், சுதந்திர இந்தியாவை மறைந்த பெருந் தலைவர்கள் விண்ணகத்திலிருந்து கொண்டு வாழ்த்துதல் போன்ற நிகழ்ச்சிகள் ஒப்பனைக்காட்சி மூலம் சிறப்பாக எடுத்துக்காட்டக்கூடியவையாகும்.

## (iv) பகட்டு அணி

இவ்வகைக் காட்சியில் ஆடம்பர அம்சங்கள் நிறைந் திருக்கும். பகட்டான பட்டாடைகள், பளபளக்கும் ஆயுதங்கள், மின்னிமின்னிப் பளிச்சிடும் அணிகலன்கள் முதலியன பயன்படுத்தப்படும். திறமையான ஒளியமைப்பின் மூலம் பகட்டணிகளின் கவர்ச்சியை அதிகமாக்கலாம். இன்னொலி (Rhythmic music) வீர முழக்கம் முதலிய பின்னணி ஏற்பாடுகள் நம் கண்முன் இலக்கிய நிகழ்ச்சிகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் மிகச் சிறந்த முறையில் மறுபடியும் நடித்துக் காட்டப் பேருதவியளிக்கவல்லவையாகும்.

## (v) திரைப்படங்களும் திரைப்படத் துண்டுகளும்

கல்வி புகட்டலில் படத்திரை (Film-Screen) சிறந்த பணியாற்றி வருகிறது. இக்காலத்தில் ஒளிப்படமெறிகரு

வியும் (Silent - Films Projector) ஒலிப்படமெறி கருவியும் (Sound - Films Projector) இல்லாத உயர்நிலைப் பள்ளிகளோ கல்லூரிகளோ அநேகமாக இல்லையெனலாம். இவற்றைத் தவிர, நகராட்சி மன்றங்கள், வர்த்தகக் கழகங்கள் முதலியனவும் படத்திரை மூலம் பற்பலவாறு மக்களுக்கு விஷயங்களைக் காட்சி முறையில் எடுத்து விளக்குகின்றன. திரைப்படச் சுருள்கள் (Film Reels) மூலம் கதைகள், நாடகங்கள் முதலியவற்றையும் திரைப்படத் துண்டுகள் (Film Strips) மூலம் பல்வேறு பாடப்பகுதிகளின் நுணுக்கப்பகுதிகளையும் அப்படியே எடுத்துக்காட்டலாம். புத்தரின் வாழ்க்கை வரலாறு, இயேசு கிறிஸ்து சமயத்தைப் பரப்பிய விதம் முதலியவற்றைத் திரையிடலாம். கொசு, தவளை, வண்ணத்திப் பூச்சி முதலியவற்றின் வளர்ச்சிப்பருவங்கள், அணுக்கதிரியக்கம், சுரங்க வேலைகள், வட்டத்தின் பரப்பு, வடிவ கணித உண்மைகள் முதலியவற்றையும் சமூக நலப் பணி, தொத்து நோய்த் தடுப்பு, திட்ட வேலை முன்னேற்றம் முதலியவற்றையும் திரைப்படத் துண்டுகள் மூலம் நன்கு விளக்கலாம்.

தெளிவும் தெளிவின்மையும் கலந்த நீண்ட நேரச் சொல் விளக்கத்திற்குப் பதிலாக மிகக் குறைந்த நேரச் செலவில் திட்டவட்டமாகவும் நுணுக்கத் தெளிவுடனும் பாட விஷயங்களையும் பொது அறிவுப் பொருட்களையும் திரைப் படக் காட்சி மூலம் கற்பிக்கலாம். சலனமற்ற பாடப்புத்தகப்படங்கள், சொல் விளக்கம் ஆகியவற்றைக் கொண்டு பூகோளப் பாடத்தில் மாணவர்க்கு எட்டாத நெடுந்தொலைவிலுள்ள நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் கவர்ச்சியற்ற முறையில் பல மணி நேரம் கற்பிப்பதைக் காட்டிலும் திரைப்பட முறையில் குறு

கிய காலத்தில் உண்மைத் தோற்றங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றை மிக நன்ருக மனதில் பதிய வைக்கலாம். மிகச் சொற்ப அளவிலேயே சொல் விளக்கம் தேவைப்படும்.

படக்காட்சிக்கு ஏற்பாடு செய்கையில் பின் வருவன கவனம் பெறவேண்டும்:

(1) தகுந்த திரைப் படங்களையும் திரைப்படத்துண்டுக ளையும் முன்னதாகத் தருவித்தல் அல்லது தயாரித்துக் கொள்ளுதல்.

(2) ஆசிரியர் (அல்லது திரையிடுவோர்) அவற்றை முன் காட்சியாக (Pre-view)த்திரையிட்டுப் பார்த்து விளக் கிக் கூற வேண்டிய நுணுக்கங்களையும் முறையையும் பற்றிய குறிப்புக்களை எழுதி வைத்துக் கொள்ளுதல்.

(3) திரையிடுவதற்கு முகவுரையாகவும் திரையிடப்பட்ட பகுதியின் முடிவுரையாகவும் சுருக்கமாகக் கூற வேண் டியவற்றையும் குறித்துவைத்தல்.

(4) படக் காட்சிக்கு ஏற்பாடு செய்தல் பாட போதனைக்கு முன்னுரையாகவோ, அதனுடன் இயைந்தோ அல்லது முடிவுரையாகவோ அமையலாம். இதைப் பற்றியும் ஆசிரியர் முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ளுதல்,

(5) படக்காட்சி முடிந்தவுடனே அல்லது பிறகோ அதைப் பற்றி உரையாடி, மாணவர்களின் ஐயங்களையும் பிரச் சினைகளையும் தீர்த்தல்.

இத்தகைய முன் ஏற்பாடுகளுடன் படக்காட்சி முறை யைக் கல்வி புகட்டலில் மேற்கொண்டால் மிகச் சிறந்த முறையில் பல பொருள்களை மாணவர்கள் கற்றுத் தேர்ச்சி யும் திறமையும் பெறுவர்.

## அத்தியாயம் IV

### ஆதாரக் கல்வியும் தொடர்புறுத்தலும்

#### (i) கொள்கைகளும் நடைமுறையும்.

"கல்வி" என்ற சொல்லின் சாதாரணப் பொருள் எழுத்தறிவென்பதாகும். அதன்படி ஆரம்பக்கல்வியில் வாசித்தல், எழுதுதல், எண் கணக்கிடல் எனற மூன்று துறைகளில் (Three R's) போதனை அமையும். பொதுவாக, இவ் வகையிலேயே எந்நாட்டு ஆரம்பக் கல்வியும் புகட்டப்படுகிறது. ஆனல் அத்தகைய அடிப்படையில் ஆரம்ப, உயர்தர, கல்லூரி கல்விப் போதனை அமைவதால் பின் வரும் கேடுகள் விளைகின்றன. (1) பாமர மக்களையும் கல்வி கற்றவர்களையும் இரண்டு வேறுபட்ட பகுதிகளாகப் பிரிக்கிறது. (2) வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சிக்கறுத்துத் தீர்க்கும் ஆற்றலையளிக்கிறதில்லை. (3) ஏழைகளின் வறுமையையோ இன்னல்களையோ பொருட்படுத்தாது தங்களுடைய முன்னேற்றத்தையே கருதிச் செயலாற்றும் மனப்பான்மையைக் கற்றவர்களிடையே வளர்க்கிறது அதாவது அத்தகைய கல்வி வெறும் ஏட்டுப்படிப்பைக் குறிப்பிட்ட வழிகளில் வளர்க்கிறதேயொழிய சிறந்த மனப்பான்மைகளையும் கைத்திறனையும் கருத்திற் கொண்டதாயில்லை.

இக் குறைகளைப் 'புதுக்கல்வி' (*Nai Talim*) அல்லது 'ஆதாரக் கல்வி' (Basic Education) மூலம் நீக்கலாமெனக் கருதப்பட்டு அதற்கேற்றாற்போல் அதன் கொள்கைகளும் நடைமுறையும் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி கல்வி போதனையும் கிராமப் பொருளாதாரமும் இணைக்கப்பட வேண்டும். ஒரு அடிப்படைத் தொழிலை மையமாகக்

கொண்டு பல பாடபோதனைகளும் நடைபெறவேண்டும். அறிவாற்றல், மனப்பான்மை, கைத்திறன் (Head, Heart and Hand) ஆகிய மூன்றையும் வளர்த்தால்தான் முழுக் கல்வி போதனை நடைபெறுவதாகக் கொள்ளமுடியும். இதற்கு அடிப்படையான கல்விக் கோட்பாடுகள் பின்வருவனவாகும்.

தனி மாணவனின் பல்துறைத் திறமைகளை ஒரே சீராக வளர்த்து வெளிப்படச் செய்தலே உண்மைக் கல்வியாகும். அதற்கேற்ற சிறந்த சாதனம் நோக்குடைச் செயலாகும் (Purposive Action). உளநூல் கொள்கைப்படி அறிவும் அறிவாற்றலும் செயல் தொடர்புடைய சிக்கல்களின் வாயிலாக ஏற்படுகின்றன. செயல் தொடர்பற்ற செய்தியறிவு உள்ளத்திற் சுமத்தும் பெரும் பாரமாவதுடன் அறிவாற்றலையும் மழுங்கச் செய்கிறது. ஒரு தொழிலின் வாயிலாகக் கல்வி புகட்டினால் மேற்கூறிய மூன்று நல்விளைவுகளும் கிட்டுகின்றன. இதற்கேற்றவாறு தொழிற் பயிற்சி மூலம் எழுத்து, எண் கற்பிக்க வேண்டுமேயல்லாது இவ்விரண்டையும் தனிப்பட்ட முறையில் கையாளக்கூடாது.

ஆதாரக் கல்வியில் தொடக்க நிலை வகுப்புக்களில் முதலில் எழுத்துக்களைக் கற்பித்தலுக்கு இடமில்லை. பிள்ளைகள் (1) வரலாறு, (2) நிலநூல், (3) மனக்கணக்கு, (4) நூற்றல் போன்ற செயல் முதலியவற்றில் ஓரளவு அறிவு பெற்ற பிறகே எழுதப் படிக்கக் கற்பிக்க வேண்டும். இவற்றின் மூலம் அறிவாற்றலை வளப்படுத்த வேண்டும். உதாரணமாக, தக்ளி அல்லது கைராட்டையில் நூற்றலை எடுத்துக்கொள்வோம். அதை ஒட்டி (1) ஒவ்வொரு செயல் முறைக்கான காரணம், (2) கைராட்டையின் பொறியமைப்பு,

(3) பருத்தியின் வரலாறும் நாகரிக வளர்ச்சியில் அதன் பங்கும், (5) நூற்ற நூல் சுற்றுக்களை எண்ணுதல், நீளத்தைக்கணக்கிடல், அதன் ஒரே தன்மைத்தான உறுதியையும் தடிப்பையும் தீர்மானித்தல் போன்றவற்றின் மூலம் ஒரே சமயத்தில் குழந்தைகளின் புலப்பயிற்சிக்குப் பிறகு எழுதப் படிக்கக் கற்பிக்கலாம். அப்பொழுதுங்கூட, வடிவ கணிதப் படங்கள், பறவைகள் முதலியவற்றை வரைவதில் பயிற்சியளித்த பிறகு மொழிப்பயிற்சியின் இரண்டு கூறுகளான படித்தல், எழுதுதலை எடுத்துக்கொள்வதே சிறந்த முறையாகும்.

பொறுக்கியெடுக்கும் அடிப்படைத் தொழில் (Basic Craft) நூல் நூற்றலாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. பள்ளியமைந்துள்ள ஊரின் மக்கள் பெரும்பாலும் ஈடுபட்டுள்ள தொழில், அதற்கனுகூலமான மூலப்பொருள்களும் சூழ்நிலையும், உற்பத்தியும் விற்பனை வசதிகளும் போன்ற ஏதுக்கள் எடுத்துக் கையாள வேண்டிய தொழிலை நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு பின்பற்றக்கூடிய தொழில்களிற் சில நூல் நூற்றல், துணி நெய்தல், சட்டிபானை செய்தல், தச்சுவேலை, காகிதம் செய்தல், கூடை செய்தல், விவசாயம் என்பனவாகும்.

ஆதாரக் கல்வியின் சுழலச்சு (Pivot) பொறுக்கியெடுக்கப்படும் அடிப்படைத் தொழிலாகும். அதன் மூலம் மாணவ மாணவிகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் முதலில் மட்ட ரகமாயிருந்த போதிலும் நாளடைவில் ரகத்தில் உயர்ந்து அவற்றின் விற்பனை மூலம் ஆசிரியர்களின் சம்பளத்திற்கு ஈடுகட்டும் அளவிற்காவது சுயதேவைப் பூர்த்தியுள்ளதாக (Self-supporting) இருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது.

ஆதாரக் கல்வித் திட்டத்தில் தனிப்பட்ட மத போதனைக்கு இடமில்லை. ஆனால் எல்லா மதங்களிலும் பொதுவாகக் காணப்படும் அறவியல் (Ethics) கொள்கைகள் நீதி போதனை வடிவத்தில் புகட்டப்படும். ஆங்கிலம் போதிக்கப் படாது. மாகாணங்களுக்கிடையே கையாளக்கூடிய ஏதாவது ஒரு மொழி போதிக்கப்படும். (அண்மையில் ஆங்கில போதனையும் சேர்க்கப்பட்டுள்ளது). ஆதாரக் கல்வியின் உயிர்நாடி தொடர்புறக் கற்பித்தலாகும் (Correlatad teaching). இம்முறையில் ஆசிரியர் நல்ல பயிற்சியும் திறமையும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் குழந்தைகளின் உள்ள நிலைகள், போக்குகள், தேவைகள் முதலியவற்றையும் ஊகித்தறிந்து அவற்றிற்குத் தக்கவாறு போதனையை அமைத்துக் கொள்பவராயிருக்க வேண்டும். அத்தகைய ஆசிரியர் நூல் நூற்றலை ஆதாரமாகக்கொண்டு பின் வரும் முறையில் தொடர்புறுத்தலை (Correlation) மேற்கொள்ளலாம்: தக்ளி அல்லது கைராட்டை யில் நூற்றநூல் எத்தனை தரப்படுத்திய (Standard) சுற்றுக்களென்றோ எத்தனை கெஜ நீளமென்றோ கூறவும் பதிவுசெய்யவும் எண் கணக்கியல் அறிவு தேவைப்படுகிறது. அதன் தர எண்ணைக் காணவும் (Count of the yarn) அவ்வறிவு அவசியமாகிறது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு எளிய கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய நான்கு மூலாதாரக் கிரியைகளைக் கற்பிக்கவும் அவற்றில் பயிற்சியளிக்கவும் வேண்டும். சில சிக்கல் நிறைந்த கணக்குகளைக் கற்பிக்கும் போது எழுத்தியல் சங்கேதங்களையும் குறிகளையும் சுருக்கங்களையும் (Symbols, signs and abbreviations) புகுத்த வேண்டும். வடிவ கணிதத்தைத் தக்ளியின் வட்டவடிவத்தைப் பயன்படுத்திக் கற்பித்தால் புலனீட்டுக் கற்றலுக்கு வகை செய்ததாகும்.

இனி, நில நூலும் வரலாற்று நூலும் எவ்வாறு கற்பிக்கலாமென்று பார்ப்போம். பழங்கால வரலாறு, முதன் முதலில் எப்பொழுது, எங்கே, எப்படி பருத்தி பயிரிடப்பட்டது, அதன் வளர்ச்சிக் கட்டங்கள் (Stages of Development), பல்வேறு நாடுகளுக்கிடையே நடைபெறும் பருத்தி, நூல் சம்பந்தப்பட்ட வியாபாரம் முதலியவற்றைப்பற்றி உரையாடலாம். தகுந்த புத்தகங்களிலிருந்து பகுதிகளைப் படித்துக் காட்டலாம், அல்லது படிக்கச் செய்யலாம். இந் நாடுகளைப்பற்றிய பூகோள அமைப்பைப் பற்றியும் வரலாற்றைப்பற்றியும் சிறிது கற்பிக்கலாம். ஏன் ஒவ்வொரு நாட்டிலும் பருத்தி பயிரிடப்படுவதில்லையென்றும் ஏற்றுமதி இறக்குமதிக்கு என்ன அவசியமென்றும் கற்பித்தல் மூலம் பொருளியலையும் (Economics) வேளாண்மையையும் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தலாம்.

கற்பிக்கும் வகுப்பிற்கேற்றவாறு பொருளடக்கமும் விரிவாகும். உதாரணமாக, ஐந்தாவது வகுப்பில் கிழக்கிந்திய கம்பெனியின் வரலாற்றைக் கணிசமாகக் கூறும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவர்கள் முதலில் வியாபாரம் தொடங்கிய விதம், எவ்வாறு வியாபார நோக்கத்திலிருந்து அரசியல் அவாக்கள் (Political Aspirations) கிளம்பி மேலோங்கின, நம் நாட்டு நூல் நூற்றல் தொழில் எவ்வாறு நசுக்கப்பட்டது போன்ற பல விஷயங்களைத் திறமையுள்ள ஆசிரியர் கற்பிக்க இயலும்.

ஆனால் ஆதாரப்பள்ளிகளில் செயலாற்றும் ஆசிரியர்கள் ஏனையப் பள்ளிகளில் உள்ளவர்களைக் காட்டிலும் அதிகத் திறமை பெற்றிருக்க வேண்டும். அதற்காக நீண்ட காலக் கற்பித்தல் அனுபவம் அவசியமாகும். அதன் வாயிலாக

எழும் பல்வேறு நிலைமைகளைச் சமாளித்தல் மூலம் அவர்களுடைய சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு கற்பிக்கும் திறமை (Resourcefulness) வளம்பெறும் இத்தருணத்தில் நாம் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் இருத்திக்கொள்ளவேண்டும். சாதாரணப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெரும்பாலும், பாடங்களைத் தனித்தனியாகவே போதிக்கிறார்கள். அத்தகைய ஒவ்வொரு பாடப் பகுதிக்கும் பல புத்தகங்களிலிருந்து விரிவான பாடக் குறிப்புக்கள் தயாரித்துக்கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட பாடப்புத்தகத்தையும் (Text-Book) துணைக்கருவியாகக் கையாளலாம். ஆயினும் வகுப்பறைப் போதனையின்போது எழும் சில எதிர்பாராத நிலைமைகளை ஆசிரியர் தம் திறமையாலேயே சமாளிக்கவேண்டி வரும். ஆனால் ஆதாரக்கல்வி புகட்டும் ஆசிரியருக்கு இத்தகைய துணைக்கருவிகள் மட்டும் போதா. அவருடைய செழிப்பான அறிவுத் திறன் (Fertile intelligence) மூலமே தரத்தில் உயர்ந்த போதனையளிக்க முடியும். இத்துடன் சீரிய நாட்டுப்பற்றுடனும் தொண்டாற்றும் மனப்பான்மையுடனும் (Patriotism and Service-mentality) ஆசிரியப் பணி புரிதல் இன்றியமையாததாகும்.

இத்தகைய ஆதாரக் கல்வி கற்கும் வாய்ப்பு நாட்டிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கிட்டச் செய்வது அரசாங்கத்தின் கடமையாகும். இதற்காகக் கட்டாய முறையைப் புகுத்துதல் நியாயமே. அத்தகைய கல்வி எல்லோருக்கும் இலவசமாயிருக்க வேண்டும். போதனை முழுவதும் தாய்மொழி வாயிலாகவே இருக்க வேண்டும். இக்கல்விக் காலமாகிய ஏழாண்டுகளும் ஒரு குறிப்பிட்ட அடிப்படைத் தொழிலை மையமாகக் கொண்டே தொழிலில் முன்னேற்றமும் பரம்பரைக் கல்வியறிவும் ஒன்றோடொன்று

இணைந்து அபிவிருத்தியடைய வேண்டும். இத்தகைய பள்ளியில் ஏழாண்டுப் படிப்பின் இறுதியில் ஒவ்வொரு மாணவ மாணவியிடமும் காணப்பட வேண்டிய சிறப்பியல்புகளிற் சில பின்வருமாறு: (1) உண்மையுடைமை (2) கட்டுப்பாடு (3) உழைப்பிலும் கூட்டு முயற்சியிலும் ஆர்வம் (4) கைத்திறன், அறிதிறன் ஆகிய இரண்டின் இசைந்த வளர்ச்சி (Harmonious Development) (5) நேர்மை (6) தன்னம்பிக்கை.

## (ii) தொடர்புறுத்தல் (Correlation)

எம்முறையில் கல்வி புகட்டினாலும் அதில் தொடர்புறுத்திப் போதிக்கும் அமிசத்தைப் புகுத்தினால்தான் மிகக் குறைந்த நேரச் செலவில் மிகுந்த பலனுள்ள கற்றலுக்கு வழிசெய்ய முடியும். அதிலும் ஆதாரக்கல்வி முறையில் இவ்வுண்மையை எப்பொழுதும் கருத்திற்கொள்ள வேண்டும். ஆனால் இதில்தான் தொடர்புறுத்தலைக் கையாள்வது மிகவும் சிக்கல் நிறைந்தது.

தொடர்புறு போதனையை நான்குவிதமாகப் பாகுபடுத்தி விளக்கலாம். அவை (a) வாழ்க்கையோடு தொடர்புறுத்தல், (b) பிற பாடங்களோடு தொடர்புறுத்தல், (c) ஒரு பாடத்தின் (Subject) உட்பிரிவுகளோடு தொடர்புறுத்தல், (d) ஒரு பாட அலகின் (Lesson unit) கிளைகளோடு தொடர்புறுத்தல் என்பனவாம். உதாரணமாக, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்னும் உண்மையைக் கற்பனைக் கதைகள் மூலம் எடுத்துக் காட்டுவதை விட, ஒற்றுமையாய் வாழும் கூட்டுக் குடும்பங்களையும் அவ்வாறின்றிப் பிரிந்து வாழும் குடும்பங்களையும் கொண்டு இன்னும் நன்றாக விளக்கலாம். பூகோளப் பாடத்தைச் சேர்ந்த வெப்ப நிலைகளின்

ஏற்றத் தாழ்வுகளை கணிதப் பாடத்தைச் சேர்ந்த வரைப் பட விளக்கம் மூலம் நன்கு எடுத்துக் காட்டலாம். சமூகப் பாடத்தின் ஒரு பிரிவில் வரும் பூகோள அமைப்பை ஒட்டி மக்களின் வாழ்க்கை முறையைத் தொடர்புறுத்திக் கற்பிக்கலாம். கணிதப் பாடத்தில் பின்னம் என்ற பிரிவின் கீழ் அதன் உட் பிரிவுகளான சாதாரணப் பின்னம், தசம பின்னம், சதவீதம், விகிதம் என்பனவற்றை ஒன்றோடொன்று இணைத்துப் போதிக்கலாம்.

வேறொரு அடிப்படையிலும் தொடர்புறு போதனையைப் பிரித்து அறியலாம். அதன்படி தொடர்புறுத்தல் (1) ஒரு முனை இணைப்பு (Unilateral), (2) பல்முனை இணைப்பு (Multi-lateral), (3) ஒன்றிய (Co-lateral) இணைப்பு என்று மூன்று வகைப்படும். உதாரணமாக, மூலாதாரக் கணிதக் கிரியைகள் (Fundamental operations in arithmetic) என்ற தலைப்பின் கீழ் கழித்தலை மட்டும் புலனீட்டுச் செயல் வடிவத்தில் கற்றறிவது ஒருமுனைத் தொடர்புறுத்தலாகும். நான்கு கிரியைகளையும் தொழில் மையத்தின் மூலம் ஒரே சமயத்தில் அறிவது பல்முனைத் தொடர்பாகும். வடிவ கணித அமைப்புக்களை(Geometrical Constructions)ஒட்டி, சித்திரக்கலையின் கூறுகளான சமச்சீர், அளவு வீதம், அழகு (Symmetry, Proportional representation and Beauty) முதலியவற்றையும் சுவைத்தறிதல் ஒன்றிய இணைப்பாகும்.

கோட்பாட்டளவில் தொடர்புறுத்தலைப் பற்றிப் பல வாறுகப் பிரித்து அறியலாம். ஆனால் செயல் படுத்தும் போது பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டிவரும். எம் முறைத் தொடர்புறுத்தலைக் கையாள்வது, எப்படிக் கையாள் வது, மாணவரிடம் எதிர்பார்க்கப்படும் முன்னறிவும் திறமை

யும் யாவை, எத்தகைய சிக்கல்கள் போதனையின்போது எழலாம், அவற்றை எவ்வாறு சமாளிப்பது போன்ற வினுக்களுக்கு ஆசிரியர் முன்கூட்டியே விடைகளை ஒருவாறு ஊகித்து வைத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய முன் தயாரிப்பிருந்துங்கூட வகுப்பறையில் போதனையின்போது முற்றிலும் மாறுபட்ட நிலைகள் எழும்பி ஆசிரியரை மலைக்க வைக்கலாம். ஆயினும் பயனுறு கற்றலுக்குத் தொடர்புறு போதனை இன்றியமையாதது. அதன் மூலமே மிகக் குறைந்த ஆற்றலையும் நேரத்தையும் செலவிட்டுப் பல விஷயங்களையும் பாடங்களையும் பற்றிய ஒருங்கமைக்கப்பட்ட அறிவுத் திரட்சியை (Integrated body of knowledge) மாணவர்க்களிக்கமுடியும் என்ற உண்மை எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இயற்கையான இணைப்புப் போதனைக்கு இன்றியமையாத துணைக் கூறுகள் (1) ஆசிரியரின் வளமிக்க ஆற்றல் (Resourcefulness), (2) பரிசோதித்துப் பலனறியும் மனப்பான்மை (Experimental attitude), (3) தொடர்புறு போதனையின் நற்பயன்களையும் தீய விளைவுகளையும் அவ்வப்போது முறையாகப் பதிவு செய்து ஆராய்தல் (Recording and studying the good and bad effects), (5) ஆசிரியர்கள் அடிக்கடி கூட்டு ஆலோசனை செய்து தொடர்புறுத்தும் முறையின் நுணுக்கங்களைச் சீர்திருத்தல் (Improving the technique of correlation) என்பனவாகும்.

தொடர்புறு போதனையை நடைமுறையில் எவ்வாறு மேற்கொள்ளலாமென்று கவனிக்கு முன், போலித் தொடர்புறுத்தலை ஒரு எடுத்துக்காட்டு மூலம் விளக்கலாம். பனித் துளிகளைத் பற்றிய பாடம் நடத்திய ஆசிரியர் முதலில் மாணவர்களைத் தோட்டத்திற்கழைத்துச் சென்று படிந்

திருந்த பனித்துளிகளைப் பார்க்கச் செய்தார் (இயற்கையோடு தொடர்புறுத்தல்). அவற்றைச் சித்திரமாக வரையச் செய்தார் (சித்திரக் கலையோடு தொடர்புறுத்தல்). பின்பு அவற்றைப் பற்றிப் பாடவும் கதைகள் கேட்கவும் செய்தார். இத்தகைய பாடபோதனையில் முதல் நடவடிக்கை முற்றிலும் பொருத்தமானதே. ஆனால் பின்படிகள் உண்மையின் தொடர்பில்லாத செயற்கைப்படிகள் தவிர வேறொன்றுமில்லை.

இதற்குப் பதிலாக, இயற்கையான தொடர்புறுத்தலை இரு உதாரணங்களால் ஒருவாறு விளக்கலாம். அவற்றில் ஒன்று சாதாரணக் கல்வி முறையையும் மற்றது ஆதாரக் கல்வி முறையையும் சார்ந்தவையாகும்.

உதாரணம் I தேனீக்களைப் பற்றிய பாடம் நடத்த வேண்டுமானால் பள்ளிச் சுற்றுப்புறத்திலோ அதற்கருகாமையிலோ தேன் சொரியும் மலர்ச் செடிகள் பூத்துக்குலுங்கும் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் தேன்கூடொன்று அமைக்கப்பட்டு வருவதையும் மாணவர்கள் உற்று நோக்கும் வாய்ப்பிருந்தால் மிகவும் நல்லது. இக்காலத்தில் தேனீ வளர்த்தல் (Bee-Keeping) பல பள்ளிகளில் குடிசைக் கைத்தொழிலாகவோ (Cottage industry) விருப்பச் செயலாகவோ (Hobby) மேற்கொள்ளப்படுவதால் மேற்குறிப்பிட்ட வாய்ப்புக்களை எளிதில் அளிக்கலாம்.

தொலைவிலிருந்துகொண்டு தேனீக்கள் மலர்களை அண்டும் விதத்தையும் அவற்றின் மேல் அமர்ந்து தேனைத் திரட்டும் விதத்தையும் உற்று நோக்குதல், அவை தேன்பெட்டிக்குள் சென்று திரும்புவதைக் கவனித்தல் போன்ற செயல்கள் இயற்கையோடு தொடர்புறுத்தலைச் சாரும். பள்ளிக்கூடப் பொருட்காட்சியிலிருந்து (School Museum) தேன்கூட்டைக்

கொணர்ந்து அதன் அமைப்பை உற்றுநோக்குவதும் பூதக் கண்ணாடி மூலம் தேனீயின் உடலமைப்பை ஆராய்ந்தறிவதும் இயற்கைப் பாடபோதனையின் பரிசோதனைப் பகுதியாகும் (Experimental Part). பிறகு தேனீக்களைப் பற்றி உரையாடுதல், ஆசிரியர் அரிய தகவல்களைக் கூறுதல், பாட நூலிலிருந்து உரிய பகுதியை உரக்கவாசித்தல், அறிந்தவற்றை விவரித்தோ சுருக்கமாகவோ எழுதுதல் போன்ற செயல்கள் பெற்ற அறிவை நிலைக்க வைக்கும் வெளியீட்டுச் செயல்கள் (Oral and written expression work) ஆகும். கடைசியில் தேனீக்களின் வண்ண ஓவியங்களை உற்று நோக்கி அவற்றைப்போல் வரையும் பயிற்சி ( Expression work through imitative drawing) அளிக்கலாம்.

உதாரணம் II தக்ளி அல்லது கைராட்டையில் நூற்றல்(தொழில்), நூற்ற நூலைவீசணத்தில்எண்ணிக்கொண்டே சுற்றுதலும் சுற்றுக்களின்மொத்த நீளத்தைக்கணக்கிடுதலும் (எண் கணிதம்), பருத்தி விளையும் பிரதேசங்களைப் பற்றியும் பஞ்சாலைத் தொழிலைப் பற்றியும் குறிப்புக்கள் தருதல் (பூகோளம்), நம் நாட்டில் முற்காலத்தில் நூற்றலும் நெய்தலும் பேணி வளர்க்கப்பட்ட வரலாறும் நசுக்கப்பட்டு மறைந்த விதமும் (வரலாறு) பற்றிய விவரங்களைப்பாட நூலிலிருந்தும் மேற்கோள் நூல்களிலிருந்தும் படித்தல் போன்ற படிகளைக் கையாண்டு செயலோடு ஒன்றிய அறிவை (Co-lateral Correlation) மாணவர் பெற வழி வகை செய்யலாம்.

சுமார் கால் நூற்றாண்டுக்கு முன் வரை கல்லூரிகளிற் போல் நம் உயர்தரப்பள்ளிகளிலும் குறிப்பிட்ட பாடங்களில் தனிப்புலமை (Specialisation) வற்புறுத்தப்பட்டு வந்தது.

உதாரணமாக சிறப்புக்கணிதம் (Special mathematics), பூதவியல் (Physics), இரசாயனம் (Chemistry), தாவர இயல் (Botany) போன்ற விருப்பப் பாடங்கள் (Optional Subjects) போதிக்கப்பட்டு வந்தன. அதன் விளைவாகத் தனித் துறைப் புலவர்களான (Specialists) ஆசிரியர்களை நியமிப்பது அவசியமாயிருந்ததோடு அல்லாமல் அறிவுத் தொகுப்பின் பகுதிகளாகப் பாடங்களைக் கற்பிப்பதற்குப் பதிலாக பாடங்களுக்கு முக்கியம் அளிக்கப்பட்டது. ஆகவே சிற்சில மாணவர்களே குறிப்பிட்ட பாடங்களில் சற்று ஆழ்ந்த அறிவு பெற வழிவகை செய்யப்பட்டதே தவிர மாணவர்கள் எல்லோரும் பெறவேண்டியதென்று தற்காலத்தில் கருதப்படும் மிகக் குறைந்த, ஆனால் முக்கியமான (Minimum essential) அறிவுபுகட்ட முடியாமற் போயிற்று. அத்துடன் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் அளவுக்கதிகமான தனிப் புலமைப் பயிற்சியும் (Over-specialisation) மற்றவற்றில் குறைவான தேர்ச்சித் தரமும் (low standard of attainment) ஏற்பட்டன.

இவையெல்லாம் மக்களாட்சிக் காலத்திற்குப் புறம்பானவை. உயர்தரப்பள்ளிக் கல்விக் கோட்பாட்டிற்குப் புறம்பானவையுங்கூட. ஆகவே பல பாடங்களின் அடிப்படைக் கூறுகளைப் பொறுக்கித் தொகுத்துக் கல்வியறிவு புகட்டல் இக்காலக் கொள்கையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதன் வெற்றித் தரத்திற்கு உறுதுணைதான் இணைப்புப்போதனையாகும்.

இவ்வத்தியாயத் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள நான்குவிதத் தொடர்புறு போதனைக்கு வாழ்க்கை, பொருளறிவுப் பாடங்கள் (Subject), ஒரு பொருளறிவுப் பாடத்தின் கிளைகள், ஒரு போதனை அலகின் (Teaching-unit) பகுதிகள் ஆகியவை மையமாக அமைகின்றன. இம்மையங்களைத்தான்

நாம் சாதாரணமாகக் கையாள்கிறோம். ஆனல் ஆதாரக் கல்வி முறையைப் பின்பற்றும் பள்ளிகளில் தொழில் (craft) முதல் தர மையமாகவும் இயற்கைச்சூழ்நிலை, சமுகச்சூழ்நிலை ஆகியவை இரண்டாந்தர மையங்களாகவும் அமைகின்றன. ஊன்றிப் பார்த்தால் இம்மூன்று மையங்களும் ஒன்றுக் கொன்று உள்ளடங்கியவையே என்பது புலனகும்.

எம்முறைக் கல்வி போதித்தாலும் தொடர்புறுத்தல் அதன் உயிர் மையமாயிருக்க வேண்டும். அதன் பயனக, பல பொருளறிவுப் பாடங்களும் ஒரு பாடத்தின் தொடர்புறு பகுதிகளும் இயற்கையாக இணைக்கப்பட்டு மாணவர் அறிவுக் களஞ்சியத்தை நிரப்பி வரவேண்டும். மாணவன் எவ் விஷயத்தையும் முழுமையாகக் கற்றறிவதையே பெரிதும் விரும்புகிருன் என்ற உளநூல் கருத்து இதற்கு அடிப்படையாயமைகிறது.

பொதுக்கொள்கையளவில் எல்லாப் பொருளறிவுப்பாடங்களையும் ஒன்றேடொன்று தொடர்புறுத்திக் கற்பிக்க முடியுமெனினும் நடைமுறையில் அத்தொடர்புறுத்தல் இயற்கையாயிருக்க வேண்டுமெனின் தேவைக்கேற்றவாறு சிற்சில பாடங்களைத்தான் அவ்வாறு கையாளலாம். அத்தகைய பாடச் சேர்க்கைகளிற் சில (1) பூதவியல், நிலவியல், கணிதம் (2) வரலாறு, நிலவியல், ஆட்சி நூல் (3) பூதவியல், இரசாயனம், கணிதம் (4) மரவேலை, சித்திரம், கணிதம் என்பனவாகும். உதாரணமாக, முதற் சேர்க்கைக்கிணங்க, காற்றின் இயற்சூழ்நிலை, அதன் வெப்பதட்ப மாறுதல்கள், அழுத்தமும் அதைக்கொண்டு உயரங்களைக் கணக்கிடுதலும் போன்ற பகுதிகளைத் தொடர்புறுத்திக் கற்பிக்கலாம். அவ் வாறே இரண்டாவது சேர்க்கைக்கிணங்க, ஒரு குறிப்பிட்ட

மக்கட் பிரிவினரின் நாட்டமைப்பு, அவர்களுடைய வாழ்க்கைக் கோலம், (Pattern of life), ஆட்சி முறை முதலியவற்றை இணைத்துப் போதிக்கலாம். நான்காம் சேர்க்கையையொட்டி, செய்ய விரும்பும் திட்டப் பொருள்களின் அளவுகள், அவற்றைப் பிரதிபின்ன எடுத்துக் காட்டு மூலம் சித்திரம் வரைந்து அறிதல், அவ்வாறு வரையப்பட்டுள்ள சித்திரங்களைப் புரிந்துகொண்டு அத்தகைய பொருள்களைச் செதுக்கியெடுத்தல் முதலியவற்றில் இணைக்கப்பட்ட பயிற்சியளிக்கலாம்.

இனி சிறப்பாக, ஆதாரக் கல்வியில் தொடர்புறு போதனைக்கெவ்வாறு வழிவகை செய்யலாமென்பதைக் கவனிக்கலாம். இதில் கல்வி புகட்டலின் முழுமையும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலை மையமாகக்கொண்டு அமைகிறது. அத்தொழிலைத் தேர்ந்தெடுத்தல் பள்ளியமைந்துள்ள ஊரின் சூழ்நிலை, மக்களின் தேவைகள், அத்தொழில் வளமுறுவதற்குரிய வசதிகள் முதலியவற்றைப் பொறுத்ததாகும். அத்தொழிலை மையமாகக் கொண்டு கற்பிக்கக்கூடிய பொருளறிவுப் பாடப் பகுதிகள் மாணவர் படிக்கும் வகுப்புகள் (Grades), அவர்களுடைய முன்னறிவும் தன்வயப்படுத்தும் ஆற்றலும் (Capacity to assimilate), ஆசிரியரின் முன்ஆயத்தமும் ஆற்றல் வளமும் (Preparation and Resourcefulness) போன்றனவற்றைப் பொறுத்து அமையும்.

செயலளவில் ஆதாரக் கல்வியில் இணைப்புப் போதனையைக் கடைப்பிடிக்கும்போது சில கோட்பாடுகளைக் கருத்திற்கொள்ளுதல் மிகவும் அவசியம். அவை பின்வருமாறு:

(1) பாடப் பொருளையும் அனுபவங்களையும் தொடர்புறுத்தல்.

(2) அறிவுப் பகுதி, கைத்திறன், மனவெழுச்சி ஆகிய மூன்றையும் சம்பந்தப்படுத்தல்.

(3) கற்பித்தல், கற்றல், வாழ்தலுக்கு ஒருங்கே பயன்படுமாறு வேலையலகுகளைத் தயாரித்தல்.

(4) தனி, குழு செயல் திட்டங்களை மேற்கொள்ள ஊக்கமளித்தல்.

(5) ஆக்கத்திறன் வெளியீட்டிற்கு வாய்ப்பளித்தல்.

(6) சமூகப் பாங்கில் கல்வி புகட்டல்.

மேற்கண்ட கோட்பாடுகளுக்கிணங்க இணைப்புப் போதனையை மேற்கொள்ளும்போது மரபுக் கல்வி முறையில் (Traditional) பாடங்களுக்கும் பாடப்பிரிவுகளுக்குமிடையேயுள்ள தொடர்புத்தன்மை (Continuity) யை ஆதாரக் கல்வி முறை போதனையில் பெற இயலாது. ஏனென்றால் இதில் செயலம்சமே மேலோங்கியிருக்கும். ஆனால் தேசிய சனநாயக அடிப்படையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் (கட்டாய) ஆதாரக்கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துவதில் தொழிலின் மதிப்பு (Dignity of labour), தற்போதுமை (Self-sufficiency), பொது வாழ்க்கைத் தரங்கள் (Normal living standards) ஆகியவற்றிற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதென்பதை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். I—VII படிகளில் எல்லோரும் கற்கவேண்டிய மிகக் குறைந்த கூறுகளுள்ள கல்வியையே ஆதாரக் கல்வித் திட்டம் குறிப்பிடுகிறதென்பதையும் போதனையின் தொடர்புத் தன்மையைச் சீர்ப்படுத்தும் முறையில் உகந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் உரிமையும் சுதந்திரமும் ஆசிரியருக்கு அளிக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் மறக்கலாகாது.

இனி தொழில் மைய போதனையை எவ்வாறு நடைமுறையிற்கையாளலாமென்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

1. தாய்மொழி போதனை: மாணவர்கள் தாம் செய்யும் பல்வேறு தொழிற் பகுதிகளைப் பற்றி உரையாடலாம். நூல் நூற்றல் தொழிலை எடுத்துக்கொண்டால் மணையில் அரைத்துப் பஞ்சையும் கொட்டையையும் பிரித்தல், மணைகளின் வகைகள், வில்லடித்துப் பட்டைபோடுதல், சாதாரண ராட்டையும், அம்பர் ராட்டையும், இவற்றின் அமைப்பு, நூற்றலின் நுணுக்கங்கள், நூலின் தரமறிதல் முதலியவற்றைப் பற்றி மாணவர்கள் தாராளமாக உரையாடவும் ஆசிரியர் விளக்கங்கூறவும் வழி செய்யலாம். இத்துடன் பருத்தி பயிர் செய்தலை ஒட்டிய நிலவியல், அறிவியல் அம்சங்களையும் எடுத்துக் கூறலாம். இவ்வகையில் போதனையில் புகுத்தக் கூடிய அறிவுப் பொருளின் தரமும் நுணுக்கமும் மாணவர்களின் தேர்ச்சி, திறமை, படிக்கும் வகுப்பு ஆகியவற்றிற்குத் தக்கவாறு அமையும்.

பிறகு, வாய்மொழியாக உரையாடியும் ஆசிரியர் வாயிலாகக் கேட்டும் அறிந்தவற்றை எழுதுவதிலும் பயிற்சியளிக்கலாம். இவ்விருவழிப்பயிற்சி மூலம் இவ்வடிப்படைத் தொழிலைப் பற்றிய பொருளறிவும் மொழியறிவும் புலனீடாகக் கிட்டும். சிறப்புச் சொற்களும் சொற்றொடர்களும் நன்கு விளக்கப்பட்ட பிறகு அவற்றை ஒரு பிரத்தியேகமான குறிப்புப் புத்தகத்தில் (Word and Phrase Note-book) எழுதி வைத்துக்கொண்டுவருவதன் மூலம் மாணவரின் சொற்களஞ்சியம் (Vocabulary) பெருகிக்கொண்டே வரும்.

பரவலாகப் படிக்கும் பழக்கத்தை (Extensive reading habit) ஏற்படுத்தும் வகையில் நூற்றல் தொழிலை யொட்டிய. பல்வேறு பகுதிகளைப் பற்றிய நூல்களை மாண வர்களுக்குக் கொடுக்கலாம் இவை சாதாரண விஷயங்களை உட்கொண்டவையாகவும் நுணுக்கங்களை விரிவாக்குவன வாகவும் இருக்கவேண்டும். அதாவது, குறைந்த அளவு தேவைகளை நிறைவு செய்வனவாகவும் ஆதாரமேற்கோள் நூல்களாகவும் (Reference-books) இருக்கலாம். நூற் றலைப் பற்றிய சிறுகட்டுரைகள், பாட்டுக்கள், சிறுகதைகள் முதலியவற்றை எழுதிப் பள்ளிக்கூட சஞ்சிகையில் (School Magazine) வெளியிட ஊக்குவிக்கலாம்.

2. சமூகப்பாடம்: நூற்றல் தொழிலைச் சார்ந்த உள் ளூர் வரலாறும், பொதுவரலாறும் அதன் நற்காலமும் அழி வும், அதை மகாத்மா காந்தி மறுபடியும் உயிர்ப்பித்த வர லாறு, விடுதலைப் புரட்சியில் அது ஆற்றிய பணி ஆகியவற் றையும் திருவிழாக்கள், சமூகக் கொண்டாட்டங்கள், பருவங் களும் பருவப் பயிர்த் தொழிலும், நிலப்படப்பயிற்சி (Map-work) முதலியவற்றைக் கற்பிக்கலாம்.

3. பொது அறிவியல பாடம்: பருத்திப் பயிர்த் தொழி லுக்கு நன்மை தீமை பயக்கும் ஏதுக்கள், மண்ணின் வகைகள், நூலின் நேர்த்தியை மேம்பாடடையச் செய்யும் வகையில் உயர்ந்த ரகப் பருத்திவகைகளைப் பயிர் செய்யும் முறைகள் ஆகியவற்றுடன் உள்நாட்டு, அயல்நாட்டு உயிர்ப் பிராணிகளைப் பற்றியும் வான நூலின் அடிப்படைக் கூறு களைப் பற்றியும் கற்பிக்கலாம்.

4. கணித பாடம்: நூற்றலையொட்டி, நான்கு அடிப் படைச் செயல்களை (Four fundamental operations) மேற்

கொள்ளல், நீட்டலளவை, நிறுத்தலளவை, நாணய சம்பந்தமான கணக்கீடு, இலாப நஷ்டம், சராசரி, சதவீதம், ஏற்றுமதி இறக்குமதி முதலிய கணித பாடப் பிரிவுகளைத் தொடர்புறுத்திக் கற்பிக்கலாம். கணக்கு வைத்துக்கொள்வதில் நேரிடைப் பயிற்சியளிக்கலாம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 1/20066
MADRAS

# அத்தியாயம் V

## திறன்கள், உண்மைகள், மனப்பான்மைகளில் பயிற்சியளித்தல்

முன்னாளில் பள்ளிக்கூடம் என்பது அறிவையும் தகவல்களையும் எடுத்து வழங்கும் இடமாகக் கருதப்பட்டது. அறிவுசார் பகுதி மிகப் பெரிதும் வற்புறுத்தப்பட்டபடியால் கல்வியின் மற்றப் பகுதிகள் கவனம் பெறவில்லை. அதன் காரணமாகப் புகட்டப்பட்ட கல்வி ஒருதலைச் சார்பாயமைந்து மாணவர்களின் பல்திறன்களை வெளிக் கொணர்ந்து ஒளிரச் செய்ய இயலாமற் போய்விட்டது மாணவரின் திறன்களையும் சுவைகளையும் அக்கறையோடு பயிற்றுவித்தல் கீழ்த்தரக்கல்வியாகக் கருதப்பட்டது.

ஆனால் இக்காலக் கல்வியின் சிறப்பு இயல்புகள் விரிவானவை. குறுகிய ஒருதலைச் சார்பான அறிவுசார் பகுதியுடன் வேறு பகுதிகளும் கவனம் பெறுகின்றன. உள்ளச் செயலின் மூன்று கூறுகளான அறிதல், உணர்தல், செயலாற்றல் (Knowing, feeling and willing) என்பவற்றுக்கு உரிய இடம் அளிக்கப்படுகின்றது. அறிவு பெறுதல்மட்டும் போதாது. அதைச் செயற்படுத்தும் திறமையும் இருக்க வேண்டும். எல்லா மாணவர்க்கும் ஒரேவிதக் கல்வியளிப்பதற்கு மாறாக, அவர்களுடைய மனவெழுச்சிகளையும் போக்குகளையும் ஒட்டிப் பல்கிளைக்கல்வி(diversified) புகட்ட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கை இப்பொழுது செயற்படுத்தப்படுகிறது. அதன்படி படித்தல், எழுதுதல், எண் கணக்கிடல் என்ற பழைய கூறுகளுக்கு ஈடாக அறிவு (மூளையைச் சார்ந்தது), உணர்ச்சி

(இருதயத்தைச் சார்ந்தது), முயற்சி (கைகளைச் சார்ந்தது) என்ற புதிய கூறுகள் கல்விப்போக்கை வரையறுக்கின்றன. இதையே, 3 Rகளுக்கு (Reading, Writing and Arithmetic)ப் பதிலாக 3 Hகள் (Head, Heart and Hand) கவனம் பெறுவதாகக் கூறுகிறார்கள்.

இத்தகைய மூவ்வகைப் பயிற்சியும் செயலினடிப்படையில் அளிக்கப்பட வேண்டும். அதனால் கிட்டும் பலனை வெளிக்காட்டக்கூடிய பல்வகை வாய்ப்புகளை மாணவர்க்கு அளிக்க வேண்டும். வெளிப்படையாக, விரும்பத் தகாத சில இயல்பூக்கங்களை நசுக்க முற்படாமல் அவற்றை நல்ல பாதைகளில் செலுத்தித் தூய்மைப்படுத்த வேண்டும் (Sublimation). நூல் அறிவைப் போலவே இசை, சித்திரம் முதலிய நுண்கலைப் பாடங்கள், கைத்தொழில்கள், உடற்பயிற்சி முதலியனவும் சமமதிப்புடையவை என்ற உணர்ச்சி மாணவர் உள்ளங்களில் நிலவ வேண்டும்.

ஆகவே புதுக் கல்வி முறையில் பின் வரும் மூன்று வகைப் பாடப் போதனைக்கு வழிவகை செய்தல் அவசியம்: (1) பொருளறிவுப் பாடம், (2) திறன்பெறுபாடம், (3) மனப்பான்மைகளிற் பயிற்சியளிக்கும் பாடம்,

வரலாறு, தரையியல் போன்றவற்றின் மூலம் பொருளறிவையும் படித்தல், எழுதுதல், மரவேலை, சித்திரம் போன்றவற்றின் மூலம் திறன்களையும் செய்யுள் நலமறிதல், இசையைச்சுவைத்தல், அரங்க நடிப்பின் மூலம் மனப்பான்மைகளையும் பயிற்றுவிக்கலாம்.

நல்ல போதனைக்கடையாளம் மாணவர்களைச் சிந்திக்கச் செய்வதாகும். எப்பாடத்தின் வெற்றியையும் மூன்று

சோதனைகளால் அறியலாம். அவை (1) பாடப் பொருளைப்பற்றிய ஆசிரியரின் ஆயத்தம், (2) வகுப்பிற் கேற்றவாறு அதைக் கையாளுதல், (3) அதைக் கற்றுக் கொள்வதில் மாணவரின் தன்முயற்சி.

இனி இம் மூவகைப் பாடங்களைப்பற்றி விரிவாக ஆராய்வோம்.

## (i) பொருளறிவுப் பாடம்

மாணவர்களுக்கு அறிவு ஊட்டும் முறை பொதுவாக ஐந்து படிகளைக் கொண்டதாகும். இவற்றை முதன் முதலாக எடுத்துக் காட்டியவரின் பெயரைத் தாங்கி இவை ஹெர்பார்ட்டின் ஐந்து படிகள் என்று குறிப்பிடப்படுகின்றன. இவை (1) ஆயத்தம் அல்லது முகவுரை (Preparation or Introduction), (2) எடுத்துக்கூறல் (Presentation), (3) ஒப்பிடல் அல்லது தொடர்புறுத்தல் (Comparison or Association), (4) பொதுமை பிரித்தறிதல் (Generalisation and Abstraction), (5, செயற்படுத்தல் (Application) என்பனவாம்.

### (1) ஆயத்தம் அல்லது முகவுரை

ஒரு புதிய பாடத்தைத் தொடங்கினாலும் அல்லது முன் பாடத்தைத் தொடர்ந்து நடத்துவதானாலும் ஆயத்தம் இன்றியமையாதது. உளநூல் கருத்துப்படி மாணவர்களால் ஏற்கனவே அறியப்பட்ட பொருள்கள் உள்ளத்தில்இடம் பெற்றுள்ளன. அவை பலவகைப்பட்டனவாயும் பல பாடங்களைச் சார்ந்தவையாயும் இருக்கும். அத்தகைய அறிவுத் தொகுப்புக்கு முன்னறிவுத்திரட்சி(Apperceptive Mass)என்று பெயர். ஆயத்தப்படியில் நாம் செய்யவேண்டியதெல்லாம் தகுந்த

முறைகளைக் கையாண்டு, நடப்புப் பாடத்தோடு சம்பந்தப் பட்ட அறிவுப் பொருள்களை நினைவு மட்டத்திற்கு (Conscious level) க்கொணர்ந்து அவற்றேடு புதிய கருத்துக்களை இணைத்துக் கற்பித்தலாகும். இக்கட்டத்தில் ஆசிரியர் நடத்தப் போகும் பாடத்தைப் பற்றிய திட்டவட்டமான நோக்கத்தை மாணவர்கள் புரிந்துகொள்ளுமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஆயத்த நிலையில் புதியன எவற்றையும் புகுத்தக்கூடாது. தக்க கேள்விகள் சிலவற்றின் மூலம் முன்னறிவுத் திரட்சி யின் தேவையான பகுதியை மேற்கொணர வேண்டும். இக்கேள்விகள் முன்பாடங்களைச் சார்ந்தோ மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைச் சார்ந்தோ இருக்கலாம். அப் பொழுதுதான் நடப்புப் பாடத்தில் அவர்கள் ஊக்கமும் அக்கறையும் கொள்வர். அதன் மூலம் கற்பதன் அவசி யத்தையும் உணர்வர்.

ஆனல் இம் முகவுரை மிகவும் நீண்டதாகவோ (too long) அல்லது குறியற்றுச் சுற்றி வளைப்பதாகவோ (beating about the bush) இருக்கக்கூடாது. சுருக்கமான முகவுரை, தக்க பிரச்சினையைக் கிளப்பி அதைப்பற்றிச் சிந் திக்கச் செய்தல், கவனத்தை ஈர்க்கக்கூடிய தலைப்பைக் கரும் பலகையில் எழுதுதல், முன் பாடத்தைக் குறிப்புணர்த்தல் போன்ற நடைமுறைகளைக் கையாண்டு மாணவர்களை நன்கு ஆயத்தப்படுத்த இயலும்.

### (2) எடுத்துக்கூறல்

பாட போதனையின் இப்பகுதியில் மாணவர் களின் சிந்தனையைத் திறம்படத் தூண்டுவதோடு

அவர்கள் சுறுசுறுப்பாயிருக்குமாறும் கவனித்துக்கொள்ள வேண்டும். சொல்லிக் கொடுக்கும் ஒவ்வொரு புதிய விஷயமும் அவர்கள் புரிந்துகொள்ளக்கூடியதாயிருத்தல் அவசியம். பாட போதனை மாணவர்களின் கூட்டுழைப்போடு படிப்படியாக உருவாகவேண்டும். கூடியவரையில் மாணவரிடமிருந்து வருவித்தலும் (Eliciting) குறைந்தவரை எடுத்துக்கூறுதலும் ஆசிரியர் பின்பற்றும் முறைகளாயிருக்கவேண்டும். பொருளறிவை அப்படியே வழங்கலாம் அல்லது குறிப்பால் உணர்த்தலாம். இவற்றை எவ்வெப்போது கையாள்வதென்பதை ஆசிரியரே நிலைமைகளுக்கேற்பத் தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

எடுத்துக்கூறலில் பின்பற்றத்தக்க கொள்கைகள் (1) பொருள் தேர்வும் பாகுபாடும், (2) தொடர்புறு தெளிவு, (3) தன்வயப்படுத்தலும் ஒருமைப்பாடும் என்பனவாகும்.

### 1. பொருள் தேர்வும் பாகுபாடும்

கற்பிக்கவேண்டிய பொருளை ஆசிரியர் மாணவர்களின் முன்னறிவு, அறிவாற்றல், தேவைகளுக்குத் தக்கவாறு தேர்ந்தெடுக்க வேண்டும். அதை எவ்வாறு எடுத்துக் கூற வேண்டும் என்பதை நிதானிக்க வேண்டும். அதிலும் எவ்வளவு எவ்வெவற்றைத் தாம் கூறவேண்டுமென்றும் முன் ஆயத்தமாகத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கற்றலில் ஆசிரியரும் மாணவரும் பயனுறப் பங்கெடுத்துக்கொள்ள முடியும்.

### 2. தொடர்புறு தெளிவு

தொடர்பற்ற பலவிஷயங்களைக் கூறுவதற்குப் பதிலாக, தொடர்புறு சிலவற்றைக் கூறுதல் எவ்வகையிலும் சிறந்தது.

அடுத்த விஷயத்தை எடுத்துக்கொள்ளுமுன் ஏற்கனவே கற்பிக்கப்பட்டவை நன்கு புரிந்துகொள்ளப்பட்டனவா என்று கவனித்துக்கொள்ள வேண்டும். இம் முறையைப் புறக்கணித்துப் பொருள் மிகுதியை மட்டும் கருத்திற் கொண்டு கற்பிக்கும் பாடம் பெரும்பான்மையான மாணவர்களுக்குப் பயனளிக்காது. அவ்வப்போது தக்க கேள்விகள் கேட்பதன் மூலம் தெளிவுறு கற்றல் நிகழ்கிறதா என்று அறிந்துகொள்ள வேண்டும்.

### 3. தன்வயப்படுத்தலும் ஒருமைப்பாடும்

எடுத்துக்கூறும் அறிவுப்பொருள்களைத்தனித்தனியாகவும் அவற்றிற்குப் பொருத்தமான மற்றவற்றோடு சேர்த்தும் கையாளவேண்டும். அவற்றைத் தக்க சூழ்நிலைகளில் பயன் படுத்திப் பொருளுணர்த்த வேண்டும். முடிந்தவரை மாணவர்களைக்கொண்டு அவற்றைத் தக்கவாறு செயற்படுத்தச் செய்யவேண்டும். உதாரணமாக. மொழி போதனையில் ஒரு குறிப்பிட்ட மரபுச் சொற்றொடரை (Idiom)க் கற்பிப்பதாயிருந்தால், பாடத்தில் அது பயன்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையையும் அதன் பொருளையும் தகுந்த முறையில் விளக்கி மாணவர்கள் அதைப் புரிந்துகொண்டதையும் செயற்படுத்தும் திறமையையும் ஒருவாறு சோதித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போது தான் பாடபோதனையின் கடைசிப் படியான செயற்படுத்தலின் போது மாணவரின் சாதனை (achievement) மனநிறைவு அளிப்பதாயிருக்கும்.

### (3) ஒப்பிடல் அல்லது தொடர்புறுத்தல்

சேர்த்தும் பிரித்தும் ஒப்பிட்டுப் பொருளறிவு பெறப் படுகிறது. அறிவு வளர்ச்சி ஒரு மரத்தின் வளர்ச்சிக்கொப்

பானது. அவ்வறிவுத் திரட்சி இயற்கையாகவே பல பகுதிகளாகவும் கிளைகளாகவும் பிரிந்தும் இணைந்தும் இருக்க வேண்டும். பழைய அறிவுடன் புது அனுபவங்களைச் சேர்த்தறியவும் அத்தகைய செயல்களில் மகிழ்ச்சியடையவு முகந்த வாய்ப்புகளை மாணவர்களுக்குக் கொடுத்தளிப்பதுடன் ஆசிரியரின் பணி முடிகிறது. மற்றப்படி ஒப்பிடுதலும் தொடர்புறுத்தலும் மாணவரின் வேலையாகும். முக்கியமான இலக்கண விதிகள், கணித சூத்திரங்கள், அறிவியல் ஊகங்கள் சம்பந்தப்பட்ட அனுமான முறைப் பாடங்களில் இப்படியைத் திறம்படக் கையாளலாம்.

### (4) பொதுமை பிரித்தறிதல்

கற்பிக்கப்படும் விஷயங்களின் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து அறியும் போது சில பொதுக்கருத்துக்கள் மாணவர்களுக்குப் புலப்படும். பெற்ற அறிவை ஒழுங்கு படுத்தி வைத்துக்கொள்ள இத்தகைய பொதுமையறிதல் மிகவும் முக்கியமான படியாகும். குறிப்பிட்ட பொது இலக்கணங்களுள்ள உதாரணங்களை உற்றுப்பார்த்து ஆராய்தல், ஒரு குறிப்பிட்ட அம்சத்தையொட்டி அவற்றிலிருந்து ஒரு விதி காணுதல் போன்ற துறைகளில் ஆசிரியர் வழிகாட்டியாக இருந்து உதவவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் ஊகித்தறிய வேண்டிய விதிகளையும் சூத்திரங்களையும் ஆசிரியர் அப்படியே எடுத்துக் கூறுதல் விரும்பத்தக்கதல்ல.

### (5) செயற்படுத்தல்

எத்தகைய அறிவும் செயற்படுத்த முடியாததாகவோ அல்லது செயற்படுத்தப்படாததாகவோ இருந்தால் அது வெறும் சுமையே. ஆகையால் முதல் நான்கு படிகளில் ஆசிரியர் கவனம் செலுத்துவதுடன் பாடபோதனை முடிந்து

விட்டதாகக் கருதக்கூடாது. உண்மையில் கற்பிக்கப்பட்ட பகுதி மிகக் குறைவாயிருந்தாலும் அதை மாணவர்கள் நன்கு செயற்படுத்தித் தன் வயப்படுத்திக் கொள்ளுதல் அவ்வாறு செயற்படுத்தி அறியப்படாத மிக அதிகமான பாட அறிவைக் காட்டிலும் எவ்வளவோ மேலானதாகும்.

பொதுமை பிரித்தலுக்கும் செயற்படுத்தலுக்கும் முன், நடத்திய பாடவிஷயங்களை மாணவர்களைக்கொண்டு தொகுப்புரைக்கச் செய்தல் (Recapitulation) மிகவும் அவசிய மாகும். அப்பொழுதுதான் மேற்கூறிக்கப்பட்ட கடைசிப் படிகள் இரண்டும் பயனளிக்கும்.

## (ii) திறன் பெறுபாடம்

'திறன்' என்ற சொல் நெகிழ்ந்து பொருள் கொடுக்கக் கூடிய ஒன்றாகும். அதன் மூலம் பற்பல செயல்களைக் குறிப் பிடலாம். நடத்தல், ஓடுதல், எழுதுதல், படித்தல் போன்றன நரம்பு-தசை மண்டலங்களைச் சார்ந்த திறன்களாகும். இவை கிட்டத்தட்ட மெய்யை ஒட்டிய பழக்கங்களாயமைகின்றன (Physical Habits). இவற்றைப்போல் சில அடிப்படையான பேச்சுக்களும் (Speech Patterns) உச்சரித்தலும் எண்ணு தலும் கற்றல் முறையின் அத்திவாரமாகும்.

திறன் பெறு பாடபோதனையின் நோக்கம் மாணவன் ஏதாவது ஒரு விஷயத்தைக் கற்கும்படி செய்வதல்ல. அது பொருளறிவுப்பாட போதனையைச் சாரும். ஆனால் ஏதாவது ஒரு முறையில் கற்றதையொட்டிச் செயலாற்றவும் அதன் மூலம் இன்றியமையாத சில திறன்களைப் பொறியியக்கப் பழக்கங்களாக (Mechanical Habits)ச் செய்துகொள்ளவே திறன் பெறு பாடத்தைப் பயன்படுத்த வேண்டும். பேசுதல்,

படித்தல், எழுதுதல் போன்றவை எளிதான ஆதாரத் திறமைகள். இசைபயிலல், நடனம், உடற்பயிற்சிகள் போன்றவை பல தனித்திறன்களின் ஒருங்கமைப்பாகும். உதாரணமாக, இசைப் பயிற்சியில் பாவத்தோடும் இராகத்தோடு ஒட்டியும் தாளம் பிசகாமலும் அதேசமயத்தில் கேட்போரைக் கவருமாறும் திறமைகள் ஒன்றியமைந்தால் அது சிறக்கும். அதேபோல் படித்தற்பயிற்சியில் (a) பாவம், (b) உச்சரிப்பு, (c) புரிந்துகொண்டு படித்தல், (d) பிறருக்குப் புரியும்படி வாசித்தல் போன்ற பல திறமைகள் உள்ளடங்கியுள்ளன.

சிறுவர்கள் பொருளறிதலைக் காட்டிலும் அறிந்த பொருளைச் செயற்படுத்தித் திறன் பெறுதலில் அதிக அக்கறை காட்டும் இயல்பினராவர். இவ்வுண்மையை மறந்தோ புறக்கணித்தோ நடத்தப்படும் எப்பாட போதனையும் அவர்களுக்கு வெறுப்பையும் சலிப்பையும் அளிக்குமேயல்லாது நீடித்த பலனையளிக்காது. ஆனால் திறன் பெறு நடைமுறைகளுடன் மாணவர்களின் ஆக்க வன்மைக் குகந்த வழிகளையும் எடுத்துக்காட்ட வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் கற்றலில் ஊக்கத்துடனும் மகிழ்ச்சியோடும் ஈடுபடுவர்.

எத்திறனும் எடுத்த எடுப்பிலேயே பழக்கமாயமைந்து விடாது. பல மாணவர் விஷயத்தில் திறன்கள் தட்டுத்தடுமாறிக் கற்றல் (Trial and Error) வாயிலாகவே பெறப்படுகின்றன. வெற்றிபெறும் ஆவல் தூண்டப் பெற்ற எம் மாணவனும் தோல்விகளைக் கண்டு அஞ்சமாட்டான். அதற்கு மாறாக, மேன்மேலும் ஊக்கமுற்று எப்படியாவது வெற்றிபெற முயல்வான். திறன் பெறு பாடபோதனையின் போது பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்வது நலம்:

(a) குறிப்பிட்ட திறன் பெறுதலின் அவசியத்தை மாணவர் கள் நன்குணர்ந்து ஊக்கமுற்று அதன் பலனாக ஏற் படக் கூடிய மகிழ்ச்சியை உணரவேண்டும்

(b) திறன்பெறு செயல் மிகக் கடினமானதாகவோ நீண்ட நேரம் செலவிட வேண்டியதாகவோ இருக்கக் கூடாது.

(c) அச்செயல் ஒருவிதத்தில் தனி மாணவனின் தன்வெளி யீடாகவும் (Self-expression) இருக்க ஊக்கமளிக்க வேண்டும். ஒருகுறிப்பிட்ட கோலத்திலேயே (Pattern) எல்லா மாணவர்களும் அத்திறனைப் பெறவேண்டு மென்று வற்புறுத்தக் கூடாது. உதாரணமாக கணித பாடத்தில் பிரச்சினை தீர்த்தலை (Problem-solving) எடுத்துக்கொண்டால் மாணவர்களின் தனித்திறமை களுக்கேற்றவாறு வாய்மொழியாகவோ எழுதியோ மன தாலோ செய்யவிட்டுவிடவேண்டும். அதே போல் எழுதிச் செய்யும் படிகள் பலவாகவோ அல்லது சிலவா கவோ இருக்கவும் அனுமதிக்கவேண்டும்.

(d) மாணவரிடம் எதிர்பார்க்கும் திறனின் தரம் (Standard) சராசரி நிலையிலுள்ள மாணவர்களும் எட்டக்கூடியதாக இருக்க வேண்டும். எவ்வகையிலும் மாணவர்களின் ஆற்றல் எல்லை மீறிய முயற்சிகளில் வீணாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## திறன்களைப் பயிற்றுவிக்கும் முறை

திறன்களை (a) செய்து காட்டல் (Demonstration) மூலமும் (b) சொல் விளக்கம் (Verbal Explanation) மூல மும் பயிற்றுவிக்கலாம்.

(a) செய்து காட்டல்: ஒருவர் ஆற்றும் நுணுக்கச் செயல்களை உற்று நோக்குவதன் மூலமே சிலர் அவ்வாறே செய்யும் திறன்களைப் பெறவல்லவர்களாயிருக்கிறார்கள். பொதுவாகச் சிறுவர்களுக்குப் பிறரைப்பார்த்து அப்படியே செய்யும் இயல்பூக்கமுண்டு. ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட செயலைப் படிப்படியாக விளக்கி மாணவரின் கவனத்தை ஈர்க்க வேண்டும். அச்செயலின் ஒவ்வொரு நுணுக்கப் பகுதியையும் வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் உற்றுக்கவனிக்கும்படி ஏற்பாடு செய்திருக்க வேண்டும். பிறகு அச்செயலில் மாணவர்கள் தனித்தனியாகவோ குழுக்களாகவோ ஈடுபட வாய்ப்பளிக்க வேண்டும்.

இம்முறையைப் பின்பற்றுவதால் மாணவர் தாமாகச் சிந்தித்துச் செயலாற்றும் வாய்ப்பை இழக்கிறார்கள் என்று கூறலாம். ஆனால் அவர்களாகவே செயற்படுமாறு விட்டுவிடுவதிலும் முக்கியமான குறைபாடு ஒன்றிருக்கிறது. அதுதான் கிடைப்பதற்கதிகமான நேரச் செலவும் குறிப்பற்ற செயல் போக்குகளும் நிகழக் காரணமாயிருத்தலாகும். இவ்விரு கோடிகளுக்கும் மையமாகச் செய்து காட்டல் மூலம் திறன்களைப் பயிற்றுவித்தலே சாலச் சிறந்த முறையாகும்.

(b) சொல் விளக்கம்: திறன்பெறு செயலைப்பற்றித் தெளிவான நுணுக்க அறிவும் சொற்றிறமையுமுள்ள ஆசிரியரால் சொல் விளக்க வாயிலாகவே மாணவர்களைப் பயிற்றுவிக்க இயலும். ஆனால் செய்து காட்ட வசதிக் குறைவோ நேரமின்மையோ தவிர்க்க முடியாத போதுதான் இம்முறையைக் கையாள வேண்டும். அப்பொழுதுகூட, முற்றிலும் சொல்மயமாகவே விளக்கமிருந்துவிடக்கூடாது. தகுந்த பட விளக்கங்களையும் மாதிரிகளையும் உபயோகிக்க

வேண்டும். ஒரு குறிப்பிட்ட செயலைப் பல பகுதிகளாக முன்கூட்டியே பிரித்துக்கொண்டு மாணவர்கள் அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றும் வகையில் "கட்டளை" யிட வேண்டும். அவை ஒவ்வொன்றிற்கும் முன்னால் அவர்களை ஆயத்தப்படுத்திக்கொள்வது மிக அவசியம்.

திறன்பெறு பாடத்தின் படிகள் (a) ஆயத்தம், (b) எடுத்துக்காட்டல், (c) விதிகளை எடுத்துக்கூறல், (d) பயிற்சி, (e) சரிபார்த்துத் திருத்தல், (f) மறுபயிற்சி என்பனவாகும்.

(a) ஆயத்தம் : இப்பாட போதனையில் ஆயத்தப் படி மிகவும் சுருக்கமாயமைய வேண்டும். மாதிரிகளையும் கருவிகளையும் நேரில் காட்டித் தகுந்த குறிப்புகளின் உதவியால் குறிப்பிட்ட செயலை மேற்கொள்வதில் மாணவர்களின் ஆவலைத் தூண்ட வேண்டும். அதுவும் உள் தூண்டலாயிருக்க வேண்டுமேயல்லாது புறக் கட்டளையின் வாயிலாக எழுவதாயிருக்கக்கூடாது.

(b) எடுத்துக்காட்டல் : பயிலவேண்டிய புதிய திறன் கோலத்தை (Skill Pattern) ஆசிரியர் ஒருவாறு குறிப்பிட்டு அதைச்செய்து காட்டி விளக்குவதன் மூலம் மாணவர் உற்றுக் கவனிக்கவும் அதைப் போல் செய்வதில் ஊக்கங் காட்டவும் வழிவகை செய்ய வேண்டும். தாமே எதிர் நோக்குவதன் மூலமும் மாணவர்கள் வாயிலாக எழுவதன் மூலமும் சிக்கலான பகுதிகளையும் உயிர்நாடி போன்ற பகுதிகளையும் ஐயந்திரிபற விளக்க வேண்டும். அவசியமான பகுதிகளை மீண்டும் மீண்டும் செய்து காட்டி விளக்கவும் வேண்டும்.

(c) விதிகளை எடுத்துக்கூறல் : திறன்படு செயலை மேற்கொள்ளும்போது கவனிக்கவேண்டிய விதிகளையும் முன்

னெச்சரிக்கைகளையும் நன்கு மனதிலிருத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அரைகுறையான அல்லது தவருன பழக்கங்கள் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ளலாம். பொருளறிவு உண்மைகளைப் பொறுத்த மட்டில் இவ்விதிகளைச் சற்றும் பிறழாமல் பின்பற்றவேண்டும். சுவையறிதிறன்கள் விஷயத்தில் அவற்றைச் சற்று தளர்த்த வேண்டி வரலாம்.

(d) பயிற்சி: பிறகு மாணவர்கள் அத்திறன்களிற் பயிற்சி பெற முற்படவேண்டும். தேவையான சாதனங்களை முன்கூட்டியே ஒழுங்காக ஏற்பாடு செய்திருக்க வேண்டும். மாணவர்கள் தத்தம் வேகத்தில் முயற்சிக்க விட்டு விடவேண்டும். ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் திறன்பெறு செயல் முடிவுற வேண்டுமென்ற கட்டாயத்தைக் கூடியவரை மேற்கொள்ளாமலிருப்பது நலம். ஆசிரியரின் செய்து காட்டி விளக்குதல் மூலம் போதிய புலக்காட்சி (Perception) அறிவு பெருத மாணவர்கள் மற்றவர்கள் செய்வதை உற்றுப் பார்த்துச் சரியாகச் செய்ய இடமளிக்க வேண்டும். இக்கட்டத்தில் ஆசிரியரின் பணி மாணவரின் வேலையை முழுமையாக மேற்பார்வையிட்டுத் தேவைப்படும் தனி மாணவர்கள் அல்லது மாணவக் குழுக்களுக்கு வழிகாட்டு குறிப்புக்கள் வழங்குவதாயிருக்கவேண்டும்.

(e) சரிபார்த்துத் திருத்தல்: பயிற்சி மூலம் திறன் பெற்ற மாணவர்களை அவ்வப்போது சோதிக்க வேண்டும். சிலரிடம் காணும் குறைபாடுகளை எடுத்துக்காட்டித் திருத்த வேண்டும். கூடியவரை வகுப்பிலுள்ள மாணவர்களனைவரும் குறிப்பிட்ட திறன்களைப் பெறுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மெதுவாகத் திறன் பெறும் ஆற்ற

லுள்ள மாணவர்க்கு வகுப்பு நேரத்திற்கு அப்பாலும் கவன மும் பயிற்சியும் தேவைப்படலாம்.

(f) மறுபயிற்சி: சரிபார்த்துத் திருத்திய மாணவர் கள் மறுபடியும் தாம் பெற்ற திறனறிவைச் செயற்படுத்த வேண்டும். இக்கட்டத்தில் சிந்தனைக் கூறு கூடிய வரை அறவே நீக்கப்பட்டு, வேகமும் திருத்தமும் அதிகமாக வேண்டும். நம் நோக்கம் மாணவர்கள் திறன் பெற்றதற் கறிகுறி மிகக் குறைந்த நேரத்தில் மிக அதிகமான சாதனை யைத் திருத்தமாகவும் அழகுறவும் செய்துகாட்டுமாறு பார்த்துக்கொள்வதாகும்.

## (iii) மனப்பான்மைப் பயிற்சிப் பாடம்

இப்பாடத்தின் நோக்கம் மாணவர்களின் சுவையறியும் ஆற்றலை (Appreciative Power)ப் பேணி வளர்த்தலாகும். இயற்கையிலும் செயற்கையிலும் காணும் அழகுணர்ந்து இன்புறும் வகையில் வழிகாட்டி மாணவர்களைப் பயிற்று விக்க வேண்டும். மனவெழுச்சிகளின் கட்டுப்பாடான சம நிலை (Well-balanced control) மாணவரிடை நிலவுமாறு கவனித்துக்கொள்ளுதல் அவசியம். இப்பாட போதனை மூலம் மாணவர்களைப் பொருளறிவும் திறனும் பெறுமாறு செய்வதில் நாம் எவ்வித கவனமும் செலுத்தத் தேவை யில்லை. அதற்குப் பதிலாக, பெற்றுள்ள அறிவையும் திறனை யும் அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட பாடப்பகுதி அல்லது செய்கையை அழகுணர்ச்சியோடு நுகரும் வகை யில் (aesthetic enjoyment) பயிற்சியளிக்க வேண்டும்.

கலைகளிலும் இலக்கியங்களிலும் அழகுணர் வாய்ப்புக் களதிகமாயுள்ளன. அவற்றைச் சுவைத்து இன்புறும் பயிற்

சியை மாணவர்க்களிப்பதன் மூலம் அவர்களுடைய மனப் பான்மையை நல்வழியில் பயிற்றுவிக்கலாம். அதன் மூலம் அவர்கள் ஓய்வு நேரத்தைப் பயனுறும் வகையிலும் பிறர்க் குத் தீங்கற்ற முறையிலும் கழிக்கும் பண்பை எய்துவர். அத்தகைய மனப்பான்மை ஒவ்வொரு குடிமகனிடமும் நிலவ வேண்டியதவசியமாகும். சித்திரக் கலையில் சமச்சீர், விகிதப் பொருத்தம், உயிர்த்துலக்கம் முதலிய கூறுகளையும் இலக்கி யத் துறையில் சொல் நயம், கருத்து நயம் முதலிய கூறுகளை யும் உற்று நோக்கிச் சுவைத்தின்புறுமாறு மாணவர்களுக் குப் பயிற்சியளிக்கலாம்.

சிறுவர்களுக்கு இசையுடன் கூடிய இன்னொலியசைவு களின் மூலம் (Rhythmic movements) இன்பத்தை நுகரும் பயிற்சியளிக்கலாம். மேல் வகுப்பு மாணவர்களுக்கு அமைதி நிலவும் இயற்கைக் காட்சிகள், சித்திரங்கள், சொல்லோவி யங்கள், கருத்தோவியங்கள், முதலியவற்றின் மூலம் சுவைத்து இன்புறும் பயிற்சியுளிக்கலாம்.

பின் வரும் ஏற்பாடுகளை (devices)க் கையாண்டு சுவை யறிதலை நன்கு பயிற்றுவிக்கலாம் :

(a) ஆசிரியர் முன்மாதிரியாக, தகுந்த விஷயங்களைத் தேர்ந்தெடுத்துச் சுவையறிந்து இன்புறுதலைச் செய்துகாட்ட லாம். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட செய்யுட் பகுதியை, சொல்லுக்குச் சொல் பொருள் கூறுவதை விடுத்து, மாண வர் கேட்டுப் புரிந்துகொள்ளுமாறும் மகிழ்வெய்துமாறும் படித்துக்காட்டலாம். ஆங்காங்கே குறிப்புகள் வழங்குவ தும் பொருத்தமான சைகைகளை (Gestures)க் கையாள் வதும் நம் நோக்கம் ஈடேற உறுதுணையளிக்கவல்லவை யாகும். குரலைத் தகுந்தவாறு உயர்த்துதலும் தாழ்த்து தலும் உயிர்நாடியான பகுதிகளையும் சொற்றொடர்களையும்

திரும்பத்திரும்பப் படித்தலும் வேறு முக்கியமான ஏற்பாடு களாகும்.

(b) கற்றுக்கொடுத்த பகுதியைப் போன்ற படைப்பு வேலைகளில் (Creative work) மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

(c) மனதில் சுவைத்து இன்புற்றவற்றை வாய்மொழியாக எடுத்துச் சொல்ல ஏற்பாடு செய்யலாம். பின்னர், அதையே எழுதச் செய்யலாம்.

மாணவர்களின் புரிதற்றிறனுக்குட்பட்ட விஷயங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் அவர்களுடைய ஆற்றலிலும் செயல்களிலும் ஒத்துணர்வும் (Sympathy) சகிப்புத் தன்மையும் (Tolerance) காட்டி ஊக்குவிப்பதன் மூலமும் திறமையும் உற்சாகமுமுள்ள ஆசிரியர் இப்பாட போதனையைப் பயனுற நடத்தலாம். இதன் படிகளைப் பின்வருமாறு மேற்கொள்ளலாம்:

(a) ஆயத்தம்: மாணவர்களின் உள்ள நிலையை இன்பம் நுகரத்தக்க சூழ்நிலையில் கொணர்ந்து நிறுத்தி ஊக்கமுறச் செய்ய வேண்டும். முகவுரையில், எடுத்துக் கொண்டுள்ள பாடப்பகுதியில் எதிர்நோக்கப்படும் சிக்கல்களை ஆசிரியர் போதனைப் போக்கில் எடுத்து விளக்கவேண்டும். இன்ப நுகர்ச்சியில் கவனம்பெற வேண்டிய கூறுகளை மாணவர்களின் முன்னினைவில் ( Fore-consciousness ) இருக்குமாறு செய்யவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் ஆசிரியர் குறிப்பிட்ட பாடத்தை அளவுக் கதிகமாக அலசிக்காட்டுதல் (Over-analysis) இன்ப நுகர்வில் மாணவர்களின் முழு ஈடுபாட்டைத் தடுத்துவிடும்.

(b) எடுத்துக்காட்டல்: இக்கட்டத்தில் ஆசிரியர் பல வித உபாயங்களைக் கையாளவேண்டும். செய்யுள் வடிவத்திலுள்ள கதையை (Story in Verse)ப் பாடபோதனைக்கெடுத்துக் கொண்டுள்ளதாக வைத்துக்கொள்வோம். ஆசிரியர் சுருக்கமாக அச்செய்யுளின் ஆசிரியரைப் பற்றிய குறிப்புகளையும் கதைக்குப் பின்னணியாக அமைந்துள்ள வரலாற்றையும் (Historical background) எடுத்துக்கூறி, செய்யுளை ஒருமுறை முழுக்க வாசித்துக் காட்டலாம். பிறகு கதைக்கு உயிர்நாடியான பகுதியை எடுத்துக் குறிப்பாகக் கையாளலாம். ஓரிரு சொல்நயங்களின் மூலம் உள்ளங்களில் இன்ப உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அதேபோன்ற பல நயங்கள் அச்செய்யுளில் அடங்கியுள்ளன என்று கூறி அவற்றை மாணவர் ஆழ்ந்த படிப்பின் மூலம் கண்டு அனுபவிக்க வாய்ப்பளிக்கவேண்டும்.

(c) ஆக்கப்பயிற்சி: எடுத்துக்கொண்ட பகுதியை மாணவர்கள் தாமாகப் படித்துப் பிறகு உயிர்த் துடிப்போடு படித்துக்காட்டலாம். தங்களுக்கு முக்கியமாகப்படும் நயங்களை எடுத்துக் கூறலாம். இவ்வாறு பல மாணவர்கள் பங்கெடுத்துக்கொண்ட பிறகு தாமாகவும் பிறர்வாயிலாகவும் கண்டறிந்தவற்றைத் தொகுத்துக் கூறவும் எழுதவும் பயிற்சி பெறலாம். பிறகு அப்பகுதியைப் போல் மற்றொன்று ஆக்கும் பணியில் அத்தகைய போக்குள்ள மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கலாம். செய்யுட் பகுதியின் பல கூறுகளையும் திரண்ட கருத்தையும் எடுத்துக்காட்டும் சித்திரங்களை அத்தகைய வல்லமையுள்ள மாணவர்கள் வரைய முனையலாம்.

## மனதில் நிலைக்கவைக்கும் ஏற்பாடுகள்

பலவித போதனு முறைகளையும் யுக்திகளையும் கையாண்டால் மட்டும் மாணவர்களின் கற்றல் திறமை மேம்பட்டு

விடாது. ஏனென்ருல் அவர்களுடைய மனது நாம் நினைத்த வற்றைச்செதுக்கி வைக்கக்கூடிய பலகை போன்றதோ நிழற் படத்திரைபோன்றதோ அல்ல. ஆனல் மிக்க நெகிழ்வும் பதிந் தாற்போல் தோன்றும் விஷயங்களில் பலவற்றை மறக்கக் கூடிய தன்மையுமுடையதாகும். ஆனல் கற்பிப்பவற்றை நன்ருகப் பதியவைக்கும் முறையில் போதனையின்போதும் (குறிப்பிட்ட பகுதியை) கற்றவுடனேயும் சில ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இவை பயிற்சி, கூறியது கூறல் (Practice and Repetition) என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

அத்தகைய ஏற்பாடுகளில் (i) மீள் பார்வையும் (Revision) (ii) பன்முறைப் பயிற்சியும் (Drill) முக்கியமானவை.

## (i) மீள் பார்வை

ஆசிரியர் தொன்றுதொட்டு இயற்கையாகவே கையாளும் முறைகளில் மீள் பார்வையிடல் மிகவும் முக்கியமானதாகும். பாட அலகின் போக்கிலும் அதன் முடிவிலும் மீள் பார்வையிடல், வார, மாதச் சோதனைகளுக்காவும் கால், அரை, முழு ஆண்டுத் தேர்வுகளுக்காகப் பல பாடங்களையும் பாட்டத் தொகுதிகளையும் மீள் பார்வையிடல் என்பவை பொதுவான நடைமுறையாகும். "மீள் பார்வை" என்ற சொல்லின் பொருள் கற்ற உண்மைகளைத் திரும்பப் பார்த்தல் என்பது மட்டுமல்லாமல் அவற்றைப் புதிய அனுபவங்களோடும் நிலைகளோடும் பொருத்தி யறிதலுமாகும். மீள் பார்வையின் நோக்கங்கள் பின்வருமாறு:

(a) ஆசிரியர் திட்டமிட்டுக் கற்பித்தவற்றிலுள்ள குறைபாடுகளையும் மாணவர் புரிந்துகொண்டவற்றிலுள்ள குறை

பாடுகளையும் அறிந்து அவற்றைத் திருத்தும் நடவடிக் கைகளை மேற்கொள்ளுதல்.

(b) மாணவர்கள் கற்ற சிறுசிறு தொகுப்புகளைச் சேர்த்துப் பெரிய தொகுப்புகளாக மனத்திற்கொள்ளுதல்.

(c) குறிப்பிட்ட நிலைகளில் கற்றவற்றை வேறு புதிய நிலை களில் புகுத்தியறிதல்.

மீள்பார்வைப் பாடத்தைக் கவர்ச்சியுள்ளதாகச் செய்யப் பின் வருவனவற்றை மனத்திற்கொள்ள வேண்டும்.

(a) ஒவ்வொரு மீள்பார்வைப் பாடத்தின் வாயிலாகவும் கற்றவற்றைத் திரும்பிப்பார்த்தவுடன் புதிய கற்றலுக் கும் வகை செய்வதாயிருக்க வேண்டும்.

(b) ஏற்கனவே கற்ற முற்பகுதிகளுடன் கோர்வைப் படுத்து வதாயிருக்கவேண்டும்.

(c) மீள்பார்வை மூலம் முக்கியமான விவரங்களை உறுதிப் படுத்த வேண்டுமேயல்லாது நுணுக்கங்களைச் சரிபார்த் தலில் அதிக கவனம் செலுத்தலாகாது.

(d) பரவலான வாய்மொழி மீள்பார்வையைத் தொடர்ந்து, எடுத்துக்கொண்டுள்ள பாடப் பகுதியின் சுருக்கத்தை எடுத்துரைப்பதிலும் பிறகு பாட முடிவில் புத்தகத்திற் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளுக்கு விடை பகர்வதி லும் கவனம் செலுத்தலாம்.

(e) கூடியவரை மாணவர் வலுவுடன் கற்றறியாத பகுதிகளை மீள்பார்வையிடுவதில் அதிக கவனம் செலுத்துவது அவசியம்.

ஆனால் மீள்பார்வையென்பது பாடப்புத்தகத்தை ஆசிரியர் கையில் வைத்துக்கொண்டு மேலெழுந்த வாரியாகக் கேள்விகள் கேட்பதாக இருந்தால் செலவிடும் நேரத்தில் பெரும்பகுதி வீணாக்கப்பட்டதாகும். பாடபோதனை எவ்வளவிற்குத் திட்டமிட்டு நடக்க வேண்டுமோ அவ்வளவிற்கு மீள்பார்வையும் திட்டப்படி நடத்தப்படவேண்டும். அத்தகைய மீள்பார்வைப் பாடங்கள் அன்றாட போதனைப் பகுதிகள், குறுப்பிட்ட தலைப்புப்பொருள்கள், செயற்படுத்தல் (application) என்ற வடிவங்களில் இருக்கலாம்.

### (ii) பன்முறைப் பயிற்சி

வாய்பாடுகள், விதிகள், வரையறுப்புக்கள் முதலியவற்றை நிலைக்க வைக்க, வாய்மொழிப் பன்முறைப் பயிற்சியளித்தல் எங்கும் கையாளப்படும் நடைமுறையாகும். ஆனால் பொறியியக்கமாக அவற்றைப் பொருளறியாமல் மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் வழக்கம் விரும்பத்தக்கதல்ல. அது எதிர்பார்க்கும் பலனை அளிக்கவல்லதுமன்று. திட்டப்படியும் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டும் அளிக்கப்படும் பன்முறைப் பயிற்சி மாணவர் பெற்ற அறிவுப் பொருளை நன்கு நிலைக்கச் செய்வதோடு வேண்டும் போது அதை விரைவாகவும் சரியாகவும் செயற்படுத்தவும் உதவுகிறது.

வினா-விடை, கட்டளை-செயல் போன்ற தூண்டல்-துலங்கல் (Stimulus-Response) இணைப்புக்களைச் சிந்தித்துப் பார்த்தலின் அவசியமின்றிப் பெருக்கிக்கொண்டு போவதே பன்முறைப் பயிற்சியின் அடிப்படை நோக்கமாகும். பன்முறைப் பயிற்சியின் மூலம் எவ்விதப் புது அறிவும் பெறுதல் நோக்கமாயிருக்கக்கூடாது. பொதுவாக, பன்முறைப் பயிற்சியில் அடங்கியுள்ள கொள்கைகள் பின்வருமாறு:

(a) பொருளுடைக்கற்றல் (Meaningful learning) மூலம் அறிந்த விதிகள், வாய்பாடுகள், சூத்திரங்கள் முதலியவற்றைப் பொறியியக்க முறையில் ஞாபகத்திற்கொள்ளவும் செயற்படுத்தவும் தக்க பயிற்சியளித்தல்.

(b) அப்பயிற்சிகள் மகிழ்ச்சியளிப்பவையாயிருக்க வேண்டும்.

(c) ஐயத்திற்கிடமின்றியும் சரியான விடைகளை எளிதிற் கொடுக்கக் கூடியவையாயும் இருக்க வேண்டும்.

(d) பன்முறைப் பயிற்சிகள் பலவகைத்தாயிருக்கவேண்டும்.

(e) குறுகிய நேரப் பயிற்சிகளில் தொடங்கி நெடுநேரப் பயிற்சிகளை அளிக்கவேண்டும். இவை ஐந்து நிமிடங்களுக்குக் குறையாமலும் இருபது நிமிடங்களுக்கு மிகாமலும் இருத்தல் நலம்.

(f) தனி மாணவர்களின் தேவைகளையொட்டிப் பன்முறைப் பயிற்சியளித்தல் அவசியம். அத்தகைய பயிற்சி தேவையில்லாத திறன்மிக்க மாணவர்களை அதில் ஈடுபடுத்தி அவர்களுடைய நேரத்தை வீணாக்கவேண்டாம்.

(g) பயிற்சி விடைகளை மாணவர்களே சரிபார்த்துக்கொள்ள வகை செய்யவேண்டும்.

(h) ஆசிரியர் மேற்பார்வையிட்டுத் தேவைப்படும் மாணவர்களுக்கு அவ்விடங்களில் வழிகாட்ட வேண்டும்.

(i) மிகமுக்கியமான தூண்டல்-துலங்கல்களில் அதிகமான பயிற்சியளிக்கவேண்டும்.

(j) மாற்றுவிடைகளுள்ள வினாக்களுக்குப் பன்முறைப் பயிற்சியில் இடமில்லை. அதேபோல் தவறான விடை எதையும் அனுமதிக்கவும் கூடாது.



# அத்தியாயம் VI

## ஆண்டுக்குரிய வேலையைத் திட்டமிடுதல்

### (i) பயிற்றலுக்கான விஷயம்

ஒரு குறிப்பிட்ட பாடம் அல்லது பாடங்களின் தொகுதிக் குரிய ஓராண்டு வேலையைத் திட்டமிடுகையில் ஆசிரியர் பல விஷயங்களை மனத்திற்கொள்ள வேண்டும். எம்மட்டும் பற்பல பயிற்றல் முறைகளைச் செயற்படுத்தலாம், எவ்வாறு அவற்றைக் கைக்கொள்ளலாம் என்பதுதான் முக்கியப் பிரச்சினை யாகும். அதைத் தீர்மானிக்கக் கூடிய ஏதுக்கள் (i) பொருளறிவுப் பாடத்தின் தன்மை (Nature of the subject) (ii) பாடத் திட்டத்தின் வாய்ப்பும் எல்லையும் (Scope of the syllabus), (iii) பள்ளிக்கூடத்தில் சேமித்துள்ள தளவாடங்கள் அல்லது போதனைக்குரிய துணைக் கருவிகள் (Equipment), (iv) மாணவர் அடைந்துள்ள முன் தேர்ச்சி (Previous attainment), (v) தேர்வுத் தேவைகள், கல்வி இலாகாவினரின் உத்தரவுகள், (vi) போதனைக்குப் பயன் படுத்தக் கூடிய நேரம் (Available time) என்பனவாகும்.

ஒரு பாடத்திட்டத்தின் எல்லையை ஆராயுங்கால் அப் போதனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம், மேற்கொள்ளத் தக்க கற்றல் செயல்கள் (Learing experiences), செய்முறை வேலை (Practical work), கல்விப் பயணங்கள் (Excursions), காட்சிசார் துணைக்கருவிகள் (Audio-visual aids), தொடர்புறு போதனை (Correlated teaching) போன்ற கூறுகளை மனத்திற் கொள்ளவேண்டும்,

ஓராண்டுக்குரிய வேலைப்பளுவை வரையறுத்த பிறகு அதை ஆண்டு உட்பகுதி, மாத, வார, நாள் (Terminal, monthly, weekly and daily) அடிப்படையில் பாகுபாடு செய்துகொள்ள வேண்டும். ஆசிரியரின் போதனை, வகுப்புச் சொல்லாடல் (class discussion), செய்முறை வேலை, சோதனைகளும் மதிப்பீடும் (Tests and assessment) போன்ற பகுதிகளுக்கு ஒதுக்கவேண்டிய நேரத்தைத் தோராயமாகப்பீரியடு கணக்கிலோ மணிக்கணக்கிலோ திட்டப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பாடத்தலைப்புக்களைக் கால ஒழுங்கிலோ (chronological) பொதுமையவட்ட ஒழுங்கிலோ (concentric) ஏற்பாடு செய்து கொள்ளலாம். கற்பிக்கப்படும் உண்மைகளை மனதிலிருத்திக் கொள்ளவும் எளிதில் வருவிக்கவும் முன்முறை உதவுமெனினும் கற்றல் திறமையையும் எளியதிலிருந்து கடினத்திற்குச் செல்லுதல் (Easy to difficult) என்ற கோட்பாட்டையும் ஒட்டித் தலைப்புப் பொருள்கள் எப்பொழுதுமே அமையா. ஆனால் பொதுமையவட்ட முறையில் ஒவ்வொரு பொருளையும் படிப்படியாக (Stage by stage) ஒரே வகுப்பில் பல பீரியடுகள் கற்பிப்பதன் மூலமும் பல வகுப்புக்களில் தொடர்புறுத்திக் கற்பிப்பதன் மூலமும் கையாளலாம். இம்முறை மாணவர்களின் உள்ளமுதிர்வு, போக்கு, திறமை, முன்னறிவு முதலியவற்றைப் பின்பற்றுவதாயமைகிறது. ஆகவே நடைமுறையில் பொதுமையவட்ட முறையைப்பெருமளவிலும் மற்றதைப் பொருத்தமான அளவிலும் மேற்கொள்ளுதல் மிகுந்த நலம் பயக்கும்.

மற்றொரு வகையிலும் பாடத்தலைப்புக்களையும் அவற்றின் பயிற்றும் அலகுகளையும் (Teaching units) ஒழுங்குபடுத்திக்

கொள்ளலாம். அதன்படிக் கீழ்வகுப்புக்களில் உளவியலை ஒட்டியும் (Psychological) போகப்போகத் தருக்க அம்சத்தை (logical) அதிக அளவில் புகுத்தற்குரியவாறும் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். எல்லாப் பொருளறிவுப் பாடங்களும் காலப்போக்கில் வளர்ச்சி பெற்றுள்ள முறையே உளவியல் அடிப்படையில் அமைந்துள்ளதாகக் கருதலாம். இதையே பண்பாட்டு வரன்முறைக் கொள்கை (Culture-Epoch Theory) என்று குறிப்பிடுகிறார்கள். கூட்டல் என்ற தலைப்பை எடுத்துக்கொண்டால் எண் குறிப்பையும் எண் மானத்தையும் ஒட்டிய விதிகளையும் கூட்டல் விதிகளையும் எடுத்த எடுப்பிலேயே கூறி, கூட்டலைக் கற்பித்தல் தருக்க முறையாகும். கொட்டைகள், சோழிகளைக்கொண்டு எண்ணுதல், எண்ணி எண்ணிக் கூட்டுதல், எண்குறிப்பு, எழுதிக் காட்டுதல், எண்ணுதல் உதவியின்றி நேராக எண்களை எழுதிக்கூட்டுதல் என்ற ஒழுங்கு உளவியல் முறையையொட்டியதாகுமென்பதும், வளர்ச்சி வரலாற்றுப்படி கூட்டல் முதலிய நான்கு அடிப்படைக் கிரியைகளும் இவ்வாறே உருவாயின என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

சுருங்கக் கூறின், கீழ்வகுப்புக்களில் புலனீட்டுப்பொருட்களையும் குறிப்பிட்ட உதாரணங்களையும் கையாண்டு விதிகள், சூத்திரங்கள் அல்லது வரையறுப்புக்கள் (Rules, formulae or definitions) வடிவத்தில் கற்கவும் அவற்றைச் செயற்படுத்தவும் பயிற்சியளிக்கவேண்டும். மேல் வகுப்புக்களில் வெளிப்படை உண்மைகள், முற்கோள்கள், முன்னறிந்த உண்மைகள் (Axioms, Postulates and Previously known Facts) முதலியவற்றைத் தருக்கமுறையில் உபயோகித்துப் புது விஷயங்களைக் கற்பதிற் பயிற்சியளிக்க வேண்டும். நடைமுறையில் இவ்விருமுறைகளையும் இத்தகைய

திட்டவட்டமான எல்லைப் பாகுபாட்டிற்றுட்பட்டு (clear-cut demarcation)க் கையாள இயலாதென்பதையும் இரண்டையும் உண்மை நிலைகளுக்கும் தேவைகளுக்குமேற்றவாறு கலந்தே மேற்கொள்ள வேண்டுமென்பதையும் ஞாபகத்திற் கொள்ளவேண்டும்.

ஆண்டு உட்பகுதியடிப்படையில் (Terminal Basis) ஓராண்டுக்குரிய வேலையைப் பகிர்வதில் (i) பருவ நிலைகள் (Seasonal conditions), (ii) ஆண்டு உட்பகுதியின் நீட்சி (Length of Term), (iii) மேற்கொள்ள வேண்டிய கற்றல் செயல்கள், கல்விப்பயணங்கள் முதலியவற்றை யொட்டித் திட்டப்படுத்திக்கொள்ள வேண்டும்,

இவ்வாறு பிரித்துக்கொண்ட பிறகு ஒவ்வொரு பாடத் தலைப்பின் வளர்ச்சிக் கட்டங்கள் (Stages of Development) அவ்வப்போது கடைப்பிடிக்கக்கூடிய போதனு முறைகள், உள்ளூர் வசதிகள் முதலியவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஒருவாறு சுருக்கமாகக் குறித்துக்கொள்ள வேண்டும். இவற்றிற்கேற்றாற்போல், ஏற்கனவே உருவாக்கியுள்ள பாகுபாட்டில் சிற்சில மாறுதல்களைச் செய்துகொள்ள அவசியமேற்படின் அவ்வாறு செய்துகொள்ளவும் வேண்டும்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு பாடத் தலைப்பின் கீழ்க் கற்பிக்க வேண்டிய பொருளடக்கத்தை (Content material)த் தேவையான பாடஅலகுகளாக (Lesson units)ப் பிரித்துக் கொள்ள வேண்டும். (1) வகுப்பின் தேர்ச்சித் தரம் (Standard of attainment), (2) தனி மாணவர் தேவை (Individual pupil-needs), (3) கற்பிக்கும் பொருளடக்கத்தின் அளவும் வளர்ச்சிப்படிகளும் ஆகிய ஏதுக்கள் இவ்வகையில் வழிகாட்டக்கூடியனவாகும். ஆசிரியரின் உதவி

யுடன் அல்லது தாமாகவே மாணவர்கள் தனித்தனியாக வும் குழுக்களாகவும் மேற்கொள்ளக்கூடிய கற்றல் செயல் களையும் முன் யோசனையாகக் குறித்துக்கொள்ள வேண்டும். வகுப்பிலும் வீட்டிலும் நிறைவேற்ற வேண்டிய ஒப்படை களையும் (Class and Home Assignments) தயாரித்து வேண்டிய எண்ணிக்கைகளில் அச்சிட்டோ அல்லது cyclostyle செய்தோ வைத்துக்கொள்ள வேண்டும். பள்ளிக்கூடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பயிற்றல் துணைக் கருவிகளுடன் (Teaching Aids) ஆசிரியர் தாமாக வும் மாணவர் கூட்டுழைப்புடனும் வேறு பல பயன்மிகு சாதனங்களையும் தயார் செய்துகொள்ளுதல் மிகவும் விரும் பத்தக்க நடவடிக்கையாகும்.

## (ii) தொழில்மைய இணைப்புப் போதனை

இதுவரை கூறப்பட்டுள்ளவை பாடப்பொருளைத் தேர்ந்தெடுப்பதிலும் அவற்றைக் கற்பிப்பதிலும் ஞாபகத் திற்கொள்ள வேண்டிய அடிப்படையான பொதுக் கல்விக் கொள்கைகளைக் குறிப்பனவாகும். அவை (1) இன்றிய மையாக் கூறுகளான படித்தல், எழுதுதல், எண்ணுதல் (3R's), (2) பண்பாட்டு வரன்முறை அறிவைப் பெறல், (3) தனிப்பட்ட முறையிலும், சமூகத்தின் உறுப்பினன். என்ற முறையிலும், நாட்டின் வருங்காலக் குடிமகன் (Future citizen) என்ற முறையிலும் மாணவனின் அண் மைத் தேவைகளையும் தொலைவுத் தேவைகளையும் (Immediate and remote needs) நிறைவு செய்தல் என்பனவாகும் என்பதும் மேற்கொள்ளும் கல்விமுறை எதாயிருந்தாலும் இவற்றைக் கருத்திற்கொள்ளவேண்டு மென்பதும் ஒருபுறமிருக்க, ஆதாரக் கல்வி முறையின்

உயிர்நாடியான இணைப்புப் போதனைக்கு எவ்வாறு வழி செய்யலாமென்பதை இனி கவனிப்போம்.

ஆதாரக் கல்வியின் கோட்பாடுகள் (1) வாழ்க்கை மூலம் வாழ்க்கைக்குத் தயார் செய்தல் (2) கல்விக்கும் எழுத்தறிவிற்கும் (Education and Literacy) உள்ள வேற்றுமை (3) தொழில் மூலம் கல்வி (4) தற்போதுமை (Self-sufficiency) (5) ஒழுக்கப் பயிற்சி என்பனவாகும் என்பதை முன்னரே பார்த்தோம். அத்துடன் இணைப்பு மையங்களாக இயற்கைச் சூழ்நிலை, தொழில், சமூகத் தேவைகள் ஆகிய மூன்றையும் குறிப்பிட்டோம். இவற்றில் ஆதாரத் தொழிலாக் (Basic Craft) நாம் தேர்ந்தெடுப்பது மற்ற இரு மையங்களையும் சார்ந்தே இருக்க வேண்டுமாகையால் இணைப்புப் போதனையின் சுழலச்சு தொழில் என்றே கொள்ளலாம்.

உண்மையில் ஆதாரக் கல்வித் திட்டம் ஒரு உற்பத்தித் தொழிலை (Productive craft) மையமாகக் கொண்டு கலைப் பகுதியையும் தொழிற்பகுதியையும் இணைத்து நிறைவேற்றுவதாகும். ஆகையால் கற்பிக்க வேண்டிய கலைப் பாடப் பொருட்களைத் தொழிலின் வளர்ச்சி நிலைகளுக்கேற்பவும் மாணவர்களின் தேர்ச்சித்திறமைகளுக்கேற்பவும் ஒழுங்கு படுத்திக்கொள்வது கடினமாகத்தானிருக்கும். இக்காரணத்தால் தேவைக்கேற்ப ஆசிரியர் அவ்வப்போது ஆங்காங்கே மாறுதல்களைச் செய்துகொள்ளும் தன்னுரிமை (Freedom) அவருக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆதாரக்கல்வியில் இணைப்புறு பயிற்றல் பற்றிய கொள்கை (Theory) சென்ற பல ஆண்டுகளாகவே உருவாகிக் கொண்டுவருவதும் இன்னும் திட்டவட்டமான எல்லைக்

கோடிட இயலவில்லையென்பதும் நாம் மனத்திற்கொண்டே திட்டம் தயாரிக்கவேண்டும்.

தற்போதைக்கு (1) நூற்றலும் நெய்தலும், (2) பயிர்த் தொழில், (3) தச்சு வேலை ஆகிய மூன்றும் ஆதாரத்தொழில்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுடன் உள்ளூர் நிலைமைகளுக்கும் தேவைகளுக்குமேற்ப வேறு சில தொழில்களையும் ஆதாரமாகக்கொள்ளலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதாரத் தொழிலைப் பல நோக்கமுடைச் செயல்களாக (Purposeful activities)முன்கூட்டியே பிரித்துக்கொள்ளவேண்டும். அவற்றின் உடன் விளைவாக (By-Product) எந்தெந்தப் பாட அறிவை எவ்வெப்போது எடுத்தளிக்கலாம் என்பதையும் இவ்வகையிற் கையாளத்தக்க முறைகளையும் அடுத்தபடியாகத் திட்டமிடவேண்டும். பிறகு இத்திட்டங்களை நிறைவேற்ற முற்படும்போது தொழில் தேர்ச்சிபெறுதலை முதன்மையாகவும் பாட அறிவுத் தேர்ச்சியை இரண்டாந் தரமாகவும் கருத்திற் கொள்ள வேண்டும்.

### (iii) செய்த வேலையின் மதிப்பீடு

ஓராண்டுப் பயிற்றலுக்குரிய விஷயங்களை ஆதாரத் தொழில், தோட்டவேலை, சுற்றுப்புறத் துப்புரவும் ஆரோக்கியமும், முக்கிய நாட்களும் விழாக்களும், பள்ளிப் பாராளுமன்றம், பள்ளிக்கூடச் சஞ்சிகை வெளியிடல் முதலிய அலகுத் திட்டங்களாக (Unit - plans) ப்பிரித்து நிறைவேற்றி வரவேண்டும். எச்செயலை மேற்கொண்டாலும் அதை மதிப்பிடுவதன் மூலம் முழு மனநிறைவு ஏற்படுவதுடன் மற்றச் செயல்களையும் அவ்வாறே நன்கு நிறை

வேற்றுமாறு ஊக்கமும் பெறலாம். அத்துடன் செய்யப் பட்ட வேலையின் கல்விப் பயனையும் தொழில்நயப்பயனை யும் மதிப்பிட்டறிவது இன்றியமையாத நடைமுறையாகவும் இருக்க வேண்டும். ஆதாரக் கல்வித் திட்டமே முற்றிலும் உருவாகாத நிலையில் ஆராய்ச்சிக்கட்டத்தில் நீடித்து வரு தால் அத்தகைய ஆராய்ச்சி முடிவுகளைத் திட்டவட்டமாக வலுப்படுத்தும் வகையிலும் மதிப்பீடு அவசியமாகிறது.

அத்தகைய மதிப்பீடு ஒருவித ஒழுங்கமைப்பில் இருக்க வேண்டும். அத்துடன் ஆசிரியர் தாமாகவும் மாணவர் களும் மாணவக் குழுக்களும் தனித்தனியாகவும் ஆற்றிய செயல்களின் பயனைப்பதிவுசெய்துவர வேண்டும். அடிக்கடி அவற்றை ஆசிரியரின் மதிப்பீட்டுடன் ஒப்பிட்டுப்பார்த்த லும் அவசியமாகும். அத்தகைய மதிப்பீட்டறிக்கையை (Evaluation Report) த்தயாரிப்பதற்குப் பின்வரும் வினுக் களுக்குரிய விடைகள் பேருதவியாயிருக்கும்:

1. ஒரு குறிப்பிட்ட அலகுத் திட்டத்தின் கீழ் என் னென்ன செயல்கள் மேற்கொள்ளப்பட்டன ?

2. அவை ஒவ்வொன்றிலும் பெற்ற தேர்ச்சித்தரம்.

3. எதிர்பார்த்ததைவிட அதிகமா குறைவா ?

4. அச்செயல்களைப் பொறுத்தவரை தனி மாணவர்களா கவும் குழுக்களாகவும் ஈடுபட்ட விவரங்கள்.

5. கூட்டுறவு வேலைகள் முரண்பாடுகள் ஏதுமின்றி மேற்கொள்ளப்பட்டனவா ?

6. முழுச் சுயேச்சையுடன் மாணவர்கள் அவ்வேலைகளில் ஈடுபட்டனரா ?

7. எந்தெந்தப் பாடங்களில் இணைப்புப்பயிற்றல் நடை பெற்றது ?

8. வாய்மொழிப் பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும் பாடத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி அளிக்கப்பட்டனவா ? அல்லது அதற்கதிகமாகவா ? அல்லது குறைவாகவா?

9. தானகப் படித்தல் (Self-study) எவ்வளவு தூரம் முடிந்தது ?

10. சுயவெளியீட்டுப் பயிற்சிக்கு வாய்ப்புக்கிடைத்ததா ?

11. செய்த வேலைகளின் உற்பத்தி அளவும் அதன் பண மதிப்பும்.

12. மேற்கொள்ளப்பட்ட கல்விப்பயணங்கள் (Excursions), விருப்பச்செயல்கள் (Hobbies) முதலியன. அவற்றின் மூலம் பெற்ற அனுபவ அறிவு.

இவ்வினக்களுக்கும் பிறவற்றிற்கும் மாணவர் விடைகளைப் பதிவுசெய்து வரலாம். ஆசிரியர் அத்தகைய பதிவுகளையும் தாமாகவே மேற்பார்வையிட்டுப் பதிந்தவற்றையும் ஆதாரமாகக்கொண்டு வார,மாத அறிக்கைகளைத்தயாரித்து, திட்டமிட்டுக் குறிப்பிட்டுள்ள இலக்குகளுடன் ஒப்பிட்டு அதன் பயனுக எதிர்காலத்தில் மேன்மேலும் சிறந்த திட்டமிடுவதற்கும் அதை நிறைவேற்றுவதற்கும் இயலும். ஆண்டு முடிவில் தயாரிக்கும் அறிக்கை இத்தகைய அறிக்கைகளின் சாரமாயமையும்.

# அத்தியாயம் VII

## கல்விசார் அலகை முறையாக அமைத்தல்

### (i) திட்டமிடுதல்

ஓராண்டுக்குரிய பல்வேறு பாடங்களையும் பாடத் தலைப்புக்களையும் எவ்வாறு பாகுபாடு செய்து ஒழுங்கு படுத்திக்கொள்ளலாமென்பதை முன் அத்தியாயத்தில் கண்டோம். இனி கற்றல் அலகுகளின் அடிப்படையில் சிந்தித்து முன்கூட்டியே திட்டமிடும் விதத்தைச் சற்று ஆராய்வோம். ஒரு குறிப்பிட்ட பாடத்தலைப்பிலடங்கியுள்ள பாடப் பொருளை ஒரு பீரியடுக்குள் கற்பிக்க இயலாதென்பதும் சில தலைப்புக்களைக் கற்பிக்க மாதக் கணக்கில்கூடப் பிடிக்கும் என்பதும் நாமறிந்ததே. ஆகையால் ஒவ்வொரு பாட விஷயத்தையும் ஒரு பீரியடுக்குள் முடிக்கக்கூடிய அலகுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். இவை எண்ணிக்கையில் இரண்டு மூன்ருகவோ அதிகமாகவோ இருக்கலாம்.

இனி கற்றல் அலகைத் திட்டமிடல் பற்றிய பொதுக் கோட்பாடுகளையும் ஆதாரப் பள்ளிக்குகந்த திட்டமிடலின் சிறப்புக் கூறுகளையும் கவனிப்போம்.

பாடத்தைத் திட்டமிட்டுக் கற்பிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகளாவன: (1) திட்டவட்டமான குறிக்கோள்களை நினைவின் முன்னணியில் [வைத்துக்கொண்டு கற்பித்தல், (2) திக்குத்திசையறியாமல் ஒழுங்கற்ற பயிற்றலின் விளைவாக நேரத்தையும் ஆற்றலையும் வீணுக்காமல் எதிர் பார்க்கும் போக்குகளில் ஒருவாறு கற்பிக்க இயலுகிறது, (3) முன், பின் பாடப்பகுதிகளோடும் ஒரு பாடத்தின் பகுதிகளோடும்

தக்க முறையில் தொடர்புறுத்திக் கற்பிக்க முடிகிறது. (4) சிறந்த எடுத்துக்காட்டுக்கள், விளக்கங்கள், ஆய்வு வினுக்கள் முதலியவற்றைத் தயாரித்து வைத்துக்கொள்கிறோம், (5) குறையறி சோதனை, குறையகற்றும் முறைகள், தேர்ச்சிச் சோதனை முதலியவற்றையும் இவற்றின் மூலம் தேர்ச்சித்தரத்தையும் நன்கு அறிய முடியும்.

இத்தனை நன்மைகளைப் பயக்கக்கூடிய திட்டமிடுதலை மேற்கொள்ளுமுன் சில தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்: (1) பாடப்பொருளையும் செயல் நிகழ்ச்சிகளையும் பற்றி ஆசிரியர் நல்ல அனுபவமும் வல்லமையும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் அவற்றைத் திறம்படக் கற்பிப்பதில் ஊக்கமும் ஆர்வமும் கொண்டிருக்க வேண்டும். (2) குழந்தைகளைப்பற்றிய உளவியற்கொள்கைகளையும் கற்றற் கோட்பாடுகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். (3) கற்பித்தற் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் நல்ல பழக்கமிருக்க வேண்டும். (4) தனி மாணவ வேறுபாடுகளையும் தேவைகளையும் முன் கூட்டியே எதிர்நோக்கி அவற்றைச் சமாளிக்கும் வகை முறைகளைக்குறிக்கவேண்டும். (5) பாடப் பொருளையும் செயல்களையும் பற்றி மாணவர் முன்கூட்டிப் பெற்றுள்ள அறிவும் அனுபவமும் திட்டமிடலுக்குத் துணையாகப் பயன்பட வேண்டும்.

ஆதாரக் கல்வி முறையில் கற்பிக்கும் பாட அலகுகளையொட்டிய திட்டம் வகுக்கும்போது இரண்டு அடிப்படை உண்மைகளை மனத்திற் கொள்ளவேண்டும். அவற்றில் ஒன்று தொழிலில் தேர்ச்சியும் திறமையும் பெறுவதற்குட் பட்டதுதான் நூற்படிப்பு என்பது. மற்றது ஆதாரத் தொழிலையொட்டிய நிகழ்ச்சிப் பகுதிகளுக்கு விளக்கம் தரும் முறையிலும் ஆதாரக் கல்வி முறைப் பயிற்றலில்

பாடங்களின் அறிவுசார் பொருள்களிலேற்படும் இடைவெளிகளை நிரப்பும் வகையிலுமே நூல்கள் இடம்பெற வேண்டுமென்பதாகும். ஆகவே திட்டமிடும் ஆசிரியர் ஆதாரத் தொழிலின் கிளைக் கூறுகளைப்பற்றிய தொழில் நுணுக்கங்கள், மாணவர் பெற வேண்டிய தேர்ச்சித்திறன், ஏற்படவேண்டிய கூட்டுறவு, துப்புரவு பற்றிய பழக்கங்கள், மனப்பான்மைகள் போன்றனவற்றைப்பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். பழைய கல்வி முறையில் பொருளறிவு புகட்ட மிகவும் சிறந்ததெனக் கருதப்படும் ஹெர்பார்ட்டின் ஐந்து படிகளை ஆதாரப்பள்ளிகளில் கடைப்பிடிக்கும் வாய்ப்புக்கள் மிக மிக அற்பமே. அதன் விளைவாக, பாடக்குறிப்புக்கள் தயாரித்தலிலும் முற்றிலும் மாறுபட்ட முறையைக் கையாள வேண்டிவரும். அதையொட்டிப் பின்வருவன கவனம் பெறவேண்டும்.

(1) ஆதாரக்கல்வியை ஒட்டிய எச்செயல் நிகழ்ச்சி குறிப்பிட்ட பாடம் கற்பித்தலுக்கடிப்படையாயமைய வேண்டும்? (2) அதை வகுப்பறையில் மேற்கொள்ளவேண்டுமா அல்லது பள்ளிக்கூடச் சுற்றுப்புறத்திலா? (3) ஒரு பீரியடு போதுமா அல்லது மேற்கொண்டு தேவைப்படுமா? (4) சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டிய கருவிகள், தட்டுமுட்டு சாமான்கள், கச்சா (அல்லது மூலப்) பொருள்கள் (5) அப்பகுதித் தொழிலிலீடுபடுத்த வேண்டிய தனி மாணவர்கள் அல்லது மாணவக் குழுக்கள், (6) அளிக்க வேண்டிய வாய்மொழி, எழுத்துப்பயிற்சி (7) பொருளறிவுப் பாடங்களின் குறிப்பிட்ட பகுதிகளைத் தொடர்புறுத்தக்கூடிய வாய்ப்புக்களும் முறைகளும், (8) கற்றற்பலனை (a) செயல் தேர்ச்சியும் திறனும் (b) பழக்கங்கள், மனப்பான்மைகளையொட்டிய அனுபவங்கள், பொருளறிவு ஆகியவற்றை மதிப்பிடும் சோதனைகள் போன்ற கூறுகளை அடிப்

படையாகக்கொண்டு ஆய்ந்து குறிப்புக்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

### (ii) ஆயத்தம்

கல்வி நிகழ்ச்சிச் செயலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தை ஆசிரியர் முன்கூட்டியே பார்வையிட வேண்டும். தேவைப்படும் மாணவர்களைக்கொண்டு அதைச் சுத்தம் செய்து கருவிகள், துணைக்கருவிகள், மூலப்பொருள்கள் முதலியவற்றை ஒழுங்காக வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். தேவையில்லாத சாமான்களை அவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டும் அல்லது முடியுமானால் கண்மறைவிலிருக்கும்படி செய்ய வேண்டும். அவை சரியான நிலையிலுள்ளனவா என்று கவனித்து அவசியமானவற்றைச் சீர்படுத்தி வைக்க வேண்டும். பிறகு மாணவர்களுக்கு அவர்கள் மேற்கொள்ள விருக்கும் தொழில் அல்லது நிகழ்ச்சிச்செயலைப் பற்றிச் செயல்முறைக் குறிப்புக்கள் கொடுத்து ஏற்கனவே பெற்றுள்ள அனுபவங்களோடு தொடர்புறுத்திப் பார்க்கும் வழி வகையையும் குறிப்பிட வேண்டும். பிறகு அவரவர்களுக் கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செயல்களை மேற்கொள்ள வேண்டும்.

### (iii) வேலையைச் செய்து முடித்தல்

திட்டமிட்டபடி மாணவர்கள் தனித்தனியாகவோ அல்லது குழுக்களாகவோ அவரவர் பணிகளை ஆற்ற வேண்டும். தலைமை மாணவர்கள் தங்கள் வேலையைச் செய்வதுடன் குழுக்களிலுள்ள மற்றவர்களின் வேலையையும் மேற்பார்வையிடவேண்டும். அத்துடன் அவர்களின் நடத்தை, ஒழுங்கு, விரும்பிச் செய்தல் முதலியவற்றையும் உற்றுநோக்கி அவசியமானால் சரிப்படுத்த வேண்டும். சிறு

சண்டை சச்சரவுகள் அல்லது கருத்து வேறுபாடுகள் மாணவரிடைத் தோன்றினால் அவற்றை அங்கேயே அப்பொழுதே சாமர்த்தியமாகத் தீர்த்து வைக்கவேண்டும். ஆசிரியரும் ஆயத்தப்படுத்தியபடி மாணவர்கள் செயல் நிகழ்ச்சியை நிறைவேற்றுவர் என்று மிதமிஞ்சிய நம்பிக்கையோடு இருந்துவிடாமல் தாமும் நடக்கும் வேலையைக் கண்காணிப்பதுடன் தேவைப்படும் மாணவர்களுக்கோ குழுக்களுக்கோ உதவியளிக்க வேண்டும். குறிப்பிட்ட வேலையோ நிகழ்ச்சியோ நடந்தேறியபின் கருவிகள், தட்டுமுட்டு சாமான்கள் முதலியவற்றை அவ்வவற்றிற்கென ஏற்படுத்தியுள்ள இடங்களில் பாதுகாப்பாகக்கொண்டு சேர்க்கவேண்டும். அவசியமான கருவிகள், சாமான்கள் விஷயத்தில் அவற்றைத் துடைத்துச் சுத்தம் செய்து வைத்தால் மறுபடி அவற்றைப் பயன்படுத்த மிகவும் வசதியாயிருக்கும்.

### (iv) பதிவு செய்தல்

ஏற்கனவே கூறியுள்ள காரணங்களை முன்னிட்டு ஆதாரக் கல்வி பயிற்றலில் மேற்கொள்ளப்படும் எல்லாவித செய்தல்-கற்றல் கூறுகளையும் சரிவரப் பதிவு செய்து அடிக்கடி அப்பதிவுகளை ஆராய்ந்து பயனுள்ள ஊகங்களைக் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் பயிற்றல் முறைகளையும் பொருள்களையும் தகுந்தவாறு அமைத்துக்கொள்ள வேண்டும். டால்ட்டன் முறையிற் போல் இம்முறையிலும் ஆசிரியரின் பதிவுகள், மாணவரின் பதிவுகள் என இரு வகைகளும் அவசியம்,

### (v) மதிப்பிடுதல்

செயல் நிகழ்ச்சி திட்டப்படி நடந்தேறியதா, என்னென்ன பாடப்பொருள்கள் முன்னுரையாகவும் தொழிலைச் செய்த போதும் கற்பிக்கப்பட்டன, செயலை முடித்த பிறகு

என்னென்ன பொருள்களை மேற்கொண்டு கற்பிக்கலாம். புகார்களின்றி, கூடியவரையில் எல்லோருக்கும் மன நிறைவு அளித்ததா, எந்தெந்தக் கூறுகளைத் திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியவில்லை, அதற்கானகாரணங்கள் போன்ற விவரங்களை எடுத்தளிக்கும் வகையில் மதிப்பிடலைச் செய்து முடிக்க வேண்டும்.

## (vi) பிறபாடங்களோடு தொடர்புறுத்தல்

ஆதாரக்கல்வியில் தொழிற்பகுதி மேலோங்கியும் மரபுக் கல்வி முறையில் நூல்களிலிருந்து பொருளறிவு பெறும் பகுதி மேலோங்கியும் இருக்கவேண்டுமென்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விருகோட்பாடுகளும் சிறந்த ஒருங்கமைக்கப்பட்ட கல்வித் தேர்ச்சிக்குதவாவென்றும் ஒழுங்காக அமைந்த வகுப்பறைப் பயிற்றலும் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் அறிந்துள்ளோம். ஆகையால் மதிப்பிடல் மூலம் கண்டறிந்தவற்றை முறையாகக் கற்பிக்க வேண்டும். இக்கட்டத்தில் ஆசிரியரிடமிருந்தும் தகுந்த நூல்கள், செய்தி இதழ்கள் ஆகியவற்றிலிருந்தும் பல விஷயங்களை அறிந்துகொள்ளவும் அவற்றைப் பற்றி எழுதவும் உரையாடவும் பயிலவேண்டும். சாதாரண முறையில்போல் அவ்வளவுக்குத் தேவையில்லாவிட்டாலும் ஓரளவாவது குறையறி சோதனைகள் (Diagnostic Tests), தேர்ச்சிச் சோதனைகள் (Achievement Tests) மூலம் கற்றல் தரத்தை உயர்த்தி வரவேண்டும்.

## (vii) பழக்கங்களும் மனப்பான்மைகளும் உருவாதல்

வேலை செய்யும்போது மாணவர்கள் சில முறைகளையும் மனப்பான்மைகளையும் வகுத்துக்கொள்வார்கள். திட்டத்தை

நிறைவேற்றத் தேவையான புத்திநுட்பம், கைத்திறன், ஊக்கமும் ஆர்வமும், மனமுவந்த கூட்டுழைப்பின் இன்றியமையாமையும் பயனுடை விளைவும் ஆகியவற்றை யொட்டி அவை அமையும். அத்தகைய பழக்கங்கள், மனப்பான்மைகளிற் சில பின்வருமாறு:

(a) தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனமுவந்து பணியாற்றல்,

(b) நேரத்தை வீணாக்காமல் தேர்ச்சியும் திறனும் பெறும் வகையில் நடைமுறைகளைச் சிந்தித்து வகுத்தல்.

(c) மூலப்பொருள்களை வீணாக்காமல் உற்பத்திப் பொருளை அதிகமாக்குதலில் ஆர்வமும் முயற்சியும்.

(d) கருவிகளையும் துணைக் கருவிகளையும் கண்களைப் போற்றிப் போற்றிச் சுத்தமாகவும் நல்ல நிலையிலும் வைத்துக் கொள்ளுதல்.

(e) ஆசிரியரின் குறிப்புக்களைப் புரிந்துகொண்டும் தன் முயற்சியாக அறிந்தவற்றைக் கொண்டும் ஆதார மேற்கோள் நூல்களைப்படித்து, தொழில், பொருளறிவு, இலக்கியக் கூறுகளைப் பற்றிய அறிவைப் பெருக்கிக் கொள்வதில் ஆர்வம்.

(f) தற்போதுமை (Self-sufficiency), தன்னம்பிக்கை (Self-confidence), உடல், உள்ளம், சுற்றுப்புறம் ஆகியவற்றைத் துப்புரவாய் வைத்துக்கொள்வதன் மூலம் ஆரோக்கிய வாழ்வுக்கு ஏற்பாடு செய்தல்.

(g) உழைப்பின் உயர்வையும் (Dignity of labour), பொது நல ஊழியத்தின் சிறப்பையும் உணர்தலும் அத்தகைய மனப்பான்மையோடு ஈடுபடுதலும்.

பள்ளிநாள் கொண்டாட்டம் (School Day Celebration) என்ற செயல் நிகழ்ச்சியை உதாரணமாகக்கொண்டு இப்படிகளை விளக்கலாம்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பே இந்நாள் தீர்மானிக்கப்பட்டுவிடுமாகையால் அப்போதிருந்தே அக்கொண்டாட்டத்தைச் சிறப்பாக நடத்தும் வழிவகைகளைத் திட்டமிட வேண்டும். இது ஆதாரப் பள்ளி முழுவதையும் சார்ந்த நிகழ்ச்சியாகையால் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் எல்லோருக்கும் திட்டமிடுதலிற் பங்குண்டு. ஒவ்வொரு வகுப்பு மாணவர்களிடமிருந்து அக்கொண்டாத்தையொட்டிய பல வேலைப் பகுதிகளை மேற்கொள்ளும் வகையில் யோசனைகளை வரவேற்க வேண்டும். இவற்றின் அடிப்படையில் வகுப்பு ஆசிரியர்கள் தலைமை ஆசிரியருடன் கலந்தாலோசித்து, தங்களுக்குத் தோன்றும் யோசனைகளையும் எடுத்துக்கூறி, நிகழ்ச்சி நிரலை (Programme) த்தயாரிக்க வேண்டும். இக் கட்டத்தில் இது இறுதியானதல்ல என்பதும் மாறுதலுக்குட்பட்டதென்பதும் நாம் உணர வேண்டிய விஷயமாகும்.

பிறகு இந்நிகழ்ச்சி நிரலை வகுப்புக்களில் விளம்பரப்படுத்தி நிரலிற் கண்டுள்ள பல்வேறு உருப்படிகளை (items) யார், யார் அல்லது எந்தெந்தப் பயிற்சிக்குழுக்கள் (Squads) பொறுப்பேற்றுச் செயலாற்ற வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அவற்றை எவ்வாறு செய்வது என்பதைப்பற்றிக் குறிப்பாக உணர்த்த வேண்டும். நடித்தல், சொற்பொழிவு, சொற்போர், இசை விருந்து, நடனம், பாவனை உடைப்போட்டி (Fancy Dress Competition) ஆகிய மேடை நிகழ்ச்சிகளில் மாணவர்கள்

பங்கெடுத்துக்கொள்ளலாம். இவற்றுடன் கொண்டாட்டம் நடைபெறப்போகும் இடத்தைத் துப்புரவு செய்தல், தோரணங்கள், கொடிகளால் அலங்கரித்தல், நாற்காலிகளேயும் வேறு இருக்கைகளேயும் (Seats) ஒழுங்காகப் போடுதல், விருந்தினர்களேயும் பார்வையாளர்களேயும் வரவேற்று அமர வைத்தல் போன்ற அலுவல்களேயும் முன்கூட்டியே பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மேற்கூறியவற்றில் ஒத்திகைகள் நடத்துதல், ஆடையணிகள் தயாரித்தல், மேடைக்காட்சி சோடனை போன்றவற்றைப்பற்றியும் திட்டமிடுதல் அவசியம்.

குறிப்பிட்ட நாளுக்கு முன் இரண்டு நாட்கள் மும்முரமான ஒத்திகைகளுக்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளே மேற்பார்வையிட்டு மனநிறைவு பெறுவதற்கும் ஒதுக்க வேண்டும். பள்ளிக் கொண்டாட்ட நாளன்று காலேயிலிருந்தே திட்டத்தின் பல்வேறு பகுதிகளேயும் நிறைவேற்றத் தொடங்க வேண்டும். தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், செயற்குழுத் தலைமை மாணவர்கள் ஆகியோர் மிகவும் சுறுசுறுப்பாய் ஓடியாடி மற்ற மாணவர்களேயும் ஊக்குவிக்க வேண்டும்.

கொண்டாட்டத்தின்போது எல்லோரும்சேர்ந்து ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டும். அவ் வகுப்புக்களில் உரையாடல் மூலம் கொண்டாட்டத்தின் வெற்றிக் கூறுகளேயும் தோல்விக் கூறுகளேயும் மனம் விட்டுக் கூறுதல், விசேட விருந்தினர் ஆற்றிய சொற்பொழிவிற் காணப்பட்ட அரிய கருத்துக்களேயும் யோசனைகளேயும் ஆராய்தல், பொதுவாக அத்தகைய கொண்டாட்டங்களேப் பற்றிப் படித்தல் போன்றவற்றிற் செலவிட வேண்டும்.

வருங்காலக் கொண்டாட்டங்களை இன்னும் சிறக்க நடத்தும் வழிவகைகள் கண்டறியவும் ஓரளவு இயலும். இவ்வாறு ஒரு செயல் நிகழ்ச்சியின் பல்வேறு பகுதிகளையும் மேற்கொண்டு ஆதாரக் கல்வி முறையில் நேரிடைச் செயல்—கற்றல் மூலம் ஒருங்கமைந்த கல்வி புகட்டலாம்.



# பாகம் II

# சிறப்பு முறைகள்

(தமிழ் பயிற்றல்)

# அத்தியாயம் VIII

## மொழி கற்றல்

### 1. நோக்கங்கள்

மனிதன் இப்புவியில் தோன்றிய காலம் முதல் தன் கருத்துக்களை வெளியிடவும் பிறர் கருத்துக்களைப் புரிந்து கொள்ளவும் பற்பலவாறு முயன்றுவந்திருக்கிறான். சைகைகள், குரல்வேறுபாடுகளிற்றொடங்கி அரை குறையான சொற்களைக் கையாண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்குப் பிறகு ஒருவாறு நன்கமைந்த பல்வேறு மொழிகளைத் தோற்றுவித்துள்ளான். இவை அன்று போல் இன்றும் என்றும் வளர்ச்சியடைந்து கொண்டே இருப்பனவாகும். அவ்வளர்ச்சியில் சீரும் சிறப்பும் ஓங்குமாறு செய்வது நம் கையில் உள்ளது.

மொழி கற்றலின் நோக்கங்கள் : (i) வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் கருத்துக்களை வெளியிடும் ஆற்றலைப் பெருக்குதல், (ii) அறிவுசார் வளர்ச்சி (Intellectual development), (iii) ஆக்கமுடைச்சுவைத்தல் (Creative appreciation) எனக் கூறலாம். இந்நோக்கங்கள் ஒவ்வொன்றும் ஈடேறும் வகையில் செயற்படுத்தத் தக்க குறிக்கோள்களையும் (Feasible objectives) உயர்நிலைக் குறிக்கோள்களையும் (Ideals) ஆசிரியர் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

தொடக்க வகுப்பிலிருந்து ஒவ்வொரு வகுப்பாகச் செல்லச் செல்ல, மாணவன் கருத்துக்களைப் புரிந்துகொள்ளவும் வெளியிடவும் தேவையான தெளிவும் எளிமையும் ஒருங்கமைந்த மொழி வல்லமையை (mastery of language)

வளப்படுத்திக்கொண்டே போகவேண்டும். மொழியை ஆழமாகவும் (Intensive) பரவலாகவும் (Extensive) கற்க முயலவேண்டும். முந்திய முறையில் ஆசிரியர் மூலமும் மற்ருேர் மூலமும் கற்றல் இன்றியமையாது. பிந்திய முறையில் மாணவர்கள் தன்முயற்சியின் மூலமே பெருமளவில் மொழியறிவு பெறவேண்டியிருக்கும். மேல் வகுப்புக்களில் மாணவர்கள் தம் நாட்டு இலக்கியங்களிலும் பிற நாட்டு இலக்கியங்களிலும் நிறைந்துள்ள பொருள்நயம், மொழிநயம், அமைப்பு நயம் ஆகியவற்றைச் சுவைத்து இன்புறுவதிலும், அவ்வின்ப உணர்ச்சியை வெளியிடுவதிலும் மொழிப் பயிற்சி பெறவேண்டும். தாய்மொழி வாயிலாகவே இத்தகைய ஆக்க வெளியீட்டையும் தருக்கமுறை வெளியீட்டையும் (Creative Expression and Logical Expression) கருத்துக்களைச் சாதாரண முறையில் வெளியிடுவதுடன் சேர்த்து மொழி கற்றலின் தேவையைச் சிறக்கக் கூறலாம்.

இந்நோக்கங்களைச் செயல் முறையில் எய்தக் கையாள வேண்டிய மொழிப் பயிற்சிக் கோட்பாடுகளிற் சில பின் வருமாறு:

(a) மாணவர்களிடம் இயற்கையாகவும் தாஞகவும் எழுவனவான (Natural and spontaneous) திறமைகளைப் பயன்படுத்தல். தொடக்கநிலைகளில் மாணவர்கள் கையாளும் மொழித்தரத்தையே அடிப்படையாகக்கொண்டு சிறுகச்சிறுக இலக்கிய மொழியை (Literary language) ப்புகுத்தல்.

(b) புரிந்துகொண்டும் புரியவைக்கும் முறையிலும் வாய்விட்டுப்பேசுதலும், படித்தலும், வாய்க்குள் படித்தலும்,

(c) புரிதலை எடுத்துக்காட்டும் வகையில் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் பேசுதல்; தெளிவாகவும் அழகாகவும் எழுதுதல்.

(d) மேற்கோள் நூல்கள், சொல்லகராதிகள், பொருளகராதிகள் முதலியவற்றைப் பயன்படுத்தல் போன்ற மொழிப் பழக்கங்களை (Linguistic habits) ஏற்படுத்தல்.

(e) மொழிப் பயிற்சியின் நான்கு கூறுகளாகிய புரிந்து கொள்ளல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்பனவற்றில் ஒரே சீரான உன்னிப்பு (attention) ச் செலுத்துதல்.

(f) மொழியைப் புரிந்துகொள்ளுதலும் பேசுதலும்; பேசுதலுக்குப் பின் வாய்விட்டுப் படித்தல்; கூட்டிசையாக வாய்விட்டுப் படித்தபின் (Chorus Reading) தனித் தனியாகப் படித்தல்; வாய்விட்டுப் படித்தலுக்குப்பின் வாய்க்குள் படித்தல்; படித்தலுக்குப்பின் எழுதுதல்; உரையாடலுக்குப் பின் கோவையாக எழுதுதல்; பார்த்தெழுதலுக்குப்பின் பாராமல் எழுதுதல் (From transcription to dictation).

தாய்மொழிப் பயிற்றலே கல்வி புகட்டலின் உயிர்நாடியும் சுழலச்சுமாகும். தாய்மொழியில் மேற்கூறிய திறமைகளைப் பெற்றாலன்றி, தெளிவாகச் சிந்திக்கவோ திட்ட வட்டமான கருத்துக்களை வெளியிடவோ இயலாது. இவ்விரண்டுந்தான் பயனுடைக் கற்றலின் குறிகாட்டிகளென்பதை நாம் மறக்கலாகாது.

தாய்மொழி பயிலலும் தாய்மொழி வாயிலாகப் பயில லும் எவ்வித எதிர்வாதத்திற்கும் (controversy) ஐயத் திற்கும் இடந்தராத கொள்கைகளாகும். எனினும் நம் நாட்டைப் பொறுத்தவரை சுமார் இருநூற்றுண்டுகள் அயல் நாட்டின் ஆளுகையில் வாழ்ந்துவரவேண்டியிருந்த காரணத்தினுல் தாய்மொழி பயிற்றுவதில் குறைந்த உன்னிப் பும் தாய்மொழிமூலம் பயிற்றலில் அதைவிடக் குறைந்த உன்னிப்புமே உயர்தரப் பள்ளிகளில் செலுத்தப்பட்டு வந்தது. ஆகவே உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் உரு வாக்கிக்கொள்ளவும் அவற்றை வெளியிடவும் தாய்மொழிப் பயிற்சியும் புலமையும் இன்றியமையாதனவாகும் என்ற கூற்று முற்றிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றுகும்.

உளவியற் கொள்கைப்படி பல அனுபவங்களின் மூலமே படிப்படியாகச் சிந்தனைகள் உள்ளத்தில் நடமா டத் தொடங்குகின்றன. அதன் விளைவாகக் கருத்துக்கள் திரண்டு உருப்பெறுகின்றன. அவ்வாறு உருப்பெற்ற வின் குறிகாட்டி கருத்துக்களை வெளியிடல் தவிர வேறென் றுமிருக்கமுடியாது. அத்தகைய அனுபவம்பெறும் படி களில் முக்கியமானவை (1) பொறிஉணர்ச்சி (Sensation), (2) காட்சி உணர்வு (Penception), (3) பொதுமை உணர்வு (Conception), (4) அனுமானம் (Reasoning), (5) தீர்மானம் (Judgment) என்பனவாகும். இவற்றில் பொறி உணர்ச்சி பொறிகளின் சீரமைப்பையும் இயங்கும் திறனையும் பொறுத்ததாகையால் உயிருள்ளன யாவும் பொறி உணர்ச்சியிலிருந்து தப்ப முடியாது. பொருட்களிலிருந்து ஒளி, ஒலி முதலிய அலைகள் நம் கண்,காது முதலியவற்றைத் தாக்குகின்றன. அதன் விளைவாக நம் நரம்பு மண்டலத்தில் சில "பதிவுகள்" ஏற்படுகின்றன. இதுதான் பொறியுணர்ச்சி

யாகும். ஆனால் பொருளோடியைந்த பொறி உணர்ச்சி ஏற்படும் போது ஒருவகையில் விம்பங்கள் மூளையில் தோன்றுகின்றன. இதைத்தான் காட்சி உணர்வு என்கி றோம். ஒரு பொருளைப் பற்றிய அத்தகைய பல விம்பங்களைப் பல நிலைமைகளில் காட்சி முறையில் உணரும் போது அவற்றினிடையேயுள்ள பல்வேறு பொதுப் பண்புகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்துச் சிந்தித்துத் திரண்ட கருத்துப் பொருளாக அறிகிறோம். இதற்குத் தான் பொதுமை உணர்வு என்று பெயர். இப்பொதுமை பிரித்தலுக்கு உதவும் வகை யில் தான் அனுமானமும் தீர்மானமும் செயற்படுகின்றன.

ஆகவே பொறி உணர்ச்சி தவிர மற்ற உணர்வுகளைப் பட்டறிந்து (Experiencing) அவற்றின் மூலம் கருத்துப் பொருளை மனத்தில் உருவாக்கிக்கொள்ள மொழியைத்தவிர, அதிலும் தாய்மொழியைத் தவிர வேறு எதுவும் உதவக்கூடு மென்பதைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாதென்பது வெள்ளிடை மலையாகும். எண்ணங்கள், கருத்துக்கள் ஆகி யவற்றின் எண்ணிக்கைப் பெருக்கத்திற்கும் தெளிவுற்ற உறுதிப்படுத்தலுக்கும் தாய்மொழியைப் பேணிப் பயின்று ஓரளவு புலமை பெறுதல் இன்றியமையாததாகிறது.

இரண்டாவதாக, இலக்கியத்தைச் சுவைத்து இன்புற வும் தாய்மொழிப் பயிற்சியே அடிப்படையாக அமையவேண் டும். ஒவ்வொரு மொழியும் தோன்றிய காலந்தொட்டு இரு வகை வளர்ச்சியடைந்து வருகிறது. அவற்றில் ஒன்று சாதாரணத் தேவைகளை நிறைவு செய்வதற்கேற்ற வளர்ச்சி யடையும் கிளையாகும். மற்றது பண்பட்ட முறையில் தனிப் பட்டும் சமூகத்தின் உறுப்பினன் என்ற முறையிலும் வாழ்க்கை நடத்த உதவும் கிளையாகும். அத்தகைய பண்பு களில் இலக்கியம் சுவைத்து இன்புறல் ஒன்றாகும். நம்முன்

ஞோர்கள் தலைமுறை தலைமுறையாக நமக்குச் சேமித்து வைத்துள்ள கருத்துக்கருவூலம் இலக்கியமாகும். அத் தகைய சிறந்த சொத்தை நாம் நன்கு உய்த்தறியவும் நாமும் நம் பின்மரபினரால் (descendants) மூதாதையராகக் கருதப் படப் போகிறவர்கள் என்ற முறையில் அவ்விலக்கியக் கருவூலத்தை மேன்மேலும் நிரப்பும் பணியை மேற்கொள்ள வும் தாய்மொழிப் பயிற்சி அவசியம்.

நம் நாட்டில் பல்கலைக் கழகப்பட்டம் பெற்றோர்கள் ஆங்கில இலக்கியங்களில் நல்ல புலமையும் சுவையுணர் திறனும் பெற்றுத் திகழ்வது ஓரளவு உண்மை தான். ஆனால் அத்தகைய இன்புறுதல் தாயையறியாத ஒருவன் தன்னை வளர்த்த மாற்றாந்தாயின் அன்பையும் பரிவையுங் கண்டு மகிழ்வதற்கே ஒப்பாகும். இன்று நிலை மாறிவிட்டது. நம் தாய்மொழியாகிய தமிழில் முதலில் பல்வேறு வகுப்புக்களில் எளிய தமிழில் தொடங்கிக் காலப் போக்கில் இலக்கியத் தமிழில் கொண்டுவிடுமாறு பயிற்சியளித்து வருகிறோம். அதனால் உயரிய இலக்கியத்தைச் சுவைத்து இன்புறுதல் சொந்தத் தாயின் அன்பைப் பெற்று இன்புறுவதற்கொப் பாகிறது. அதற்குப் பிறகு ஆங்கிலம் முதலிய பிறமொழி இலக்கியங்களைச்சுவைத்தலில் அனுபவம் பெறுதல் நம் பண் பட்ட மனப்பான்மைக்கும் இலக்கிய ஆர்வத்திற்கும் சான்றா கும். இம்முறையைப் பின்பற்றல் "தெரிந்ததிலிருந்து தெரி யாததற்குச் செல்லுதல்" (Known to unknown) என்ற பயிற்றற் கொள்கைக்கு ஒத்ததாகவும் இருக்கிறது.

மற்றொரு உயர்ந்த பண்பாட்டுக்குறிகாட்டி (sign of culture) ஓய்வு நேரத்தைத் தீங்கற்ற சிறந்த முறையில் கழிக்கும் பழக்கமாகும். நம்மிற் சிலர் தான் ஓய்வின்றி

அல்லும் பகலும் உழைக்கின்றனர். பெருவாரியானவர்கள் எவ்வித வேலையுமின்றிச் சோம்பித் திரிபவர்களே. ஆனால் எல்லோரும் முதலில் பிழைப்பிற்காகவும் பொருளாசை காரணமாகவும், பிறகு அத்தகைய குறிப்பிட்ட ஆசையின்றிக் கடமை, பொறியியக்க முறையிலும் உழைக்கிறோம். அதனால் கடுமையான வேலைக்குப்பிறகு கிடைக்கும் ஓய்வு நேரத்தைக் கைகால்களை நீட்டிப் படுத்திருப்பதிலோ அல்லது உறங்கு வதிலோ செலவிடுகிறோம். இன்னும் சிலர் அந்நேரத்தைப் பிறருக்குத் தீங்கிழைக்கும் வகையிலோ, அவ்வாறு திட்டமிடு வதிலோ, கெட்ட எண்ணங்களுக்கு இடம் அளிக்கும் வகை யிலோ பயன்படுத்துகின்றனர்.

இத்தகைய தீயபோக்குகளைத் தடுத்து நல்வழியில் ஓய்வு நேரத்தைச் செலவிடவும் தாய்மொழிப் பயிற்சியவசி யம். நவீனங்கள், சிறுகதைகள், கற்பனைக் கட்டுரைகள் ஆகியவற்றைப் படிப்பதன் மூலம் நம்மை யறியாமல் பொழுது போகிறது. அவ்வாறு ஈடுபடுகையில் பொதுவாக நாம் பற்பல விஷயங்களையும் நிகழ்ச்சிகளையும் மகிழ்ந்து படித்துக்கொண்டே போகிறோமேயொழிய ஒவ்வொன்றை யும் நினைவிலிருத்திக்கொள்ளவும் பிறகு நினைவிற் கொணர வும் முயல்வதில்லை. உண்மையில் இவ்வாறுபடித்துஇன்புற்ற புத்தகங்கள் எண்ணிலடங்கா எனினும் அவற்றின்பெயரைக் கூட மீட்டுக் கொணர முடியாதபடி அவ்வளவு கவலையற்ற முறையிலேயே அவற்றைப் படிப்பதில் நேரத்தைச் செலவிட் டிருக்கிறோமென்பது நம் நேரிடை அனுபவமாகும்.

ஆகவே மொழி பயிலலின் நோக்கங்கள் (1) கருத்துக் களைப் புரிந்துகொள்ளுதல், வெளியிடுதல், அன்றாட வாழ்க் கையில் தனிப்பட்ட முறையிலும் சமூகத்தின் உறுப்பினன்

என்ற முறையிலும் பொறுப்புக்களும் உரிமைகளுமுள்ள குடிமகன் என்றமுறையிலும் உபயோகித்தல், (2) இலக்கியத்தைச் சுவைத்து இன்புறுதலும் அதை வளப்படுத்தலும், (3) ஓய்வு நேரத்தைத் தீங்கற்றமுறையில் இன்புறக்கழித்தல் எனக்கொள்ளலாம்.

## 2. பயிற்றும் கூறுகளும் முறைகளும்

(1) வாய்மொழிப் பயிற்சி: மொழிப் பயிற்சியின் கூறுகள் புரிந்துகொள்ளல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கும் என்று ஏற்கனவே அறிந்துள்ளோம். இவற்றில் குழந்தைகளுக்குப் புரிந்துகொள்ளலிற் சிறந்த பயிற்சியளிப்பது நம் முதற்கடமையாகும். ஆனால் புரிந்து கொள்ளலுக்குத் தொடக்க நிலைப் பயிற்சியில் பேசுதல் இன்றியமையாதாகையால் இவ்விரு கூறுகளும் இயைபுறுமாறு கையாளவேண்டும். குழந்தைகள் ஒன்றிரண்டு வயது முதல் பேசத்தொடங்குகிறார்கள். அப்பொழுது அவர்கள் வாயிலிருந்து உதிரும் சொற்கள் உண்மையில் அவ்வப்போது தோன்றி மறையும் மழலைச் சொற்களே என்பதும் அவற்றை நாம் புரிந்து கொண்டதாகக் காட்டினால் குழந்தை இன்பமெய்துவதும் அவ்வாறு செய்ய இயலாவிட்டால் அது மீண்டும் மீண்டும் அச்சொற்களைக்கூற முற்படுவதன் மூலம் தன் மனக்குறையையும் சலியா ஊக்கத்தையும் வெளிப்படுத்துவதும் நாம் நேரிடையாக நாள்தோறும் கண்டறியும் உண்மையாகும்.

ஆகவே முதன் முதலில் பேசுவது குழந்தை, புரிந்து கொள்வது நாம் என்பது ஒருவகையில் ஏற்புடைய ஊகமெனினும் மொழிப் பயிற்சியின் நோக்கங்களை முன்னிட்டுப் பார்த்தால் நாமே பயிற்றுவிப்போராகவும் குழந்தைகள்

பயில்வோராகவுமே செயற்பட வேண்டியது புலனாகும். ஆகையால் நாம் பேசுதலை எளிமையாகவும் குழந்தைகளின் பட்டறிவோடு கூடியவரை ஒட்டியும் திருத்தமாகப் பேசினால் அவர்கள் நன்கு புரிந்துகொள்ள ஏதுவாகும்.

குழந்தைகள் பள்ளித் தொடக்க வகுப்பில் சேர்ந்தவுடன் பலவிதங்களில் வீட்டிலிருந்து வேறுபட்ட சூழ்நிலை எதிர்ப்படுவதைக் காண்பார்கள். ஆகையால் அவர்களிடை அச்சம், கூச்சம், வெறுப்பு போன்ற உணர்ச்சிகள் கிளைத்தெழும். ஆகையால் ஆசிரியர் திறமையாகவும் அன்பாகவும் அவர்களிடம் பழகி அவர்களுடைய தாய் தந்தையர், சுற்றத்தாரைப் போல் தாமும் ஒருவர் என்ற உணர்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துமாறு அவருடைய முதற்பேச்சிருக்கவேண்டும். அத்துடன் குழந்தைகள் தாங்கள் புரிந்துகொண்டவற்றையும் தங்களுடைய சொந்தக் கருத்துக்களையும் வெளியிடக் கையாளும் மொழியையும் புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமே யல்லாது அதில் குற்றம் குறை கண்டுபிடித்து அவர்கள் அச்சமுறவோ ஊக்கமிழக்கவோ இடமளிக்கக்கூடாது.

தொடக்க நிலையில் குழந்தைகளின் அறிவு சமூகச் சூழ்நிலையையும் இயற்கைச் சூழ்நிலையையும் ஒட்டியே இருக்கும். அவ்வறிவு அவர்களைச்சுற்றி நிகழும் செயல்களையும்சொந்தச் செயல்களையும் தேவைகளையும் சார்ந்திருக்கும். ஆகையால் முதல் வகுப்பில் முழுக்க முழுக்கக் கையாள வேண்டிய பேச்சுப் பயிற்றல் முறையில் (Speech-training) பின்வருவன முதற் கவனம் பெறவேண்டும்:

(1) செய்திகள், கதைகள் சொல்லுதலும் சொல்லவைத்தலும்.

(2) ஆட்டப்பாடல்கள் (Action-songs).

(3) சித்திர வாசிப்பு (Picture-Reading).

இரண்டாவது வகுப்பிலிருந்து இவற்றுடன் (1) மேடை நடிப்பு (Stage-acting), (2) பேரவைப் பேச்சு (Assembly-speaking), (3) வினாக்களுக்குச் சுருக்கமாகவும் விரிவாகவும் விடை பகர்தல், (4) சொற்போர் போன்றனவும் கவனம் பெறவேண்டும்.

வாய்மொழிப் பயிற்சியின் நோக்கம் பிள்ளைகளை எளிதாகவும், விரைவாகவும், திருத்தமாகவும் பேசவைத்தலாகும். ஆகையால் இந்நோக்கத்தை எய்தும்முறையில் பேச்சுப்பயிற்றல் கட்டத்திலிருந்தே ஆசிரியர் உன்னிப்பாயிருக்க வேண்டும். திருத்தமாக உச்சரித்தல், தயக்கமும் கூச்சமுமின்றிப் பேசுதல், தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் கூறுதல் என்ற சிறந்த பேச்சுப் பழக்கங்களை உருவாக்கிக்கொள்ளுதற்கேற்ற குழந்தைப்பருவத்தை ஆசிரியர் நன்கு பயன்படுத்திப் பேச்சுப் பயிற்சியளிக்க வேண்டும். இதற்கு இன்றியமையாத முதல் தேவை ஆசிரியரே, இவ்வகைகளில் முன்மாதிரியாயிருந்து தம் பேச்சு முறையிற் கண்ணும் கருத்துமாயிருப்பதுடன் குழந்தைகளைப் பேசப்பயிற்றலும் ஆகும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது", "இளமையிற் கல்" என்ற முதுரைகள் இதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டுகின்றன. கேட்கும் உறுப்புக்களும் பேசும் உறுப்புக்களும் அப்பருவத்தில்தான் நெகிழ்ந்து வளைந்து கொடுக்கக்கூடியனவாயிருக்கும்.

ஆசிரியர் பிள்ளைகளுடன் இயல்பாகவும் தாராளமாகவும் பழகி உரையாடவேண்டும். செய்திகளைக் கூறும்போதும் கதை சொல்லும்போதும் வினவுதலுக்கும் விடை பகர்தலுக்கும் உரிய இடமளிக்கவேண்டும். குழந்தை

கருப்பையிலிருந்து நிலத்தில் விழும்பொழுதே "குவா குவா" என்று கத்துவதன் பொருள் எங்கே, எங்கே என்று கேட்பதாகும். ஆதலின் கேள்வி கேட்டலைப் பேச்சுப் பயிற்றும் கட்டத்திலிருந்தே தாராளமாகவும் திறம்படவும் கையாள வேண்டும். படிக்க, எழுதப் பயின்றபிறகு கேள்வி கேட்டலின் பொருளடக்கம் குழந்தைகளின் நேர்முக அனுபவங்களோடு மறைமுக அனுபவங்களையும் உட்கொண்டிருக்கும்.

உரையாடலுக்குகந்த பொருள்களில் சில பின்வருமாறு: (1) பெற்றோரும் சுற்றத்தாரும், (2) பொருட் பெயர்கள், (3) பெயரும் வயதும், (4) படிக்கும் வகுப்பும் பள்ளிக்கூடமும், (5) விளையாட்டுக்கள், (6) சுற்றிக்காணும் பிராணிகள், (7) கொண்டாட்டங்கள், (8) விழாக்கள், (9) நடப்புச்செய்திகள், (10) விருப்புக்களும் வெறுப்புக்களும். உரையாடலுக்கு மிகவும் பயன்படக்கூடிய துணைக்கருவிகள் சித்திரங்களும் விளக்கப்படங்களுமாகும். இவற்றைக்கையாளுதல் குழந்தைகளின் விருப்பத்தையொட்டியதாகும்.

அடுத்தபடியாக, ஆட்டப் பாடல்கள் மூலமும் குழந்தைகட்கான பாட்டுக்கள் மூலமும் (Action-songs and Nursery Rhymes) வாய்மொழிப்பயிற்சியை வளப்படுத்தலாம். இவற்றை ஆசிரியர் அடியடியாகச் சொல்ல, குழந்தைகள் அவற்றைத் திருப்பிச் சொல்வார்கள். பல தடவை திருப்பிச் சொல்வதன் மூலமும் சைகைகளுடன் உரக்கச் சொல்வதன் மூலமும் பிள்ளைகள் அத்தகைய பாட்டுக்களை விருப்பத்தோடும் விளையாட்டாகவும் பாடிப் பாடி மகிழ்வார்கள். பேச்சிலும் திருத்தம், தெளிவு, விரைவு ஆகியவை காணப்படும்.

கதை சொல்லுதலையும் குழந்தைகளுக்குப் பேச்சுப் பயிற்சி வாயிலாகக் கற்பிக்கலாம். முதலில் கதைகளை அவர்கள் கேட்க வேண்டும். பிறகு அவைகளைக் கேட்கும்போது இடையிடையே வினாக்களுக்கு விடையளித்தலை விரும்புவார்கள். அடுத்தபடியாக அவர்களே கேட்ட கதைகளைத் திரும்பச் சொல்வதைப் பெரிதும் விரும்புவார்கள். அத்தகைய வாய்ப்புக்களைத் தாராளமாய் அளிக்க வேண்டும்.

## படிக்கப் பயிற்றல்

இவ்வாறு போதிய பேச்சுப் பயிற்சியளித்த பிறகு படிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். புரிந்துகொண்டு படிக்கப்பயின்ற பிறகு மாணவர்கள் வாய்க்குள் படிக்கப் பயில வேண்டும். எழுத்து வடிவத்திலுள்ளதை வாய்விட்டு உச்சரித்துச் சொல்வதைப் படித்தல் என்று கூறுகிறோம். படித்தலின் கூறுகள் (1) எழுத்து வடிவத்திலுள்ள சொற்களைக்கட்புலனால் அறிதல், (2) அவற்றை வாய்விட்டு உச்சரித்தல், (3) அவற்றின் பொருளையறிதல் என்பனவாகும். ஆகவே படித்தலில் காட்சி உணர்வு, உச்சரிப்பு, பொருளுணர்வு ஆகிய மூன்றும் ஒன்றிச் செயற்பட வேண்டும்.

படிக்கப் பயிற்றலில் பலமுறைகளைக் கையாளலாம். அவை (a) எழுத்துமுறை, (b) சொல்முறை, (c) பார்த்துச் சொல்லும் முறை (Look - and - say method), (d) வாக்கிய முறை அல்லது நிறைசொற்றொடர் முறை (Sentence method), (e) கதைமுறை என்பனவாகும்.

### (a) எழுத்துமுறை

இதைப் பண்டைய முறை அல்லது திண்ணைப் பள்ளிக்கூட முறை என்று கூறலாம். இம்முறைப்படி எண்களையும்

எழுத்துக்களையும் மணலில் அல்லது கரும்பலகையில் எழுதிக் கொண்டே அவற்றை உச்சரிக்கக் கற்பிக்கிறோம். ஒரு சொல்லை எழுத்துக்களாகஎழுதி உச்சரித்தபிறகு அச்சொல்லை முழுமையாகவும் உச்சரிப்பது வழக்கம். " ப-ட-ம் படம் " என்ற உதாரணம் இதை நன்கு விளக்கும். ஆனால் எல்லா எழுத்துக்களையும் எழுதப் படிக்கக் கற்பித்த பிறகே சொற் களையும் சொற்றொடர்களையும் படிக்கக்கற்பிக்க வேண்டும். இம்முறையைப் பின்பற்றினால் பேச்சுப் பயிற்றலுக்கும் படிப்புப் பயிற்றலுக்கும் இடையே நீண்ட கால எழுதப் பயிற்றல் இடம் பெற்றுவிடும். ஆகையால் குழந்தைகள் கற்கும் செயலைப் பொறியியக்க முறையில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் பேசின பொருட்களோடு படிக்கப் பயிற்றலைத் தொடர்புறுத்த வேண்டுமென்ற கொள்கை புறக்கணிக்கப்படுகிறது. ஆனால் இம்முறையில் ஒவ்வொரு எழுத்தையும் அதற்குரிய ஒலியோடு சேர்த்து உச்சரிக்கும் பழக்கமேற்படுவதால் வாசிக்கும்போதும் பேசும்போதும் தெளிவும் திருத்தமும் காண்கின்றன.

### (b) சொல்முறை

உளவியற் கொள்கைப்படி ஒவ்வொரு சொல்லும் முழுசாக அது உணர்த்தும் பொருளோடு இணைத்து உணரப்படவேண்டும். அப்பொருள் புலக்காட்சி, காட்சி உணர்வு, பொதுமை உணர்வு ஆகிய அனுபவங்களின் மூலம் உள்ளத்தில் கருத்துப் பொருளாய் பதிகிறது. அக்கருத்தே படவடிவத்திலும் சொல் வடிவத் திலும் வெளியிடப்படுகிறது. ஆகையால் சொல்லை முழு மையாகக் கற்பித்தலே சிறந்த முறையென்பது ஒரு கொள்கை. இதன்படி ஆசிரியர் கரும்பலகையில் சொற் களை ஒவ்வொன்றாக எழுதிக் காட்டித் தாமும் உச்சரித்துப்

பிள்ளைகளையும் உச்சரிக்கச் செய்வார். பிறகு இரண்டு, மூன்று, நான்கு சொற்களைக்கொண்ட தொடர்களை இவ்வாறு படிக்கச் செய்வார். இதைக்காட்டிலும் அதிகச் சிறப்பான நடைமுறை, பொருள் அல்லது படத்தைக் காட்டி உடனே அதைக்குறிக்கும் சொல்லை எழுதிப் படிக்கச் செய்தலாகும்.

இம்முறையில் உள்ள நன்மைகள் (1) சொற்கள் முழுமையாக உச்சரிக்கப்படுவதால் விரைவும் திருத்தமும் எளிதில் கிட்டுகின்றன, (2) எழுத்துக்களைத் தனித்தனியாக உச்சரிப்பதில் ஏற்படும் நேரச் செலவு தவிர்க்கப்படுகிறது, (3) சொல்லும் பொருளும் இணைந்தறியப்படுகின்றன, (4) முழுசாக உச்சரித்ததைப் பகுத்துத் தனி எழுத்துக்களின் வடிவத்தோடு அவற்றின் தனி உச்சரிப்பையும் அறியலாம் என்பனவாகும்.

ஆனால் இதிலுள்ள குறைகள் (1) எழுத்துக்கூட்டியல்லாமல் முழுச் சொல்லாகப் படிக்கையில் எழுத்துக்களின் தனித் தன்மை உணரப்படுவதில்லை. அதனால் அச் சொல்லைப் பாராமல் எழுதுகையில் (சில சமயங்களில் பார்த்தெழுதும்போதுகூட) தவறுகள் ஏற்படுகின்றன, (2) விரைவாகப் படிக்கக் கற்றுக்கொண்டபோதிலும் மெதுவாகவே எழுதக் கற்றுக்கொள்ள முடியும்.

ஆயினும் படிக்கக் கையாளும் சொற்களையும் சொற்றொடர்களையும் அடிக்கடி பார்த்துப் படிக்கவும் பன்முறைப் பயிற்சியளிக்கவும் வகை செய்தால் இத்தீமைகளை ஒருவாறு நீக்கலாம். ஆகையால் பேச்சில் சொற்களாகவே பயன்படுத்துகிறபடியால் படிக்கப் பயிற்றலிலும் அவ்வாறே செய்வது சிறந்த முறையெனக் கருதப்படுகிறது.

## (c) பார்த்துச் சொல்லும் முறை

இம்முறையில் எழுத்துக்கூட்டவோ சொல்லை எழுதிக் காட்டி உச்சரிக்கவோ இடமில்லை. படங்களைத் துணைக் கருவிகளாகக் கொள்ளவும் இடமில்லை. அறிமுகமான சொற்களை முதலிலும் அவற்றாலான சொற்றொடர்களைப் பின்பும் அப்படியே பார்த்து உச்சரித்தலே இம் முறையாகும். ஆனால் முதிர்ந்த பயிற்சிக்குப் பிறகு அடையவேண்டிய தேர்ச்சியை, படிக்கப் பயிற்றலின் தொடக்கத்திலேயே எதிர்பார்த்தல் குருவியின் தலையிற் பனங்காயை வைப்பதற்கும், குருடனிடம் அரசுப்பார்வையை எதிர்பார்ப்பதற்கும் ஒப்பாகும் என்பது சிலர் கருத்து. ஆனால் சொல் முறையை முதலில் கையாண்ட பிறகு படங்கள், சொற்றொடர்கள், படங்களின் கீழ்க்காணும் சொற்றொடர்கள் ஆகியவற்றை உபயோகித்து, பார்த்துச் சொல்லும் முறையிற் பயன் காணலாம்.

## (d) வாக்கிய முறை அல்லது நிறைசொற்றொடர் முறை

எழுத்து முறையில் எழுத்துக் கூட்டுவதன் மூலமும், சொல் முறையில் எழுதிக் காட்டுதல் மூலமும், பார்த்துச் சொல்லும் முறையில் பார்த்து அப்படியே சொல்லுதல் மூலமும் படிக்கப் பயிற்றுகிறோம். ஆனால் வாக்கிய முறையில் பொருளுணர்ந்து படிக்கப் பயிற்சியளிக்கிறோம். கருத்துக்களைத் தெரிவிக்கத் தனிச் சொற்களோ நிறை சொற்றொடர்களோ தேவைப்படுகின்றன. அத்தகைய தனிச்சொற்கள் கூட உண்மையில் நிறை சொற்றொடர்களே. உதாரணமாக, "போ" என்பதில் "நீ" என்பது எழுவாயும் "போ" என்பது பயனிலையுமாகும். அதேபோல் "தண்ணீர்"

என்று ஒருவன் கூறும் பொழுது "எனக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது." என்ற வாக்கியத்தையே உபயோகிக்கிறான். மொழி பயிலலின் நோக்கம் கருத்துக்களை வெளியிடுதலாகவும் அவைகளை வெளியிடும் அலகு (Unit) வாக்கியமாயுமிருப்பதால் வாக்கிய முறையில் படிக்கக் கற்பித்தலே சிறந்ததாகுமென்பது தற்காலக் கொள்கையாகும். இதன்படி (1) வாக்கியங்கள், (2) அவற்றிலுள்ள சொற்கள். (3) சொற்களிலுள்ள எழுத்துக்கள் ஆகியவற்றைப் படிக்கப் பயிற்சியளிக்கிறோம், ஒருவகையில் இதன் அடிப்படை பார்த்துச்சொல்லும் முறையாகும்.

வாக்கிய முறையில் பின்பற்ற வேண்டிய படிகள் (1) அறிமுகமான ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிக் குழந்தைகளிடம் வாக்கியங்களாக வருவித்தல், (2) அவற்றைக் கரும்பலகையில் அல்லது தாள்களில் எழுதுதல், (3) இவற்றிற்குதவியாகப் படங்களை வரைதல் அல்லது வரைந்த படங்களைப் பயன்படுத்தல், (4) இவ்வாறு தொகுக்கப்பட்ட "பாடங்களை" ப்படித்தலிற் பயிற்சியளித்தல் என்பனவாகும். பன்முறைப் பயிற்சி மூலம் வாக்கியங்களும் அவற்றின் அமைப்பிலுள்ள சொற்கள், எழுத்துக்கள் ஆகியவையும் பிள்ளைகளின் மனத்திற் பதியும். அதாவது பொருளுணர்வு, ஒலி வடிவம், வரி வடிவம் ஆகிய மூவகை விம்பங்களும் ஒன்றி அமையும்.

### (e) கதை முறை

கருத்துக்களை வெளியிடும் மொழி அலகாக (Language Unit) வாக்கியம் அமைவதுபோல் கதைசொல்லவும் வாக்கியத் தொகுதிகள் தேவைப்படுகின்றன. ஆகவே கதைமூலம் படிக்கப் பயிற்றலில் வாக்

கிய முறையே செயற்படுகிறதெனக்கூறுவது பொருத்தமே. எனினும் தனித்தனியாக நிற்கும் வாக்கியங்களை (Isolated sentences) க்காட்டிலும் ஒரு கதையை உருவாக்கும் வாக்கியத் தொகுதி சிறு குழந்தைகளின் விருப்பத்திற்கும் ஊக்கமுறு படிப்பிற்கும் மிகவும் ஏற்றதாயிருக்குமாதலால் வாக்கிய வாசிப்பு முறையைக் கதைவடிவத்தில் கையாளுதலே உளவியல் அடிப்படையில் அமையும் என்பது உறுதியாக நிலவும் கொள்கைகளில் ஒன்றாகும். கதையில் அமைந்துள்ள வாக்கியங்கள், அவற்றிலுள்ள சொற்களை உருவாக்கும் எழுத்துக்கள் என்ற வரிசையில் முன்கூறப்பட்டுள்ள படிக்கப்பயிற்றும் முறைகள் நான்கின் கூறுகளும் கதை முறையிற் செயற்படுதல் கவனிக்கற்பாலது.

இவ்வாறு ஐந்து தனிப்பட்ட படிப்பு முறைகள் கூறப்பட்டிருந்த போதிலும் நடைமுறையில் குழந்தைகளின் கற்றல் திறன், உளப்போக்கு போன்றவற்றை யொட்டி அவற்றைக் கையாள வேண்டும். முறைகள் தருக்க ரீதியில் குறிப்பிடப்பட்டுள்ளன வென்பதும் அவற்றைக் கையாளவேண்டிய வரிசை கொள்கை அளவில் கதை, வாக்கியம், பார்த்துச் சொல்லுதல், சொல், எழுத்து என்பதாகுமென்பதும் நாம் மனத்திற்கொள்ள வேண்டும். அத்துடன் வாய்ப்பு வசதிகளையும் கவனிக்க வேண்டும்.

படித்தல் என்பது வாக்கியங்களையும் சொற்களையும் பார்த்தமாத்திரத்தில் அல்லது எழுத்துக்கூட்டி உச்சரிப்பதாகுமென்பது இதுவரை கூறப்பட்டுள்ளவற்றிலிருந்து புலனாகிறது. அத்துடன் சிறந்த பேச்சுப் பயிற்சியை அது அத்திவாரமாகக் கொண்டிருத்தலின் இன்றியமையாமையை

யும் உணர்ந்துள்ளோம். அத்தகைய படித்தலிற் கையாளக்கூடிய துணைக் கருவிகளைப்பற்றிச் சிறிது அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

### படித்தற் பயிற்சியும் துணைக் கருவிகளும்

சொல்லாகிய கருத்து விம்பத்தைப் புலனிடான பொருள் விம்பத்துடன் இணைத்தல் மூலம் கற்றலை எளிதாகவும் நிலையான பயனுடையதாகவும் செய்யலாம். அத்தகைய பொருள் விம்பங்களைத் தோற்றுவிக்கவல்ல துணைக் கருவிகள் (1) படங்கள், சொற்கள், படங்களுடன் சேர்ந்த சொற்கள் இவற்றைத்தாங்கும் மூவகை அட்டைகள் அல்லது மின் அட்டைகள், (2) வாக்கிய அட்டைகள், (3) கதை அட்டைகள் (படத்துடனும் படமில்லாமலும்), (4) பயிற்சி அட்டைகள் என்பன.

(1) படங்கள், சொற்கள், படங்களுடன் சேர்ந்த சொற்கள்: இவற்றைத் தாங்கும் அட்டைகளைக்கொண்டு (1) படத்தைப் பார்த்துச் சொல்லுதல், (2) சொல்லைப்பார்த்துப் படத்தைக் காட்டுதல், (3) இவ்விரு தனி அட்டைகளையும் படம், சொல் இரண்டையும் தாங்கும் அட்டையுடன் பொருத்திக் காட்டுதல், (4) படித்துக்காட்டுதல் என்ற பயிற்சிகளை விளையாட்டு முறையில் அளிக்கலாம்.

### (2) வாக்கிய அட்டைகள்

இவ்வட்டைகளில் அடங்கியுள்ள வாக்கியங்கள் உடன்பாட்டு வகையையும் ஏவல் வகையையும் சேர்ந்திருக்கலாம். ஏவல்களைப்படிக்கவும் அவற்றை நிறைவேற்றவும் பயிற்சியளிக்கலாம். இவை பெரிய அளவிலும் கார்டு அளவிலும் இருக்கலாம். ஒரு சிறுவன் காட்டும் அட்டையை

மற்றொருவன் படிக்க, மூன்றாவதொருவன் அவ்வேலை நிறைவேற்றலாம். இப்பயிற்சியின் மூன்று கூறுகளையும் மாணவர்கள் மாற்றி மாற்றி மேற்கொள்ளலாம். இவற்றில் ஒருமை, பன்மை, எழுவாய்க்கொத்த பயனிலை ஆகிய வற்றைப் புகுத்தலாம்.

## (3) கதை அட்டைகள்

இவை படங்களின் தொகுப்பையும் அவற்றிற்குப் பொருத்தமான வாக்கியங்களின் தொகுப்பையும் கொண்டிருக்கலாம். ஒவ்வொரு படமும் ஓரிரு வாக்கியங்களின் மூலம் எடுத்துக் கூறும் வகையில் இருக்கலாம். போதிய எண்ணிக்கையில் பல்வேறு கதைகளைக் கூறும் அட்டைகள் இருந்தால் இரண்டிரண்டு மாணவர்களாகச் சேர்ந்து "கதை படித்தலில்" தேர்ச்சி பெறலாம்.

அடுத்தபடியாக, கதை வாக்கியங்களைமட்டும் தொடர்ச்சியாகக் கொண்டுள்ள படிப்புத் தாள்களைத் துணைக் கொண்டு தொடர்ச்சியான படிப்பில் பயிற்சியளிக்கலாம். இவ்வாறு படக்கதைத் தாள்களையும் கதைப்படிப்புத் தாள்களையும் தனித்தனியாகவும் சேர்த்தும் கையாளலாம்.

## (4) பயிற்சித் தாள்கள்

இத்தகைய அட்டைகள் வகுப்பிலுள்ள சிறுவர்களை ஐந்து ஆறு தொகுதிகளாகப் பிரித்து ஒரே சமயத்தில் பல்வேறு இடங்களில் படிப்புப் பயிற்சியளிக்க வல்லவையாகும். இவை மூலம் (1) கதை படித்தல், (2) வாக்கியப்படிப்பு, (3) வாக்கியத்திலுள்ள சொற்களை அடையாளங்காட்டிப் படித்தல், (4) எழுத்துக்களைப் படித்தல், (5) சிதறின (Jumbled) சொற்களைத் தாங்கும் அட்டைகளை ஒழுங்காக வரிசைப்படுத்தி வாக்கியங்களமைத்துப்படித்தல் (Sentence-

building), இவ்வாறே சிதறின எழுத்துக்களை ஒழுங்கு படுத்திச் சொற்களமைத்துப் படித்தல் (Word - building) போன்ற பயிற்சிகளளிக்கலாம்.

படித்தலிற் போதிய பயிற்சியளித்தபின் மாணவர்கள் பொதுவாக அவர்களுடைய பட்டறிவு, ஆற்றல், விருப்பம் ஆகியவற்றையொட்டி அமைந்துள்ள நூல்களைப் படித்துப் பொருளுணரும் நிலையில் இருப்பார்கள். அதுவே வாய்விட்டுப் படித்தல் (Loud Reading), வாய்க்குள் படித்தல் (Silent Reading) ஆகிய இருவகைப் பயிற்சிகளை அளிக்க ஏற்ற அடிப்படையாகும்.

வாய்விட்டுப் படித்தலில் தங்குதடையின்மை, பொருளுணர்வு, உச்சரிப்பு, பொருளுணர்த்தல், குரலை ஏற்றித் தாழ்த்தி அழுத்தமுணர்த்தல் (Emphasising) ஆகியவற்றை எடுத்துக் காட்டலாம். படிக்கப் பயிற்றலில் பொறுக்கி எடுக்கப்பட்டவாக்கியங்களையே சிறுஎண்ணிக்கையிற் பயன்படுத்த முடியும். ஆனால் தாராளமாகப் பேசவும் ஏராளமான அறிவு பெற்று அதை எடுத்துக் கூறவும் இன்றியமையாத குரல் உறுப்புக்களின் பயிற்சி வாய்விட்டுப் படித்தல் மூலமே எய்தப்பெறும். ஆகவே படிக்கப்பயிற்றலைத் தொடர்ந்து திட்டமிட்ட வாய்விட்டுப் படித்தலிற் பயிற்சியளிக்க வேண்டும்.

உச்சரிப்பு, மேடைப் பேச்சு ஆகியவற்றுக்கடிகோலும் வகையில் வாய்விட்டுப் படித்தல் தேவைப்படுவது போல் (1) படிக்கும் பொருள்களின் எல்லைக் கோட்டை விரிவாக்கவும், (2) பொருளுணர் திறனை வலுப்படுத்தவும், (3) மொழிவளம், அறிவுத் திரட்சி ஆகிய இரண்டையும் பெருக்கவும் வாய்க்குள் படித்தல் இன்றியமையாத ஏற்பாடா

கும். பள்ளிக்கூடத்திலும் வேறு சில நிலைகளிலுமே வாய் விட்டுப் படித்தலுக்குத் தேவையிருக்கும். ஆனால் வாழ்க்கையில் மிகமிகத் தேவையான திறமை வாய்க்குள் வாசித்தலாகும். வகுப்பிலிருந்துகொண்டு தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்தல், நூல் நிலையப் படிப்பு, வீட்டில் செய்தி இதழ்கள், புத்தகங்கள் ஆகியவற்றைப் படித்தல் போன்றவற்றிற்கேற்ற ஏற்பாடு வாய்க்குள் படிப்பதுதான். மேற்கண்டவற்றிற்கு வாய்விட்டுப் படித்தலை மேற்கொண்டால் பிறருக்கு இடைஞ்சலாகவும், சில சமயங்களில் சிரிப்புக்கிடம் கொடுப்பதாகவும் இருப்பதுடன் பொருளுணர் ஆற்றலையும் பெரிதும் மட்டுப்படுத்திவிடும்.

வாய்க்குள் படித்தலின் சிறப்புக்கூறுகள் (1) முணுமுணுக்காமை, (2) உதட்டசைவின்மை, (3) தலையை அசையாமை, (4) கண்-சாணின் (Eye-span) நீளம், (5) பொருளறிதிறன், சொற்களஞ்சியம் ஆகியவற்றின் பெருக்கம் என்பனவாகும்.

வாய்விட்டுப் படித்தலில் இல்லாத சில நன்மைகள் வாய்க்குள் படித்தலில் உள்ளன. (1) முந்தியதில் பார்வை உறுப்புக்களும் குரல் உறுப்புக்களும் செயற்படும்போது பொருளுணர்த்தலுக்குத் தேவையான சிந்தித்தல் இடம் பெறமுடியாது. ஆனால் பிந்தியதில் குரல் உறுப்புக்களுக்கு ஓய்வும் மனத்திற்கும் பார்வைக்கும் இணை பிரியாத்தொடர்பும் கிட்டுகின்றன. (2) அதனால் படித்தலில் தடையற்ற விரைவு காணும், (3) தன்முயற்சி, தன்னம்பிக்கை, பிறர்க்கிடையூறு செய்யாமை, பற்பல புதுச்சொற்கள், சொற்றொடர்கள், மரபுச்சொற்றொடர்கள் (New (words, phrases and idioms) ஆகியவற்றின் பொருள்களை

அவை கையாளப்பட்டுள்ள நிலைகளையொட்டி ஊகித்தறிதல் போன்ற திறமைகளும் மனப்பான்மைகளும் வளரும். (4) செயலுறு சொற்களஞ்சியம் (Active vocabulary) உறுதி பெறுவதுடன் செயல்குறை சொற்களஞ்சியமும் (Passive vocabulary) பெருக்கமடைகிறது, (5) விரிந்த படிப்பில் (Extensive Reading) பேராவலைத் தூண்டுகிறது.

ஆனால் வாய்க்குள் படித்தலில் சில குறைபாடுகளும் உள்ளன. (1) உச்சரிப்புப்பயிற்சிக்கிடமில்லாததால் வாய்க்குள் தவறாக உச்சரிக்கும் பழக்கங்கள் ஏற்படலாம். அப்பிழைகளைக் கண்டறிந்து உடனுக்குடன் திருத்த முடியாது. (2) எழுத்துப்பயிற்சிக்கு முன்னோடியாக இருக்கவேண்டிய வாய்மொழிப் பயிற்சிக்கு இடமில்லை. (3) வாய்விட்டுப் படித்தலின்றி வாய்க்குள் படித்தல் மூலமே செய்யுள் நலமறிதலை வெளிக்காட்டவும் செய்யுளைப்பாராமல் ஒப்பிக்கவும் இயலாது.

ஆகவே இவ்விருவகைப் படித்தலும் ஒன்றையொன்று சார்ந்து இயங்க வேண்டும். பொதுவாக, தொடக்க வகுப்புக்களில் வாய்விட்டுப் படித்தலுக்கு அதிக இடமும் மேல் வகுப்புக்களில் வாய்க்குட் படித்தலுக்கு அதிக இடமும் அளிக்க வேண்டும். இவற்றின் அளவை அறுதியிட்டுக் கூற முடியாதாகையால் ஆசிரியர் நன்கு சிந்தனை செய்து இருவகைகளையும் நடைமுறையிற் கையாண்டு மாணவர்களின் படிப்புத் திறனையும் பயனையும் மேம்பாடடையச் செய்ய வேண்டும்.

## எழுத்துப்பயிற்சி

மொழி பயிலலுக்கு அடிப்படை பேச்சு. பேச்சின் வாயிலாகப் படிப்பு உருவாகிறது. இவ்விரண்டையும்

அத்திவாரமாகக்கொண்டு எழுத்துப் பயிற்சியளிக்க வேண்டும். ஆனால் இம்மூன்றும் தனித்தனியாகவும் தொடர்ந்தும் அளிக்கப்படவேண்டுமென்பதில்லை. ஒவ்வொரு வகுப்பிலும் இவை உரிய நிலைகளில் கவனம் பெறவேண்டுமென்பதுதான் கருத்தாகும். பேசுவதற்கு எழுத்துத் தேவையில்லை. ஆனால் படித்தலுக்கு எழுத்துத் தேவைப்படுகிறது. மேலும் எழுத்தின் மூலந்தான் எம்மொழியின் அரிய பெரிய இலக்கியங்களும் நிலைத்து நின்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்களிடையே நிலவி வருகின்றன. ஒருவர் வாய்மொழியாக ஒரு பொருளைப்பற்றி ஓரிரு இடங்களிலுள்ள பலருக்கு எடுத்துரைக்கலாம். ஆனால் அதே பொருளைப்பற்றி நூல்களாக எழுதி அச்சிட்டு விட்டால் பல்லாயிரக்கணக்கில் மக்கள் அதைப் படித்தறியலாம். ஆகவே எழுத்தின் வலிமையையும் தேவையையும் அளவிட இயலாது.

(1) எழுதக்கற்பிக்குமுன் பேசவும், வாக்கியங்கள், சொற்கள், எழுத்துக்கள் ஆகியவற்றைப் படிக்கவும் மீட்டறியவும் (Recognise) ஏராளமான பயிற்சியளித்திருக்க வேண்டும். இவ்வாறு நன்கு அறிமுகமானவற்றை அத்திவாரமாகக்கொண்டே எழுதப் பயிற்ற வேண்டும். (2) சீமைச் சுண்ணும்புக் கண்ணுடியினுல் கரும்பலகையில் பல சித்திரங்கள் வரைந்து பழகியபிறகு எழுதப் பயில வேண்டும். (3) பிறகுதான் பென்சில், பேனு முதலியவற்றைக்கொண்டு தாளில் எழுதும் பயிற்சி பெறவேண்டும். (4) அவ்வாறு எழுத்துக்களை எழுதத் தொடங்குவதற்கு முன்னேடியாக, கொட்டைகள், சோழிகள், குச்சிகள் ஆகியவற்றைக்கொண்டு எழுத்துக்களை உருவாக்கி விளையாடும் பயிற்சியளித்தல் நலம்.

நம்நாட்டிலும் பிறநாடுகளிலும் நிலவிவந்த பண்டைய முறை உயிரெழுத்துக்கள், உயிர் மெய்யெழுத்துக்கள், மெய் யெழுத்துக்கள் ஆகியவற்றை வரிசையாக எழுதக் கற்பித்த லாகும். ஆனால் அது இக்கால உளவியல், கல்விசார் கொள்கைகளுக்கு முரணானதென்று கருதப்படுவதால் பள் ளிக்கூடங்களில் இம்முறையில் எழுதக்கற்பிக்கும் வழக்கம் பெருமளவு மறைந்துவிட்டதெனலாம். எந்தெந்த எழுத் துக்களை எளிதாக எழுதலாம், எவ்வெவை அதிகமான அளவில் மாணவர்களின் அனுபவங்களை ஒட்டிய சொற்க ளில் வருகின்றன போன்ற பல ஊகங்களின் அடிப்படை யில் சொற்களாகவும் வாக்கியங்களாகவும் எழுதப்பயிற்சி யளிக்கப்படுகிறது.

## எழுத்துப் பயிற்சிகள் (Written Exercises)

கையெழுத்தைச் சீரும் சிறப்புமிக்கதாகச் செய்யச் சில வகைப்பயிற்சிகளை அளிப்பது வழக்கம். அவை (1) பார்த் தெழுதல் (Transcription), (2) சொல்லுவதெழுதல் (Writing to dictation), (3) சிந்தித்தெழுதல் என மூன்று வகைப்படும்.

### (1) பார்த்தெழுதல்

ஏற்கனவே அச்சிட்ட நூலிலுள்ளதை அல்லது பிறரால் எழுதிவைக்கப்பட்டுள்ளதைப் பார்த்து அப்படியே கூடுதல் குறைவில்லாமல் எழுதுவதையே இவ்வாறு குறிப்பிடுகி றோம். வகுப்பு நேரத்தில் அல்லது தேர்வுகளில் பிறரைப் பார்த்து எழுதும் முறைகேடான வழக்கத்தை Copying என்று குறிப்பிடுவதை இங்கு சுட்டிக்காட்டத் தேவையில்லை. எழுதப் பயிற்றுவிக்கும் தொடக்க நிலைகளில் (பிறகுங்கூட)

நாள்தோறும் பார்த்தெழுதும் பயிற்சி விரும்பத்தக்கதே. அச்சிட்ட "காப்பி"ப்புத்தகங்களையும் (Printed copy-books) இவ்வகையில் பயன்படுத்தலாம்.

பார்த்தெழுதற் பயிற்சியின் மூலம் (1) எழுத்துக்களின் சீரமைப்பும் தெளிவும், (2) எழுத்துப் பிசகாமல் சொற்களை எழுதுதல், (3) எழுத்துக்கெழுத்து, சொல்லுக்குச்சொல் இடம் விட்டு எழுதுதல் (Spacing), (4) நிறுத்தல் குறியிடல் (Punctuation), (5) பத்தி பத்தியாக எழுதுதல் (Paragraphing) ஆகிய நற்பழக்கங்களும் பயன்களும் கிட்டுகின்றன.

பார்த்தெழுதும் பயிற்சிக்காகக் கொடுக்கப்படும் பகுதிகள் ஏற்கனவே பேசி, படித்து அறிமுகமானவையாயிருத்தல் வேண்டும். அவை தொடக்கத்தில் குறைந்த அளவிலும் போகப் போக அதிக அளவிலும் இருக்க வேண்டும். அதிக நேரம் இப்பயிற்சிக்காகச் செலவிட வேண்டாம். மேலும், நல்ல தேர்ச்சியுள்ள மாணவர்களைக்கொண்ட வகுப்பில் இத்தகைய பயிற்சியளித்தல் தேவைப்படாமலுமிருக்கலாம். இவற்றையெல்லாம் ஆசிரியர் சீர்தூக்கி மாணவர்களுக்குப் பார்த்தெழுதலிற் பயிற்சியளிக்க வேண்டும்.

## (2) சொல்லுவதெழுதல்

பார்த்தெழுதலில் விரைவும் விரைவின்மையும் தம்மிச்சைப்படியோ திறமைப்படியோ இருக்கலாம். ஆனால் சொல்லுவதெழுதுதலில் அவ்வாறில்லை. சொல்லும் விரைவுக்கேற்ப நாம் எழுத வேண்டும் அல்லது எழுதுவோரின் சௌகரியத்திற்கேற்ப நாம் சொல்ல வேண்டும். இவ்வி

ரண்டில் எதுவாயிருப்பினும் இப்பயிற்சி பார்த்தெழுதும் பயிற்சியை விட மிகக்கடினமானதென்பது புலனாகிறது.

ஆகவே இப்பயிற்சியைப் பயனுறச் செய்யும் வகையில் சில நடைமுறைகளைப் பின்பற்றலாம். அவற்றின்படி (1) பார்த்தெழுதிய பகுதிகளையே இப்பயிற்சிக்குப் பயன் படுத்தலாம். (2) இடையிடையே மாணவர்களின் அறி வுக்குட்பட்ட புதிய பகுதிகளாக இருக்கலாம். (3) அவ் வாறு தேர்ந்தெடுத்த பகுதியை ஆசிரியர் ஒரு முறை வாசித்துக் காட்ட வேண்டும். (4) ஒரு முறை கூறிய சொற் களையோ வாக்கியங்களையோ திரும்பத் திரும்பக் கூறக் கூடாது. (5) நிதானமாகவும் பொருளுணர்த்தும் முறை யில் ஆங்காங்கே நிறுத்தியும் வாசிக்க வேண்டும். (6) இறுதியில் ஒரு முறை முழுப்பகுதியையும் வாசித்துக் காட்டுவதன் மூலம் மாணவர்கள் சில பிழைகளைத் திருத் திக்கொள்ள உதவலாம்.

எழுத்துக் கூட்டி எழுதுவதிற் பிழைகளைத் தவிர்ப்பதற் கான சில ஏதுக்கள் (1) பார்த்தெழுதுதல், (2) எழுதி எழுதிப் பழகல், (3) அகராதிப் பழக்கம், (4) எழுத்துக் கூட்டு விளையாட்டுக்கள், (5) பிழை திருத்தல், (6) இலக் கணம் பயிலல் என்பனவாகும். இவ்வேற்பாடுகளை எழுத்துப் பயிற்சியின் தொடக்க நிலையிலிருந்தே மேற் கொண்டால் மேல் வகுப்புக்களில் வினாத்தாள்களுக்கு விடையளித்தல், கட்டுரையெழுதுதல் ஆகிய பயிற்சிகளில் மாணவர்களின் தேர்ச்சித் தரம் மேம்பாடடையும்.

# அத்தியாயம் IX

## மொழியின் கலை நுட்பம்

### உரைநடை கற்பித்தல்

ஒரு மொழியின் சிறப்பு அதன் இலக்கிய வளத்தையும் இலக்கண வன்மையையும் பொறுத்ததாகும். பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களைப் பலர் இயற்றலாம். ஆனால் உயரிய இலக்கியப்பண்புகள் நிறைந்த நூல்களைக் கருவிலே திருவுள்ள மிகச்சிலரே இயற்ற முடியும். ஆயினும் முறைப்படி மொழி பயின்றால் அவற்றைப் பல்லாயிரவர் படித்து இன்புறக்கூடும். இலக்கியம் உரைநடை, செய்யுள் நடை ஆகிய இரு கூறுகளைக்கொண்டதாகும். இவ்விரு பகுதிகளையும் ஆழ்ந்து அறிந்து இன்புற இலக்கணப் பயிற்சியும் இன்றியமையாததாகும்.

எம்மொழியிலும் இலக்கியப் பொருளும் நடையும் இரு வகைகளிலமைந்திருக்கும். அவற்றில் ஒருவகை பாமரரும் படித்து மகிழக்கூடியதாயிருக்கும். ஒருமுறை படித்தவுடன் புரிவனவாகவும் சாதாரண அல்லது கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டி மகிழ்விப்பனவாகவும் உள்ள நூல்கள் இவ்வகையைச் சாரும். இவற்றைப் படித்தறிய நுண்ணறிவோ ஆழ்ந்த படிப்போ தேவைப்படா. மேலும் ஒரு முறைக்கு மேல் படிக்கும் ஆவலையும் இவை தூண்டா.

மற்றொரு வகை இலக்கியம் உயர்ந்த பண்புகளையுடையது. அத்தகைய நூல்களைப் படிக்கப்படிக்க மகிழ்ச்சியாயிருக்கும். எத்தனைமுறை படித்தாலும் சலிப்போ வெறுப்போ ஏற்படாது. அதற்கு மாறாக, பற்பல புதுக் கருத்துக்களும் நயங்களும் புலப்பட்டுக் கொண்டிருக்கும்.

சிறந்த மனப்பான்மைகளும் நற்பழக்கங்களும் உயர் இலக்கியப் படிப்பால் ஏற்படும். இத்தகைய நலங்களை எய்த முதலில் உரை நடையிலும் பிறகு செய்யுள் நடையிலும் படிப்படியாக ஒழுங்கான பயிற்சியளித்தல் அவசியம்.

மொழி வளர்ச்சி வரலாற்றுப்படி முதலில் செய்யுள் நடையும் பிறகு உரை நடையும் கையாளப்பட்டு நாளடைவில் இரண்டுமே பழக்கத்தில் வந்துள்ளன. கல்வி புகட்டுந் தொடக்க நிலையில் குழந்தைகளுக்கு வாய்மொழியாக ஆட்டப்பாடல்களையும் குழந்தைப்பாட்டுக்களையும் (Action and Nursery Songs) கற்பிப்பதற்கு இதை ஒரு காரணமாகக் குறிப்பிடலாம். ஆயினும் வழக்கமாகப் பேசவும் படிக்கவும் எழுதவும் உரை நடையையே அதிகம் பயன்படுத்துவதால் பயிற்றலில் அதை அதிக உன்னிப்பாக ஈடுபடுத்துகிறோம். பொதுவாக, சொற்சுருக்கம், பொருட்செறிவு, இசையின்பம், அழகுணர்ச்சி, கற்பனை முதலியவற்றைச் செய்யுள் நடையிலும் எளிய கருத்துக்களை வெளியிடல், தொகுத்தறிதல், பகுத்தறிதல் மூலம் அறிவை விரிவுபடுத்தல், சொற்பெருக்கம் ஆகியவற்றை உரை நடையிலும் காண்கிறோம்,

## உரை நடை கற்பித்தல்

மொழி பயிலலின் கூறுகளான பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய மூன்றினையும் உரைநடையின் மூலமே திறம்படப் பயிற்றலாம். சொற்பெருக்கம், கருத்துவளம், பிழையின்மை, பேச்சு மூலமும் படிப்பு மூலமும் குறிப்பிட்ட பகுதிகளைச் சுருக்கிக் கருத்தறிதல், கருத்துக்களைத் தெளிவாகவும் விரிவாகவும் இலக்கண வரையறைகட்கிணங்கப் பேச்சிலும் எழுத்திலும் வெளியிடல் ஆகியவை உரைநடை

கற்றல் மூலம் எய்த வேண்டிய திறமைகளைக் குறிக்கின்றன.

(1) பயன்மிகு சொற்களஞ்சியத்தை (Active vocabulary) வலுப்படுத்தி ஆளவும் (2) பயன்குறை சொற்களஞ்சியத்தை (Passive vocabulary) விரிவாக்கிக்கொள்ளவும் (3) மொழிப்பயிற்சிகளளிக்கவும் (4) கட்டுரைப்பயிற்சியளிக்கவும் உரைநடையே ஏற்றதாகும். இவற்றிற்கான கற்றறி செயல்களாக உரையாடல், வினவுதலும் விடை பகர்தலும், வாய்விட்டுப் படித்தல், வாய்க்குள் படித்தல், சொல்லகராதியையும் பொருளகராதியையும் திறம்படப் பயன்படுத்தல், நூல் நிலையப் படிப்பு முதலியவற்றை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய செயல்கள் மூலம் கற்றறிந்தவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலையும் தகுந்த நிலைகளிற் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

## உரைநடைப்பாடம் கற்பிக்கும் முறை

கீழ் வகுப்புக்களில் உரையாடல் மூலம் ஏற்கனவே பட்டறிந்த (Experienced) பொருள்கள், சொற்றொடர்கள், குறைசொற்றொடர்கள், நிறைசொற்றொடர்கள் ஆகியவற்றாலமைந்த உரைநடைப் பகுதிகளையே கற்பித்தலிற் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் அறிமுகமானவற்றை ஆழ்ந்து கற்பதில் ஆர்வம் மிகும். அடுத்தபடியாகக் கையாளும் உரைநடைப் பகுதிகள் பிள்ளைகளின் முன் அனுபவ அறிவோடு எளிதில் தொடர்புறுத்தக்கூடியதாகவும் அதற்குப் பொருத்தமாகவும் இருக்க வேண்டும். மேல்வகுப்புக்களில் கற்பிக்கும் உரைநடைப்பகுதிகளில் பற்பல புதுப் புதுப் பொருள்களும், கருத்துக்களும் நிறைந்திருப்பதுடன் நடை சற்று கடினமாகவும் இருக்கலாம்.

உரைநடைப் பயிற்சியின் மூலம் (1) பாடப்பொருளறிவு (Knowledge of subject - matter), (2) புதுச்சொல்லாட்சி (Mastery of new words and phrases) ஆகிய இரண்டும் கிட்ட வேண்டும். இவற்றின் வலுவில்தான் கற்ற கருத்துக்களையும் அவற்றையொட்டிய பிறவற்றையும் எடுத்துக் கூறவோ எழுதவோ முடியும். ஆகையால் உரைநடைப்பாடம் கற்பிக்கையில் இவ்விரு பகுதிகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

முதலில் மேற்கொள்ளவேண்டிய படி உரையாடலாம். இக்கட்டத்தில் ஆசிரியர் தகுந்த வினாக்கள் மூலம் பிள்ளைகளின் முன்பாட அறிவைக்கிளறிச் சரியான விடைகளை வருவிக்க வேண்டும். இவ்வினாக்கள் அவர்களுடைய பொருளறிவு, சொல்லாளும் திறமை, கூச்சமும் அச்சமுமின்றி விடை பகர்தல், அழுத்தமும் திருத்தமுமுள்ள உச்சரிப்பு ஆகியவற்றைச் சோதிப்பவையாகவும் சொல்லாளுதலிற் பன்முறைப் பற்சியளிப்பவையாகவும் அமையவேண்டும். அவ்விடைகளை மதிப்பிடும்போது புதிய பாடப் பொருளையும் அதில் வரும் புதிய சொற்களிற் சிலவற்றையும் இடையிடையே மறைமுகமாக உணர்த்தல் மூலம் கற்பித்தலை மேம்பாடடையச்செய்யலாம். கற்பிக்கப்பட்ட பாடமாகையால் எல்லாப் பிள்ளைகளையும் கேள்வி கேட்க முடியும். மிகக் குறுகிய நேரத்தில் மிக விரைவாகவும் பயன்தரத்தக்க முறையிலும் இவ்வுரையாடற் படியை மேற்கொண்டு, புதிய பாடத்தை எடுத்தளிக்கும் படியை (Presentation) ப்புகுத்தலாம்.

புதுப்பாடப் பொருளைப்பற்றியும் அதைக் கற்கும் நோக்கத்தைப்பற்றியும் ஒருவாறு குறிப்புணர்த்தியபின்

பாடப் புத்தகத்திலிருந்து அப்பாடத்தை ஆசிரியர் நிதான மாகவும் அழுத்தமாகவும் உச்சரிப்புத் தெளிவுடனும் படித்துக்காட்ட வேண்டும். மாணவர்கள் ஒரே சமயத்தில் அவருடைய வாசிப்பை உற்றுக் கேட்டுக்கொண்டே தம் பாடப் புத்தகங்களிலும் அப்பகுதியை ஒழுங்காக உற்றுப்பார்த்து வரவேண்டும். இதன் வாயிலாக, சொற்களின் ஒலிவடிவமும் எழுத்து வடிவமும் மனத்திற் பதிய ஏதுவாகும். பிறகு மாணவர்கள் அப்பாடத்தின் சிற்சில பகுதிகளை வாய்விட்டுப் படிக்க வாய்ப்பளிக்க வேண்டும். அப்போது நேரிடும் உச்சரிப்புப்பிழை, நிறுத்தப்பிழை, சேர்க்கைப் பிழை ஆகியவற்றை ஆசிரியர் உன்னிப்பாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பாடத்தை விளக்கமாகக் கற்பிக்க முற்படுமுன் திருத்திக் காட்ட வேண்டும். இவ்வாறு படித்தல் பொருளை முற்றிலும் அறிவதற்கு முன் நிகழ்வதாகுமென்பதையும் ஆசிரியரின் மாதிரி வாசிப்பை உற்றுக் கவனித்து அப்படியே பின்பற்ற முயற்சிப்பதாகுமென்பதையும் நாம் மறக்கலாகாது. ஆகையால்தான் ஆசிரியரின் வாசிப்பு சிறந்த முறையிலிருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறகு ஆசிரியர் மறுபடியும் அப்பாடத்தை (அல்லது பகுதியை) வாக்கியம் வாக்கியமாகப்படித்து ஆங்காங்கே புதிதாகப் புகுத்தப்பட்டுள்ள அருஞ்சொற்களையும் சொற்றொடர்களையும் அழுத்தமாகப் படித்துக்காட்டி அவைகளை விளக்க முற்படவேண்டும். அத்துடன் ஏற்கனவே கற்றுத் தன்வயப்படுத்திக்கொண்ட சொற்களைக் கையாண்டுள்ள பகுதிகளில் கேள்வி கேட்டல் மூலம் மாணவர்களின் பொருளறிந்து விடையளிக்கும் ஆற்றல், சொற்களை வாக்கியங்களிலமைக்கும் திறன், ஆகியவற்றை வெளியிட வாய்ப்பளிக்க வேண்டும்.

## புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்குதல்

இப்பணியை இரண்டு முறைகளில் நிறைவேற்றலாம். அவை (1) நேர்முக எடுத்துக்காட்டு (Direct Illustration), (2) சொல் விளக்கம் (Verbal Explanation) என்பனவாகும். இவற்றைக் கையாளுவதில் பின்பற்ற வேண்டிய கோட்பாடு முதல் முறையைக் கையாள இயலாத போதே இரண்டாவது முறையைச் செயற்படுத்தவேண்டு மென்பதாகும்.

நேர்முக எடுத்துக்காட்டின் வாயிலாகப் பெயர்ச்சொற்கள், பெயர்முன் இடைச்சொற்கள் (Prepositions), பெயர்ச் சுட்டுக்கள் (Pronouns), வினைச்சொற்கள், சில சொற்றொடர்கள் போன்றவற்றை விளக்கலாம். பெயர்ச்சொற்களை விளக்க, பொருட்கள், அவற்றின் மாதிரிகள் அல்லது சித்திரங்களைப் பயன்படுத்தலாம். இரு பெயர்ச் சொற்கள் அல்லது பெயர்ச்சுட்டுக்களைத் தொடர்புபடுத்திக் காட்டப் பயன்படும் முன் இடைச் சொற்களை அப்பொருள்களின் நிலைகளை (Positions) ச்சுட்டி விளக்கலாம். நேருக்குநேர் செய்து காட்டியும் தகுந்த படங்களைக் காட்டியும் வினைச் சொற்களை விளக்க முயலலாம். பொதுவாக, புலன்களால் அறியக்கூடிய பொருட்களையும் செயல்களையும் கொண்டு புதுச் சொற்களை நேருக்குநேர் எடுத்துக்காட்டி விளக்குவதன் மூலம் பொருளறியச் செய்யலாம். அதனால் காட்சியுணர்வுடன் பொருளுணர்வு பிணைக்கப்பட்டு அவற்றின் இணைபிரியாத் தன்மையைக் குறிக்குமாறு பல விம்பங்கள் நம் மனத்திற் பதிகின்றன என்பதும் சொல் - பொருள், பொருள் - சொல் என்ற தூண்டல் - துலங்கல்களைக்

கொண்ட பயனுடைக் கற்றல் நிகழ்கின்றதென்பதும் ஏற்புடைய ஊகங்களாகும்.

நேருக்குநேர் எடுத்துக் காட்டி விளக்க இயலாத நிலைமைகளில் சொல்விளக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இதற்குதவும் முறையில் (1) தன்-திறங்கூறும் இணை வாக்கியங்கள் (Self - interpreting parallel sentences), (2) வரையறுத்தல் (Definition), (3) நேர் பொருட்சொல் (Synonym), (4) எதிர்ச்சொல் (Antonym) (5) பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்தல் என்ற வரிசையைப் பின்பற்றுவதுதான் சிறந்த முறையாகும்.

"பொன்மலர் நாற்றமுடைத்து" என்ற வாக்கியத்தில் உள்ள நான்கு சொற்களுக்கும் தனித்தனியே பொருட்சொற்கள் கூறி விளக்குவதைவிட, "தங்கத்தாலான பூவிற்கு மணமும் ஏற்பட்டதுபோல்" என்ற தன்-திறங்கூறும் வாக்கியத்தின்மூலம் முழுமைப் பொருளேயும் தனிச் சொற்களின் பொருட்களேயும் நன்கு உணர்த்தலாம். "செம்மை" என்ற பண்புச் சொல்லை "செய்யும் தொழிலில் நேர்மையைக் கடைப்பிடித்தலுக்குச் செம்மையென்று பெயர்" என்ற வரையறை வாக்கியத்தின் மூலம் விளக்கலாம். "உன்னிப்பு" என்ற சொல்லை "கவனம்" என்று கூறல் நேர் பொருட்சொல்லைக்காட்டி விளக்குவதாகும். "பேடித்தனம்" என்பதை "ஆண்மையில்லாமை" என்ற சொல்லால் விளக்கும்போது "ஆண்மை" என்ற எதிர்ச்சொல் பயன்படுத்தப்படுகிறது. "திரைப்படமெறி கருவி" என்ற சொல்லை அதைவிடப் பழக்கப்பட்ட "Film-projector" என்று குறிப்பிடுகையில் பிறமொழிச் சொல் செயற்படுகிறது.

புதுச் சொற்களை விளக்குகையில் சில கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை (1) தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்குதல், (2) கடினமான சொல்லுக்கு எளிமையான பொருள் கூறல், (3) தகுந்த சூழ்நிலைகளில் புகுத்திக் கற்பித்தல் (Situational teaching) என்பனவாகும். இவற்றுடன் கையாளப்பட்ட சொல் விளக்கங்களின் போதுமையையும் (Adequacy) விளை பயனையும் (Effectiveness) அவ்வப்போது ஒரு சில வினாக்களின்மூலமும் வாய்மொழிப் பயிற்சிமூலமும் கண்டறிந்து கொண்டு மேற்செல்லவேண்டும்.

கீழ் வகுப்புக்களில் ஒவ்வொரு முழுப்பாடத்தையும், மேல் வகுப்புக்களில் ஒரு பாடத்தின் பகுதிகள் அல்லது பத்திகளையும் பயிற்றும் அலகுகளாகக்கொண்டு கற்பிக்க வேண்டும். அவற்றை இங்ஙனம் எடுத்தளித்த பிறகு திரும்பத் தொகுத்துக்கூறும் வாயிலாக (Recapitulation)ப் பாடப்பொருளறிவையும் புதுச் சொற்களைப்பற்றிக் கற்றறிந்ததையும் வலுப்படுத்தவேண்டும். மாணவர்களின் விடைகளைக்கொண்டு பாடச்சுருக்கத்தைக் கரும்பலகையில் எழுதி அதைத் தொடர்ச்சியாக வாய்விட்டுப் படிக்கவும் குறிப்பேட்டில் பார்த்தெழுதிக்கொள்ளவும் கூறலாம்.

### புதுச் சொற்களிற் பன்முறைப் பயிற்சி

பாடங் கற்பித்தலின்போது புதுச்சொற்களை விளக்கிக் கூறுவதன் விளைவாக அவற்றை மாணவர்கள் பொருளறிந்து மனத்திற்கொள்ள முடியும். ஆனால் அவற்றைத் தாராளமாகக் கையாண்டு பேச்சிலும் எழுத்திலும் வாக்கியங்களிலமைக்கும் ஆற்றலைத் தனியாகப் பன்முறைப்பயிற்சி

யளிப்பதன் மூலமே வளர்க்க முடியும். இதற்குத் துணைக் கருவியாக மாணவர்கள் தம் சொல் - சொற்றொடர் குறிப் பேட்டை (Word-and-phrase Note-book) நன்கு தயாரித்துப் பயன்படுத்தி வரவேண்டும். இதில் மிகவும் முக்கியமான அருஞ் சொற்களே இடம்பெற வேண்டும். பார்த்தவுடன் பொருளறியும் வகையிலும் பயன்படுத்தும் விதமறியும் வகையிலும் ஆசிரியரின் எடுத்துக்காட்டு வாக்கியங்களையும் சொற்பொருள்களையும் அதிற் குறிக்கவேண்டும். இச்சொற்களும் சொற்றொடர்களும் ஒவ்வொரு பாடத்தின் கீழோ அகரவரிசையிலோ எழுதப்படலாம். பல்வகை மொழிப்பயிற்சிகளை மாணவர்கள் மேற்கொள்ளும்போது இக்குறிப்பேட்டைத் தேவைக்குத் தக்கவாறு புரட்டிப் பயன்படுத்த வேண்டும்.

## மொழிப் பயிற்சி வகைகள்

மொழிப் பயிற்சிகளிற் பலவகையுண்டு. இன்னும் பலவற்றை ஆசிரியரே ஊகித்தமைத்துக் கொடுக்கலாம். இவற்றை முதலில் வாக்கிய வடிவிலும் பிறகு சொல், எழுத்து அடிப்படைகளிலும் கையாளவேண்டும்.

## வாக்கியப் பயிற்சிகள்

(1) சொந்த வாக்கியங்களிலமைத்தல், (2) கோடிட்ட இடங்களை நிரப்புதல், (3) முடித்துக் காட்டுதல், (4) பல்வகை வாக்கிய உருவ மாற்றங்கள் (Transformation of Sentences), (5) கட்டுரைப் பயிற்சி (Essay-writing) என்பனவற்றின் மூலம் வாக்கியக்களைத் திருத்தமாகவும் விரைவாகவும் கையாளுந் திறமையை வளர்க்கலாம்.

(1) ஆழ்ந்த படிப்பின்மூலம் கற்றுத் தன்வயமாக்கிக் கொண்ட சொற்களையும் சொற்றொடர்களையும் சொந்த வாக்கியங்களில் அமைப்பதற்கு முன்னர் பதிலிடு பெட்டிகளிலிருந்து (Substitution Tables) அத்தகைய வாக்கியங்களை எளிதில் அமைக்கும் பயிற்சியளித்தலவசியம். அதனால் வாக்கியங்களைப் பிழையற அமைக்கப் பழக்கப்படுத்தலாம். அத்துடன் ஒரு சொல் அல்லது சொற்றொடரைப் பல வாக்கியங்களிலமைத்துக் கூறவும் எழுதவும் விரைவுப் பயிற்சியளிக்கலாம்.

எடுத்துக்காட்டாக,

| | | |
|---|---|---|
| உண்மையை<br>விடைகளை<br>செய்யுளை | அழுத்தந் திருத்தமாக | அளிக்கவேண்டும்.<br>எழுதவேண்டும்.<br>ஒப்பிக்கவேண்டும்.<br>எடுத்துக்கூற வேண்டும். |

என்ற பதிலிடு பெட்டியிலிருந்து பின்வரும் வாக்கியங்களை "அழுத்தந்திருத்தமாக" என்ற சொற்றொடரைப் புகுத்தித் திருத்தமாகவும் விரைவாகவும் கூற, எழுதப் பயிற்சி அளிக்கலாம்.

1. உண்மையை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூற வேண்டும்.
2. உண்மையை அழுத்தந்திருத்தமாக எழுதவேண்டும்.
3. விடைகளை அழுத்தந்திருத்தமாக அளிக்கவேண்டும்.
4. விடைகளை அழுத்தந்திருத்தமாக எழுதவேண்டும்.
5. விடைகளை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூற வேண்டும்.
6. செய்யுளை அழுத்தந்திருத்தமாக ஒப்பிக்க வேண்டும்.
7. செய்யுளை அழுத்தந்திருத்தமாக எழுதவேண்டும்.

கோடிட்ட இடங்களைச் சொற்களால் நிரப்புவதும் வாக்கியத்தை முடித்துக்காட்டலும் ஒருவகையில் ஒரே மாதிரிப் பயிற்சிகளே. ஆயினும் அவற்றிற் கிடையேயுள்ள ஒரு முக்கியமான வேற்றுமை முந்தியதில் ஒரு கோடிட்ட இடத்தில் ஒரு சொல்லையும் பிந்தியதில் தேவையான எண்ணிக்கையுள்ள சொற்களையும் உபயோகித்தலாகும். இவற்றின் கிளைப்பயிற்சியாக, தோற்றத்தில் அல்லது பொருளில் வேறுபடும் சொற்களைக் கொடுத்துத் தகுந்தவற்றைப் பொறுக்கி எழுதுமாறு செய்யலாம்.

## (4) பல்வகை வாக்கிய உருவ மாற்றங்கள்

(1) இரண்டு மூன்று தனி வாக்கியங்களை ஒன்றாக இணைத்தெழுதல், (2) ஒரு பெரிய வாக்கியத்தைச் சில (பல) தனி வாக்கியங்களாகப் பிரித்தெழுதுதல், (3) ஒரு வாக்கியத்தில் எண், இடம், காலம் இவற்றையொட்டிய மாறுதல்களைச் செய்தல், (4) செய்வினை, செயப்பாட்டு வினை மாற்றங்கள் (Active to passive), (5) அறிக்கை வாக்கிய. வினவாக்கிய மாற்றம் (Assertive and Interrogative Sentences), (6) உடன்பாடு, எதிர்மறை வாக்கியங்கள் (Affirmative and Negative sentences), (7) அறிக்கை, வியப்பு வாக்கியங்கள் (Assertive and Exclamatory sentences) என்ற பல்வேறு வாக்கிய மாற்றப் பயிற்சிகளைக் கொடுக்கவேண்டும்.

இவ்வினங்கள் ஒவ்வொன்றின் கீழும் ஓரிரு வாக்கிய மாற்றங்களை மாதிரி எடுத்துக்காட்டுகளாகக் கையாண்டு சுட்டி விளக்கிய பிறகே அவ்வகையில் பயிற்சி கொடுக்க

வேண்டும். இப் பயிற்சிகள் பெருமளவில் பார்த்து அப்படியே செய்தலை (Imitation) அடிப்படையாகக் கொண்டவையாகும்.

## (5) கட்டுரைப்பயிற்சி

இங்ஙனம் பல்வேறு வாக்கிய அமைப்பு, வாக்கிய மாற்றுப் பன்முறைப் பயிற்சிகளைக் கொடுத்தால்தான் அத்தகைய தேர்ச்சித்திறனை இன்றியமையாத அடிப்படையாகக் கொண்ட கட்டுரைப் பயிற்சியளிக்க இயலும். அப்பயிற்சி பயன்தரவல்லதாகவுமிருக்கும். இல்லையெனின் கட்டுரையின் தோற்றக்கூறு மேலோங்கியும் பிழையற்ற மொழிக்கூறு குறைப்பட்டுந்தானமைந்துவிடும்.

எடுத்தளிக்கப்படும் அல்லது மனத்தில் தோன்றும் கருத்துக்களை ஒன்றோடொன்று பிணைத்து (coherency) ஒன்றன்பின்னொன்றாகக் காரணகாரியத்தொடர்பில் (sequential) தொகுத்து எழுதுதல் கட்டுரையெனப்படும். கூறப்படும் முறை மறுத்தற்கிடமின்றி ஏற்புடையதாய் (cogent and valid) இருக்கவேண்டும். "கட்டுரை" யென்ற சொல் பொதுவாக எழுத்துருவில் தோன்றும் முயற்சி வெளியீட்டையே குறிக்குமெனினும் அம்முயற்சியைத் திருவினையாக்கவல்ல பயிற்சி வாய்மொழி வாயிலாகவே அமைய வேண்டுமென்ற அடிப்படைக் கோட்பாட்டை நாம் கடைப்பிடித்தல் இன்றியமையாதது.

வாய்மொழிப் பயிற்சி மூலம் கட்டுரையாக்கலின் பல கூறுகளையும் கற்பிக்கவேண்டும். (1) கட்டுரைப் பொருளின் அடக்கத்தையும் (Content) பரவலையும் (Extent) ஒரு

வாறு அறிதல், (2) மாணவர்கள் வினக்களுக்கு விடை பகர்வதன் மூலமும் தாமாகச்சிந்தித்து அப்பொருள் பற்றிய பல கருத்துக்களை வெளியிடல், (3) அக்கருத்துக்களை முன்பின்னுக முறைப்படித் தொகுத்துக் கூறுதல், (4) அவ்வாறு தொகுக்கப்பட்டவற்றைக் கொண்டு பத்தி பிரித்தல், (5) வாய்மொழிக் கட்டுரையாக அக்கருத்துக்களைத் தொடர்ச்சியாக எடுத்துக் கூறல் ஆகிய கூறுகளிற் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு பேச்சுமூலம் கட்டுரைப் பயிற்சியளிக்கையிற் கையாளும் தமிழ்நடைக்கும் எழுத்துக் கட்டுரையிற் கையாளும் தமிழ்நடைக்கும் சில வேறுபாடுகள் உண்டு. வாய்மூலம் வருவிக்கும் போது கருத்துக்கள் தனிச்சொற்கள் அல்லது குறை சொற்றொடர்கள் மூலம் வெளியிடப்படலாம். ஆனல் எழுதும்போது நிறை சொற்றொடர்கள் அல்லது வாக்கியங்களாலேயே கட்டுரை அமைய வேண்டும் என்பது வழக்காறாகும். வாய்மொழியில் இலக்கணத் திருத்தம் புறக்கணிக்கப்படலாம். ஆனல் எழுத்து மொழியில் அது முழுக் கவனம் பெறவேண்டும். வாய்மொழிப் பயிற்றலில் கொச்சைச் சொற்களும் (slang) அரைகுறையான சொற்களும் புகுந்து விடலாம். எழுதுங் கட்டுரையில் அவற்றிற்கிடமில்லை. ஆகவே இவற்றைக் கருத்திற்கொண்டு வாய்மொழிமூலமும் எழுத்துமூலமும் கட்டுரைப் பயிற்சியளிக்க வேண்டும்.

கற்பிக்கவேண்டிய கட்டுரை வகைகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்: கூற்றுக்கட்டுரை (Narrative Essay), விளக்கக் கட்டுரை (Expository Essay), தருக்கக் கட்டுரை

(Argumentative Essay), புகழ்ச்சிக் கட்டுரை (Commendatory Essay), வருணனைக் கட்டுரை (Descriptive Essay), திறனாய் கட்டுரை (Critical Essay), சிந்தனைக் கட்டுரை (Reflective Essay), ஆராய்ச்சிக் கட்டுரை (Research Essay), கற்பனைக் கட்டுரை (Imaginative Essay). கட்டுரை எழுதக் கற்பிப்பதில் (1) கட்டுக்குட்பட்ட (controlled), (2) கட்டுக்குட்பட்டும் உட்படாமலுமுள்ள (Partly controlled and partly uncontrolled), கட்டுப்பாடுகளில்லாத (Free or uncontrolled) ஆகிய மூன்று படிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வகையில் பார்த்தால் கீழ் வகுப்புக்களிலிருந்தே தலைப்புக்களைக்குறிப்பிட்டு உடனே கட்டுரை எழுதச் சொல்லும் நடைமுறை எவ்வளவு முறையற்றதும் பயனற்றதுமாகுமென்பது நன்கு விளங்கும்.

## (1) கட்டுக்குட்பட்ட கட்டுரை

இவ்வகைக் கட்டுரைப் பயிற்சிகளை நான்காம், ஐந்தாம் வகுப்புக்களில் கொடுக்கலாம். இவற்றிற்கான பொருள்களை உரைநடைப் பகுதி, சமூகப் பாடம், ஆதாரத்தொழில் பற்றிய பகுதிகள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கலாம். பெரும்பாலும் இவற்றையொட்டிய வினாக்களுக்குரிய விடைகள் தொடர்ச்சியாக அமையுமாறு கொடுப்பதன் மூலமும் தகுந்த வாக்கியமொழிப்பயிற்சிகளைக் கொடுப்பதன் மூலமும் மாணவர்களின் கட்டுரைகளை உருவாக்கலாம்.

## (2) கட்டுக்குட்பட்டும் உட்படாமலுமுள்ள கட்டுரை

இத்தகைய கட்டுரைப் பயிற்சியை ஐந்தாம் வகுப்பின் பிற்பகுதியிலும் ஆறும் வகுப்பின் தொடக்கத்திலும் மேற்கொள்ளலாம். கட்டுரைப் பொருள்கள் மாணவர்களின்

அனுபவங்களைச் சார்ந்தும் அவற்றிலிருந்து சற்று மாறு பட்டுமிருக்கலாம். நேரிற்கண்ட அல்லது கேட்டவற்றைப் பற்றியும் அவற்றைப் போன்ற வேறு சிலவற்றையும் பற்றியும் கட்டுரை வரையச் சொல்லலாம். கீழ் வகுப்புக் களில் கட்டுரைப் பயிற்சியின் மூலம் பெற்ற பயனைக்கட்டுக் குட்படுத்தாத வகையிலும் தற்போது புகுத்தும் மாறுதல் களைக் கட்டுக்குட்படுத்தியும் மொழிப் பயிற்சிகளைக் கையாண்டு கட்டுரையாக்கப் பயிற்சியின் இரண்டாவது படியை மேற்கொள்ளலாம்.

### (3) கட்டுப்பாடுகளில்லாத கட்டுரை

தமிழ் மொழிப் பாடத் திட்டத்தின்படி சாதாரணமாக ஒருமைப்படுத்தப்பட்ட தொடக்கப்பள்ளி (Integrated Elementary School), ஆதாரப்பள்ளி ஆகியவற்றின் ஏழாண் டுப்படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவ மாணவியர்கள் ஒவ்வொருவருக்கும் இவ்வகைக் கட்டுரையை எழுதும் ஆற்றல் இருக்க வேண்டும். அதனால் மேற் குறிப் பிடப்பட்டுள்ள எல்லாவகைக் கட்டுரைகளையும் எழுதக் கூடிய திறமையிருக்க வேண்டுமென்பது பொருளல்ல. உதாரணமாக, எல்லா மாணவர்களிடமும் (கல்லூரி நிலை யிற்கூட) கற்பனைக் கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரை ஆகிய வற்றை எதிர்பார்ப்பதற்கில்லை. ஆயினும் இவற்றிலும் ஒருவாறு வழிகாட்ட இயலும் என்பதையும் அதன்மூலம் அத்தகைய ஆற்றல் படைத்த மாணவர்களைத் தூண்டி ஊக் குவிக்க முடியும் என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். இவற்றுடன் கருத்தைச் சுருக்கி எழு துதல் (Precis Writing), பழமொழிகளை விரிவாக்கிப்

பொருளுரைத்தல் (Elaboration) ஆகிய பயிற்சிகளையும் ஏழாவது வகுப்பில் (VII Standard) புகுத்தலாம்.

கட்டுரை யெழுதுவதற்கு முன் (1) தலைப்பைப்பற்றிய முன்னறிவுப் பொருளை ஞாபகப்படுத்திக்கொள்ளுதல், (2) மேற்கொண்டு தகவல்களை நூல்களிலிருந்தும் பிறரிட மிருந்தும் அறிதல், (3) இவ்வாறு திரண்ட பொருள்களை ஒழுங்குபடுத்தி உட்தலைப்புக்களின் (Sub-headings) கீழ்க் கொண்டுவருதல், (4) கட்டுரையை முறைப்படி எழுதுதல் என்ற கற்றறி செயல்களை மேற்கொள்ளவேண்டும்.

கட்டுரையாக்கத்தில் பொருத்தமான சொல்லாட்சி (choice diction), வாக்கிய அமைப்பு, பத்திப் பாகுபாடும் தொடர்புறு தன்மையும், முழுக்கட்டுரையின் ஒருமைப்பாடு முதலியன கவனம் பெறவேண்டும். ஒவ்வொரு பத்தியும் ஒரு குறிப்பிட்ட கருத்தை அல்லது உட்தலைப்பையொட்டியும் முழுக்கட்டுரை அதன் தலைப்பிற்குப் பொருத்தமாயு மிருக்கவேண்டும். கையாளும் உரைநடை விரும்பிப் படிக்கக்கூடியதாயும் தெளிவாயும் திட்டவட்டமாயு மிருக்கவேண்டும். சுற்றி வளைத்துக் கூறவோ அவசியமில்லாத சொற்களையும் சொற்றொடர்களையும் புகுத்தவோ கூடாது. தகுந்த மரபுச் சொற்றொடர்களுக்கு (Idioms) அதில் உரிய இடமுண்டு.

இவ்வாறு பல கருத்துக்களையும் மனத்திற்கொண்டே தொடர் கட்டுரைப் பயிற்சியளிக்கவேண்டும். தொடக்கத்தில் படங்கள் வாயிலாகவும் (Picture-reading) படக் கதைகள் (Stories in Picture) வாயிலாகவும் புலனீடாகக் கருத்துக்களைத் தூண்டவல்ல உதவியளிக்கலாம். பிறகு படித்த

கதைகளையும் புதிய கதைகளையும் சுருக்கி எழுதச்செய்யலாம். அடுத்தபடியாக, பொதுப் பொருள்களை (General topics)ப் பற்றித் தொகுத்தோ சிந்தித்தோ அல்லது கற்பனை செய்தோ அமையும் கட்டுரைகளை மேற்கொள்ளச் செய்ய லாம். வகுப்புக்களின் தேர்ச்சித் தரத்திற்கிணங்கப் பொறுக்கி யெடுக்கப்பட்ட முன்மாதிரிக் கட்டுரைகளை (Model Essays) ஆசிரியர் நிதானமாகவும் அழுத்தமாகவும் படித் துக்காட்டி அவற்றை உற்றுக் கேட்டறிந்தவற்றையும் மனத் திற் கொண்டு கட்டுரை யெழுதும்படி செய்தல் ஒரு சிறந்த நடைமுறை ஏற்பாடாகும்.

## கடிதமெழுதப் பயிற்றல்

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கடிதமெழுதுதல் ஒரு முக்கியமான அலுவலாகும். ஆனல் அதைப் பலர் மேற் கொள்வதுபோல் அசட்டையாகவும் அவசரமாகவும் நிறை வேற்றக் கூடாது. கட்டுரையைச் சார்ந்த சில சிறப்பிலக் கணங்கள் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. அவ்வாறே கடித மெழுதுதலிலும் சில இலக்கணங்கள் காணப்பெறவேண் டும். இவ்விலக்கணங்களைக் கொண்டுள்ள சிறந்த கடிதங் களுக் கெடுத்துக்காட்டாக, ஆங்கில எழுத்தாளர் வில்லியம் ஹாஸ்லிட் (William Hazlitt) என்பார் தன் புதல்வனுக் கெழுதிய கடிதங்களையும் நமது பிரதமர் ஜவஹர்லால் நேரு வும் காலஞ்சென்ற மகாகனம் சீனிவாச சாஸ்திரியும் தத்தம் புதல்விகளுக் கெழுதிய கடிதங்களையும் குறிப்பிடலாம்.

ஒரு விதத்தில் பார்த்தால் நம் பள்ளிக்கூடங்களில் கட்டுரைப் பயிற்சிக்குச் செலவிடும் நேரத்தில் ஒரு பகுதி யைக் கடிதம் வரைதற் பயிற்சிக்கு ஒதுக்குதலின் இன்றி

யமையாமை விளங்கும். ஏனென்ருல் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் கட்டுரை எழுதுதற்கான அவசியம் மிகவும் அற்பமாகவே இருக்கும். ஆனல் கடிதமெழுதுவதற்கான தேவைகளும் நிலைகளும் பற்பலவாகும். வகுப்பு ஆசிரியருக்கும் தலைமையாசிரியருக்கும் எழுதுதல், தோழர்களுக்கெழுதுதல், பெற்ருேர் சுற்றத்தார்களுக்கெழுதுதல், வேலைக்கு விண்ணப்பித்தல், அதிகாரிகளுக்குத் தேவைகளையும் குறைகளையும் எடுத்தறிவித்தல் போன்ற நோக்கங்கள் நிறைவேறக் கடிதமெழுதும் பயிற்சியும் ஆற்றலும் இருக்கவேண்டும். இக்காரணத்தை முன்னிட்டுத்தான் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள கல்வித்துறைப் பாடத்திட்டத்தில் "கடிதமெழுதுதல்" என்ற பொருள் சிறப்பாக வலியுறுத்தப் பட்டுள்ளது.

ஒரு கடிதத்தின் அமைப்பில் காணப்படவேண்டிய பகுதிகள் (1) அதன் மேல் வலக்கோடியில் எழுதவேண்டிய இடத்தின் பெயரும் தேதியும். (2) இவற்றிற்குச் சற்றுக் கீழாக இடக் கோடியில் கடிதம் பெறுவோரை அன்பாக அல்லது மரியாதையாக விளித்துத் தொடங்குதல். (3) செய்தி, (4) செய்தியினடியில் வலக்கோடியில் எழுதவேண்டிய உறவு மொழியும் எழுதுபவரின் கையெழுத்தும், (5) முகவரி. இவை தவிர, விண்ணப்பக் கடிதங்களில் மேல் இடக்கோடியில் விண்ணப்பிப்பவர், விண்ணப்பிக்கப் படுபவர் ஆகிய இருவருடைய முகவரிகளையும் பதிப்பகங்கள், புத்தக விற்பனைக் குழுக்களுக் கெழுதும் கடிதங்களில் மேல் இடக்கோடியில் இடம், நாள் குறிப்பிடப்பட்டுள்ளதற்குச் சிறிது கீழாக, அவற்றின் முகவரிகளையும் எழுதவேண்டும்.

இவற்றையெல்லாம் வாய்மொழியாக எடுத்துக் கூறுவதால் மட்டும் கடிதமெழுதக் கற்பித்துவிட முடியாது. ஒவ்வொரு வகைக் கடிதப் பயிற்சிக்கும் முன்னதாக, நன்கு எழுதப்பட்ட ஒரு உண்மைக் கடிதத்தை முன் ஆயத்தமாகத் தேர்ந்தெடுத்து அதை மாணவர்களுக்குப் புலனீடாகக் காட்டவேண்டும். அதன் பல பகுதிகள், சொல்லமைப்பு, கருத்துக்கள், நிறுத்துக் குறிகள், சொற்சுருக்கங்கள் அல்லது குறியீடுகள் ஆகியவற்றை அழுத்தமாகச் சுட்டிவிளக்கி மாணவர்களை உற்றுநோக்கச் செய்ய வேண்டும். இந் நேரில் காட்டி விளக்கும் முறைக்கு உதவியாக, அக் கடிதத்தை அப்படியே படிப்படியாகக் கரும்பலகையில் எழுதிக்காட்டி உருவாக்கினுல் கடிதமெழுதக் கற்றலின் தரம் மிக்க மேம்பாடடையும். முதலில் மாதிரிக் கடிதத்திலுள்ள பெயர், தேதி முதலியவற்றை மட்டும் மாற்றியும் பிறகு முழுவதையும் மாற்றியும் கடிதமெழுதச் செய்யலாம்.

## கருத்தைச் சுருக்கி எழுதுதல்

கேட்டவற்றையும் படித்தவற்றையும் சுருக்கி யறிதலிற் பயிற்சி பெற வேண்டியது மிகவும் அவசியமாகும். விரிந்த முறையில் மேற்கொள்ளும் உடன்நூல் படிப்பின் மூலமும் நூல் நிலையப் படிப்பின்மூலமும் (Supplementary and Library Reading) பெறும் பொருளறிவைத் திறம்படச் சுருக்கி வரைதலுக்கு அப்பயிற்சி மிகவும் உதவியாயிருக்கும். அத்தகைய சுருக்கம் படிக்கப்பட்ட பகுதியில் சுமார் மூன்றிலொருகூருக இருக்குமாறு எழுதுவதை வழக்காருகக் கொள்கிறோம். எனினும் சுருக்கவுரையின் அளவு எதாயிருந்தாலும் முக்கியமான கருத்துக்களை அது கொண்டிருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். இப்பயிற்சியின் பயனை நன்கு

பெறக்கூடிய வாழ்க்கைத் தொழில்களில் சிலவாக (1) மூல நூல்களைச் சுருக்கி வரைதல், (2) அறிஞர்கள், வல்லுநர்கள் ஆகியோரின் வாய்மொழி, எழுத்துச் சொற்பொழிவுகளையும் கட்டுரைகளையும் சுருக்கிக் குறிப்பெடுத்தல், (3) செய்தித் தாள் அலுவலகங்களில் பதிப்பாசிரியப் பணியாற்றல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்,

சுருக்கி எழுதும் பயிற்சியில் கவனம் பெறவேண்டிய கூறுகள் (1) தெளிவு, (2) சுருக்கம், (3) எளிமை, (4) நேர்மையான நடை (Straightforward style), (5) ஐயந்திரிபின்மை ஆகியனவாம்.

சுருக்கி வரைதலில் இவை காணப்படவேண்டுமானல் ஆசிரியர் பின் வரும் நடைமுறையைப் பின்பற்றி மாணவர்களைப் பயிற்றவேண்டும்.

மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள பகுதியைப் பல தடவைகள் படிக்கவேண்டும். ஒவ்வொரு முறையும் ஒரு சில கருத்துக்கள் அவர்களுடைய கவனத்தைப்பெறும். பிறகு ஆழ்ந்த படிப்பின் வாயிலாக நுண்ணிய கருத்துக்களையும் அறிய முயலவேண்டும். நிலைமைசார் கற்றல்மூலமும் அகராதியைப் பயன்படுத்துவதன் மூலமும் (Situtaional learning and dictionary habit) அவ்வறிவைப் பெறவேண்டும். பிறகு அவற்றை மாணவர் தம் சொந்த நடையில், உள்ள கருத்துக்களை மாற்றுமலும் புதிய கருத்துக்களைப் புகுத்தாமலும் சுருக்கி எழுதவேண்டும். அதை ஒரு முறை முழுவதும் படித்துப்பார்த்து வேண்டிய திருத்தங்களைச் செய்யவேண்டும். மூலப்பகுதியில் எவ்வளவு இருக்க வேண்டுமென்று நிபந்தனையிற் கூறப்பட்டுள்ளதோ அதையும் நிறைவேற்ற

வேண்டும். கடைசியாக, இவ்வாறு திருத்தப்பட்ட சுருக்க வுரையைத் தெளிவாகவும் அழகாகவும் அடித்தல் திருத்த மின்றியும் அமைத்தெழுத வேண்டும். அவ்வாறு இறுதியாக வரையப்படும் உரையில் முக்கியமான கருத்துக்கள் இடம் பெற்றிருக்கவேண்டும் என்பதையும் முக்கியமில்லாத கருத் துக்களிற் சில விடப்பட்டிருக்கலாம் என்பதையும் நாம் மாணுக்கர்களுக்கு வலியுறுத்திக் கூறவேண்டும்.

## விரிவாக்கிப் பொருளுரைத்தல்

பழமொழி அல்லது அறிவுரை வாக்கியத்திற் புதைந் துள்ள கருத்தை ஒருசில வாக்கியங்களைக் கொண்ட பத்தி யாகவோ ஒரு சிறு கட்டுரையாகவோ விரிவாக்கிப் பொருள்கூறும் ஆற்றல் தனிப்பட்டதொன்ருகும். பரந்த பொது அறிவும் வலுவான சொல்லாட்சியும் இவ்வகைப் பயிற்சியைப் பயனுறக் கையாள்வதற்கு இன்றியமையாதன வாகும். குறிப்பிட்ட பழமொழியில் அடங்கிய திரண்ட கருத்தைப் பெருக்கிப் பல கிளைக் கருத்துக்களாக வாக்கிய வடிவில் எழுதும்போது அவற்றின் ஒருங்கமை பொருள் பழமொழி குறிக்கும் பொருளுக்கு ஈடாயிருத்தல் அவசியம். இவ்வகையில் அமைந்த விரிவுரையை மீண்டும் மீண்டும் படித்து மனநிறைவு அடைய வேண்டும்.

இவ்வாறு விரிவுப் பொருள் எழுதுதற்குப் பொருத்த மான பழமொழிகளிலும் வாக்கியங்களிலும் சில பின் வரு மாறு:

1. அடிக்க அடிக்க அம்மியும் நகரும்.
2. அகத்தினழகு முகத்தில் தெரியும்.
3. அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்.

4. அன்பே கடவுள்.
5. இன்றென்பதும் நாளையென்பதும் இல்லையென் பதற்கடையாளம்.
6. உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்.
7. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமை.
8. வருமுன் தடுத்தலும் வந்தபின் காத்தலும்.
9. வெளுத்ததெல்லாம் பாலல்ல.
10. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

இப்படிப் பல்வேறு மொழிப் பயிற்சிகளை வகுப்பிற்கும் மாணவர் தேர்ச்சித் தரத்திற்குமேற்றவாறு முறையாக மேற் கொண்டால் மாணவரின் புதுச் சொல்லாட்சி, வாக்கிய அமைப்பு, கருத்துத் தெளிவு, கட்டுரையியற்றும் திறன் ஆகியவை பெரிதும் முன்னேற்றமடையும்.

முதல் வகுப்பிலிருந்து கட்டுரைப் பயிற்சியின் வளர்ச்சி யைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

## முதல் வகுப்பு

படித்துக் கற்ற சொற்களையும் வாக்கியங்களையும் பார்த்து அப்படியே தெளிவாகவும் பிழையின்றியும் எழுது தல்.

## இரண்டாம் வகுப்பு

முதல் வகுப்பில் மேற்கொண்ட பயிற்சியுடன் படித்த பாடங்களில் சிறு சிறு வினாக்களுக்கு விடையெழுதும் பயிற்சி யையும் சேர்த்துக்கொள்ளலாம்.

## மூன்றும் வகுப்பு

தமிழ் மொழிப் பாடத்திலும் மற்றப் பாடங்களிலும் வினக்களுக்கு இரண்டு மூன்று வாக்கியங்களில் விடையளிக்குமாறு பயிற்சியளிக்கலாம். இத்துடன் அவ்வப்போது பார்த்தெழுதும் பயிற்சியையும் மேற்கொள்ள வேண்டும்.

## நான்காம் வகுப்பு

வினக்களுக்கு மூன்று நான்கு வாக்கியங்களில் விடையளிக்கும் பயிற்சியுடன் சொந்த அனுபவங்களைக் கூறும் சிறு சிறு பத்திகளெழுதும் பயிற்சியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## ஐந்தாம் வகுப்பு

மாணவர்க்கறிமுகமான பொருள்களைப்பற்றிச் சிறு கட்டுரைகள், சொந்த அனுபவங்கள், நிகழ்ச்சிகள் பற்றிக் கடிதமெழுதுதல், கதைப் படத்தைப் பார்த்துக் கதை எழுதுதல், திருவிழாக்களைப்பற்றிக் கூறுதல், பழக்கப்பட்ட பறவைகளையும் விலங்குகளையும் பற்றிக் கட்டுரை வரைதல், பார்வையிட்ட இடங்களையும் ஊர்களையும் பற்றிய விவரங்கூறுதல் போன்ற வகைகளிற் பயிற்சியளிக்கலாம்.

இவ்வாறு முதல் ஐந்து வகுப்புக்களிலளிக்கும் படிப்படியான கட்டுரைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு அடுத்த இரண்டு வகுப்புக்களில் கட்டுப்பாடுகளற்ற கட்டுரைப் பயிற்சியைச் சிறுகச் சிறுகப் புகுத்தவேண்டும். கட்டுரைப் பொருள்கள் சொந்த அனுபவங்கள், அவற்றையொட்டியவை, எளிதாகச் சிந்தித்தெழுதக்கூடியவை, ஓரளவு கற்பனைக் கூறுள்ளவையாக இருக்கலாம். இவ்வகை

யில் ஏழாம் வகுப்பின் இறுதியில் மாணவர்கள் பின் வருவனவற்றை வரைவதில் தேர்ச்சியும் திறனும் பெற்றிருக்கவேண்டும்:

(1) எடுத்துக்கூறும் கட்டுரை, (2) வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை, (3) வருணனைக் கட்டுரை, (4) விளக்கக் கட்டுரை, (5) இளைஞர் இயக்கங்களைப் பற்றிய கட்டுரை, (6) சுருக்கக் குறிப்பெடுத்தலும் விரித்தெழுதுதலும், (7) கொடுத்த தலைப்பைப் பற்றிய கட்டுரை, (8) மேற்கோள் நூல்களிலிருந்து பொருள் திரட்டி எழுதும் கட்டுரை, (9) பொருள், நடை ஆகிய இரு அம்சங்களிலும் உயர்ந்த கடிதமெழுதுதல், (10) தன்வரலாற்றுக் கட்டுரை (உண்மையானதும் கற்பனையானதும்),

இனி கட்டுரையைத் திருத்துவதைப்பற்றிய நடைமுறையைக் குறிப்பிடலாம்.

## கட்டுரை திருத்துதல்

கொள்கையளவில் போதிய வாய்மொழிப் பயிற்சியளித்தபின்னர் எழுதப்படும் கட்டுரையில் பிழைகள் குறைந்தே காணப்படும். எனினும் மாணவர்களின் தேர்ச்சி, திறமை வேறுபாடுகட்கிணங்கவும் கட்டுரைப் பொருளின் தன்மைக்குத் தக்கவாறும் பிழைகளேற்பட ஏதுவுண்டு. ஆகையால் அவற்றைத் திருத்துவதில் ஆசிரியர் முன்கூட்டியே தடுக்கும் (Forestalling) முறைகளையும் ஏற்பட்ட பிழைகளைத் திருத்திக் கற்பிக்கும் முறைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

முதலில் கட்டுரை திருத்தலிற் கடைப்பிடிக்கத் தகாத வற்றைக் குறிப்பிடவேண்டும். பிழைகளைச் சுட்டிக் காட்டுத லுடன் நிறுத்திவிடல், புரியாதபடி திருத்துதல், மாணவர் கள் கவனத்தைப் பெருமல் திருத்துதல், பல கட்டுரைகளை ஓரேயடியாகத் திருத்திக் கொடுத்தல், கட்டுரைகளை ஊன்றிப் படிக்காமலும் திருத்தாமலும் கையெழுத்திட்டுக் கொடுத்தல் ஆகிய பழக்கங்கள் விரும்பத் தகாதன என்பதோடு மாண வர்களின் கட்டுரையாக்கத் திறனைத்தடைப்படுத்தக் கூடியன வுமாகும் என்பதை ஆசிரியர் ஞாபகத்திற்கொள்ள வேண் டும். இவ்வாறு கவனக் குறைவான அல்லது கவனமற்ற முறையில் பல கட்டுரைகளைக் கொடுத்ததாகப் பதிவு செய் தலைவிட, சில பொறுக்கியெடுத்த கட்டுரைகளைக் கொடுத்து ஒழுங்காகத் திருத்திக்காட்டினல் மாணவர் பெரிதும் பய னெய்துவர்.

கட்டுரை திருத்தலில் நற்பயன் விளைவிக்கவல்ல சில முறைகள் பின் வருமாறு:

(1) மாணவர் முன்னிலையில் பிழைகளைத் திருத்துதல். நம் வசமுள்ள நேரத்தையும் மாணவர்களின் உண்மைத் தேவைகளையுமொட்டித் தனி மாணவர்களையோ சிறு மாணவக் குழுக்களையோ பக்கத்தில் வைத்துக்கொண்டு பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்தலாம்.

(2) கீழ் வகுப்புக்களில் எழுத்துப்பிழை, சொற்பிழை, இலக்கணப்பிழை ஆகியவற்றை முற்றிலும் திருத்தமாக எழுதிக் காட்டவேண்டும். கட்டுரை திருத்தற்கென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள குறியீடுகளை மேல் வகுப்புக்களிற்

கையாளலாம். ஆனால் முன்கூட்டியே அவற்றின் பொருள்களை மாணவர்கள் நன்கறிந்திருக்கவேண்டும்.

(3) பெரும் எண்ணிக்கையிற் காணப்படும் பிழைகளை ஆசிரியர் குறிப்பேட்டில் குறித்து வைத்து வகுப்பில் கரும் பலகையில் திருத்திக் காட்டுதல் நல்ல முறையாகும்.

(4) ஒருசில பிழைகளே திருத்தப்பட்டிருந்தால் அவற்றை மாத்திரம் மறுபடி சரியாக எழுதலாம். பெருமளவில் திருத்தப்பட்டிருந்தால் கட்டுரை முழுவதையும் திருத்தமாக எடுத்தெழுதவேண்டும்.

(5) ஒவ்வொரு கட்டுரையையும் எழுதத் தொடங்குமுன் ஓர விளிம்பின் (Margin) இடது மேற்கோடியில் கட்டுரையெண், எழுதுந்தேதி ஆகியவற்றைக் குறிக்கவேண்டும். குறிப்பேட்டின் முன்பக்கமொன்றில் கட்டுரையெண், தேதி, தலைப்பு, பெற்ற மதிப்பு எண் அல்லது தரம் ஆகியவற்றைக் காட்டும் அட்டவணை தயாரித்து அதை அவ்வப்போது நிறைவாக்கவேண்டும்.

(6) திருத்தி எழுதுவது கட்டுரைக்கடியில் தொடர்ச்சியாகவோ கட்டுரைப் பக்கங்கட்கெதிர்ப்பக்கங்களிலோ அமையலாம்.

# அத்தியாயம் X

## மொழியின்கலை நுட்பம்

### இலக்கணம் கற்பித்தல்

வழக்கிலுள்ள ஒரு மொழியின் இரு பெருங்கிளைகள் பேச்சும் எழுத்துமாகும். ஹிந்தி போன்ற மொழிகளில் பேச்சுக்கூறு பெருகும் அளவிற்கு எழுத்துக்கூறு பெருகாததையும் வடமொழிபோன்ற வழக்கிறந்த மொழிகளில் எழுத்துக்கூறே நிலவி வருவதையும் நாம் அறிவோம். அவ்வாறே தமிழ், ஆங்கிலம் போன்ற வழக்கு மொழிகளின் வளர்ச்சியில் பேச்சு அம்சமும் எழுத்து அம்சமும் கைகோத்து முன்னேறுவதையும் பார்க்கிறோம். பேச்சு மொழியில் சிற்சில நிலைகளில் காணக்கூடிய விலக்குரிமைகளையும் (Licence) எழுத்து மொழியில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளையும் முறைகளையும் வகுத்துக் கொடுக்கும் மொழிப் பகுதிக்கு இலக்கணம் என்று பெயர். ஆகையால் மொழிவளர்ச்சியைப் பின்பற்றியும் அதை ஆதாரமாகக் கொண்டுமே இலக்கணம் உருவாக்கப்படல் இன்றியமையாதென்பதை நாம் ஞாபகத்திற்கொள்ளவேண்டும். சுவரின்றிச் சித்திரமெழுத இயலாததுபோல் இலக்கியமின்றி இலக்கணமில்லை. உருப்பெற்ற இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்தலும் வகுக்கப்பட்ட இலக்கணத்தைப் பிறவற்றில் செயற்படுத்தலும் இலக்கணம் பயிற்றலின் இரு பகுதிகளாயமைய வேண்டும்.

### இலக்கணம் கற்றலின் நோக்கங்கள்

இலக்கணக் கண்ணாடி கொண்டுதான் இலக்கியச்சொல் நயம், கருத்துநயமாகியவற்றைச் சுவைத்து உணரமுடியும்.

அதன் உதவியைக்கொண்டு மொழியின் அமைப்பைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் திருத்தமாகப் பேச, எழுதவும் முடியும். இலக்கணம் மொழியின் மரபுத் தன்மையையும் வளர்ச்சிப் போக்கையும் எடுத்துக் கூறுகிறது; பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் வரையறுத்துக் கொடுக்கிறது; செய்யுள் நலமறிதற்கின்றியமையாத சொற்பிரித்தல், அசைபிரித்தல்; அணிகள் முதலியவற்றைப்பற்றித் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இவ்வகைப் பயன்கள் மாணவர்களுக்குக் கிட்டச்செய்யும் நோக்கங்கள் ஈடேறுவதற்குகந்த முறையில் இலக்கணங் கற்பிக்கவேண்டும்.

ஒரு காலத்தில் இலக்கணங் கற்பித்தலில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. இலக்கண விதிகள், சூத்திரங்கள் ஆகியவற்றை உருப்போட்டு ஒப்பிப்பதில் பயிற்சியளிக்கப் பட்டது. ஆகையால் மாணவர்கள் அவற்றைப் பொருளறியாமலும் செயற்படுத்தத் தெரியாமலும் வேம்பாகக்கருதி இலக்கணத்தைக் கற்றனர். இடைக்காலத்தில் இந்நிலை மாறி, திருத்தமான மொழிப் பழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டால் அம்மொழியிலேயே இலக்கணமும் அமைந்து விடுமாதலால் தனியாக இலக்கணம் கற்பித்தலுக்கு அவசியமில்லை என்ற கருத்திற்கிணங்க இலக்கண போதனை அறவே கைவிடப்பட்டது. இதன் விளைவாக, கையாளும் மொழி சரியா தவரு என்றறியவோ கற்கும் மொழியின் சிறப்பமைப்பைச் சுவைத்தின்புறவோ வாய்ப்பின்றிப் போய் விட்டது. ஆகவே இவ்விருவகைப்பட்ட கருத்துக்களுக்கும் நடுநிலைமையாக, திருத்தமான மொழி கற்பித்தலை முதன்மையாகவும் அதை அடிப்படையாகக் கொண்டு இலக்கணங்கற்பித்தலை இரண்டாவதாகவும் மேற்கொள்கிறோம்.

அதிலும் மாணவர்களின் திறமைக் கேற்றவாறும் பொது மையவட்ட முறையிலமைக்கப்படும் வகுப்புப் பாடத் திட்டங் களுக்கேற்றவாறும் பல படிகளில் இலக்கணங் கற்பிக்க வழி வகை செய்கிறோம்.

இனி, முதல் வகுப்பிலிருந்து இலக்கணம் பயிற்றலின் வளர்ச்சியைப்பற்றிச் சிறிது அறியலாம்.

முதல் இரண்டு அல்லது மூன்று வகுப்புக்களில் இலக் கணத்தை மறைமுகமாகக்கூடக் குறிப்பிடவேண்டாம். புத் தகப் பாடங்கள் மூலமும் சிறந்த வாய்மொழிப் பயிற்சி மூல மும் சிறு குழந்தைகள் திருத்தமான வாக்கியங்கள் பலவற் றைக்கற்று முழுமையாகத் தன்வயப்படுத்திக்கொள்ள வேண்டும். பேசும்போதும் எழுதும்போதும் அவற்றை அப்படியே குற்றங் குறையின்றி மீட்டுக்கொணர்ந்து கையா ளும் திறன்பெறும் வகையில் பன்முறைப் பயிற்சியும் மொழிப் பயிற்சிகளுமளிக்கவேண்டும். இலக்கணக் கலைச் சொற்களை (Grammatical terminology) உபயோகிக்காமல் சொற்களும் சொற்றொடர்களும் வாக்கியங்களில் அமைந்து ஆற்றும் பணி வேறுபாடுகளைக்கொண்டு அவற்றை இனம் பிரித்தலே இவ் வகுப்புக்களில் இலக்கணப் பயிற்சியாக அமையவேண்டும்.

மூன்றும் வகுப்பின் பிற்பகுதியிலிருந்து இலக்கணத் தின் கூறுகளைச் சிறுகச் சிறுகப் புகுத்த வேண்டும். தமிழ் எழுத்துக்களை வரிசையாக உச்சரிக்கவும் எழுதவும் பயிலு தல்; எழுத்து வகைகள் (உயிரெழுத்துக்கள்; மெய்யெழுத் துக்கள்; உயிர்மெய்யெழுத்துக்கள்; ஆய்தவெழுத்து); எழுத்து வகைகள் (குறில், நெடில், சுட்டு, வினா ஆகியவை);

மூவிடப் பெயர்கள் (தன்மை, முன்னிலை, படர்க்கை); திணை; பால்; காலம்; எழுவாய்; பயனிலை; செயப்படு பொருள் ஆகியவற்றைப் புத்தகத்திலுள்ள உரைநடைப் பாடங்களையொட்டிக் கற்பிக்க வேண்டும். அதுவும் இலக்கணத்தை முறைமை தழுவியல்லாமல் செயற்படுத்தும் வகையில் (Not formal grammar but applied grammar) ஓரளவு கற்பித்தால் போதும். ஏனெனில் இவ்விலக்கண உருப்படிகளை நாம் நான்காம் வகுப்பில் தொடங்கிப் பொதுமையவட்ட முறையில் மேல் வகுப்புக்களிலும் விரிவாகக் கற்பிக்கப்போகிறோம்.

ஐந்தாம் வகுப்பு இலக்கணப் பாடம் நான்காம் வகுப்பிற் கற்றவற்றைப் பன்முறைப்பயிற்சி மூலம் வலியுறுத்தும் வகையில் அமைவதோடு நிறைசொற்றொடர்; குறைசொற்றொடர்; வினையெச்சம்; பெயரெச்சம்; வாக்கிய வகைகள் (உடன்பாடு, எதிர்மறை, வினா, செய்தி, ஏவல், உணர்ச்சி முதலிய தன்மைத்தானவை); சொற்றொடரைப் பிரித்தெழுதுதலும், சொற்களைச்சேர்த்தெழுதுதலும் ஆகியவற்றை மையமாகக்கொண்டு நடைபெறவேண்டும்.

முதல் ஐந்து வகுப்புக்களில் மொழிப் பயிற்சியும் செயற்படுத்தப்பட்ட இலக்கணப் பயிற்சியும் பெற்று ஆறும் வகுப்பில் புகும் மாணவர்களிடம் நன்கு பேசி, எழுதும் திறன் உருவாகியிருக்கும். திருத்தமான மொழிபற்றிய போதிய உணர்வுக்கூறும் அவர்களுடைய முன்னறிவுத் திரட்சியில் இடம் பெற்றிருக்கும். அதை அடிப்படையாகக்கொண்டும் நன்கு பயன்படுத்தியும் ஆறும் ஏழாம் வகுப்புக்களில் இலக்கணத்தை ஓரளவு முறைமை தழுவிய வகையில் கற்பிக்கலாம். ஆனால் கற்றலை வலுப்படுத்தும்

பொருட்டு அடிக்கடி படித்த உரைநடைப் பாடங்களிலி ருந்து எடுத்துக்காட்டுக்களைக் கையாள வேண்டும். இலக் கணங்கற்பித்தலுக்குக் கையாளும் உதாரணங்கள் புரிந்து கொள்ளக்கூடியவையாயிருந்தால்தான் அவற்றின் இலக்க ணக்கூறுகளை மாணவர்கள் புரிந்துகொள்ளமுடியும்.

முதல் ஏழாண்டுக்கல்வியின் இறுதி வகுப்புக்களிரண் டிலும் கற்பிக்க வேண்டிய இலக்கணப்பொருள்கள் பின் வருமாறு: இடுகுறிப் பெயர்; காரணப்பெயர்; ஆகுபெயர் வகைகள்; குற்றியலுகரம், குற்றியலிகரம், செய்வினை, செயப் பாட்டுவினை, தன்வினை, பிறவினை, வினைமுற்றுக்களும் அவற்றைச் சார்ந்த பகுதி, இடைநிலை, பகுதி ஆகியவை யும்; உவமை, உருவகம், உயர்வு நவிற்சி ஆகிய அணிகள்.

இவற்றுடன் வேறுசில எளிய இலக்கணப் பகுதிக ளையும் ஆசிரியர் தாம் கற்பிக்கும் மாணுக்கர்களின் தேர்ச்சி, திறன் ஆகியவற்றிற்குகந்தாற்போல் பாடத் திட்டத்திற் புகுத்திக்கற்பிக்கலாம். ஆனல் இலக்கண போதனையின் எக்கட்டத்திலும் அவர் நினைவிலிருத்திக்கொள்ள வேண் டிய விஷயம் அளவுக்கதிகமான இலக்கணப் பொருள் களையோ உரைநடைப்பயிற்சியோடிணைக்கப்படாத தனி இலக்கணத்தையோ கற்பிக்கூடாதென்பதாகும். ஓரளவு தனி இலக்கணங்கற்பித்தலில் இன்றியமையாததுதான். ஆயினும் செயற்படுத்தும் கட்டத்திலாயினும் நன்கு கற்றுத் தன்வயப் படுத்திக்கொண்ட உரைநடைப் பாடங்களிலிருந்து தகுந்த உதாரணங்களைப் பொறுக்கியெடுப்பதில் போதிய பயிற்சி யளிக்கவேண்டும்.

இதுவரை ஒருமைப்படுத்தப்பட்ட ஏழாண்டுத் தொடக்கக்கல்வி அல்லது ஆதாரக் கல்வித் திட்டத்தின்கீழ் இலக்கணபோதனையின் பொதுவான போக்கையும் பாடப்பொருள்களையும் ஒருவாறு குறிப்பிட்டோம். இனி இலக்கணங்கற்பித்தலிற் கையாளக்கூடிய இரு சிறப்பு முறைகளைப் பற்றிச் சிறிது தெரிந்துகொள்ளுதல் நலம். இவற்றில் ஒன்று அனுமான முறை (Inductive method) எனப்படுவதாகும். இதையே விதி வருமுறையென்றும் குறிப்பிடலாம். மற்றது அனுமிதமுறை (Deductive method) எனப்படும். இதைவிதிவிளக்கு முறையென்றும் குறிப்பிடலாம்.

## அனுமான முறை (விதிவரு முறை)

முதல் ஐந்து வகுப்புக்களில் மொழிபயிலும் வாயிலாக மாணவர்கள் போதிய உரைநடைப் பாடங்களை ஆழ்ந்து கற்றிருப்பார்கள். அவற்றிலிருந்து இலக்கணப் பாடத் திட்டத்தின்கீழ் வரும் பல பொருள்களுக்குரிய எடுத்துக் காட்டுக்களை ஏராளமாய்ப் பொறுக்கியளிக்கும் ஆற்றல் அவர்களிடமிருக்கும். அதைப் பயன்படுத்தி அனுமான முறைப்படி இலக்கணங்கற்பித்தால் மாணவர்கள் அதை எளிதிற் கற்பார்கள். அனுமான முறையின் படிகளாவன: (1) கற்பிக்க வேண்டிய இலக்கணப் பொருளுக்கேற்ற எடுத்துக்காட்டுக்களை ஏற்கனவே மாணவர் கற்றறிந்த உரைநடைப் பாடங்களிலிருந்து பொறுக்கியெடுத்தல் (இவை ஐந்துக்குக் குறையாமல் இருத்தல் நலம்), (2) இவற்றில் மாணாக்கர்களின் கவனத்தை ஈர்த்துக்குறிப்பிட்ட பகுதிகளின் எழுத்துக்கூறு அல்லது சொற்கூறு பற்றிய பொதுத் தன்மையை ஆராய்ந்தறியச்செய்தல். (3)

அப்பொதுத் தன்மையை ஒரு விதியாகக் கூறுதல், (4) அவ்வாறு ஊகித்தறிந்த விதியை வேறு பொருத்தமான எடுத்துக்காட்டுக்களில் செயற்படுத்திச்சரிபார்த்தலும் பன்முறைப் பயிற்சியும்.

"இடுகுறிப்பெயர், காரணப்பெயர்" என்ற இலக்கணப்பொருளை எவ்வாறு அனுமான முறையிற் கற்பிக்கலாம் என்று பார்ப்போம்:

## (1) எடுத்துக்காட்டுக்கள்

1. கல் விழுந்தது.
2. இரும்பு நாற்காலி.
3. கட்செவி.
4. மண் சுவர் இடிந்தது.
5. மரம் நிழல் தரும்.

## (2) பொதுத் தன்மைகளை ஆராய்ந்தறிதல்

மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுக்களில் தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களைச் சுட்டிக்காட்டி ஒவ்வொன்றும் ஒரு பொருளின் பெயரைக்குறிப்பதை வருவிக்க வேண்டும்.

1. "கல்" என்பது ஒரு பொருளின் பெயர். ஆனல் அப்பெயர் வரக் காரணம் விளங்கவில்லை.
2. "நாற்காலி" என்பது ஒரு பொருளின் பெயர். நான்கு கால்களையுடைய பொருள் என்ற காரணம் விளங்குகிறது.

3. "கட்செவி" என்ற சொல் ஓரே உறுப்பைக் கண்ணாகவும் காதாகவும் கொண்டுள்ள பாம்பைக் குறிக்கிறபடியால் பெயர்க்காரணம் விளங்குகிறது.

4. "மண்" என்ற பொருட் பெயர்க்குக்காரணம் விளங்கவில்லை.

5. "மரம்" என்ற பொருட் பெயரிடப்பட்டதற்குக் காரணம் விளங்கவில்லை.

## (3) விதியாகக் கூறுதல்

காரணம் விளங்காப் பெயர்ச் சொற்களை இடுகுறிப் பெயர்களென்றும் காரணம் விளங்கும் பெயர்ச்சொற்களைக் காரணப் பெயர்களென்றும் குறிப்பிடுகிறோம்.

## (4) விதியைச் செயற்படுத்தல்

1. "முக்காலி" என்ற சொல் எவ்வாறு காரணப் பெயராகும்?

2. இடுகுறிப் பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடு.

3. பின்வரும் சொற்களை இடுகுறிப்பெயர், காரணப் பெயர் என்ற தலைப்புக்களின்கீழ் எடுத்தெழுது:

வளையல், விதை, வெண்ணெய், எண்ணெய், நெய், இலை, நெற்றிக்கண்ணன், தங்கம், கண்ணீர், நீர்.

இவ்வாறே பெயர்ச்சொல் வகைகள், ஆகுபெயர் வகைகள், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், செய்வினை, செயப்பாட்டுவினை, புணர்ச்சி விதிகள் போன்ற இலக்கணப் பொருள்களை அனுமான முறையில் நன்கு மனத்திற் பதியுமாறு கற்பிக்கலாம்.

## அனுமிதமுறை (விதிவிளக்கு முறை)

இம்முறைப் பயிற்றலில் ஏற்கனவே பிறரால் நிலைநாட்டப்பட்ட இலக்கண விதிகளைத் தகுந்த எடுத்துக்காட்டுகளில் செயற்படுத்திக் காட்டுதல் ஒன்றே முக்கியமான படியாகும். உண்மையில் அனுமான முறையின் கடைசி இரு படிகளும் சேர்ந்ததுதான் அனுமிதமுறையென்பது புலனுகிறது. பல பெயர்ச் சொற்களை உற்றுநோக்கி இவ்விதியைச் செயற்படுத்தி, காரணம் சொல்ல இயலாதனவற்றை "இடுகுறிப் பெயர்கள்" என்றும், காரணம் விளங்குவனவற்றைக் "காரணப் பெயர்கள்" என்றும் பிரித்தலே இம்முறையில் மேற்கொள்ளப்படும் இலக்கண போதனையாகும்.

இதுவரை நாம் குறிப்பிட்டுள்ளவற்றிலிருந்து அனுமான முறைக்கும் அனுமித முறைக்குமுள்ள வேறுபாடுகளை எளிதிற் காணலாம். அவை பின்வருமாறு :

| அனுமான முறை | அனுமித முறை |
|---|---|
| 1. தனிப்பட்ட (சிறப்பான) எடுத்துக் காட்டுக்களிலிருந்து பொதுவிதி பிறக்கிறது. | ஏற்கனவே நிலைநாட்டப்பட்ட பொதுவிதியைத் தனிப்பட்ட (சிறப்பான) எடுத்துக் காட்டுக்கள் விளக்குகின்றன. |
| 2. விதியைத் தாமாகக் கண்டறியும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. | அத்தகைய முயற்சிக்கு அவசியமில்லை. |
| 3. நேரச் செலவு அதிகமெனினும் தெளிவாய் விளங்குவதுடன் கற்ற அறிவு உறுதியாகவும் நிலைபெறும். | விதி கூறுவதைச் செயற்படுத்திப் பார்த்தல் எளிது. ஆனல் அவ்வாறு பெறும் அறிவு அவ்வளவு உறுதியாயிராது. |

| | |
|---|---|
| 4. உளவியலுக்குகந்தாற் போல் இயங்குகிறது. ஆகையால் எல்லா மாணவர்களும் பயனுறக்கற்கலாம். | அனுபவங்களின் அடிப்படையிலல்லாமல் காரண காரிய (தருக்க) முறையிலியங்குவதால் அவ்வித உள்ள முதிர்வுள்ள சில மாணவர்களே பயனுறக் கற்கலாம் |

பொதுவாக, தொடக்க வகுப்புக்களில் விதிவருமுறையையும் மேல்வகுப்புக்களில் விதிவிளக்கு முறையையும் கையாள வேண்டும். எல்லா இலக்கணப் பொருள்களையும் ஒரு குறிப்பிட்ட முறையில் கற்பிக்க இயலாது. ஆகவே மாணவர்களின் புதிது கண்டறியுமாற்றலையும் காரணகாரியத்தொடர்புறுத்தியறியும் ஆற்றலையும் கற்றலில் ஈடுபடுத்தும் வகையில் இலக்கணம் பயிற்றலை மேற்கொள்ளுதல் மிகுந்த நலம் பயக்கும்.

இலக்கணங் கற்பித்தல் இலக்கணங் கற்றலுக்காக மட்டுமல்ல, அவ்வறிவைப் பேச்சிலும் படிப்பிலும் எழுத்திலும் பயன்படுத்துவதற்காகவுந்தான். ஆகையால் மொழிப் பாடங் கற்றல் — அதை அடிப்படையாகக்கொண்டு இலக்கணங் கற்றல் — அவ்விலக்கண அறிவைப் புதிய மொழிப் பாடங்களில் செயற்படுத்தல் என்ற வரிசையில் நடைமுறையை மேற்கொண்டால் மாணவரின் மொழிவளமும் இலக்கண வன்மையும் ஒருங்கே இயைபுற்று மேம்பாடடையும்.

# அத்தியாயம் XI

## மொழியின் கலைநுட்பம்

### செய்யுள் கற்பித்தல்

ஒரு மொழியின் உயர்நிலை செய்யுள் என்பதோடு அது அம்மொழியின் உயிர்நாடியுமாகும். சாதாரணமாக, பேச்சிலும் படிப்பிலும் எழுத்திலும் உபயோகப்படுவது உரை நடையேயாகும். அதிலும் பாமரர் கையாளும் உரைநடை வேறு, பள்ளியிற் பயிலும் உரைநடை வேறு, பண்டிதர் மேற்கொள்ளும் உரைநடை வேறு. ஆனால் மிகவும் உயர்ந்த கருத்துச் செல்வத்தை வளமைப்படுத்தக்கூடிய தனி ஆற்றல் செய்யுளுக்கே உண்டு. திருக்குறள், நான்மறைகள், இராமாயண, மகாபாரதக் காப்பியங்கள் போன்றவை செய்யுள் வடிவிலமைந்திருத்தலுக்கு இதுவே காரணமாகும். இவற்றை ஊன்றிப் படித்தல், அடிக்கடி படித்தல், நுனித்தறிந்து படித்தல் ஆகிய ஏற்பாடுகள் மூலமே ஆழ்ந்த கருத்துக்களையும், சொல்நயம், பொருள்நயம் ஆகியவற்றையும் பாராட்டிச் சுவைக்கலாம். ஆகையால் உரைநடை கற்பித்தலிற் கையாளும் முறை செய்யுள் கற்பித்தலுக்குதவாது. இம்மொழிப் பகுதியைத் தனிச் சிறப்பு வாய்ந்த முறையைக் கையாண்டே கற்பிக்கவேண்டும்.

### நோக்கங்கள்

உரைநடை கற்பித்தலில் சொற்களஞ்சியத்தைப் பெருக்குதலும் கருத்துக்களை வெளியிடும் திறனை உயர்த்துதலும் நோக்கமாயமைந்தாற்போலல்லாமல் செய்யுள் கற்பித்தலில் (i) அதன் உயிர்நாடியான கருத்தை உணர்தல், (ii) செய்யுளியற்றியவரின் கருத்துக்களையும் மனப்பான்மைகளையும்

ஆய்ந்தறிதல், (iii) செய்யுளின் சொல்நயம், பொருள்நயம், கருத்துநயம் ஆகியவற்றைச் சுவைத்தறிந்து இன்புறுதல் ஆகியவை நோக்கங்களாயமையும். ஆகவே, ஆசிரியர் செய்யுள் கற்பிக்குங்கால் தம்மைச் செய்யுளாசிரியராகக் கற்பனை செய்துகொள்வதன்மூலம் அச்செய்யுளின் கருத்துக்களை ஊன்றியுணர்ந்து திறம்பட வெளியிடவும் அவற்றை அவ்வாறே மாணவர் உணரும்படி செய்யவும் இயலும்.

செய்யுள் கற்பிக்கும் முறையைப்பற்றி அறிதற்கு முன் எத்தகைய செய்யுட்களை எவ்வெவ்வகுப்புக்களிற் கற்பிக்கலாம் என்பதைப்பற்றிச் சிறிது அறிந்திருத்தல் அவசியம். தொடக்கநிலை வகுப்புக்களுக்கான செய்யுட்கள் விளையாட்டு, சந்தம் அல்லது இன்னொலி (Rhythm) ஆகிய இரண்டு கூறுகளமைந்தனவாயிருக்க வேண்டும். சொற்கள் திரும்பத் திரும்ப வருதலும் ஒலிமூலம் பொருளுணர்த்தலும் சிறுவர்களுக்குப் பெருமகிழ்ச்சி யளிக்கவல்ல கூறுகளாகும். இவற்றுடன் செய்யுட்பொருள் புலனீடான நிலைகளைச் சார்ந்துமிருத்தல் அவசியம். ஏனெனின், கருத்துப் பொருளம்சம் ஓங்கியிருக்கும் செய்யுட்களை உயர்வகுப்புப் பிள்ளைகளே ஒருவாறு புரிந்துகொண்டின்புற முடியும். முதல்மூன்று வகுப்புக்களில் பாப்பாப் பாட்டுக்கள், ஆட்டப் பாட்டுக்கள், தாலாட்டுப் பாட்டுக்கள், எதுகைப் பாட்டுக்கள் (Rhymes) ஆகியவை செய்யுள் கற்றலில் மகிழ்ச்சியளிக்கவல்ல வகைகளாகும். "காக்கா, காக்கா கண்ணுக்கு.. ...", "ஒன்று யாவர்க்கும் தலை ஒன்று", "நிலா, நிலா" முதலிய பாட்டுக்களையும் கும்மிப் பாட்டுக்களையும் சில எளிய புதிர்களையும் தொடக்கநிலைச் செய்யுட் கற்பித்தலுக்கு ஏற்றவையாகக் குறிப்பிடலாம். இத்தகைய செய்யுட்களியற்றி

யுள்ளோர்களில் முதன்மையாக வரகவி சுப்பிரமணியபாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, குழந்தைக்கவி வள்ளியப்பா முதலியவர்களைக் கூறவேண்டும். இவற்றுடன் இக்காலத்தில் வார, மாத இதழ்களில் வெளிவரும் பல குழந்தைச் செய்யுளாக்கங்களையும் சேர்த்துக்கொண்டால் எண்ணற்ற செய்யுட்களை இளஞ் சிறுவர்களுக்குக் கற்பித்து அவர்களுக்கு மட்டிலா மகிழ்ச்சியளிக்கலாம்.

ஐந்தாம், ஆறும், ஏழாம் வகுப்புக்களிலும் உயர்நிலைப் பள்ளி வகுப்புக்களிலும் இவ்வகைச் செய்யுட்களுக்குப் பதிலாகக் கருத்துப்பொருள் மிகுந்துள்ள திரிகடுகம், நாலடியார், நன்னெறி போன்றவற்றைக் கற்பிக்கலாம். இவற்றுடன் நீண்ட கதைச்செய்யுட்களையும் வரலாற்றுச் செய்யுட்களையும் சேர்த்துக்கொள்ளலாம். பண், சந்தம் ஆகிய இரு கூறுகளைச் சுவைத்து இன்பமெய்தும் வகையில் தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாசுரங்கள் போன்றவற்றிலிருந்து போதிய எண்ணிக்கையில் செய்யுட்களைப் பொறுக்கிச் சேர்த்துக்கொள்ளலாம். சொல்நயத்தைப் பாராட்டும் வகையில் சில சிலேடை வெண்பாக்களுக்கும் இடமளிக்கவேண்டும்.

### செய்யுள் கற்பிக்கும் முறைகள்

ஒரு செய்யுட்பாடத்தைக் குறிப்பிட்ட முறையில்தான் கற்பிக்கவேண்டுமென்று வரையிட்டுக் கூறமுடியாது. தாமும் இன்புற்று மாணவர்களையும் இன்புறச் செய்வதை உறைகல்லாகக் கொண்டு நிலைமைகளுக்கும் மாணவர்களின் தேர்ச்சி, திறன், மனவெழுச்சிகளுக்கும் ஏற்பக் கற்பிக்கும் முறையை ஆசிரியரே அமைத்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்ட முறையைப் பின்பற்றும்

ஆசிரியரிடம் சில சிறப்பிலக்கணங்கள் காணப்படவேண்டும். அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு :

(1) செய்யுளை உணர்ந்து படித்தல், (2) மாணவர்கள் அதன் நயங்களைப் புரிந்து பின்பற்றும் முறையில் உணர்த்திப்படித்தல், (3) செய்யுளை இசையுடன் உரக்கப் படித்தல், (4) அதிலுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் பொருளுணர்த்திப் படித்தல், (5) கவிஞரின் கருத்துக்களை அப்படியே மெய்ம்மறந்து வெளியிடல்.

இத்தகைய இலக்கணங்களையுடைய ஆசிரியர் செய்யுட் பாடத்தை அதன் தன்மைக்கும் அடக்கப் பொருளுக்கு மேற்றவாறு சில முறைகளைப் பின்பற்றிக் கற்பிக்கலாம். அவை (1) சொற்பொருள்கூறும் முறை, (2) சூழ்நிலை காட்டி விளக்கும் முறை, (3) கேள்வி கேட்டல் முறை, (4) கவிஞன் வாழ்க்கைக் குறிப்புடன் தொடங்கும் முறை என்பனவாம்.

## (1) சொற்பொருள் கூறும் முறை

சொல்லுக்குச் சொல் நேர் பொருளுரைத்துப் பொழிப்புரை, கருத்துரை கூறுதலையே இம்முறை குறிப்பிடுகிறது. "ஆத்திசூடி," "கொன்றைவேந்தன்" ஆகியவற்றில் தொடங்கி மேல் வகுப்புக்களில் வரும் தனிப்பாடல்கள், காப்பியச் செய்யுட்கள் உட்பட இம்முறையில் கற்பித்தல் வழக்கத்திலுள்ள ஒரு முறையாகும். இவ்வகையில் செய்யுள் பயிலும் மாணவர் செய்யுளை உரை நடைப்படுத்திச் சொற்பிரித்துப் பொருளுரைக்கும் திறன் பெறுவார்களேயன்றி, செய்யுட் கற்றலின் உயர்நோக்கமான சொல்நயம் பொருள் நயம், கருத்து நயம், இசைநயமுணர்ந்து இன்புறுதலில்

எத்தகைய பயிற்சியும் பெற வாய்ப்பிருக்காது. செய்யுள் குறிப்பிடும் சந்தர்ப்பங்களை விட்டுச் சொற்களைப் பிரித்துப் பொருள் கூறினால் வேறு பல சொற்களைக் கையாள்வதைத் தவிரச் செய்யுள் கற்றலின் உண்மைப் பயன்கள் கிட்டா.

### (2) சூழ்நிலைகாட்டி விளக்கும் முறை

எந்தச் சூழ்நிலையில் செய்யுள் கவிஞன் மனத்தில் உருப் பெற்றுக் கிளம்பியதோ அதைச் சுட்டி விளக்கிச் செய்யுளைக் கற்பிக்க முற்படுதல் ஒரு முறையாகும். வரலாறு அல்லது தொடர் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமையும் செய்யுட்களைக் கற்பிக்கும் வகையில் இம்முறையைக் கடைப் பிடிக்கலாம். கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற காப் பியங்களிலிருந்து தனிச் செய்யுட்கள் பாடத்திட்டத்திற் சேர்க்கப்பட்டிருந்தால் அவற்றைத் தொடங்கும் வாயிலாக முன் நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டால் பாடச் செய்யுளில் காணப்படும் நிகழ்ச்சிகள் அல்லது நிலைகள் நன்கு புரியும். அவ் வலுவின்பேரில் செய்யுளின் நயங்களைச் சுவைத்தின்புற முடியும். இவை தவிர, சில செய்யுட்களின் மூலம் அவற்றை இயற்றிய கவிஞர்களின் வாழ்க்கை நிகழ்ச் சிகளைக் குறிப்பிடவேண்டிவரும். உதாரணமாக, "நெற் கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே," "என்றும் காப்பர் வேளாளர் காண்" என்ற அடிகள் வரும் செய்யுட் களைக் கற்பிக்கும்போது புலவரின் வறுமைச் சூழ்நிலையைக் கூறிச் செய்யுட்களை இசையோடும் பொருள் விளங்கும் முறையிலும் படித்துக்காட்டினால் மேற்கொண்டு விளக்கம் தேவைப்படாமலே மாணவர்கள் அவற்றைக் கற்று மகிழ்வர்.

இம் முறையைப் பின்பற்றும் ஆசிரியர் பாடப்புத்தகத் தில் சேர்க்கப்பட்டுள்ள தனிச்செய்யுட்களின் சொற்பொருட்

களை மட்டும் அறிந்திருத்தல் போதாது. அவற்றைச் சார்ந்த மூல நூல்களையும் பரவலாகவாவது படித்திருக்கவேண்டும். செய்யுளில் குறிப்பிடுவனவற்றுடன் முன், பின் செய்யுள் நிகழ்ச்சிகளை ஆழ்ந்து யோசித்துக் குறித்துக்கொண்டு வகுப்பு போதனையின்போது அதைப் பயன்படுத்த வேண்டும். சாதாரணமாக, இம்முறையைக் கையாளும் நல்வாய்ப்புக்கள் ஏழாம் வகுப்பிலிருந்து கிடைக்கப் பெறலாம்.

## (3) கேள்விகேட்டல் முறை

பல பொருத்தமான கேள்விகளுக்குரிய பதில்களை வருவித்துத் தொகுத்துக் கூறுவதன் மூலம் செய்யுளின் பொருளையுணர்த்தலாம். பிறகு பொழிப்புரை, கருத்துரை ஆகியவற்றையும் உணரவைக்கலாம். அடுத்தபடியாக உரைநடைப்படுத்திப் பதவுரை கூறலாம்.

ஆழ்ந்த கருத்துக்கள், கடினமான சொற்கள் உள்ள செய்யுட்களைப் படித்து வினாக்களுக்குரிய விடைகளைச் சிறு பிள்ளைகளிடம் எதிர்பார்க்க முடியாது. கிட்டத்தட்ட உரை நடையிலமைந்து எளிய சொற்களைக் கொண்ட செய்யுட்களை இம்முறையிற் கற்பிக்கலாம். ஆனால் அவற்றை முழுமையாகக் கற்றலுக்கு இன்றியமையாத ஏற்பாடுகள் உரக்க இசையுடன் படித்தலும் உணர்ச்சியோடு விளக்குதலுமாகும்.

## (4) கவிஞன் வாழ்க்கைக் குறிப்புடன் தொடங்கும் முறை

சில சமயம் காப்பியச் செய்யுட்களிலும் தனிச்செய்யுட்களிலும் இடையிடையே கவிஞனின் தன்வரலாற்றுக் கூறுகள் (Autobiographical elements) உட்பொருளாகக் காணக்கிடைக்கும். ஆனால் அவற்றைச் செய்யுட்பொருளி

லிருந்து மட்டும் அறிந்து கற்பிக்கமுடியாது. கவிஞர்களின் தன்வரலாற்று விவரங்களைப் படித்துத் தகுந்த குறிப்புக் களை அவ்வப்போது குறித்துப் பயன்படுத்தும் ஆசிரியரே இம் முறையைத் திறம்பட மேற்கொள்ளலாம். வெறுஞ் சொற்பொருள் கூறி உணர்த்துவதைக் காட்டிலும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களுடன் இணைத்துப் பொருளுணர்த் துதல் மிகுதியான பயனளிக்கவல்லது.

ஆனால் இத்தகைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக் களைக் கல்லூரி வகுப்புக்களிற்போல் அவ்வளவு விரிவாக எடுத்தளிக்கவேண்டியதில்லை. செய்யுள் கற்பித்தலோடு தொடர்புறுத்தப்படாத வகையிலும் குறிப்பிடவேண்டிய தில்லை. எவ்வளவிற்குச் செய்யுட் பொருளுடனும் கருத்துட னும் பொருந்துமாறு எடுத்துக் கூறலாமோ அவ்வளவிற்கு இம்முறைக் கூறுகளைக் கற்பித்தலிற் புகுத்தினால் போதும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ள முறைகளைத் தனித்தோ கலந்தோ கற்கும் மாணக்கர்களின் தேர்ச்சித் தரத்திற்கேற்ற வாறும் பாடத்திட்டத்திற் குறிப்பிடப்பட்டுள்ள செய்யுட் பகுதிகளின் தன்மைக்கேற்றவாறும் செய்யுட்பாடத்தைக் கற்பிக்கவேண்டும். தகுந்த பாடப் பின்பயிற்சிகள் மூலம் மாணவர்களின் சுவைத்தின்புறும் திறனையும் நயமறிந்து பாராட்டுந்திறனையும் பயிற்றுவிக்க வேண்டும். பிறகு பொறுக்குச் செய்யுட்களை நெட்டுருச் செய்யவும் ஒப்பிக்கவும் வாய்ப்பளிக்கவேண்டும்.

## செய்யுட்களை மனப்பாடஞ்செய்தல்

சில ஆண்டுகட்கு முன்வரை செய்யுட்களின் பொரு ளறிவதற்கு முன்னால் அவற்றைக் காதால் கேட்டு நெட்டுருச்

செய்யும் வழக்கம் இருந்து வந்தது. ஒரு விதத்தில் இளம் மாணவர்கள் இத்தகைய பயிற்சியை எளிதில் மேற்கொள்ளக்கூடியவர்களேயெனினும் பொதுவாகப் பார்க்குமிடத்து இதை மாணவர்களிற் பெரும்பாலோர் கசப்புடனேயே மேற்கொள்ளக் கூடியவர்களென்பதை நாம் நன்கறிவோம். ஆகவே நெட்டுருச் செய்யத்தகுந்த செய்யுட்களையும் செய்யுட்பகுதிகளையும் தேர்ந்தெடுப்பதிலும் அவற்றை மனப்பாடஞ்செய்வதில் மாணவர்களைப் பயிற்றுவித்தலிலும் ஆசிரியர் கவனம் செலுத்தவேண்டும். பொருளுணர்ந்தபின் நெட்டுருச்செய்வதால் பின்வரும் நன்மைகள் கிட்டும்:

(1) செய்யுட்களில் வரும் பழமொழி, அறவுரை ஆகியவை நம் அகக்கண்முன் நின்று நம்மை நல்வழியில் செலுத்தும். (2) ஒரு செய்யுட் பகுதியைப் படிக்கும்போது ஏற்கனவே கற்ற வேறொரு செய்யுட்பகுதியில் வருவனவற்றோடு ஒப்பிட்டு நலம் பாராட்ட முடியும். (3) அடிக்கடி ஒப்பித்தல் மூலம் பல புதிய நயங்களையறிந்து பாராட்டும் வாய்ப்புக்கள் கிட்டும். (4) இவை எல்லாவற்றிற்கும் மேலாக, ஓய்வு நேரத்தை இன்பமாகக் கழிக்க நெட்டுருச்செய்த செய்யுட்கள் பெரிதும் உதவக்கூடும்.

முதல் வகுப்பிலிருந்தே செய்யுட்களை மனப்பாடம் செய்து ஒப்பித்தலுக்கு ஊக்கமளிக்கவேண்டும். மாணவர்களின் விருப்பத்திற்கிணங்க நெட்டுருப் போடவேண்டிய செய்யுட்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நன்றாகப் பொருளுணர்ந்த பிறகு ஆசிரியர் முடிவாக ஒரு செய்யுளைப் படிக்க, பிறகு மாணவர்கள் அதை முதலில் கூட்டாகவும் (in chorus) பிறகு தனித் தனியாகவும் படிக்கவேண்டும். அத்தகைய படிப்பில் பொருளுணர்வும் இசையுணர்வும் வெளித்

தோன்றவேண்டும். சில கல்வி வல்லுநர்களின் கருத்துப் படி, மாணவர்களே தாம் விரும்பும் செய்யுட்களை நெட்டு ருச்செய்து ஒப்பிக்க வாய்ப்பளித்தலே சிறந்த முறையாகும். ஆயினும் ஒருவித ஒழுங்கமைப்பாகச் செய்யுட்களைக் குறிப் பிட்டு நெட்டுருச் செய்யவைக்கும் முறையைக் கடைப்பிடிப் பதும் நல்லதுதான். ஆனால் கூடியவரை வலுக்கட்டாய மான அம்சத்திற்கிட மளிக்காதிருக்கவேண்டும்.

# அத்தியாயம் XII

## பாடத்திட்டமும் வேலைத்திட்டமும்

இதுவரை தமிழ்மொழி பயிற்றலின் நோக்கங்கள், கூறு கள் ஆகியவற்றைப் பற்றியும் மொழியின் முப்பகுதிகளான உரைநடை, இலக்கணம், செய்யுள் ஆகியவற்றைக் கற்பிக் கும் முறைகளைப் பற்றியும் ஓரளவு அறிந்துகொண்டோம். இவற்றிற்கிணங்க, ஒவ்வொரு ஆசிரியரும் தனித்தனியே பல பாடப்புத்தகங்களைப் பல்வேறு வகுப்புக்களிற் கையாண்டு தமிழ்மொழி கற்பிக்கலாம். எனினும் பள்ளி ஒழுங்கை நிலைநாட்டும்பொருட்டு முதல் வகுப்பிலிருந்து கடைசி வகுப்புவரை ஒவ்வொரு பாடத்திலும் இணைக்கப் பட்ட பகுதிகளைக் கொண்ட ஒரு பொதுப்பாடத் திட்டத்தை அமைத்துக்கொண்டால்தான் பயிற்றலின் பலன் பயிலலின் வாயிலாகத் தோன்றித்திகழும். ஒரு குறிப்பிட்ட பாடத்தைப் பல வகுப்புக்களிலும் ஒரே வகுப்பின் பல பிரிவுகளிலும் கற்பிக்கும் ஆசிரியர்கள் அடிக்கடி கூடிக்கலந்துகொண்டு பயிற்றல் முறைகளையும் தேர்ச்சித்தர மதிப்பீடுகளையும் சீர்திருத்திக்கொள்ள முடியும். அதனுல் நேரம் வீணுதலும் ஒரே பொருளைப் பலர் திரும்பத் திரும்பக் கற்பித்தலும் தவிர்க்கப்படுவதோடு குறைவான நேரச்செலவில் மிகுதி யான பொருளறிவையும் திறமையையும் மாணவர்கள் பெறவும் முடியும்.

ஆசிரியர் முதலில் பாடத்திட்டத்தை நன்கு ஊன்றிப் படித்து அதிற் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள், பொருள் எல்லைகள், எதிர்பார்க்கும் தேர்ச்சித்தரம், நடைமுறை வேலை முதலியவற்றைப்பற்றித் தெளிவாய்ப்புரிந்து

கொள்ளவேண்டும். மூல நூல்களிலிருந்தும் மேற்கோள் நூல்களிலிருந்தும் குறிப்பிட்ட பாடங்களையொட்டிய அதிகப்படியான தகவல்களைச் சேர்த்துக் குறித்துக்கொள்ள வேண்டும். பாடங்கற்பிக்குமுன்பு இக்குறிப்புக்களைத் திருப்பிப் பார்ப்பதுடன் மேற்குறிப்பிட்ட புத்தகங்களையும் மற்றொரு முறை புரட்டிப் பார்த்தல் நலம். இத்தகைய ஆயத்தத்தின் வலுவில் ஆசிரியர் தாமாகச் சிந்தித்துப் பயிற்றலிற் கையாளவேண்டிய பொருள், முறை ஆகியவைபற்றித் தெளிவான பாடக்குறிப்புக்கள் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

## பாடக்குறிப்புக்கள் (Notes of Lesson)

ஒரு குறிப்பிட்ட பாட அலகைத் திட்டமிட்ட காலவரையறைக்குள் கற்பிப்பதற்கான விவரமான குறிப்புக்களை நன்கு சிந்தித்து முன்ஆயத்தமாக எழுதிவைத்துக்கொள்ள வேண்டும். இவை முறையையும் கற்பிக்கவேண்டிய பொருளையும் தழுவியிருக்கவேண்டும். ஆசிரியப்பயிற்சி பெற்றுக் கற்பிக்கத் தொடங்கும் இளம் ஆசிரியர்கள் இத்தகைய குறிப்புக்களை மிகவும் விரிவான முறையில் எழுதிவரவேண்டும். சில ஆண்டுகள் இவ்வாறு எழுதிவரும் பழக்கத்தை மேற்கொண்டால் அவர்களிடம் தெளிவான சிந்தனைத்திறனும் தன்னம்பிக்கையும் நிலைபெற்றுவிடும். அதற்குப் பிறகு சுருக்கமான குறிப்புக்களே போதுமானவையாயிருக்கும். தலைமையாசிரியர் மேற்பார்வையிடுவதற்காகவோ கல்வித்துறை அதிகாரிகளிடம் காண்பிப்பதற்காகவோ மட்டும் இக்குறிப்புக்களைத் தயாரித்து வைக்கும் பழக்கம் முளையிலேயே கிள்ளியெறியப்படவேண்டும். அதனால் பயிற்றும் திறன் எவ்வகையிலும் மேம்படாதென்பதோடு அக்குறிப்

புக்களை அவசரக் கோலமாகத் தயாரிப்பதிற் செலவிடும் நேரமும் வீணாக்கப்படுகிறது. பாடக் குறிப்புக்களின்றிக் கற்பிக்கும் பாடம் திக்குத்திசை தவறித் தடுமாற்றத்தில் கொண்டுவிடுவதாயமைந்துவிடலாம் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் மனத்திற்கொண்டு பாடக்குறிப்புக்களை ஒழுங்காகத் தயாரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

பாடக் குறிப்புக்களை "பொருள்—முறை" என்ற இரண்டு பத்திகளாகப் பிரித்தோ பாட வளர்ச்சிப் படிகளுக்கிணங்கத்தொடர்ச்சியாகவோ எழுதலாம். "பொருள்" என்ற தலைப்பின் கீழ் வகுப்புப் பாடப்புத்தகத்தில் கற்பிக்கத் திட்டமிட்டுள்ள பாடத்திலிருந்தும் மேற்கோட் புத்தகங்களிலிருந்தும் பிற மூலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயங்களை உரிய கட்டங்களில் குறிக்க வேண்டும். "முறை" என்ற தலைப்பின் கீழ், குறிப்பிட்ட பாடப்பொருள்களுக்கெதிரில் அவற்றைக் கையாளும் முறைகளை "வருவித்தல்", "கேள்வி கேட்டல்", "வாய்க்குள் படித்தல்" போன்ற முறை தழுவிய சொற்களால் குறிப்பிட வேண்டும். இந்நோக்கங்கள் நிறைவேற, கேள்விகளையும் விவரமாக எழுத வேண்டும். இல்லாவிட்டால் மாணவர்களளிக்கும் விடைகளை நன்கு நிதானித்துக் கற்பிக்க இயலாமற் போய் விடும். முறையின் கீழ் ஆசிரியர் கையாளத் திட்டமிட்டுள்ள துணைக் கருவிகளையும் அவற்றைப் புகுத்திப் பயன்படுத்தும் விதத்தையும் விவரமாக எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். கற்பித்தலின் இடையிடையே கொடுப்பதற்கான வாய்மொழிப் பயிற்சி, மனக்கணக்குகள், எழுத்துப்பயிற்சி, நடைமுறை வேலை ஆகியவற்றையும் குறிக்கவேண்டும். பாடக்குறிப்புக்களின் இறுதியில் பாடப்பின்வேலையை (Follow-upwork)யும் இயன்றபோது வீட்டு வேலையையும் திட்டவட்டமாகக் குறிப்பிட வேண்டும்.

இத்தகைய விரிவான பாடக்குறிப்புக்களை ஆசிரியர் முன்ஆயத்தமாக ஆர அமரத் தயாரிப்பதால் அவை அவருடைய மனத்தில் நன்கு பதிந்துவிட ஏதுவாகும். பாட முடிவில் எவ்வளவிற்குத் திட்டமிட்டபடி கற்பிக்க முடிந்த தென்பதை நிதானித்தறியவேண்டும். பாடக்குறிப்புக்களின்படியே குறித்த காலத்தில் கற்பிக்க இயலலாம் அல்லது காலக்கெடுவிற்குப்போதியவை குறித்து வைக்கப் படாமலிருக்கலாம். ஆகையால் தயாரிக்கும் பாடக்குறிப்புக்கள் எவ்வளவு தூரம் நடைமுறைக்கொத்துவருகின்றன என்பதைப் பட்டறிவின் மூலமே தெரிந்துகொள்ளமுடியும்.

மேற்குறிப்பிட்ட பாட ஆயத்தத்துடன் சுருக்கமான முறையில் பயிற்றற் குறிப்புக்களையும் (Teaching Notes) துணையாக எழுதிவைத்துக்கொள்ளுதல் நலம். விரிவான பாடக் குறிப்புக்களை அடிக்கடி புரட்டிப் பார்க்கவேண்டிய அவசியம் இச்சுருக்கமான பயிற்றற் குறிப்புக்களை உபயோகிப்பதன் மூலம் கணிசமாகக் குறைக்கப்படும். இவ்விரு வகைக் குறிப்புக்களும் ஒரு மேடைச்சொற்பொழிவாளரின் தாம் ஆற்றப் போகும் சொற்பொழிவுபற்றிய விரிவான குறிப்புக்களையும் உதவிக் குறிப்புக்களையும் ஒக்கும்.

பொதுவாக ஒரு பாடக்குறிப்பு பின்வரும் தலைப்புக்களின் கீழ் அமையும்:

(1) வகுப்பு, (2) பாடப்பொருள், (3) காலம், (4) நோக்கம், (5) துணைக்கருவிகள், (6) ஆயத்தமும் முன்னறிவுச்சோதனையும், (7) பாடவளர்ச்சி அல்லது எடுத்தளித்தல், (8) தொகுத்துரைத்தல், (9) பாடப்பின்வேலையும் வீட்டுவேலையும்.

ஒவ்வொரு பாடக்குறிப்பிலும் நோக்கம் பாடத்தின் தன்மைக்கேற்றவாறு திட்டவட்டமாகக் குறிக்கப்படவேண்டும். உதாரணமாக, உரைநடைப் பாடத்தின் நோக்கம் சொற்களஞ்சியத்தை வளப்படுத்திப் பொருளுணர் திறனையும் மொழியறிவையும் பெருக்குதலாகும். செய்யுட்பாடத்தின் நோக்கம் பொருள் நயம், கருத்துநயம், இசைநயம் ஆகியவற்றைச் சுவைத்து இன்புறுதலாகும். இலக்கணப்பாடத்தின் குறிக்கோள் குறிப்பிட்ட இலக்கணப்பொருள் ஆற்றும் பணிகளைக் கற்றறிந்து அவ்வாறே நடைமுறையிற் செயற்படுத்திக்காட்டுதலாகும். துணைப்பாடத்தின் நோக்கம் ஆங்காங்கே சிறிதளவு ஆசிரியர் உதவியுடன் மாணவர்களே குறிப்பிட்ட பகுதியை வாய்க்குள் விரைவாகப் படித்துப் பொதுப்பொருளுணர்வதோடு செயல்குறை சொற்களஞ்சியத்தையும் (Passive Vocabulary) பெருக்கிக்கொள்வதாகும்.

பாடக்குறிப்புக்கள் எழுதுகையில் சில நடைமுறைகளை மேற்கொள்ளுதல் நல்லது. பாடக் குறிப்புக்களை அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள குறிப்பேட்டில் பக்கம்விட்டுப் பக்கம் எழுதிவரவேண்டும். இவை திருத்தமாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும். ஒரு பாடத்திற்கெனத் தயாரிக்கப்படும் குறிப்புக்கள் அடிக்கடி மாறுதலுக்குட்பட்டவையேயொழிய இறுதியானவையல்ல. ஆசிரியர் அவ்வப்போது அனுபவ வாயிலாகப் பெறும் அறிவையொட்டி வேண்டிய மாற்றங்களைக் காலியாக விடப்பட்ட பக்கங்களில் உரிய இடங்களில் குறித்துவரவேண்டும். இத்துடன் அவ்வப்போது பாடக்குறிப்புக்களின் அட்டவணையையும் நிறைவாக்கிவரவேண்டும்.

இதுவரை கூறப்பட்டுள்ள பல்வேறு கருத்துக்கட்கிணங்கத் தயாரிக்கப்படும் பாடக்குறிப்பை ஆசிரியர் ஒரு துணைக்கருவியாகப் பயன்படுத்தவேண்டுமே யல்லாது எத்தகைய மாறுதலுமின்றி அப்படியே பின்பற்றப்படவேண்டியதாகக் கொள்ளக்கூடாது. வார, மாத, ஆண்டுஉட்பகுதி, ஆண்டு அடிப்படையில் பாடத்திட்டத்தையும் செயல் திட்டத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து ஒருமித்த பயிற்றல் — பயிலலுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் பாடத்திட்ட மிடுதலின் தேவையையும் திட்டமிட்ட பயிற்றலின் பயனையும் மாணவர்களின் பயிலலைக்கொண்டு அளவிட்டு மனநிறைவு பெறமுடியும்.

# பின்னிணைப்பு

## கல்விசார் மதிப்பீடு

### (1) சோதித்தல்: பழையமுறையும் புதியமுறையும்

மரபுமுறைத்தேர்வில் ஒவ்வொரு பொருளறிவுப்பாடத்தின்கீழும் ஒருசில கேள்விகளே கேட்கப்பட்டு வந்தன. அதனால் அவை கற்பிக்கப்பட்ட பாடங்களின் சில பகுதிகளையே தழுவியிருந்தன. மேலும் நீண்ட பதில்களைக் கட்டுரை வடிவத்தில் அமைத்து அளிக்கவேண்டியிருந்ததால் மாணவர்கள் சில பொறுக்குக் கேள்விகளுக்குப் பதில்களை முன்கூட்டியே தயாரித்து அவற்றைப் பாராமற் படித்து, தேர்வின்போது விடைப் புத்தகத்தில் அப்படியே பாராமல் எழுதமுடிந்தது. அதன் விளைவாகச் சில மாணவர்கள் தேர்வில் உயர்ந்த அல்லது போதிய மார்க்குகள் வாங்க முடிந்ததென்பது ஒருபுறமிருக்க, அத்தகைய குறிப்பிட்ட திறமையற்ற மாணவர்களிற் பலர் தேர்வில் தவற ஏதுவாயிற்று. இதைவிட முக்கியமான கோளாறு விடைகளுக்குரிய மார்க்குகள் கொடுப்பதில் ஆசிரியர்களுக்கிடையே நிலவிய விரிவான ஏற்றத்தாழ்வுகளாகும். இக்குறைகளை நீக்கும் வகையிலும் மாணவர்களைச் சிந்திக்கவைக்கும் முறையிலும் பாடங்களை முழுமையாகக் கற்கவைக்கும் நோக்கத்துடனும் புதுமாதிரிக் கேள்விகள் தோற்றுவிக்கப்பட்டன.

சிலகாலம் பழைய முறையில் கேள்விகள் தயாரித்தல் முற்றிலும் கைவிடப்பட்டு, புதுமாதிரிக்கேள்விகளே கேட்கப்பட்டு வந்தன. நாளடைவில் அனுபவ வாயிலாக இவற்றிலும் குறைகள் காணப்பட்டன. விடைகளை ஊகித்தல்,

குருட்டுத்தனமாகப் பதிலளித்தல் ஆகிய விரும்பத்தகாத பழக்கங்களுக்கு இவை இடமளித்ததோடு கற்றற்பலனை உண்மையாக மதிப்பிடவும் முடியாமற் போயிற்று. மேலும், தொடர்ச்சியாகச்சிந்தித்தலுக்கும் பதிலளித்தலுக்கும் அவசியமில்லாதிருந்தது. இவற்றுடன் கேள்வித்தாளின் நீளம் பதில்களின் அளவைவிட மிக அதிகமாயிருக்கவேண்டியதாயிற்று என்பதுடன் அவற்றை அடிக்கடி தயாரித்தல் மிகவும் கடினமாயுமிருந்தது. ஆகவே தற்போது புதுமுறைக் கேள்விகளின் குறைபாடுள்ள அம்சங்களை நீக்கியும் பழைய கட்டுரை வடிவ முறையைச் சில கட்டுதிட்டங்களுக் குட்படுத்தியும் ஒருவிதக் கலப்புமுறையில் கேள்வித்தாளைத் தயாரித்தல் நடைமுறையில் வந்துள்ளது.

இனி புதுமாதிரிக்கேள்விகளின் முக்கிய ரகங்களைப் பற்றிச் சிறிது அறிந்துகொள்வோம்: (1) மிகச் சிறந்த விடையைப் பொறுக்குதல் (Multiple choice). (2) தருந்தவாறு முடித்துக்காட்டுதல் (Completion or Filling the blanks), (3) சுருக்கமாகப் பதிலளித்தல், (4) பொருத்திக் காட்டல் (Matching), (5) புத்தம்புதுப்பகுதியை (Passage)ப் படித்துப் புரிந்துகொண்டு பதிலளித்தல் (Comprehension) என்பன அத்தகைய ரகங்களிற் சிலவாகும்.

## (1) மிகச்சிறந்த விடையைப் பொறுக்குதல்

இந்த ரகக்கேள்விகள்மூலம் பார்வைக்குப் பொருத்தமான பல விடைகளிலிருந்து மிகச்சிறந்த விடையைப் பொறுக்குவதில் மாணவர்களின் திறமையைச் சோதித்தறியலாம். இத்தகைய கேள்விகளைத் தயாரிப்பது எவ்வளவு கடினமோ அவ்வளவு சுலபம் மாணவர்களின் பதிலை மதிப்

பிடுவது. ஊக்கமுள்ள ஆசிரியர் மாணவர்கள் பல்வேறு சமயங்களில் அளிக்கும் தவறான பதில்களைக்குறித்து வருவ தன்மூலம் மாற்றுவிடைகளைச் சரியான விடையுடன் கலந்து கேள்விகள் புனையமுடியும். சாதாரணமாக ஐந்து மாற்று விடைகள் கொடுப்பது வழக்கம். (போதனமுறைத் தேர்வுத் தாளில் நான்கே கொடுக்கப்படுகின்றன). விடப்பட்ட கேள்வி உருப்படிகளை (items)த் தள்ளிவிட்டு, தவறான விடைகள் ஒவ்வொன்றிற்கும் கால் மார்க்கு வீதம் சரியான விடைகளின் எண்ணிக்கையிலிருந்து கழித்து வருவதை இந்த ரகக் கேள்விகளின் பதில்களுக்கான மார்க்காகக்கொள் வது வழக்கம். ஊகித்தலையும் குருட்டுத்தனமாக விடை யளிப்பதையும் தண்டிப்பதற்காக மார்க்கைக் குறைக்கும் வழக்கம் மேற்கொள்ளப்படுகிறது. [மாற்று விடைகளின் எண்ணிக்கையை இரண்டாக்கினால் இக்கேள்விகள் சரியா, தப்பா (Right — Wrong) அல்லது மெய்யா, பொய்யா (True - False) ரகத்தைச்சாரும். சரியான விடைகளின் எண்ணிக்கையிலிருந்து தவறானவற்றின் எண்ணிக்கை யைக் கழிப்பதன்மூலம் இவற்றிற்குரிய நேர்மையான மார்க்கையளிக்கலாம்.]

## (2) தகுந்தவாறு படித்துக்காட்டுதல்

இத்திறமையைச் சோதிக்கும் கேள்விகள் இரண்டு விதமாகத் தயாரிக்கப்படலாம். (i) கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுதி நிரப்பலாம், அல்லது (ii) வாக்கி யத்தின் முடிவில் அல்லது தொடக்கத்தில் அல்லது இடை யில் தகுந்த சொற்களைப் பயன்படுத்தி அவ்வாக்கியத்தை முடித்துக்காட்டலாம். இக்கேள்விகளுக்கான விடைகள் திட்டவட்டமாக இருக்க வேண்டும். மாற்றுவிடைகளுக்கு

இடமளித்தால் அவை சமமாக ஏற்றுக்கொள்ளத்தக்கவையா யிருத்தல் அவசியம்.

### (3) சுருக்கமாகப் பதிலளித்தல்

இம்மாதிரிக் கேள்விகள் நமக்கு மிகவும் அறிமுக மானவையாகும். வகுப்பு போதனையில் முன்னறிவைச் சோதிக்கவும் கற்றறிந்தவற்றைச் சோதிக்கவும் சாதாரண மாக இத்தகைய கேள்விகளை நாம் கையாள்கிறோம். இவற் றின் விடைகளில் முந்திய இரு ரக விடைகளிற்காட்டிலும் மொழி அம்சம் அதிகமாயிருப்பதால் தவறுகளேற்படவும் அதிக இடமிருக்கும். ஆகையால் இவ்விடைகளுக்கு மார்க்கு அளிப்பதில் திட்டவட்டமான விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

### (4) பொருத்திக்காட்டல்

"ஜோடி சேர்த்தல்" என்று சில ஆண்டுகட்கு முன் வரை குறிப்பிட்டு வந்த கேள்வி ரகத்தையே இப்போது பொருத்திக்காட்டல் சோதனையென்று அழைக்கிறோம். இது தகவலறிவை அடிப்படையாகக்கொண்டிருப்பதுடன் எளிதாக அமைக்கக்கூடியதாயும் (Easy to construct) இருக்கிறது. இக்கேள்வி உருப்படிகள் ஊகித்தலைக் குறைத்தபோதிலும் சார்புப் பிழைகளுக்கிடமளிக்கின்றன. உதாரணமாக, ஐந்தில் மூன்றினைச் சரியாகப் பொருத்திய பிறகு மீதியில் ஒரு பொருத்தம் தவறினால் மற்றதும் தவ றும். அளிக்கக்கூடிய பதில்களில் ஒன்றிரண்டு அதிக மாகவும் அவற்றை வரிசை ஒழுங்கில் இல்லாமலும் தயாரித் தல் சிறந்த முறையாகும்.

### (5) புரிந்துகொண்டு பதிலளித்தல்

இவ்வகைக் கேள்விகள் பழைய கட்டுரை ரகத்திற்கும் புதிய துண்டு ரகத்திற்கும் இடையே விட்டுக்கொடுக்கும் தோரணையில் அமைகின்றன. ஒன்று அல்லது இரண்டு பத்திகளை (paragraphs)க் கொண்ட பகுதியை (Passage) ஏதாவது ஒரு முன்னறியாத (Unseen) புத்தகத்திலிருந்து எடுத்துக்கொடுத்து அதன்கீழ்ச் சில கேள்விகளைக் குறிக்கிறோம். அப்பகுதியைத் திரும்பத்திரும்பப் படித்தல் மூலமே விடையளிக்கக்கூடிய வகையில் கேள்விகளை அமைக்க வேண்டும்.

ஆகவே, பழைய கட்டுரை ரக விடைகளைக் கொடுப்பதில் மீட்டுக் கொணர் (Recall) அம்சமே முழுக்க முழுக்கத் தேவையாயிருந்தது. இப்போதையப் புதுரக விடைகளையளிப்பதில் மீட்டுக்கொணர் அம்சமும் மீட்டறி (Recognition) அம்சமும் கிட்டத்தட்ட ஒரே யளவு கவனம் பெறுகின்றன.

கீழே புதுரகக் கேள்விகளின் மாதிரிகளும் பதில்களும் கொடுக்கப்பட்டுள்ளன:

# பாகம் I

## பொது முறைகள்

### (ii) சோதித்தல்: வினுக்களும் – விடைகளும்

### I மிகச்சிறந்த விடையைப் பொறுக்குதல்

### (Multiple choice)

1. கற்பிக்கும் பாடத்தின் அளவு இதையொட்டியிருக்க வேண்டும்.

   (a) ஒரு பீரியடில் முற்றுப்பெறுவதை (b) ஆசிரியரின் விருப்பு வெறுப்புக்களை (c) மாணவர்களின் விருப்பத்தை (d) திட்டவட்டமான குறிக்கோளை. (d)

2. பாடபோதனையினிடையே மாணவர்கள்

   (a) கேள்வி கேட்கக்கூடாது. (b) கேள்வி கேட்குமாறு ஊக்குவிக்கப்படவேண்டும். (c) கேட்கும் கேள்விகளைத் தட்டிக்கழிக்கவேண்டும். (d) எவ்விதத்திலும் குறுக்கிடக்கூடாது. (b)

3. திரைப்படக்காட்சியின் பயன்

   (a) விஷயங்களை நன்ருய்ப்பதியவைப்பது. (b) பாடவும் நடிக்கவும் பயிற்சியளித்தல். (c) மாணவர்களுக்கு இன்பமளிப்பது. (d) கவலையின்றிப் பொழுது போக்குவது. (a)

4. பன்முறைப் பயிற்சியின் விளைவு

   (a) வெறுப்பு. (b) களைப்பு. (c) விரைவும் திருத்தமும். (d) பாராமற்படித்ததை ஒப்பிப்பது. (c)

5. பாலன் முதன்முதலாகக்கல்வி கற்குமிடம்

(a) குடும்பச் சூழ்நிலையில். (b) கிண்டர்கார்ட்டன் பள்ளியில். (c) மாண்டிஸோரி பள்ளியில். (d) புத்தகங்கள் வாயிலாக. (a)

6. மாணவர்களின் பொது அறிவைப் பெருக்கவல்லவை

(a) மேற்கோட்புத்தகங்கள் (Reference books). (b) சொல்லகராதிகள். (c) கட்டுரைகள். (d) செய்தித்தாள்கள். (d)

7. கற்பித்தலில் பாடப்புத்தகத்தின் வேலை

(a) ஆசிரியரின் வேலையை ஏற்றுக்கொள்ளுதல். (b) ஆசிரியரின் துணைக்கருவியாயமைதல். (c) பயிற்சிகளையும் வினுக்களையும் தயாரித்துக் கொடுத்தல். (d) கற்பிக்கும் முறையையும் பொருளடக்கத்தையும் வரையறுத்துக் காட்டுதல். (b)

8. சிறக்கக் கற்பிக்க வேண்டுமானல் இவற்றின் நெருங்கிய இடைத்தொடர்பு இன்றியமையாதது.

(a) பாடம், பாடப்புத்தகம், பாடத்திட்டம். (b) ஆசிரியர், பாடப் புத்தகம், பாடம். (c) ஆசிரியர், பாலன், பாடம். (d) ஆசிரியர், பாடத்திட்டம், இலாகா உத்திரவுகள். (c)

9. டால்ட்டன் முறையில் நற்பயனெய்த இது அவசியம்.

(a) புதிதியற்றும் திறமை. (b) ஆசிரியரின் போதனை. (c) ஒப்படைகளை உரிய நேரத்தில் செய்துமுடித்தல். (d) சுயமாகக் கற்றறியும் திறமை. (d)

(10) ஆதாரக் கல்வித் திட்டத்தின் கீழ் கல்விகற்பிக்கும் முறை எதனுடன் தொடர்புறுத்தப்படவேண்டும் ?

(a) கால அட்டவணையுடன். (b) ஆதாரத்தொழிலுடன். (c) ஆதாரத் தொழிலைப்பற்றிய புத்தகங்களுடன். (d) ஆசிரியரின் வேலைத்திட்டத்துடன். (b)

11. சிறந்த கற்பித்தலின் குறிகாட்டி

(a) ஆசிரியரின் சொல்வன்மை. (b) மாணவர்கள் செயலற்ற முறையில் கவனித்தல். (c) மாணவர்கள் கற்றதைத்திறம்பட வெளியிடுதல். (d) மாணவர்கள் கேள்வி கேட்டல். (c)

12. ப்ராஜெக்ட் முறையின் உயிர்நாடி

(a) நோக்கமுடைய செயல் (b) செயலில் இன்பம் பெறுதல். (c) குழு வேலை. (d) கற்றலைச் செயலுக்கடிமைப் படுத்தல். (a)

13. பள்ளிக்கூட நூல் நிலையத்தின்மூலம் மாணவர் பெறக்கூடிய நன்மை

(a) வகுப்பறைப் போதனையிலிருந்து விடுதலை பெறல். (b) ஆழ்ந்த படிப்பறிவு பெறல். (c) விரிந்த படிப்பறிவு பெறல். (d) பற்பல பொருள்களைப்பற்றிய புத்தகங்களைப் படித்தல். (c)

14. ஓராண்டு வேலையைத் திட்டமிடல் எதைப் பொறுத்திருக்க வேண்டும் ?

(a) எல்லாப் பாடங்களையும் கற்பிக்க இயலுவதை. (b) பொருளறிவுப் பாடங்களில் மாணவர்க்குத் தேர்ச்சி ஏற்படுவதை. (c) தேர்வுகளில் மாணவர்கள் உயர்ந்த மார்க்குகள் பெறுமாறு பயிற்சியளிப்பதை. (d) மாணவர்களின் இயல்பூக்கங்கள், ஆற்றல்

கள், மனவெழுச்சிகள் ஆகியவற்றை ஒருங்கமைத்துக் கற்பிக்கக்கூடிய ஏதுக்களை. (d)

15. ஆதாரக் கல்விமுறையில் தொடர்புறு போதனையின் சுழலச்சு

(a) அடிப்படைக் கைத்தொழில். (b) அடிப்படைக் கைத்தொழிலும் இயற்கை, சமூகச்சூழ்நிலைகளும். (c) சமூகச் சூழ்நிலை. (d) பொருளறிவுப் பாடத்திட்டங்கள். (b)

## II தகுந்தவாறு முடித்துக் காட்டுதல்

## (Completion)

1. பிள்ளைகள் பள்ளியில் பெறும் மறைமுக அனுபவங்களில் ஒன்று —— ஆகும். (படித்தல்)
2. ப்ராஜெக்ட் முறையின் முதற்படி —— ஆகும். (நோக்கமுறல்)
3. ப்ராஜெக்ட் முறையின் ——படி நிறைவேற்றல் ஆகும் (மூன்றும்)
4. மாண்டிஸோரி முறையின் உயிர்நாடியான கோட்பாடு —— ——. (செய்து கற்றல்)
5. ப்ரோபெலின் கல்விக் கொள்கைக்கு —— —— முறை என்று பெயர். (கிண்டர்கார்ட்டன்)
6. வகுப்பு நேரத்தில் எல்லா மாணவர்களுக்கும் வாய் மொழிப் பயிற்சியளிக்கச் சிறந்த வழி—— ——ஆகும். (கேள்வி கேட்டல்)
7. —— —— புலப்பயிற்சியை மையமாகக்கொண்டுள்ளது. (மாண்டிஸோரி முறை)

8. கற்றற் பயனை —— —— மூலம் ஒருவாறு அறியலாம். (கேள்வி கேட்டல்)

9. ஆதாரக்கைத்தொழில் —— ச்சூழ்நிலையையும்—— ச்சூழ்நிலையையும் இணைக்கிறது. (இயற்கை, சமூக)

10. ஆசிரியர் —— போக்கான பிள்ளைகளை மட்டும் கவனித்தல் போதாது; —— போக்கான பிள்ளைகளையும் கவனிக்கவேண்டும். (முற், பிற்)

11. தொழில் மைய போதனைக்கு ஆதாரமான கொள்கை " —— பொருளிலிருந்து —— ப்பொருளுக்குப் போதல் " என்பதாகும். (புலனீடான, கருத்து)

12. இணைப்பு போதனை —— இருக்க வேண்டும், —— இருக்கக்கூடாது. (இயற்கையாக, செயற்கையாக)

13. கல்விப்பயணம் —— க்கற்றலுக்கு உதவுகிறது. (நேர்முக அல்லது காட்சி முறை)

14. செய்தித் தாள்கள் மாணவர்களின் —— அறிவை வளர்க்கின்றன. (மறைமுக அல்லது காட்சிமுறை)

15. கற்றலுக்குப் பெரிதும் உதவக்கூடிய மூன்று கேள்விகள் ——, ——, ——என்பனவாகும். (எது, எப்படி, ஏன்)

16. —— அற்ற மாணவன் விளையாட்டையும் வேலையாகக் கருதுவான். (உற்சாகம்)

17. செய்தித் தாள்கள் மூலம் ——, ——, —— ஆகிய மூன்று பாடங்களைச்சார்ந்த பொருளறிவைப்பெருக்கிக் கொள்ளலாம். (சரித்திரம், பூகோளம், ஆட்சி முறை)

18. ஆராயும் மனப்பான்மையை வளர்க்கும் முறைக்கு ——— ——— முறை என்று பெயர். (பரிசோதனைச் சாலை அல்லது ஆய்கூட)

19. பள்ளி நாடகங்களின் மூலம் மாணவர்களின் ——— திறமையை வெளிப்படுத்தலாம். (ஆக்க, நடிக்கும் அல்லது பேசி நடிக்கும்)

20. விதிகளைக் கற்பிக்கும் முறைக்கு ——— ——— என்று பெயர். (அனுமான அல்லது விதிவரும் முறை)

## III சுருக்கமாகப் பதிலளித்தல்

1. கிண்டர்கார்ட்டன் முறையைத் தோற்றுவித்தவர் யார்? (ப்ரோபெல்)

2. மாணவர்களின் தேவைகளை எவ்வாறு ஆசிரியர் அறிந்துகொள்ளலாம்? (கேள்விகள் மூலம்)

3. மாணவனின் கேள்விக்கு விடையளிக்கமுடியாத ஆசிரியர் என்ன செய்யவேண்டும்? (உடனே இயலாமையை ஒத்துக்கொண்டு கூடிய விரைவில் பதிலைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும்).

4. தற்கால நிகழ்ச்சிகளைப்பற்றிப் படித்தறிவதை எவ் வகுப்பில் தொடங்குவீர்? (மூன்றும் அல்லது நான்காம் வகுப்பில்)

5. டால்ட்டன் முறையென்று பெயர்வரக்காரணமென்ன? வட அமெரிக்க மாகாணமான மாசச்யூசெட்ஸில் (Massachusetts) உள்ள டால்ட்டன் உயர்தரப்பள்ளியில் (Dalton High School) முதன்முதலாகச்செயற் படுத்தப்பட்டதால்)

6. மிஸ் ஹெலன் பார்க்கர்ஸ்ட் என்ற அம்மையார் ஆய்ந்து புகுத்திய முறைக்கு என்ன பெயர்? (டால்ட்டன் முறை)

7. பள்ளிக்கூடத்தைக் குழந்தைகளின் பூங்காவாகக் கருதிப் புதிய கல்வி முறையை வகுத்தவர் யார்? (ப்ரோபெல்)

8. கற்றல் என்பது பெரும்பாலும் எதைக் குறிக்கும்? (பற்பல அனுபவங்களை நேரிடையாகவும் மறைமுக மாகவும் பகிர்ந்துகொள்வதை)

10. கேள்வி கேட்பதன் முக்கிய நோக்கம் எதாயிருக்க வேண்டும்? (மாணவனைச் சிந்திக்க வைப்பதாயி ருக்கவேண்டும்

11. செய்தித்தாள் படித்தலின் இரு கல்விப்பயன்களைக் கூறுக. (மொழிப்பயிற்சி பெறுதலும் பொது அறிவு பெறுதலும்)

12. ஒரே சமயத்தில் பல மாணவர்கள் விடையளிப்பதை ஏன் தடுத்து நிறுத்தவேண்டும்? (தனி மாணவர் களின் சிந்திக்கும் ஆற்றலுக்கு முட்டுக்கட்டை போடு வதால்)

13. கற்பித்தலில் விளையாட்டு முறையை ஏன் புகுத்த வேண்டும்? (மாணவர்களின் இயல்பூக்கங்களில் விளையாட்டைச் சார்ந்ததும் ஒன்றாகையால்)

14. பழங்கல்விமுறையின் முக்கியமான குறைகள் யாவை? (வாழ்க்கையோடு தொடர்பின்மை, வெறும் ஏட்டுக் கல்வி, மிகைப்படுத்தப்பட்ட தேர்வுத்தேவைகள்.)

15. வார்தா திட்டத்தை உருவாக்கித்தந்த குழுவின் பெயர் என்ன?

(ஜாக்கிர் ஹுசேன் கமிட்டி.)

16. ஆதாரப்பள்ளியில் பாடப்புத்தகத்தின் பணி யாது?
(மாணவர்களின் நேர்முக அனுபவங்களுக்கு உதவுதல்.)

17. ஆசிரியர் எவ்வெப்போது கேள்வி கேட்டலுக்குப் பதிலாக, கூறுதல் முறையைக் கையாளலாம்?

(ஆழ்ந்து சிந்தித்தல் அல்லது ஊகித்தல்மூலம் மாணவர்களால் விடை காணமுடியாதென்றுபட்டால்.)

18. சொற்பொழிவுமுறை ஏன் தொடக்கப்பள்ளி வகுப்புக்களுக்குகந்ததல்ல?

(மாணவர்களிடம் இயல்பாகவுள்ள சுறுசுறுப்புத்தன்மையை நசுக்கி அவர்களைச் செயலற்ற பதுமைகளாகக் கருதுவதால்.)

19. குழந்தைகளின் நேர்முக அடிப்படையிலமைந்துள்ள மூன்று கல்விமுறைகளைக் குறிப்பிடுக.

(கிண்டர்கார்ட்டன் முறை, மாண்டிஸோரி முறை, ப்ராஜெக்ட் முறை.)

20. ஆதாரக்கல்வி முறையில் இணைப்புப் போதனையை மேற்கொள்ள உதவக்கூடிய இரு வாழ்க்கை மையங்களைக் கூறுக.

[(பள்ளிச்) சுற்றுப்புறத்துப்புரவும், ஆரோக்கிய வாழ்வும்; (பள்ளிக்கூடக்) கூட்டுறவு வாழ்க்கை.]

## IV பொருத்திக்காட்டல்

IIல் உள்ளவற்றுடன் Iல் உள்ளவற்றைச் சரியாகப் பொருத்திக் காட்டுக:

| I | II |
|---|---|
| (i) (a) கல்விசார் திரைப் படங்கள் | 1. தற்கால நிகழ்ச்சிகளோடு தொடர்பு (e) |
| (b) நூல்நிலையம் | 2. காட்சி முறையில் கற்றல் (a) |
| (c) மௌன வாசிப்பு | 3. விரிவாகப் படித்தல் (b) |
| (d) பள்ளிச் சஞ்சிகை | 4. சக்தியைச் சேமிக்கப் பயன்படுகிறது (c) |
| (e) செய்தி படித்தல் | 5. கூட்டுறவு ஆக்கப் பயிற்சி (d) |
| | 6. இன்பமளிக்கின்றன |
| (ii) (a) நாடகம் | 1. நேர்முகக் கற்றல் (d) |
| (b) குழுப்படிப்பு | 2. மௌன வாசிப்பு (e) |
| (c) நாட்குறிப்பு | 3. கற்பனைத் திறன் (a) |
| (d) கல்விப்பயணம் | 4. தன் - கருத்துக்களுக்கு உருக்கொடுத்தல் (c) |
| (e) மின் அட்டைகள் | 5. கூட்டுறவு மனப்பான்மை (b) |
| | 6. பல இடங்களைப் பார்த்தல் |
| (iii) (a) கடிதம் எழுதுதல் | 1. கட்டுரைப் பயிற்சிக்குத் துணைக் கருவி (c) |
| (b) சொற்போர் | 2. தானாகக் கற்றல் (d) |
| (c) கதைப்படங்கள் | 3. தனியிலிருந்து பொதுவுக்கு (e) |

| | |
|---|---|
| (d) மாண்டிஸோரி முறை | 4. கருத்துக்களுக்கு உருக் கொடுத்தல் (b) |
| | 5. பொதுவிலிருந்து தனிக்கு |
| (e) அனுமானமுறை | 6. உண்மை நிகழ்ச்சிகளை யொட்டியிருத்தல் நலம் (a) |
| (iv) (a) ப்ராஜெக்ட் முறை | 1. ஒப்படைகள் (d) |
| (b) கிண்டர்கார்ட்டன் முறை | 2. புலப்பயிற்சி (c) |
| | 3. விளையாட்டு மூலம் கற்றல் (b) |
| (c) மாண்டிஸோரி முறை | 4. புத்தகங்கள் மூலம் கற்றல் |
| (d) டால்ட்டன் முறை | 5. நோக்கமுடைய செயல்கள் (a) |
| (e) சொற்பொழிவு முறை | 6. கல்லூரிகளுக்கேற்றது (e) |
| (v) (a) படங்கள் | 1. தொழில்மூலம் கற்றல் (c) |
| (b) செய்தித்தாள் | 2. கூட்டுறவுப் பயிற்சி (d) |
| (c) நூல்நூற்றல் | 3. காட்சிமுறையில் கற்றல் (a) |
| (d) தோட்டவேலை | 4. பொது அறிவு (b) |
| (e) மௌன வாசிப்பு | 5. உச்சரிப்புப் பயிற்சி (f) |
| (f) உரக்கப் படித்தல் | |
| (vi) (a) செய்து கற்றல் | 1. ஊமைக்கூத்து (e) |
| (b) திட்டமிட்ட செயல் | 2. கல்விப் பயணம் (d) |
| (c) மறைமுகக் கற்றல் | 3. பள்ளித்துப்புரவு (f) |
| (d) நேர்முகக் கற்றல் | 4. பள்ளிநாள் கொண்டாட்டம் (b) |
| (e) விளையாட்டுமூலம் கற்றல் | 5. கதை கேட்டல் (c) |
| (f) குழுவேலை | |

V கீழ்க்கொடுக்கப்பட்ட பகுதியைக் கவனமாகப் படித்து அதன் அடியிற் கொடுக்கப்பட்டிருக்கும் வினுக்களுக்கு விடை எழுதுக.

விளையாட்டு, வேலை ஆகிய இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமையைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு விதத்தில் வேலையும் விளையாட்டும் செயல் நிகழ்ச்சிகளாகக் கருதத்தக்கவையே. விளையாட்டை உற்சாகமாகத் தொடங்கும்போது அதில் வேலை அம்சம் நனவிலிடம்பெறுகிறதில்லை. ஆனுல் இறுதியில் கிட்டக்கூடிய வெற்றி, தோல்வியை நினைக்குங்கால் அதே விளையாட்டு வேலையாகவும் மாறுகிறது. அதேபோல் ஒரு வேலையை மேற்கொள்ளும்போது ஒருவித மலைப்பு, வெறுப்பு, அச்சம் முதலியவை மேலோங்கி நம்மை எதிர்நோக்குகின்றன. ஆனுல் அதைச் செய்து முடிப்பதில் விளையாட்டு மனப்பான்மையையும் முறையையும் புகுத்தினுல் மேற்குறிப்பிட்ட மனவெழுச்சிகள் தலைகாட்டா. நிகழும்போதும் இறுதி இலக்கை அடையும்போதும் விளையாட்டு இன்பமளிக்கிறது. ஆனுல் வேலையோ முடித்தல்மூலமே மனநிறைவளிக்கிறது. வேலையை விளையாட்டாகவும் விளையாட்டை வேலையாகவும் மேற்கொண்டால் இருவிதச் செயல் நிகழ்ச்சிகள் வாயிலாகவும் நிறைந்த இன்பம் பெறலாம்.

கேள்விகள்

1. விளையாட்டையும் வேலையையும் ஒற்றுமைப்படுத்திக் குறிப்பிடும் சொற்றொடர் எது?

2. விளையாட்டு வேலையாகக் கருதப்படுவதெப்போது?

3. வேலையை விளையாட்டாகச் செய்ய எத்தகைய தூண்டல் தேவை?

4. விளையாட்டுமைதானத்திலுள்ள கற்களையும் கட்டிகளையும் அப்புறப்படுத்தல் எப்பொழுது விளையாட்டாக நிகழும் ?

5. தொடக்கம், நிகழ்ச்சி, இறுதி ஆகிய மூன்று நிலைகளிலும் இன்பமளிக்கவல்லது விளையாட்டா, வேலையா ?

### விடைகள்

1. செயல் நிகழ்ச்சி. 2. இறுதி விளைவை நினைக்குங்கால். 3. விளையாட்டு மனப்பான்மை. 4. நோக்கமுறு குழுச்செயலாக மேற்கொள்ளும்போது. 5. விளையாட்டு.

# பாகம் II

## சிறப்பு முறைகள்

### (ய்) சோதித்தல்: புதுமாதிரி வினுக்களும் விடைகளும் (தமிழ்)

#### I மிகச்சிறந்த விடையைப் பொறுக்குதல்

1. மொழிப்பயிற்சியின் முதற்படி

(a) எழுதக்கற்றல் (b) பிறர்பேசக்கேட்டல் (c) படிக்கக் கற்றுக்கொள்ளுதல் (d) எழுதியதைப் படித்தல். (b)

2. வாசிப்புக் கற்பிக்க மிகச்சிறந்த முறை எது?

(a) வாக்கியமுறை (b) சொல்முறை (d) எழுத்துக் கூட்டும்முறை (d) எழுதக் கற்றபின் படிக்கக்கற்றல். (a)

3. பேச்சுப்பயிற்சியை மிகச் சிறந்தமுறையில் அளிக்க வல்ல செயல்

(a) சொற்போர் (b) சொற்பொழிவு (c) கதைசொல்லல் (d) பிறர் சொற்பொழிவைப் படித்துப் பாராமல் ஒப்பித்தல். (c)

4. புதுச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்த எவ்வாறு கற்பிக்கலாம்?

(a) அவற்றின் பொருளைக்கூறி (b) அகராதியிலிருந்து பொருளறிந்து (c) மாதிரி வாக்கியத்தில் அமைத்துக் காட்டி (d) மாணவனுடைய அனுபவத்தை வாக்கியத்திலமைக்கச்செய்வதன்மூலம். (d)

5. வாசிப்புக்கு வலுவான அடிப்படை

(a) ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் புத்தகங்கள் (b) பள்ளி நிகழ்ச்சிகளை விவரிக்கும் சொல்லாக்கங்கள் (c) மாணவர் விரும்பும் புத்தகங்கள் (d) சஞ்சிகைகள். (b)

6. "கதைசொல்லல்" பாடம் சிறந்த பயனளிக்க

(a) ஆசிரியர் நன்ருகக் கதையைச் சொல்லவேண்டும்.
(b) கேட்ட கதையைப் புத்தகத்தில் படிக்கவேண்டும்.
(c) கேள்விகளுக்குச் சரியாகப் பதிலளிக்கவேண்டும்.
(d) கதையை நடிக்கச்செய்யவேண்டும். (d)

7. செய்யுள் கற்பிக்க மிகச்சிறந்தமுறை

(a) ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் கூறுதல்.
(b) முக்கியமான சொற்களுக்குப் பொருள் கூறல்.
(c) செய்யுளை முழுமையாகக் கற்பித்தல். (d) கேள்விகளுக்குப் பதில் கூறவைத்தல். (c)

8. மொழி கற்பித்தலின் மிக முக்கியநோக்கம்

(a) கட்டுரைப் பயிற்சியளித்தல் (b) சொற்பொழிவுப் பயிற்சியளித்தல் (c) சிறந்த இலக்கியங்களைப் படிக்கப் பயிற்சியளித்தல் (d) கருத்துக்களைப் புரிந்துகொள்ளவும் வெளியிடவும் பயிற்சியளித்தல். (d)

9. இலக்கணம் கற்பிக்கச் சிறந்த முறை எது?

(a) அனுமானமுறை (b) அனுமிதமுறை (c) இரு முறைகளும் சேர்ந்தது (d) 'பாராமல்' படிக்கும்முறை. (c)

10. ஒரு நல்ல இலக்கியத்தைச் சுவைத்து இன்பமடைய

(a) அதை நாடகமாக அமைத்து நடிக்கலாம். (b) அதைப் பற்றிய குறிப்புக்களைப் படிக்கலாம். (c) கேள்விகளுக்கு விடை காணலாம். (d) ஆசிரியரின் விமரிசனத்தைக் கேட்கலாம். (a)

11. செய்யுளை மனப்பாடஞ் செய்யச் சிறந்தவழி

(a) ஒவ்வொரு அடியையும் திரும்பத்திரும்பப் படித்தல் (b) ஒவ்வொரு சீராக மனப்பாடம் செய்தல் (c) செய்யுளை முழுமையாக மனப்பாடம் செய்தல் (d) செய்யுளை எழுதுதல். (c)

12. செய்யுள் கற்பித்தலில் முதற்படி எது?

(a) கடினமான சொற்களுக்குப் பொருள் கூறல் (b) செய்யுளைப் பொருள்நயம், சொல்நயம் புரியும்படி உரக்கப் படித்தல் (c) பொழிப்புரை கூறல் (d) திரண்ட கருத்தைக் கூறல். (b)

13. அனுமான முறையில் இலக்கணம் கற்பிக்க, தனி உதாரணங்களை எதிலிருந்து பொறுக்கியெடுக்க வேண்டும்?

(a) ஏதாவது ஒரு உரைநடைப் புத்தகத்திலிருந்து (b) பல இலக்கணப் புத்தகங்களிலிருந்து (c) பாடப் புத்தகத்தின் ஏதாவது ஒரு பாடத்திலிருந்து (d) பாடப் புத்தகத்தில் ஆழ்ந்து கற்ற பகுதிகளிலிருந்து. (d)

14. மௌன வாசிப்பின்போது

(a) உதடுகளோ தலையோ அசையக் கூடாது (b) தலை மட்டும் அசையலாம் (c) உதடுகள் மட்டும் அசையலாம் (d) புத்தகத்தை இங்குமங்கும் அசைக்கலாம். (a)

15. மொழி கற்பித்தலுக்குப் பொறுப்பானவர்

(a) மொழி கற்பிக்கும் ஆசிரியர் (b) அறிவுப் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள் (c) தலைமையாசிரியர் உட்பட எல்லா ஆசிரியர்களும் (d) தலைமையாசிரியர் மட்டும். (c)

## II சரியாக முடித்துக்காட்டல்

1. வாசிப்புப் பயிற்சிக்கு —— கருத்துக்களை வாய்மொழியாக வெளியிட வாய்ப்பளிக்கவேண்டும். (முன்)

2. வாசிக்கக் கற்பித்தலின் சிறந்த அலகு —— ஆகும். (வாக்கியம்)

3. மௌன வாசிப்பின் நோக்கம் பொருளுணர்ந்து வாசித்தலும் —— வாசித்தலுமாகும். (வேகமாக)

4. ஒரு சொல்லின் பொருளை மாணவனுக அறிந்து கொள்ள உதவும் சிறந்த துணைக்கருவி —— ஆகும். (பொருளகராதி)

5. இலக்கியத்திற்குப் —— இலக்கணம் கற்பிக்கவேண்டும். (பின்)

6. கடிதமெழுதக் கற்பித்தலுக்கு —— கடிதங்களை முன் மாதிரியாகக் கையாளவேண்டும். (உண்மையான)

7. ஆசிரியர் மாணவர்களைக் கேள்வி கேட்பதுபோல் —— —— க் கேள்வி கேட்பதும் முக்கியமே. (மாணவர்கள் ஆசிரியர்களை)

8. வாசித்தலின் மிகச் சிறந்த நோக்கம் —— —— ஆகும். (பொருள் உணர்தல்)

9. பள்ளிக்கூடச் சஞ்சிகை மாணவர்களின் —— திறமையை வெளிப்படுத்தவல்லது. (கற்பனை அல்லது கட்டுரை ஆக்க)

10. —— யும் —— யும் தாங்கியுள்ள மின் அட்டைகள் வாசித்தல் பயிற்சிக்கு உதவும் சாதனங்கள் ஆகும். (படத்தை, தலைப்பை)

11. இலக்கணம் கற்பிக்க, முன்பு கையாளப்பட்டு வந்தது ——— ——— யும் தற்போது கையாளப்படுவது ——— ——— யும் ஆகும். (அனுமித முறை, அனுமான முறை)

12. வாசித்தலின் இரு பிரிவுகள் —— வாசித்தலும் —— வாசித்தலுமாகும். (வாய்விட்டு, வாய்க்குள் அல்லது உரக்க, மௌனமாக)

13. வாசித்தற் பயிற்சிக்குமுன் ——— ப் பயிற்சியும் எழுதல் பயிற்சிக்குமுன் ——— பயிற்சியும் அளிக்கவேண்டும். (வாய்மொழி, வாசித்தல்)

14. ஒரு சொல்லை நன்றாய் அறியவேண்டுமானால் அதன் —— உணர்வதோடு ——— ——— உபயோகிக்கவும் தெரியவேண்டும். (பொருளை, அச்சொல்லை)

15. மொழியறிவு வளர்ச்சிக்கு ——— உபயோகித்தலும் ———ப் படிப்பும் இன்றியமையாதன. (அகராதியை நூல்நிலைய)

16. மொழி கற்பித்தலின் நான்கு பகுதிகள் ——, ——, ——, —— என்பனவாகும். (கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்)

17. மௌன வாசிப்பின் வேகத்தை மாணவர்களின் ——— ——— இருந்து ஒருவாறு அறியலாம். (கண் அசைவில்)

18. பள்ளிக்கூடச் செய்திப் பலகை மூலம் ——— வாசிப்பில் பயிற்சியளிக்கலாம், (மௌன)

19. மாணவர்களின் கற்பனைத் திறனுக்கு வாய்ப்பளிக்கச் சிறந்த முறை ஒரு கதையை ——— விட்டுவிடுதல் ஆகும். (முடிக்காமல் அல்லது அரைகுறையாக)

20. வரையறுப்புக்களில் தொடங்கி இலக்கணம் கற்பித்த லுக்கு———— ———— என்று பெயர். (அனுமித முறை)

### III சுருக்கமாகப் பதிலளித்தல்

1. மொழி கற்பித்தலின் நான்கு கூறுகளை வரிசைப்படுத்தி எழுதுக. (கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்ற வரிசையில் கற்பிக்க வேண்டும்.)
2. வாசித்தல் கற்பிக்க இரு சிறந்த முறைகள் எவை? (வாக்கிய முறையும் கதை முறையும் இரு சிறந்த முறைகளாகும்.)
3. உரக்க வாசிக்கும்போது எவ்விரு கூறுகள் கவனம் பெறவேண்டும்? (உச்சரிப்பும் பொருளுணர்த்தலும் கவனம் பெறவேண்டும்.)
4. மாணவர்களின் பேச்சிலும் படிப்பிலும் ஏற்படும் இரு விதப்பிழைகளைக் குறிப்பிடுக. (தெளிவற்ற உச்சரிப் பும் முடிவுகளைத்திருத்தமாக உச்சரிக்காததும் இரு முக்கியமான பிழைகளாகும்.)
5. நல்ல கையெழுத்தின் இலக்கணங்கள் யாவை? (வடிவம், ஒரே சீரான அளவு, இடைவெளி விடல், தெளிவு)
6. செய்யுளைச் சுவைத்து இன்புறச் செய்ய அதை வாசித் துக் காட்டுவதில் எம்முறைகளைக் கையாளலாம்? (உரக்க வாசித்தல், இராகத்துடனும் தாளத்துடனும் வாசித்தல், பாவத்தோடு வாசித்தல் ஆகிய முறைகளை)
7. அறிக்கைகள் தயாரிக்கும் பயிற்சியை மாணவர்களுக் களிக்கக்கூடிய இரு சந்தர்ப்பங்களைக்குறிப்பிடுக. (பள்ளிநாள் கொண்டாட்டத்திற்குப்பின், கல்விப்பய ணத்திற்குப்பின்.)

8. தவறின்றி எழுதும் திறமையைச் சோதிக்கும் மொழிப் பயிற்சி யாது? (சொல்வதைக் கேட்டுப் பாராமல் எழுதும் பயிற்சி)

9. எழுதக் கற்பிக்கும் முன் ஏன் வாசிக்கக்கற்பிக்கவேண்டும்? (காட்சி மூலம் பெற்ற அனுபவம் எழுதும் வேலைக்கு உதவியளிப்பதால்)

10. ஆசிரியர் ஏன் தவறின்றிப் பேசவேண்டும்? (மாணவர்கள் இயல்பாக ஆசிரியரின் பேச்சுமுறையை அப்படியே பின்பற்றுவார்களாகையால்.)

11. ஆதாரப் பள்ளிகளில் பாடம் கற்பிக்க அனுகூலமான இரு சந்தர்ப்பங்களைக்கூறுக. (இறை வணக்கம், பொழுதுபோக்கு நேரம்.)

12. எந்த வகுப்பில் கடிதமெழுதக்கற்பிக்கத்தொடங்கலாம்? (நான்காம் வகுப்பில்)

13. கதை முறையில் வாசிக்கக் கற்பித்தல் எழுத்துக்கூட்டும் முறையில் கற்பிப்பதைவிட ஏன் சிறந்தது? (உளவியற்படி குழந்தைகளின் விருப்பத்திற்கு இசைந்திருப்பதால்.)

14. மொழி பயிலலில் மாணவர்கள் ஒருவர்க்கொருவர் எவ்வாறு உதவிக்கொள்ளலாம்? (தவறுகளைத் திருத்தல், உரையாடல், வீட்டு வேலையைச் சரிபார்த்தல் மூலம்)

15. பார்த்தெழுதும் மொழிப் பயிற்சியின் நன்மை என்ன? (பிழையற எழுத உதவுகிறது.)

16. எந்த வகுப்பிலிருந்து மாணவர்களைச் செய்தித்தாள் படிக்கப் பயிற்றலாம்? (ஐந்தாம் வகுப்பிலிருந்து)

17. மௌன வாசிப்பின் பலனை எவ்வாறு சோதிக்கலாம்? (வாசித்த பகுதியில் கேள்வி கேட்பதன் மூலம்)

18. மொழி கற்பிப்பதில் வாய்மொழிப் பயிற்சிக்கு அவசிய மில்லாத வகுப்பு எது? (எவ்வகுப்புமில்லை)

19. சரியாக உச்சரிக்கும் பயிற்சி பெற உதவும் ஒரு உபகர ணத்தைக்குறிப்பிடுக. (லிங்குவபோன் பதிவுகள்: Linguaphone Records)

20. அகராதியை உபயோகிக்கும் பழக்கம் மொழித் தேர்ச் சியின் எந்த அம்சத்திற்குச் சிறப்பாகப்பயன்படும்? (ஒரு சொல்லுக்குப் பல பொருள்களையும் ஒரு பொரு ளுடைய பல சொற்களையும் அறிதலுக்கு)

## IV பொருத்திக்காட்டல்

2-ல் உள்ளவற்றுடன் 1-ல் உள்ளவற்றைச் சரியாகப் பொருத்திக்காட்டுக.

| I | | II | |
|---|---|---|---|
| (i) | | | |
| (a) | செய்தித்தாள் | 1. செவிப்புலனறிவு | (e) |
| (b) | அகராதி | 2. மௌன வாசிப்பு | (d) |
| (c) | மௌனப்படம் | 3. கட்புலனறிவு | (c) |
| (d) | மின் அட்டைகள் | 4. சொற் களஞ்சியத்தைப் பெருக்குதல் | (b) |
| (e) | ரேடியோ | 5. பொது அறிவு | (a) |
| (f) | சிறு கதைகள் | | |

(ii)

| | | | |
|---|---|---|---|
| (a) உரக்க வாசித்தல் | 1. | கருத்துக்களை வெளியிடல் | (e) |
| (b) வாய்க்குள் வாசித்தல் | 2. | தொடர்ச்சியான பேச்சுப்பயிற்சி | (f) |
| (c) நடித்தல் | 3. | நேர்முகக் கற்றல் | (d) |
| (d) கல்விப்பயணம் | 4. | பிழையற உச்சரித்தல் | (a) |
| (e) நாட்குறிப்பெழுதல் | 5. | புரிந்துகொள்ளுதல் | (b) |
| (f) படித்ததைப் பாராமல் ஒப்பித்தல் | | | |

(iii)

| | | | |
|---|---|---|---|
| (a) உரக்க வாசித்தல் | 1. | முதற்படி | (d) |
| (b) பார்த்து எழுதுதல் | 2. | இரண்டாம்படி | (a) |
| (c) வாய்க்குள் வாசித்தல் | 3. | மூன்றும்படி | (c) |
| (d) வாய்மொழிப்பயிற்சி | 4. | நான்காம்படி | (b) |
| (e) காதால் கேட்பதை எழுதுதல் | 5. | ஐந்தாம்படி | (e) |
| (f) மனப்பாடம் செய்தல் | | | |

(iv)

| | | | |
|---|---|---|---|
| (a) அசெம்பிளிப்பேச்சு | 1. | கேள்வி கேட்டல், பதிலளித்தல் | (d) |
| (b) அரங்கப் பேச்சு | 2. | ——— | |
| (c) ஓய்வுநேரப்பேச்சு | 3. | ஒத்திகை | (e) |
| (d) வகுப்புநேரப்பேச்சு | 4. | நடிக்கும் ஆற்றல் | (b) |
| (e) அரங்கேற்றத்திற்கு முந்திய பேச்சு | 5. | பேசும் ஆற்றல் | (a) |
| | 6. | பல விஷயங்கள் | (c) |

V கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள பகுதியை ஊன்றிப்படித்து வினாக்களுக்கு விடைதருக:

பள்ளிக்கையெழுத்திதழ் மாணவர்களின் கற்றல் வாய்ப்புக்களையும் ஆக்கத்திறனையும் மலரச் செய்கிறது. அதை அச்சிட்டு வெளியிட்டால் பார்வைக்கு அழகாயிருந்தாலும் உண்மையில் மாணவர்களின் பல்வேறு திறமைத் தரங்களை மறைத்து உணர்ச்சியற்ற ஒரு தன்மையை வெளிக்காட்டுகிறது. கையெழுத்து வாயிலாக வாரந்தோறும், மாதந்தோறும் ஏற்பாடாக வெளியிடப்பெறும் இதழ்கள் மாணவர்களுக்குப் பெருமகிழ்ச்சியளிப்பதுடன் அவர்களுடைய மொழி நடையையும் மேம்படச்செய்கிறது. உரைநடைக் கட்டுரை, சிறுகதைகள், கல்விப்பயணக்குறிப்புக்கள், செய்யுள் இயற்றுதல், சித்திரம் வரைதல் போன்ற திறமைகளை வெளிப்படுத்தும் துணைக்கருவியாகவும் பள்ளிக்கையெழுத்திதழ் திகழ்கிறது.

### கேள்விகள்

1. கையெழுத்திதழ் எவ்வாறு மாணவர்களின் தன்வெளியீடாகும்?
2. இதழைக் கையெழுத்தில் வெளியிடல் அச்சிட்டு வெளியிடலைவிட எவ்வகையில் சிறந்தது?
3. கையெழுத்திதழில் இடம்பெறத்தக்க பகுதிகளில் மேற்குறிப்பிட்டவற்றைத்தவிர வேறு மூன்றினைக்குறிப்பிடுக.
4. பள்ளியிதழ் கதை, கட்டுரை அளித்த மாணவர்களுக்கு எவ்விதத்தில் மகிழ்ச்சியளிக்கிறது?

5. கட்டுரை, கதை முதலியவற்றை அளிக்காத பிற மாண வர்களுக்கு அது எவ்விதக்கல்விப் பயனை அளிக்கலாம்?

## விடைகள்

1. மாணவர்களின் ஆக்கத்திறனை மலரச்செய்கிறது.

2. மாணவர்களின் பல்வேறு திறமைத் தரங்களை உண்மையாக வெளிப்படுத்துகிறது.

3. உரையாடற் பகுதி, நாடகமியற்றுதல், மேற்கோள் வாக்கியங்கள்.

4. தன்-படைப்புத் திறனைக் கண்ணெதிரிற்காட்டுவதன் மூலம்.

5. விரிந்த தன்படிப்பிற்கான துணைக்கருவியாயமைவதன் மூலம்.

# அருங்கலைச்சொற்கள்

## ஆங்கிலம் – தமிழ்

### அடைப்புக்களுள் உள்ளவை மாற்றுச்சொற்கள்

Ability ஆற்றல்
Abstraction பொதுமை பிரித்தல்
Access அணுகுமை
Accuracy திருத்தம்
Achievement தேர்ச்சி, அடைவு (அருஞ்செயல்)
Action-song ஆட்டப்பாடல்
Activity நிகழ்ச்சி, செயல்நிகழ்ச்சி
Adequacy போதுமை
Aesthetic அழகுணர் (முருகுணர்)
Aids துணைக்கருவிகள்(உபகரணங்கள்)
Album படத்தொகுப்பு
Analysis பகுத்தல், பகுத்தாய்தல்
Ancient பண்டைய
Anniversary ஆண்டுவிழா
Answer விடை (பதில்)
Antecedent முன்னிகழ்ச்சி
Anthology திரட்டு
Anticipation முன்னறிதல்
Antonym எதிர்ச்சொல்
Appendix பிற்சேர்ப்பு, பின்னிணைப்பு
Apperception Mass முன்னறிவுத் திரட்சி (உட்புலக்காட்சித்திறன்)
Apply செயற்படுத்து (பிரயோகி)
Appreciation கலை சுவைத்தல்
Aptitude நாட்டம்
Arithmetic எண் கணக்கியல்
Aspect கூறு (அம்சம்)
Assembly பேரவை
Assignment ஒப்படை, ஒப்பந்தம்
Assimilation தன்வயப்படுத்தல்
Attainment அடைவு, தேர்ச்சி
Attention உன்னிப்பு, கவனம்
Attitude மனப்பான்மை
Audio-Visual Aids ஒலி–ஒளித் துணைக்கருவிகள்
Author ஆக்கியோன். நூலாசிரியன்
Autobiography தன்வரலாறு (சுயசரிதம்)
Automatic தன்னியக்க
Axiom வெளிப்படை உண்மை
Ballad நாட்டுக்கதைப் பாட்டு
Basis அடிப்படை, ஆதாரம்
Behaviour Pattern நடத்தைக் கோலம்
Bias ஒருபுறச் சாய்வு
Bibliography நூற்பட்டியல்
Biology உயிரியல்
Bi-polar இருமுனை
Book நூல், புத்தகம் (ஏடு, சுவடி)
Boredom அலுப்பு சலிப்பு
Bulletin செய்தி அறிக்கை
By-product உடன்விளைவு
Calendar காலக்குறிப்பேடு
Career வாழ்க்கைத் தொழில்
Catalogue பட்டி, பட்டியல்
Chance வாய்ப்பு
Chapter அத்தியாயம் (இயல்)
Characteristic சிறப்புக்கூறு, சிறப்பியல்பு
Chart கருத்துப்படம்
Check சரிபார்த்தல்
Child-centred குழந்தை மைய
Chorus கூட்டிசை
Chronology காலவியல்
Cinema சினிமா
Citizen குடிமகன்
Clarity தெளிவு
Cleanliness துப்புரவு
Climate வெப்பதட்ப நிலை
Command ஏவல், கட்டளை
Competence தகுதி
Compilation திரட்டு, தொகுப்பு
Comprehend புரிந்துகொள்
Compulsion கட்டாயம் (நிர்ப்பந்தம்)
Concentric பொதுமையவட்ட
Concept கருத்து, பொதுமைக்கருத்து
Concrete புலனிடான
Condition ஏது (நிபந்தனை)
Conference Method மாநாட்டுமுறை
Consciousness நனவுநிலை
Constructive ஆக்கமான
Content பொருளடக்கம்
Continuity தொடர்ச்சி

Conversation உரையாடல்
Cooperation கூட்டுறவு
Correlation தொடர்புறுத்தல், இணைப்பு
Cram உருப்போடு
Creative ஆக்கமான
Criticism திறனாய்வு
Culture-Epoch Theory பண்பாட்டு வரன்முறைக் கொள்கை
Daily நாளிதழ்
Dylton Plan டால்ட்டன் திட்டம்
Debate சொற்போர்
Deductive அனுமித (பகுத்தறி)
Definition வரையறுப்பு
Demarcation எல்லைக்குறிப்பு
Demerit குறைபாடு
Democracy மக்களாட்சி
Demonstration செய்துகாட்டல்
Department துறை
Description விவரித்தல், விரித்தல்
Detail விவரம்
Development வளர்ச்சி
Device ஏற்பாடு
Diagnosis குறையறிதல்
Diagram விளக்கப்படம்
Diary நாட்குறிப்பு
Dictation சொல்லவெழுதுதல்
Dictionary சொல்லகராதி
Dignity உயர்வு (மதிப்பு)
Direct நேர்முக, நேரிடை
Discipline கட்டுப்பாடு
Discussion சொல்லாடல் (சர்ச்சை)
Dissatisfaction மனக்குறைவு
Drill பன்முறைப்பயிற்சி
Economics பொருளியல்
Economy சிக்கனம்
Effect விளைவு, பயன்
Elicit வருவி
Emotion மனவெழுச்சி
Emphasis அழுத்தம்
Energy ஆற்றல் (சக்தி)
Enjoyment இன்புறுதல்
Equilibrium சமநிலை
Essence சாரம்
Evaluation மதிப்பீடு
Event நிகழ்ச்சி, செயல்நிகழ்ச்சி
Examination தேர்வு
Expert வல்லுநர்
Explanation விளக்குதல்
Expression வெளியீடு
Extra-curricular பாடப்புற
Extreme கோடி
Fact உண்மை, தகவல்
Factor ஏது
Fancy பாவனை
Feasibility இயலுமை
Feature கூறு
Film திரைப்படம்
Film-strip திரைப்படத்துண்டு
Folk-song நாடோடிப் பாட்டு
Follow-up work தொடர்ச்சி வேலை
Fore-ground முன்னணி
Foreword முன்னுரை
Formation உருவாதல்
Foundation அடிப்படை, அத்திவாரம்
Freedom தன்னுரிமை, (சுதந்திரம்)
Functional செயல்சார்
Genealogy மரபுமுறை
Geography நிலவியல், தரையியல் (பூகோளம்)
Get-up அமைப்பு
Gradual படிப்படியான
Group குழு
Guess ஊகி (வி. சொல்). ஊகம் (பெ. சொல்)
Head, Heart, Hand அறிவு, அன்பு, ஆக்கம்
Heritage மரபுரிமை
Heurism கண்டறிதல்
Hobby விருப்பச்செயல்
Ideal உயர்நிலை நோக்கம்
Idiom மரபுச்சொற்றொடர்
Image விம்பம்
Imitation பார்த்து அப்படியே செய்தல்
Improvement மேம்படல்
Index குறிகாட்டி, பொருளகராதி
Indirect மறைமுக
Indiscipline கட்டுப்பாடின்மை
Individual தனியாள்
Inductive அனுமான, தொகுத்தறி
Initiative தான்தொடங்காற்றல்
Instinct இயலூக்கம்
Integrated ஒருங்கமைக்கப்பட்ட
Intellectual அறிவுசார்

Intelligence நுண்ணறிவு
Interest கவர்ச்சி
Introduction முன்னுரை
Kindergarten கிண்டர்கார்ட்டன், குழந்தைகளின் தோட்டம்
Laboratory சோதனைச்சாலை
Learning பயிலல், கற்றல்
Leisure ஓய்வு
Lesson பாடம்
Library நூல்நிலையம்
Linguistic மொழிசார்
Lip-movement உதட்டசைவு
Logical தருக்க முறையான
Magazine சஞ்சிகை
Mark மார்க்கு (அம்சம்)
Mass திரட்சி
Matter பொருள்
Maturity முதிர்ச்சி
Measurement அளவீடு
Mechanical பொறியியக்க
Metaphor உருவகம்
Monthly மாதஇதழ்
Motivate ஊக்குவி
Multi-lateral பலமுறை
Narration கூறுதல்
Note-book குறிப்பேடு, (குறிப்புப்புத்தகம்)
Nursery Rhyme குழந்தைப்பாட்டு
Objective குறிக்கோள்
Observe உற்றுநோக்கு
Organization ஒழுங்கமைப்பு
Pageant பகட்டு அணி
Perception காட்சி உணர்வு
Period பீரியடு, காலக்கூறு
Phrase சொற்றொடர்
Platform மேடை
Post-basic பின்-ஆதார
Postulate முற்கோள்
Pre-basic முன்-ஆதார
Preparation ஆயத்தம்
Principle கொள்கை (தத்துவம்)
Problem சிக்கல் பிரச்சினை
Programme நிகழ்ச்சி நிரல்
Project Method செயல்திட்டமுறை.
Projector படமெறிகருவி
Psychology உளவியல்
Punctuation நிறுத்தக்குறியிடல்
Radio ரேடியோ, வானொலி
Reading படித்தல், வாசித்தல்
Reason காரணம், ஏது
Recall மீட்டுக்கொணர்
Recognition மீட்டறிதல்
Record பதிவுசெய்
Recreation பொழுது போக்கு
Reflex மறிவினை
Remedial குறைதீர்
Repetition திரும்பச்சொல்லல்
Resourcefulness வளமை
Revision மீள்பார்வை
Rhythm இன்னொலி, சந்தம்
Satisfaction மனநிறைவு
Science அறிவியல் (விஞ்ஞானம்)
Sensation புலனுணர்ச்சி
Sense-training புலப்பயிற்சி
Sentence வாக்கியம், நிறைசொற்றொடர்
Silent Reading வாய்க்குள் படித்தல். மௌன வாசிப்பு
Simile உவமை
Skill திறன், திறமை
Social சமூக
Span சாண், வீச்சு
Spelling எழுத்துக்கூட்டல்
Squad பயிற்சிக்குழு
Stage (1) நிலை, (2) அரங்கு
Standard (1) வகுப்பு, (2) தரம்
Statistics புள்ளிவிவரங்கள்
Stimulus-Response Bond தூண்டல்-துலங்கல் பிணைப்பு
Subject (1) பொருள், (2) பொருளறிவுப்பாடம்
Subject-matter பாடப்பொருள்
Sublimation தூய்மைசெய்தல்
Supervision கண்காணிப்பு, மேற்பார்வையிடல்
Syllable அசை
Syllabus பாடத்திட்டம்
Synonym பொருட்சொல்
Tableau ஒப்பனைக்காட்சி
Teaching பயிற்றல், கற்பித்தல்
Term ஆண்டுட்பகுதி
Test சோதனை, ஆய்வு
Text-book பாடப்புத்தகம்
Theory கொள்கை

Three R's எண்ணெழுத்துப்படிப்பு
Time-table கால அட்டவணை
Topic தலைப்பு
Traditional மரபுமுறை
Training பயிற்றல், பயிற்சி
Transcription பார்த்தெழுதுதல்
Translation மொழிபெயர்த்தல்
Trial and Error Learning தட்டுத் [illegible]ல்
Unit அலகு
Urge விழைவு
Valid ஏற்புடைய
Variation மாறுபாடு
Visual காட்சிசார்
Vocabulary சொற்களஞ்சியம்
Weekly (1) வார, (2) வார இதழ்
Word-building சொல்லமைத்தல்
Annual ஆண்டு இதழ்



# BIBLIOGRAPHY

**Hughes and Hughes :** Teaching and Learning

**Adams :** Modern Developments in Educational Practice

**Davis :** Matter and Method in Teaching

**Panton :** Modern Teaching Practice and Technique

**Ryburn :** The Principles of Teaching

**Yoakam and Simpson :** Modern Methods and Techniques of Teaching

**Verma :** A First Course in Teacher-Education

**Bhatia and Bhatia :** The Principles and Methods of Teaching

**Sturt and Oakden :** Matter and Method in Education

**Varkey :** The Wardha Scheme

**Kripalani :** The Latest Fad - Basic Education

**Hindustani Talimi Sangh :** Foundations of Living (Principles and Practice of Basic Education)

ஆறுமுக முதலியார் : தமிழ் கற்பிக்கும் முறை

சுப்பு ரெட்டியார் : தமிழ் பயிற்றும் முறை

சந்தானகிருஷ்ணன் : தமிழ் கற்பிக்கும் முறை

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 57 | 7 | சொற்போா | சொற்போர் |
| 61 | 3 | கிடைச்சின்றன | கிடைக்கின்றன |
| 65 | 12 | ா | ப |
| 75 | 22 | Explantion | Explanation |
| 81 | 13 | வண்ணத்தி | வண்ணத்து |
| 119 | 8 | ஏ | ம் |
| 123 | 17 | Learing | Learning |
| 135 | 22 | குமு | குழு |
| 147 | 20 | Penception | Perception |
| 166 | 21 | கண்ணுடி | கட்டி |
| 175 | 22 | பிணேக்கப்பட்டு | பிணைக்கப்பட்டு |
| 177 | 9 | முலமும் | மூலமும் |
| 178 | 24 | வாக்கியக்களை | வாக்கியங்களை |
| 179 | 1 | (1) | (1), (2), (3) |
| 189 | 9 | Style | Style |
| ,, | 10 | Situtaional | Situational |
| 193 | 23 | ழ | க |
| 200 | 11 | , பகுதி | , விகுதி |
| ,, | 22 | கற்பித்தலில் | கற்பித்தல் |
| 229 | 20 | கிண்டர்கார்ட்டள் | கிண்டர்கார்ட்டன் |

176

Lalitha Printers Private Ltd.,
Madurai-1.